ரஸிகமணி

டி. கே. சி யின் கடிதங்கள்

*

தொகுத்தவர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

*

பொதிகை மலைப் பதிப்பு

'பஞ்சவடி' * தென்காசி

முதல் பதிப்பு 1961

விலை ரூ. 3-00

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

முன்னுரை

1946-ம் வருஷம், ஆம் பதினைந்து வருஷங்களுக்கு முன் நான் 'ரஸிகமணி டி.கே.சி.' என்று ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டேன். அப்புத்தகத்தில் பழைய நினைவுகள் என்ற தலைப்பில் டி.கே.சி. எனக்கு எழுதிய கடிதங்களின் பகுதிகளை வெளியிட்டிருந்தேன். அதனைப்பார்த்த அன்பர்கள் எல்லாம், 'டி. கே. சி. யின் கடிதங்களை எல்லாம் தொகுத்து வெளியிட்டால் அதுவே ஒரு பெரிய இலக்கிய பொக்கிஷமாக இருக்குமே' என்று எழுதினார்கள். இப்படி நண்பர் பலர் காட்டிய ஆர்வம் காரணமாக கிட்டத்தட்ட இருபத்தைந்து நண்பர்களிடமிருந்து கடிதங்களைச் சேகரித்து வகைப்படுத்தி அச்சிட்டேன். இந்தத் தொகுப்பு 1948-ம் வருஷமே அச்சிட்டு முடிந்து விட்டாலும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் உடனே வெளியிட முடியவில்லை. அப்போது எனக்கிருந்த ஆர்வத்தை குலைத்து விட்டதின் காரணமாக இந்நாள் வரை இந்த அச்சுப் பிரதிகள் கவனிப்பார் அற்று ஒரு மூலையில் கிடந்தன.

இந்த வருஷம் நடக்கும் டி. கே. சி. நினைவு விழா மிகச் சிறப்புடையது. டி. கே. சி. யின் எண்பதாவது ஜயந்தி விழாவும் சேர்ந்துகொள்கிறதல்லவா? அதனால் பழைய சோர்வுகள் நீங்கி, இப்புத்தகத்தை வெளிக்கொணர விரும்பினேன். நண்பர் திரு. S. மகாராஜன் அவர்களும், பொதிகை மலைப் பதிப்பகத்தின் நிர்வாகி தீப. நடராஜனும் புத்தகம் வெளிவருவதில் மிக்க ஆர்வம் காட்டினார்கள். அவர்களது ஆர்வமே இப்புத்தகம் இன்று வெளிவருவதற்கு முக்கிய காரணம்.

சென்ற சில வருஷங்களுக்கு முன், தம்பி சோமு கல்கியின் ஆசிரியராக இருந்த காலத்தில் 'டி. கே. சி. கடிதங்கள்' என்ற தலைப்பில் சில கடிதப் பகுதிகள், தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் கல்கி பத்திரிகையில் வெளிவந்தன. கடிதம் யாருக்கு எழுதப்பட்டது என்ற தகவல் கொடுக்கப்படவில்லை. காரணம், கடிதம் பெற்ற நண்பர்கள் பெயரை வெளியிட்டால் அவர்களுக்கு பெரிய 'பப்ளிசிட்டி' கிடைத்துவிடும்; அது விரும்பத் தக்கதல்ல என்பது ஆசிரியரின் அபிப்பிராயமாக இருந்திருக்கும் போலும். ஆனால் ஒன்று டி. கே. சி. யின்

கடிதங்கள் பெரிய பெரிய இலக்கிய விமரிசனமாக இருந்தாலும், அது யாருக்கு எழுதப்படுகிறதோ அவரையும் முன் வைத்துக்கொண்டு படித்தால்தான் அக் கடிதத்தின் அருமை தெரியும். டி. கே. சி. யே சொல்கிருர்கள் ஒரு கடிதத்தில்,

> "நீ எழுதிய கடிதத்திலிருந்து நல்ல முறையில் கடிதம் எழுதுவதற்கு யுக்தி இன்னதென்று தெரிந்து கொண்டேன். யாருக்கு எழுதுகிருேமோ அந்த ஆசாமியை நம் கண்முன் நன்ருய் திருத்திக்கொள்ள வேண்டும். கடிதம் அற்புதமாக அமைந்து விடும்"

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆகவே கடிதம் யார் யாருக்கு எந்தச் சமயத்தில் எழுதப்பட்டது என்ற தகவல் இல்லாமல் கடிதத்தை மொட்டையாய் வெளியிடுவதில் யாதொரு பயனும் இல்லை, படிப்பவர்கள் அந்த மொட்டைக் கடிதத்தை அனுபவிக்கவும் முடியாது என்பது என் எண்ணம். அது காரணமாக கடிதம் பெற்ற நண்பர்களைப்பற்றி குறிப்புகள் எழுதிச் சேர்த்திருக்கிறேன். நண்பர்களின் ஜாபிதாவைப் பார்த்தால் அவர்கள் எல்லாம் பப்ளிசிட்டிக்கு ஏங்கி நிற்கிறவர்கள் அல்ல என்பது தெரியும்.

டி. கே. சி. யின் கடிதம் பெற்றவர்களை ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறேன். மதிப்பிற்குரிய பெரியார்கள், அருமை நண்பர்கள், வட்டத்தொட்டி சிஷ்யர்கள், பெண் குழந்தைகள், புதிய பக்தர்கள். ஒவ்வொரு வகுப்பிலும் ஐந்து ஐந்து பேர் இடம் பெற்றிருக்கிருர்கள். கடிதத் தொகுதி 1948-லேயே அச்சடித்து முடிந்துவிட்டது. அது காரணமாகவே இன்னும் சேர்க்கப்படவேண்டிய கடிதங்கள் எத்தனையோ சேர்க்கப்பட வில்லைதான். அன்பர்களது ஆதரவு இருந்தால் மற்ற கடிதங் களையும் தொகுத்து வெளியிடல் கூடும்.

'டி. கே. சி. யின் கடிதங்கள்' என்ற தலைப்பில் கோவை ஜில்லா ஜட்ஜ் நண்பர் திரு. S. மகாராஜன் அவர்கள் ஒரு நல்ல முகவுரை வழங்கியிருக்கிருர்கள். இது முன்னமே கல்கியில் வெளிவந்ததுதான். இதனை வெளியிட அனுமதி தந்த நண் பருக்கும் கல்கி ஆசிரியருக்கும் என் இதய பூர்வமான நன்றி.

'சித்ர கூடம்'
திருநெல்வேலி-6.
2—9—'61.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

முகவுரை

டி. கே. சி-யின் கடிதங்கள்

S. மகாராஜன், B. Sc., B. L.
ஜில்லா ஜட்ஜ், கோயம்புத்தூர்.

ரஸிகமணி மாணவனாக இருந்த காலம். சுமார் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், அந்தக் காலத்துத் தமிழ் வசன நடை ரொம்பப் படித்தவர்கள் கையிலகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த, வழக்கொழிந்த தமிழ்ச் சொல்லில் நவநாகரிகக் காட்சிகளை வருணித்துக் கொண்டிருந்தார்கள் நாவலாசிரியர்கள் கூட.

தங்கசாலை வீதியிலே நடக்கும் காதல் காட்சியை, சங்க இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த முது பெரும் புலவர் ஒருவர் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார் :—

"அவ்வீட்டின் மாடத்தும்பர், ஓர் அரையின் கண்ணே இன்னிசைப் பாட்டும், மன்னிசைக் கல்வியும் வல்லளாய், எழிலும் குணமுமியைந்த பூங்கொம்பராய் மிளிர்தரும் ஓர் இளம் பருவத்துப் பெண் தனது வார்குழல் கோதி முடித்துக் கொண்டு நின்றாள். அப்போழ்தத்து, கரிய மாலையனைய காளையொருவன் அவட்குப் பின்புறப் போந்து, அவடன்விழிகளிரண்டையும் தன்னிருகையாலிருகப் புதைத்துக்கொண்டு நின்றான். அன்னணம் ஒருவன் கண் புதைத்ததுணர்ந்த அந் நங்கை, 'நீ என்னைத் தொடர்பாலையல்லை' என்றனள்."

இப்பேர்ப்பட்ட கரடு முரடான, விரைத்துப்போன பாஷையிலே நாடோடி சம்பவங்களைத் தமிழாசிரியர்கள் விஸ்தரித்து வந்தார்கள். பிரமாண்டமான சர்க்கஸ் யானை, ஐம்பொறிகளையும் அடக்கி ஒருமுகப்படுத்திக் கீழே கிடக்கும் பட்டாணிக் கடலையை எடுப்பதில் முக்கி முனைந்து எப்படித் திக்கு முக்காடுமோ அப்படி அவஸ்தைப் பட்டார்கள் அந்தக் காலத்து தமிழ் எழுத்தாளர்கள். கருத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் படாடோபமும், திருகு முருகலும், சுவையற்ற கோணல்த் தமிழும் புலமை வேஷம் போட்டுக்கொண்டு நடமாடிய காலம் அது.

அந்தக் காலத்தில் பள்ளி மாணவனாக இருந்த ரஸிக மணிக்கு இந்தக் கொடுங்கோன்மை எல்லாம் தாங்க முடிய வில்லை. உரைநடை எப்படி இருக்கவேண்டும் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, சில முடிவுகளுக்கு வந்தார்கள். எடுத்துக்கொண்ட விஷயத்தை, உண்மையோடும், நேருக்கு நேர் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கை கோர்த்து நடக்கவேண்டும். அடுப்பங்கரையில் பெண்கள் பேசுகின்ற தமிழிலே எவ்வளவு ஆற்றலும், உணர்ச்சியும் இருக்கின்றன. நாட்டுப்புறத்திலே பட்டிக்காட்டான் பேசுகிற தமிழிலே வகை வகையான சுவை யிருக்கிறதே. விஷயத்தைக் குறி பார்த்து அடித்த மாதிரி யல்லவா, அவன் சொல்லிவிடுகிறான். இதையெல்லாம் சிரத்தையோடு தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து கொச்சையை அகற்றிவிட்டு, நாடோடித் தமிழிலுள்ள ரஸத்தைப் பிழிந்து தமிழ் வசனத்தில் பெய்துவிட வேண்டும். அப்போது தான் தமிழ் எழுத்துக்கு வல்லமையும், வளமும் ஏற்படும் என்று டி. கே. சி. வற்புறுத்தி வந்தார்கள். பேச்சுத் தமிழின் வளைவு, நெளிவுகளோடும், பம்மல் பாய்ச்சல்களோடும் பழகினால்தான், ஒரு எழுத்தாளனுடைய தனித் தத்துவம், அவனுக்கே உரிய நடையில் வெளிப்படும். நடை என்றால் என்ன என்பதை அபூர்வமான தெளிவோடும், அதிகாரத்தோடும் ரஸிகமணியின் கடிதம் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது :—

"ஆங்கில ஆசிரியர்கள் ஸ்டைலைப்பற்றி என்ன எல் லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கியமான காரியம் அதுதான் என்று சொல்லுவார்கள். ஆனால் அது எளிதில் அமைகிறதில்லை என்றும் சொல்வார்கள். ஆங்கில ஆசிரியர் களது ஸ்டைல் இன்னது, இப்படி இருக்கிறது என்றும் நமக்கு எளிதில் தெரிகிறதில்லை. ஏதோ தெரிகிறது — இருட்டுக்குள் ஆளை இனங்காணுகிற கணக்கில்தான்.

"ஆனால் தமிழுக்கு வந்தால் (பண்டித உலகத்தை விட்டு வெளியேதான்) இன்னது ஸ்டைல் என்று லகுவாய்த் தெரி கிறது. ஏன், அன்னம்மாள் தங்கம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் அவளுடைய தனித்தத்துவம் வெகு ஜோராய்த் துள்ளி ஓடுகிறது. கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கைகோர்த்து நடக்கின்றன. பெண் குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்படவேண்டியதாய்த்தான் இருக்கிறது.

‘‘கவி என்பதற்கு வந்தால் கம்பரிடத்தில்த்தான் ஸ்டைல் என்று சொல்லவேண்டியிருக்கிறது. தற்காலத்துக் கவியில் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது கவியில்தான் ஸ்டைல் இருக்கிறது. கவியில் அவர்களது எளிய தூய உள்ளம் பளிங்கில் வைத்த மாதிரி தெரிகிறது. ஆனால் இந்த ஸ்டைலில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது எழுதுகிற வர்க்கு அது தெரியாது என்று சொல்லலாம். ஏனென்றால் அவருக்கே தெரியாமல் அநாயாசமாய் வருவது அது. நாம் தெருவிலோ ரோட்டிலோ நடந்துபோகிறோம். (மிலிட்டரி மார்ச் அல்ல) இயல்பாக நடக்கிறோம். அந்த நடையில் நூற்றுக்கணக்கான அம்சங்கள் இருக்கின்றன. ஏன் இருக்காது! உச்சியிலிருந்து உள்ளங்கால்வரையும் எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப் படி ஒத்து வேலை செய்கின்றன. நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லலாம்.

‘‘ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நடையின் தனிப் பண்பை உடனே கண்டுகொள்ளுகிறார்கள். ஆயிரம் பேர் நடந்து போய்க் கொண்டிருக்கலாம். ஆனாலும் நம் முகத்தைப் பாராமலே, நம்முடைய நடையை இனம் கண்டு கொள்ளு கிறார்கள். நடையில் (உடம்பு சம்பந்தமாகத்தான்) எல்லா ருக்கும் ஸ்டைல் வந்துவிடுகிறது. காரணம் என்ன? பாடமாக வைத்துப் பள்ளிக்கூடத்தில் நடையைக் கற்பிப்பதில்லை. ஆனால் எழுத்தில் ஸ்டைல் வரமாட்டேன் என்று சாதிக்கிறது. பள்ளிக்கூடத்துப் பயிற்சிதான் காரணம். மனுஷ தத்துவத்தை எடுத்துவிட்டு, எந்திர தத்துவத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடுகிறது. இந்த எந்திர தத்துவத்தின் கோணல்கள், ‘‘முத்தி, முத்தி’’க் கடைசியில்ப் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் களாக முடிகின்றன.

‘‘நடையில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (கால் இருந்தால்ப் போதாது) உடலுக்குள் உயிர் இருக்கவேண்டும். அதுபோல எழுத்தில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதாது) உள்ளத்தில் உயிர், அதாவது உண்மை உணர்ச்சி இருக்கவேண்டும்.

‘‘ஏதோ ‘‘டைம்ஸ் சப்ளிமெண்டுக்கு’’க் கட்டுரை எழுதுவது போல எழுத்து நீண்டுவிட்டது. பிள்ளையார் இப்படி ஆயிற்று.

இருக்கட்டும். தாங்கள் இருக்கும்போது, எந்தக் கஷ்டமான விஷயத்தையும் தைரியமாய் எழுதத் தோன்றுகிறது. பேசக் கூடத் தோன்றுமல்லவா? அப்படியே எழுதவும் தோன்றுகிறது".

மேற்கண்ட கடிதத்தைப் படிக்கும்போது, பேச்சைக் கேட்பது போன்ற பிரமை நமக்கு ஏற்படுகிறது. ஆனால் பேச்சுத் தமிழை அப்படி அப்படியே காகிதத்தில் எழுதிவிட்டால், சுவையுமிருக்காது; ஸ்டைலும் இருக்காது. டி. கே. சி. கடிதத்திலுள்ள ஒவ்வொரு சொல்லிலும், எழுத்திலுமே பொருள் முட்டித் ததும்பிக்கொண்டு நிற்கிறது; அபாரமான தெளிவும், உணர்ச்சியும். ஒளியும் இருக்கிறது. வெறும் கொச்சைப் பேச்சை வைத்துக்கொண்டு இந்த மாதிரி ஜால வித்தைகள் பண்ணிவிட முடியாது. வருஷக் கணக்கிலே, பேச்சுத் தமிழின் உயிர் நிலையை ஆராய்ந்து, அதன் மர்ம ஸ்தானத்தை உணர்ந்து அனுபவித்து, இந்த அனுபவத்தால் பெற்ற மொழி அறிவைக் கலைப்பாங்கோடு கையாளக் கற்றுக் கொண்டால்தான், டி. கே. சியைப்போல, பேச்சுத் தமிழுக்கு எழுதும் வன்மையைக் கொடுக்க முடியும்.

தமிழர்கள் கடிதம் எழுதுவதென்றால் விஷயத்துக்குத்தான் எழுதுவார்கள். "இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்திற்குப் பதில் எழுதவும்," "ஊருக்குச் சௌக்கியமாக வந்து சேர்ந்தேன்" "புண்ணாக்கு விலையேறிக் கொண்டிருக்கிறது. நெல் விலை எப்படி யிருக்கிறது?" என்னும் அரிய விஷயங்களைப்பற்றித்தான் எழுதுவார்கள். வந்தவுடனேயே கடிதத்தைக் கிழித்தெறிந்து விடலாம். 'பைன்ட்' பண்ணி பாதுகாக்க வேண்டிய அவசியமே கிடையாது.

ஆனால் டி. கே. சி. கடிதங்கள் எல்லாம் கலை அந்தஸ்து பெற்றவை. ஒரே ஹாஸ்யமும், உல்லாசமும், உணர்ச்சியுமாயிருக்கும். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இலக்கிய ரத்தினங்கள் அவை. டி. கே. சி. கடிதம் எழுதுவதைக் கைக்கொண்ட பின்தான் கடித இலக்கியம் என்று ஒன்று தமிழ் நாட்டில் பிறந்தது.

ஒவ்வொரு கடிதமும் நேருக்கு நேர் நின்று பேசும். உடல் நிலை மோசமாயிருப்பது கேட்டு வருந்தி எழுதியிருந்தேன். அடுத்த தபாலில் கீழ்க்கண்ட பதில் வந்தது :— "என் உடலைப்

பற்றித் தாங்கள் மிக்க கவலை கொள்வதாகத் தெரிகிறது. அது வேண்டாம். உடம்பு சரியாகத்தானிருக்கிறது. இன்ஸுலின் (Insulin) இன்ஜெக்ஷன் கிடையாது. மற்ற குத்துகளும் இல்லை. மலை ஏற முடியாது. மரம் ஏற முடியாது அவ்வளவுதான்."

நீரிழிவும் காசநோயும் டி. கே. சி. யின் உடலைத் தாக்கி முற்றுகை போட்டன. ஆனால் கடைசி வரையில், அவர்கள் உள்ளத்திலேயுள்ள ஹாஸ்யத்தையும், உல்லாசத்தையும் அவை பாதிக்க முடியவில்லை. வாய்க்கு ருசியான ஆகாரங்களை அவர்கள் தள்ளிக்கொண்டே வந்தார்கள். இப்படியும் கடும் பத்தியம் போடலாமா என்று கேட்டு எழுதியிருந்தேன். ஆறுதலுக்காக வந்த கடிதம் இது :— "உளுந்துத் தோசை, ருக்மணி அம்மாள் அனுப்பிய நார்த்தங்காய் ஊறுகாய், இட்டலி, தயிர் எல்லாம் சேர்ந்து வாய்க்கு ருசியான ஆகாரம் ஆகி விடுகிறது. போதும்தானே. மற்றவர்கள் என்னத்தைச் சாப்பிட்டால் நமக்கென்ன? ரஸம், மோர்க்குழம்பு, மாம்பழம், பலாப்பழம் எல்லாவற்றையும் சாப்பிட்டால் சாப்பிடட்டும் அது நம்மைப் பாதிப்பானேன்? எருமை கோரைப்புல்லை லவக்கு, லவக்கு என்று தின்று குதப்புகிறது. அதைப் பார்த்து, ஐயோ, கோரையைத் தின்ன முடியவில்லையே என்று ஒப்பாரி வைப்பாருண்டோ? வள்ளுவரும் இந்த அபிப்பிராயம் கொண்டவர்தான்.

"யாதனின் யாதனின்
நீங்கியான் நோதல்
அதனின் அதனின்
இலன்"

டி. கே. சி. தமிழின் எளிமையைப் பார்க்கும்போது, 'அடே, நாம் கூட இப்படி யெல்லாம் வெளுத்து வாங்கி விடலாம்' என்று தோன்றும். ஆனால், உட்கார்ந்து எழுதிப் பார்த்தால், அது நமக்குக் கைவராது என்று தெரியும். எளிய தமிழ் என்றால், வெள்ளைத் தமிழல்ல, மொட்டைத் தமிழும் அல்ல. நமக்கு எட்டாத ஆழத்திலும், தெளிவிலுமிருந்து உருவான எளிமை அது. பரிணாம நெறியை ஒட்டிப் பார்த்தால் தான் எளிமையைப் பற்றி டி. கே. சி. இப்படி எல்லாம் ஏன் பிரமாதப் படுத்தினார்கள் என்று விளங்கும். இயற்கை அன்னை, விதம் விதமான பிராணிகளை உண்டாக்கி வந்திருக்கிறாள்.

நாளாவட்டத்தில் உருவங்களைச் செய்து செய்து, அவள் கை திருந்திக் கொண்டே வந்திருக்கிறது. பத்து கால், மூன்று கண் உள்ள பிராணிகளை உண்டாக்கினாள். அவைகள் வசதியோடும் புத்தியோடும் வாழமுடியவில்லை. அவைகளை அழித்துப் புது உருவங்களை உண்டுபண்ணிப் பார்த்தாள். இப்படி எத்தனை எத்தனையோ திருத்தங்களைச் செய்து, கடைசியாக மனித உருவத்தைக் கண்டு பிடித்தாள். இரண்டே கால் போதும், பத்துக்கால்கள் வேண்டியதில்லை. இரண்டே கண் போதும். மூன்று கண் வேண்டியதில்லை; என்று இயற்கை தேவி கண்டுபிடிப்பதற்கே லக்ஷக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. உயிருள்ள வஸ்துக்களுக்குள், மனித உருவம் ரொம்ப எளிமை வாய்ந்தது தான். ஆனால் அந்த எளிமை வருவதற்குள் இயற்கை அன்னை எத்தனை பாடுபட்டிருக்கிறாள்!

கலையுலகத்தில் எளிமை ஏற்பட்ட கதையும், கிட்டத் தட்ட மேற்சொன்ன மாதிரிதான். இந்த உண்மையை யெல்லாம், பரிணாம நெறியையொட்டி உணர்ந்து அனுபவித்தார்கள் டி. கே. சி. ஆகையால் எந்தத் துறையில் எளிமையைக் கண்டாலும் அதை அபாரமாக அனுபவித்து வந்தார்கள்.

ஒரு நாள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். முற்றத்திலே மாப்பொடியினால் கோலம் போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்துப் பார்த்து ஒருமணி நேரம் ரஸித்துக்கொண்டிருந்தார்கள். எங்கள் குருட்டுக் கண்ணுக்கு அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகுதான், கோலத்தின் அழகு தெரிய வந்தது. ஊருக்குப் போன பிறகு, ஒரு கடிதம் எழுதினார்கள்:– "இங்கேயும் வீடுகளில் கோலம் போடத்தான் செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான பொட்டுகள்; நூற்றுக்கணக்கான கோடுகள் எல்லாம் சேர்ந்து ஒரே கசாபுசா. அம்மாள் ரகத்தில் எளிமையும் கருத்தழகும் சேர்ந்து கலையாய் விளங்கும். அந்தக் கலையை உணருவதற்கு மற்றக் கோலங்களையும் பார்க்க வேண்டும். கம்பர் செய்யுளின் எளிமையை அனுபவிப்பதற்கு கந்தபுராணச் செய்யுள்களையும், சீவக சிந்தாமணிச் செய்யுள்களையும் பார்க்க வேண்டும். பாரதியும் தேசிகவிநாயகம் பிள்ளையும் கவிஞர் ஆனதால் எளிமையைக் கையாண்டிருக்கிறார்கள். விஷயத்தை இப்படிச் சொல்வதை விட்டு விட்டு எல்லாருக்கும் விளங்குவதற்காக லேசாய் எழுதியிருக்கிறார்கள் என்று மாறாய்ச்

46-3

சொல்லுகிறார்கள். கவிஞர்கள், தங்களுக்கே விளங்கவேண்டும் அல்லவா, அதற்காக எளிமையைக் கையாளுகிறார்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

"பூண்டுகள்கூட காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக எளிமையைக் கையாண்டிருக்கின்றன".

"எட்டுத் திசையிலிருந்தும், பதினாறு கோணத்திலிருந்தும் மகரந்தத் தூள்களை வண்டுகள் கொண்டுவர வேண்டும். அதற்காகப் பதினாறு இதழ்களையா விரிக்கிறது? ஐந்து இதழ் போதும் என்றுதானே வைத்துக்கொண்டது? Radial Symmetry ஐந்து பட்டங்களால் ஆய்விடுகிறது, பல அடுக்குப் பூக்கள் எல்லாம் கஷ்டப்படுகிற பூக்கள்தான். கோலத்தை எளிமையுடன் போடவில்லை அவைகள்".

இப்படியாக கோலத்திலிருந்து கவிதைக்கும், கவிதையிலிருந்து சிருஷ்டி தத்துவத்துக்குமே டி. கே. சி.யின் எளிமைக் கடிதங்கள் நம்மை இழுத்துச் சென்றுவிடுகின்றன. சில்லறை விஷயங்களைப் பற்றிக் கடிதம் விளக்கிக்கொண்டிருக்கும்போதே அரிய உண்மைகள் எல்லாம், அந்த ஒளியிலே, தெளிவாகிவிடும். விஞ்ஞானம், சமயம், கடவுள் தத்துவம்—எல்லாவற்றைப் பற்றியுமே, மத்தாப்பூ போட்டுவிடும் அந்தக் கடிதங்கள்.


பேரறிஞர் பலரைப் பார்த்திருக்கிறோம். அரசியல், பொருளாதாரம், சமூக இயல், விஞ்ஞானம், இலக்கியம், சங்கீதம், கலை, சமயம்—ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவர்கள் ஒரு முடிவு கட்டி வைத்திருப்பார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் ஒரு துறையில் ஒரு கொள்கை இருக்கும், மற்றொரு துறையில் மற்றொரு கொள்கை இருக்கும். இந்தக் கொள்கைகளுக்கு இடையே அடிப்படையான ஒற்றுமை இருக்காது; பெரும்பாலும் முரண்பாடுதான். ஆனால் ரஸிகமணி காரியம் அப்படியல்ல. எந்தத் துறையினாலும் சரி அடிப்படையான ஒரே கோணத்திலிருந்துதான் விஷயங்களைக் கண்டு முடிவு கட்டுவார்கள். கிளைகள் எத்தனையாயிருந்தால்தான் என்ன, ஒரே கொப்பிலிருந்து முளைத்தெழுந்த கிளைதான்.

தென்காசியிலிருந்து ரயிலிலே சென்னைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். டி. கே. சி.யை ரயிலடியிலாவது

சந்திக்கலாம் என்று போயிருந்தோம். சந்தித்து இரண்டு வார்த்தை பேசுவதற்குள், சீவில்லிப்புத்தூர் ஸ்டேஷனைவிட்டு ரயில் நகண்டுவிட்டது. ஒரே ஏமாற்றம்! சென்னையிலிருந்து வந்த டி. கே. சி. யின் கடிதம், கீழ்க்கண்டவாறு ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறது :— "எவ்வளவோ ஆத்திரத்தோடு, தாங்கள் வந்தீர்கள். ஆனால், ரயிலும், காலதேவதையும் ரொம்பக் கேலி பண்ணி விட்டன. இரண்டு வார்த்தை பேசுவதற்குள் வாய்க்குருவியை (whistle) ஊதிவிட்டான்......வெறும் இருட்டிலிருந்து இந்த உலகத்துக்கு வருகிறோம். கண்ணைத் துடைக்கவே, பத்திருபது வருஷம் (நிமிஷந்தான்) ஆகிறது. அதைக்கொஞ்சம் பார்க்கிறோம், இதைக்கொஞ்சம் பார்க்கிறோம். ஏதோ குருடன் தடவிப் பார்க்கிற கணக்குத்தான். ஆனால் ஒன்று தெரிகிறது, எவ்வளவோ பார்க்க வேண்டியிருக்கிறதே, எவ்வளவோ அறிய வேண்டியிருக்கிறதே என்பதாக, கற்றது ஒன்றும் இல்லையே என்ற திகைப்பும் ஏற்படுகிறது. அப்போது உலக ஓட்டி சங்கை ஊதி விடுகிறான், அடடா, உலகத்தோடு ஒன்றும் பேசவில்லையே என்று தோன்றுகிறது"

இருபது வருஷங்கள் டி. கே. சி. யோடு பழகிய பிறகு இன்னும் எவ்வளவோ அவர்களிடம் அறிய வேண்டியிருக்கிறதே என்று பட்டது. அதற்குள்ளாக, உலக ஓட்டி சங்கை ஊதிவிட்டான், டி. கே. சி. தத்துவம் மறைந்துவிட்டது. திகைப்புத்தான் மிஞ்சுகிறது.

பொருளடக்கம்



ரஸிகமணி டி. கே. சி.

கன்னித் தமிழே போல்,

கம்பன் கவியே போல்,

மன்னும் பொதியை

மலையே போல் — பன்னு நம்

நாடு மகிழச்

சிதம்பர நாத நண்பா !

நீடு நீ வாழ்க நிலத்து

— கவிமணி தே. வி.

மதிப்பிற்குரிய பெரியார்கள்

ராஜாஜி

திருப்புகழ் மணி

தேவி

டாக்டர் திருமூர்த்தி

பால் நாடார்

சிவஞானம் பிள்ளை

ராஜாஜி அவர்களுக்கு.

பிரயாகை என்று ஒரு இடம் வடஇந்தியாவில். அந்தப் பிரயாகையைத்தான் இன்று அலகபாத் என்கிறோம் நாம். அது ஒரு புண்ணிய க்ஷேத்ரம். அந்த க்ஷேத்திரத்தின் மகிமை எல்லாம் கங்கையும் யமுனையும் அங்கே கூடுவதால்த் தானே. கங்காநதியில் வெள்ளை வெளேரென்ற தண்ணீர். யமுனையின் தண்ணீரோ கன்னங்கருத்தது. இரண்டும் பிரயாகையில் அப்படியே கொஞ்சதூரம் ஓடிச்சென்று அதன்பின்தான் ஒன்றோடொன்று கலந்து ஒருபடித்தாக ஓடுகிறது என்கிறார்கள் பார்த்தவர்கள்.

இதையே கலிங்கத்துப்பரணி பாடிய ஜயங்கொண்டாரும் பார்த்திருக்கிறார்; அனுபவித்திருக்கிறார். குலோத்துங்கன் பாலாற்றங்கரை மருங்கு பரிவேட்டையாடப் புறப்பட்டபோது முத்துக்குடைகள் ஒரு பக்கமாகவும், நீலப்பட்டாடையும் மணிகளும் போர்த்த சிவிகைகள் ஒரு பக்கமாகவும் போயினவாம். அவை கங்கையும் யமுனையும் ஓடிக்கலந்ததுபோல் இருந்ததென்கிறார்.

நீலமாமணிச் சிவிகை வெள்ளமும்
நித்திலக் குலக் கவிகை வெள்ளமும்
கங்கையும் யமுனையும்
காலவ போன்றதே

என்று இக்கங்கா யமுனு சந்திப்பைப் பாராட்டுகிறார்.

பம்பாயிலிருந்து கொஞ்ச காலத்துக்குமுன் எழுதிய கடிதம் ஒன்றில் Mrs. ஹரிஜன் சாஸ்திரி "சென்னையில் எங்கள் வீட்டு மாடியில் இரண்டு பெரியவர்கள் எத்தனையோ முறை சந்தித்திருக்கிறார்கள். கருப்புக் கண்ணாடி அணிந்த அந்த ராஜாஜியும், நரைத்த வெள்ளைத்தலையுடைய அந்த டி. கே. சியும் அங்கே கூடிக்கலந்து பேசுவது கங்கையும், யமுனையும் கூடிக்கலந்தது போலத் தான் இருந்தது" என்று பொருள்படும்படி எழுதுகிறார்கள். கங்கைக்கும் யமுனைக்கும் எவ்வளவோ தனித் தனியான சிறப்புகள் இருந்தாலும் இரண்டும் சேர்ந்து கலந்து பாய்கின்ற போது அதற்கு ஏதோ இல்லாத மகத்துவம் ஏற்பட்டு விடுகிறதல்லவா? டி. கே. சியும், ராஜாஜியும் தனித்தனியே எவ்வளவோ பெருமையுற்றவர்கள். தமிழ் நாட்டின் அரசியல் தலைவர் ஒருவர் என்றால் மற்றொருவர் இலக்கியத் தலைவர். இரண்டுபேரும் சேர்ந்து விட்டாலோ அரசியல்-இலக்கியம்; சமயம்-சாஸ்திரம்; கலை-ஞானம் என்பதெல்லாமே இணைந்து இணைந்து ஒன்றாகவே ஆகிவிடுகிறது, கங்கையும் யமுனையும் ஒன்றுவதுபோல.

ராஜாஜி டி. கே. சியை எப்படி மதிக்கிறார்கள் என்பதற்குப் பல சொல்லவேண்டாம். "கலை விஷயமாக டி. கே. சி. சொல்லும் ஒவ்வொரு விஷயத்தையும் நான் சொல்லுவதாகவே நீங்கள் ஒப்புக்கொள்ளலாம்" என்று தேவகோட்டை தமிழிசை மகாநாட்டிற்குத் திருச்சி ஜெயிலிலிருந்து தந்தி அடித்தார்களே அது ஒன்றே போதும். டி. கே. சியோ ராஜாஜியைப் பெரிதும் மதிக்கிறவர்கள். அவர்கள் அபிப்பிரா

யங்களுக்கு முக்யத்வம் கொடுக்கிறவர்கள். அவர்களுடைய உணர்ச்சியை, அந்த உணர்ச்சி மூலமாக எழுகின்ற உண்மை சாதனத்தை அனுபவிக்கிறவர்கள். "ராஜாஜியை நினைக்கும்போதெல்லாம் அந்தப் பரம பாகவதனான தசரதனையே நினைக்கிறேன்" என்று டி. கே. சி. அடிக்கடி சொல்வதைவிட வேறு என்னதான் பிரமாதமாகக் கூறிவிட முடியும்

ராஜாஜியோ டி. கே. சியைப்பற்றி வெகு அருமையாக "தமிழ் நாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல வீரச்சேனை சேருமாறு இக்காலத்தில் ஊக்கம் உண்டாக்கியவர் டி. கே. சி. பலர் பல அரியபணிகள் செய்திருக்கிறார்கள்; செய்தும் வருகிறார்கள். ஆனால் டி. கே. சி யின் தமிழ்ப் பணி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. அதை வேறு யாரும் செய்ததில்லை. இதயதத்துவமும் கவிதையின் தனிப்பண்பும் அறிந்து பெரும் பணி செய்பவர் அவர்" என்று எழுதியிருக்கிறார்கள்.

இந்தக் கங்கா யமுனா சந்திப்பு, சாவகாசம் இல்லாத நேரத்தில் எல்லாம் கடிதம் மூலமும் நடக்கும். கடிதங்கள் என்றால் சாதாரணக் கடிதங்களில் அல்ல. உள்ளத்தைத் திறந்து காட்டும் கடிதங்களில்; உணர்ச்சியின் உத்வேகத்தில் உருவாகும் கடிதங்களில்; அரிய உண்மைகளை அழகாகக் கூறும் கடிதங்களில்த்தான். அப்படிப்பட்ட மூன்று அருமையான கடிதங்கள் தான் இங்கே பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. படித்தால் பலன் உண்டு என்றுதான் சொல்லத்தோன்றுகிறது.

மதுரை ஸ்டேஷன்,
10—5—43.

நமஸ்காரம்

தென்காசியிலிருந்து *கவிஞரும் நானுமாக ரயிலில் பிரயாணம் செய்துவந்தோம். வேனல் கொடுமையாகத்தானிருந்தது. விருதுநகர் வந்ததும் உஷ்ணம் அதிகமாய்ப் போய்விட்டது. அதற்காக ரயிலைவிட்டுக் கொஞ்சம் வெளியே இறங்கினேன். அங்கே கல்கியை விற்றுக்கொண்டிருந்தான் ஒரு பையன். அவனிடம் ஒரு பிரதியை வாங்கிக்கொண்டு கம்பார்ட்மெண்டிற்குள் போனேன். கவிஞர் பத்திரிகையை என் கையிலிருந்து வாங்கிக்கொண்டார்கள். பிரித்துப் பார்த்தார்கள். 'உங்களைப் பற்றி அல்லவா C. R. எழுதியிருக்கிறுர்கள்' என்று சொல்லிக் கொண்டு வாசிக்க ஆரம்பித்தார்கள். என்னையும் கேட்கச் சொன்னுர்கள்.

முதல் இரண்டு பாராவையும் உத்ஸாகமாக வாசித்தார்கள். மூன்ருவது பாரா வரவும் வாசிக்க முடியவில்லை. தொண்டை விக்கிவிட்டது. தொண்டையைத் தெளிவுபடுத்திக்கொண்டு "கண்ணுடி சரியாகத்தான் இருக்கிறது. துயரந்தான் கம்மலுக்குக் காரணம்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து வாசித்தார்கள். முடிக்கவும் செய்தார்கள். முடிந்தவுடன் அவர்களுக்கு உண்டான சந்தோஷம் இப்படி அப்படி என்று சொல்ல முடியாது. அவர்களுக்கே அப்படி என்ருல் என்னைப் பற்றி நான் என்ன சொல்லக்கிடக்கிறது?

தங்கள் இதயம் எத்தனையோ காரியங்களுக்கு உருகி உருகி சாமானிய காரியங்களுக்கும் உருகிவிடுகிறது. என்னைப் பற்றி ஏதோ சிலர் புகார் சொல்லுகிறுர்களே!—கம்பரைக் கெடுத்துவிட்டான் — தமிழைக் கெடுத்துவிட்டான் என்று, இது ஒரு பொருட்டான காரியமா? அல்ல, ஆனுலும் தங்கள் இதயத்துக்கு, அதைத் தாங்கமுடியவில்லை. கொதியாத இதயம் கொதிக்க ஆரம்பித்துவிட்டது. எவ்வளவாக இதமான வார்த்தைகளும் இதமான முடிபுகளும் வந்து பேசினுலும் உள்ளத்தின்

* கவிஞர் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை.

கொதிப்பு தெரியவே செய்கிறது. கொதிப்பு அப்படியே சோகமாக மாறுவதைப் பார்த்தால் கம்பரது இதயப் போக்கையே ஞாபகப்படுத்துகிறது.

சிலர், அதாவது மிதந்தவருகப் பார்க்கும் சிலர், சொல்லலாம் பழைய வக்கீல்த் தொழிலுக்கு வந்துவிட்டீர்கள் என்று. ஆனல் உணர்ச்சி என்று ஒன்று உண்டென்பதாக எண்ணி வாசிக்கின்றவர்களது இதயத்தைத் தாக்காமல் இராது கட்டுரை. தங்கள் அரிய உண்மை சாதனத்தை யார் கண்டார்கள். இந்த விதமாக சாதனம் செய்தவர்களைத் தமிழ்நாட்டில்த்தான் கண்டு அனுபவித்திருக்கிருர் கம்பர்—கண்டதை உருவாக்கினர் தசரதனுக. தங்களை நேரில் காணுமலேயே கண்டதுபோலப் பல சந்தர்ப்பங்களில் பேசுகிருர். இதுகாரணமாகத் தங்கள் முன்னிலையில் கம்பரது பாடல்கள் சிலவற்றை வாசிப்பது எனக்குக் கஷ்டமாய்ப் போய்விடுகிறதுண்டு. நண்பர்கள் கல்கி, சந்திரசேகரன் முதலியவர்களுக்கு என் கஷ்டத்தை வெளியிட்டிருக்கிறேன். அவர்களும் என்னுடன் அனுதாபப்பட்டிருக்கிருர்கள். அவர்களது அனுபவமும் அப்படியிருக்கிறது, அவ்வளவுதான்.

செப்புப்பட்டயம் அரசர்கள் அந்தக்காலத்தில் கொடுத்த மாதிரி எனக்கும் அழியாப்பட்டயம் கொடுத்திருக்கிறீர்கள். இந்தப் பட்டயம் எளிதில் கிடைக்கக்கூடியதா ?

உள்ளன்போடு ஒவ்வொரு வார்த்தையும் வருகிறது. அது காரணமாக உயர்ந்த இலக்கியமாய் வைத்து (நானும் என் குடும்பத்தாரும் மாத்திரமல்ல) யாருமே அனுபவிக்கவேண்டிய எழுத்து. அதிலுள்ள வேகம், நயம், பரிவு, எல்லாம் சேர்ந்து வந்து இதயத்தில் படிந்துவிடுகிறது. வார்த்தையும் விஷயமும் அகன்ருல்க்கூட உணர்ச்சிபாவம் இதயத்தில் உலவும்.

என்னுடைய பணி ஓங்கவேண்டும் என்று ஆசி கூறுகிறீர்கள். என்றென்றும் எனக்குத் துணை நிற்கும் அது.

தங்கள் அன்பன்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்
24—5—43

நமஸ்காரம்.

முத்தொள்ளாயிரத்தைப் படிக்கப் படிக்க கார்டுகளும் கடிதங்களுமாக எழுதி அனுப்புகிறீர்கள். விஷயம் எனக்கு நன்ருய் விளங்குகிறது. அவ்வளவு ஆசையோடு கவிகளையும் நான் எழுதிய குறிப்புகளையும் வாசிக்கிறீர்கள். அந்த ஆசை வருவதற்கு இதய அனுபவமும் பாஷை அனுபவமும் நெடு நாளாய் இருந்திருக்கவேண்டும். தங்களுக்கு இதெல்லாம் சாமானியமாகக் கைவந்துள்ளது.

அனுபவித்த, அற்புதமான இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்புள்ள விஷயங்களை எப்படி மற்ருெருவரோடு பங்கிட்டு அனுபவிக்காமல் இருக்கமுடியும்! நேருக்கு நேராகச் சொல்லுவதற்கோ நான் சென்னையில் இல்லை. சரி, போஸ்டாபீஸ் இருக்கிறதென்று அப்போதைக்கப்போதே எழுதி விட்டீர்கள். இதில் எனக்கு எவ்வளவோ எக்களிப்பும் ஆனந்தமும். கவிகளைப்பற்றி எழுதும்போதெல்லாம் எனக்குப் பயம் உண்டு - விளங்குமா? என்று. ஆனலும் நான் பார்த்தவரையில் தமிழ் ஆராய்ச்சி நிபுணர்களுக்கு அவ்வளவாக விளங்கிவிடவில்லை. தமிழை ஒட்டி ஏதோ ஒரு சாபம் இருக்கிறது.

வித்வான் அல்லாதவர்கள் ரொம்பவும் முத்தொள்ளாயிரச் செய்யுள்களை அனுபவிக்கிருர்கள்; பெண்டுகள் அனுபவிக்கிருர்கள். ஆனல் ரேடியோவில் விமரிசனம் செய்தவர் முத்தொள்ளாயிரப் பாடல்கள் ரொம்பவும் மட்ட ரகமானவை என்று சொன்னுராம். ஆகவே எழுத்தாளர்களுக்கும் புஸ்தகம் பயனற்றதுதான் என்று ஏற்பட்டுவிட்டது. உண்மைக் கவி என்ருல் நெடுகிலும் தத்துக்கள்தான். இனியும் தத்துக்கள்தான்.

தமிழ் இலக்கியத்தில் தங்களுக்கு நெருங்கிய பயிற்சி இல்லாதிருந்தாலும் உண்மையையே நாடும் பயிற்சி (எல்லாத் துறைகளிலுமே) அபாரமாய் இருந்திருக்கிறது. அது காரணமாக அரசியல் விஷயங்களைக் கடாக்ஷப் பார்வைகொண்டு பார்க்கிறீர்கள். சையன்ஸ் விஷயங்களிலும் அப்படியே. சாஸ்திரியும் ரிஷிதரும் பேசுகிற பேச்சு * மெள்ள மெள்ள வானத்தையே அளந்துவிடுகிறது. இவைகளோடு கவியின் இதயத்தைத் தொடுவதும் எளிதாய் இருக்கிறது தங்களுக்கு. தங்கள் கட்டுரைகளை எல்லாம் படித்து அனுபவிக்கப் பழகவேண்டும் தமிழர்கள். வெகு சீக்கிரத்தில் அந்த யுகம் பிறக்கும் என்று நம்புகிறேன். பெண்டுகள் அனுபவிக்க ஆரம்பித்து விடுவார்கள்; அதன் பிறகு ஆடவர்களும் தொடர்ந்து போகவேண்டியவர்கள் தானே!

* * *

கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களைத் தாங்கள் பலவருஷங்களுக்கு முன்னமேயே நன்முய் மதித்துவிட்டீர்கள். அவர்களது இல்லத்துக்கும் போய் மிக்க கௌரவம் செய்தீர்கள். ஆனால் ஒரு தமிழ் ஸ்காலராவது அப்படிச் செய்ததாகத் தோன்றவில்லை. காரணம் 'தேசி'யின் கவிகள் எல்லாம் வெகு சாமானியம் என்று அந்த ஸ்காலர்களுக்குத்தோன்றியதுதான். இதையெல்லாம் யோசிக்கும்போது ராஜா ஸரும் நகரத்தாரும் கவிஞரைப் பாராட்டிய பெருமையை ரொம்பவும் நாம் மதிக்கவேண்டும். தமிழுக்கு நல்ல காலம் வந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். எல்லாவற்றிற்கும் காலம் ஒன்று உண்டென்று தாங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

கவிஞருடன் பிரயாணம் செய்து விமரிசைகளைக் கண் குளிரக் கண்டேன். தனியான இன்பந்தான் அது.

தமிழிசை சம்பந்தமாக ராஜா ஸர் தங்களுடன் கலந்து கொண்டதாகச் சொன்னர்கள். நம்முடைய வழக்க ஒழுக்கங்கள் இன்று ஒரு மாதிரி, நாளை வேருெரு மாதிரிதான் ஆகப்

---

* கல்கியில் வெளிவந்தது—திண்ணை ரஸாயனம்.

போகிறது. ஆனால் நம்முடைய சங்கீதமோ என்றென்றும் நிற்கவேண்டியது. கடவுளுடைய திருவடியை அடைவதற்கு சங்கீதத்தைவிட மேலான பாஷை ஒன்று இருப்பதாகச் சொல்லமுடியாது. எந்த விதத்திலும் அத்தகைய கலையைப் பாதுகாக்கவேண்டியதுதான். இந்த அபிப்பிராயத்தைத் தாங்கள் தழுவிச் சொன்னதாகச் சொன்னார்கள். ராஜா ஸர் அவர்களுக்கு அதில் ரொம்ப திருப்தி.

இங்கே பதினைந்து நாளாக நல்ல சாரல். அருவி நன்றாய் விழுகிறது. என்னுடைய உடம்பும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறி வருகிறது. தாங்கள் இங்கே வர இயலுமானால் உடம்பு தேறும் என்று நம்புகிறேன். வேண்டிய வசதி செய்கிறேன். இன்புளூவென்ஸா காய்ச்சலின் பலஹீனம் எல்லாம் நீங்கியிருக்கும் என்று நம்புகிறேன். பாப்பா அம்மாள், நரசிம்மம்* குழந்தைகள் எல்லாரும் சௌக்கியந்தானே? ரயில் வசதி காரணமாக (வசதி இன்மை காரணமாக) சென்னைக்கு வந்து தங்களையும் மற்றவர்களையும் பார்க்க இயலவில்லை.

நமஸ்காரம்.

டி. கே. சிதம்பரநாதன்.

---

* ராஜாஜியின் மக்கள்.

திருக்குற்றாலம்,
10—11—43.

நமஸ்காரம்.

தாங்கள் மிக்க அருமையோடு எழுதிய கடிதம் (5-11-43) கிடைத்தது. எத்தனையோ ரஸமான விஷயங்கள் அதில் கிடக்கின்றன.

தங்கள் கதையைத் தங்களைப்போலவே நான் உணர்ந்து அனுபவிக்கிறேன் என்று சொல்கிறீர்கள். அது ஒரு பெருமைதான் எனக்கு. தங்கள் கதைகளை வாசிக்கும்போது அதிலுள்ள நுட்பங்களையும் நயங்களையும் மற்றவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள்போலிருக்கிறதே, என்று அடிக்கடி நான் பயப்படுவதுண்டு. தங்கள் இதயத்தையும் அதன் விசாலத்தையும் பூரணமாய் அறிந்துவிடுவது லகுவான காரியம் அல்ல. கொஞ்சம் சுற்றி அலைந்தெல்லாம் பார்க்கவேண்டிய காரியம். இதற்கெல்லாம் தற்கால உலகில் போதிய அவகாசம் இல்லை. என்ன செய்வார்கள், அப்பாவிகள்!

உண்மை நிலையில் நின்றே நண்பர் கல்கி எழுதுகிறார்கள். அதனாலேயே அந்த எழுத்துக்கு உயிர், அழகு எல்லாம் ஏற்படுகிறது. பொதுவாக மற்றவர்கள் எழுதுகிறதெல்லாம் வின்னியாசமும் வெளிவிச்சுமாயிருப்பதால் நம்மவருக்கு உண்மையான எழுத்தோடு பழக்கம் இல்லாமல் போய் விடுகிறது. 'நல்லது பொல்லது என்கிற வித்தியாசத்தைக்கூட அறியமுடியாமல்ப் போய்விடுகிறது. கல்கியின் நயத்தைக்கண்டுபிடிக்கமுடியவில்லை. சதா உண்மை சாதனத்தில் இருக்கும் தாங்கள்தான்,

> "கல்கியைப்போல் வேறு ஒரு எழுத்தாளி இல்லை. எத்தனையோ பேர்கள் சுமாராக எழுதுகிறார்கள். சாரமில்லை; அவர் ஒருவர் எழுத்துத்தான் எழுத்து."

என்று பேரம் பண்ணாமல்ச் சொல்லக்கூடும். தமிழ் எழுத்தாளர் ஒவ்வொருவரும், கல்கிக்கு மேலேதான் என்று எண்ணுகிறார்

கள். அப்படியானல்த் தமிழ் உலகத்தைப்பற்றிப் புகார் சொல்லாமல் என்ன செய்கிறது.

* * *

'பார்த்திபன் கனவு' வெகு அழகாய் அமைந்த கதை. சரித்திரப் புறப்படலம் முழுதும் எனக்குத் தெரியவில்லைதான். தெரிந்திருந்தால் கட்டுக்கோப்பின் நயத்தை அதிகமாகவே அனுபவித்திருப்பேன். ஒவவொரு அம்சமும் ரஸம் ததும்பி நிற்கிறது. நடை வெகு தெளிவும் வேகமும் கொண்டது. பாத்திரங்கள் பூர்வமான பாத்திரங்களாய் இருந்தாலும் நம்மோடு லகுவாய் பழகிக்கொள்ளுகிறார்கள். நம்மோடு ஒட்டியவர்களாகவே தாராளமாகப் பேசுகிறார்கள்; உறவாடுகிறார்கள். வேடிக்கைகளிலும் குறும்புகளிலும் அவர்களுக்கு வெறுப்பில்லை. அதனல் புஸ்தகத்தை வாசிப்பதில் யாதொரு கஷ்டமும் இல்லை. எளிதில் வாசித்து முடித்துவிடலாம். Tail piece கள் ஆங்காங்கு பந்தம் பிடித்து விஷயத்துக்கு விளக்கம் கொடுக்கின்றன. இது ஒரு சௌகரியந்தான் வாசிப்பவர்களுக்கு. இப்படியெல்லாம் திருத்தமாய் அமைந்த புஸ்தகம் இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை.

* * *

ஆராயும் திறமும் இதயப் பண்பும் யார்க்கும் இல்லாதபடி தங்களிடம் அமைந்து இருப்பதால் தங்களோடு ஒத்துணர்ந்து உறவாடுதல் யாருக்கும் கஷ்டம்தான். எனக்கும் கஷ்டமாய்த் தானிருக்கிறது. அடிக்கடி அசந்தர்ப்பமாய் என்னவெல்லாமோ பேசி விடுகிறோம், செய்துவிடுகிறோம். ஆனல் ஒரு உறுதி: அதையெல்லாம் தாங்கள் ஒரு சிறிதும் பொருட்படுத்துகிறதில்லை என்று. தங்கள் இளக்காரம் அளவு கடந்தது. குற்றம் குறைகளுக்கு விசாலமான மார்ஜின் கொடுத்துவிடுகிறீர்கள். இப்படியெல்லாம் பார்க்கிறதிலிருந்துதான்

> "வெகுசிலர்தான் எனக்கு நண்பர்களாகக் கிட்டியிருக்கிறார்கள். தாங்கள் அதில் ஒருவர். தாங்களே என்று சொன்னலும் மிகையாகாது."

என்று அபாரமான அன்புபாராட்டி எழுதியிருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட அன்பைப்பெற எவ்வளவோ பூர்வ புண்ணியம் செய்திருக்கவேண்டும் நான்.

வேங்கடசுப்பிரமணியம் * "அச்சமில்லை" புஸ்தகத்துக்கு இரண்டு பிரதி கொண்டுவந்தார். வெகு அழகாய் அமைந்திருக்கிறது. அமைப்பு யாரையுமே கையில் எடுத்துப் படிக்கத் தூண்டும்.

கொஞ்சநாளாகப் பாரதியார் பாடலைப் பார்த்து அனுபவித்துக்கொண்டு வருகிறேன். அவருடைய தெளிந்த பாட்டுக்களில் "அச்சம் இல்லை" என்பதும் ஒன்று. துள்ளலும் மடக்கும், உண்மைக்கு வேகம் கொடுத்து விடுகின்றன. கடைசிச்செய்யுளில் எளிமையும் ஆத்திரமும் சேர்ந்துவிடுகின்றன. கவிக்கு அபார சக்தி உண்டாய்விடுகிறது.

உச்சிமீது வான் இடிந்து
விழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சம் என்ப(து) இல்லையே!

இந்த உண்மையை எவ்வளவு லகுவாய் மனசில் புகுத்த முடியும் என்ற புஸ்தகத்தைப் படித்தால் தெரியவரும்.

"ஆத்மா என்பது உடலில் ஓர் அவயவத்தைப் போன்றதல்ல அதற்குத் தனி இடமில்லை. உடலையும் உள்ளத்தையும் ஊடுருவிக் கலந்து நிற்கிறது" என்று சொல்லியதை உணர்ந்துகொண்டால் எல்லாம் எளிதில் புலனாய்விடும். சரீரத்துக்குள் உயிர் நிலவி நிற்கிறது. அதே போல அந்த உயிருக்குள் பரம்பொருள் நிலவி நிற்கிறது என்பது உறுதியான சூத்திரம். இதைவிடத் தெளிவாய் எப்படி உண்மையைச் சொல்ல முடியும்.

---

* டி. கே. சியின் காரியதரிசியாயிருந்தவர்.

ஏதோ இதெல்லாம் F. A. Class இல் Trignometry படித்த காரியம் அல்ல. பரீக்ஷைக்காகப் பாடம்; பாடத்துக்காகக் படிப்பு. அவ்வளவுதான். வேறு காரியம் அதில் இல்லை— என்று மாணவர்கள் எண்ணுகிறார்கள். சமய உண்மைகளையும் அப்படியே பார்க்கவேண்டும், கற்றுவிடவேண்டும் என்றுதான் எண்ணிவிடுகிறார்கள். தாங்களோ, சமயக் கல்வி வாழ்க்கைக்கு உதவுவதுதான்; அச்சம் என்பது இருக்காதல்லவா என்கிறீர்கள். ஆனால் யாரால் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும் என்று கைவிட்டுவிடவே தோன்றும் முதலில். அதற்கு நல்ல ஒரு கைத்தாங்கல் கொடுக்கிறீர்கள். உண்மையான கைத்தாங்கல்தான்.

> "இந்த முறையில் எடுத்த சிறு முயற்சிக்கும் நல்ல பலன் உண்டாகும். நஷ்டம் கிடையாது............ குற்றம் குறைகள் ஏற்பட்டதனால் அபாயம் ஏதும் இல்லை." என்று எழுதுகிறீர்கள்.

இது என்னுடைய சொந்த அனுபவம் என்று சொன்னால் அதிகப் பிரசங்கித்தனம் அல்ல. ஏதோ காலையில் நண்பர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது பாடல்களை எடுத்துச்சொல்லிப் பொழுதுபோக்குவது வழக்கந்தானே. ஒரு நாள் திருக்கருவை வெண்பா ஒன்று தானாக வந்தது.

உடலில் உயிர் போல்
    உயிர்க்குயிர் ஆனானைக்
கடல் உலகெல்லாம் தேடிக்
    காணேன்; — கோடியதொரு
வன்கருவை மாற்றிப்
    புரந்தவனைப் புண்ணியனைத்
தென்கருவை யிற்கண்டேன்
    நான்.

இதை மற்றவர்களுக்கு எடுத்துத் தெளிவு படுத்துவதன் காரணமாக எனக்கும் தெளிவு கிடைத்துவிட்டது. அர்த்தத்

தெளிவு அன்று முழுதும் நினைவில் நிற்க நேர்ந்தது. பிறகு தூக்கத்தோடு தூக்கமாய் மறந்து போய்விட்டது. போனால் என்ன? அடி உள்ளத்தில் ஒரு மூலையில் கொஞ்சம் பதிந்து கிடக்கத்தான் செய்யும். மின்மினியின் வெளிச்சம் போலாவது கொஞ்சம் ஒளி வரத்தான் செய்யும் சமயம் நேரும்போது. புஸ்தகத்தில் தங்கள் அனுபவமும் ஆர்வமும் நன்றாய் வெளியாகின்றன. கருத்துடன் வாசிப்பவர்களைத் தங்களோடு ஒட்டச் செய்கின்றன அவை. 'நிச்சயமில்லாதிருக்கும் பிரதேசம் என்று இருக்கிறது. அது இதோ இருக்கிறது' என்று சுட்டிக் காட்டுகிறீர்கள். தமிழருக்குப்பெரிய உபகாரம்.

வைஷ்ணவ பரிபாஷையில் தனியான பண்பாடு சுகம் எல்லாம் இருக்கிறது. அந்தப் பாஷைக்குச் செவியைச் சாய்த்தால் போதாது. இதயத்தையே சாய்க்கவேணும். சாதாரண வழக்கோடொட்டிய பிரயோகம் "நான் சாப்பிட்டாயிற்று" என்பதை எடுத்துக் காட்டிவிட்டு, "தேவரீர் எப்பொழுது எழுந்தருளிற்று" என்பதைச் சொன்னபோது அதன் பண்பாடும் சுகமும் எளிதில் விளங்கிவிடுகிறது. அதற்குச் சமானமான வரவேற்பு தமிழிலும் இல்லை, வேறு எந்தப் பாஷையிலும் இருக்காதோ என்று சொல்லத் தோன்றுகிறது. நண்பர்கள் நாலைந்து தடவை "தேவரீர் எப்பொழுது எழுந்தருளிற்று" என்று சொல்லிப் பார்ப்பார்களானால் நாவில் ரஸம் ஊறப் பார்ப்பார்கள். "Hallo! How this way?" என்று சொல்லிப் பார்த்தால் ரஸம் ஊறவா செய்யும்!

* * *

ஆழ்வார் திருநகரியைப் பற்றிய பாடல் மிக உயர்ந்த பாடல் என்று தாங்கள் அனுபவிக்கிறீர்கள். அந்த அனுபவத்தை வெளியிடுவதற்காகவே ஒருவன் ஸ்ரீ வைஷ்ணவனாகப் பிறக்கலாம் என்று அழகாகச் சொல்லியிருக்கிறீர்கள். இது சம்பந்தமாக இன்னொரு "ஸ்ரீ வைஷ்ணவரை" இனங்காட்ட விரும்புகிறேன். இதுதான் நண்பர் மு. அருணாசலம் பிள்ளையின் மனைவியார் ஸ்ரீமதி ராஜேஸ்வரி அம்மாள்.

தாங்கள் 'சக்தி'யில் எழுதியிருக்கும் பாட்டு-இதுவோ திருநகரி—உண்மையில் ஒருவர் அதிசயம் அடைந்தால் இப்படித்தான் இருக்கும் என்று காட்டுகிறது. நானும் திருக்குற்றாலத்தைப் பார்த்ததும் அப்படியே தான் அதிசயம் அடைந்தேன், இதுவோ திருக் குற்றாலம் என்று!''

என்பதாக வெகு தீர்க்கமாக எழுதியிருக்கிறார். உணர்ச்சிபாவங் களை நம்முடைய சகோதரிகள் எளிதில்க்கண்டு கொள்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. நல்ல உத்தியோடு (Technique) வெளி யிட்டும் விடுகிறார்கள். ராஜேஸ்வரி அம்மாளை என் ஸ்ரீ வைஷ் ணவர் குழாத்தில் சேர்க்கக்கூடாது?

முதல் அடியில் ஒரு சிறு திருத்தம். புஸ்தகங்களில் —ஸ்ரீ வைஷ்ணவர்கள் பதித்த புத்தகங்களில்த்தான்—பொருநல் பொருநல் என்றே எழுதியிருக்கிறது. பொருநை என்று திருத்தி, தாம்பிரவர்ணியைக் கெடுத்து விட்டேன். இது சிறு பாதகந் தான். பிறகுதான் மகா பாதகம் செய்யநேர்ந்தது!

இதுவோ திருநகரி
ஈதோ பொரு(நை)
இதுவோ பரமபதத்து
எல்லை - இதுவோதான்
வேதம் [பகர்ந்திட்ட]
[மெய்ப்பொருளின்] உட்பொருளை
ஓதும் சடகோபன்
ஊர்.

மூன்றாவது அடி, புஸ்தகத்தில்,

"வேதம் தமிழ்செய்த
மெய்ப்பொருட்கும் உட்பொருளை"

என்பதாக இருக்கிறது. எனக்குப் பொருள் விளங்கவில்லை. ஆனால் நம்முடைய வித்வத் கோஷ்டிகள் "வேதம் தமிழ் செய்த"

என்ற சொல்லைச் சொல்லிச் சொல்லி ஆனந்த பரவசத்தராய் ஆய்க்கொண்டே இருப்பார்கள். இன்னும் அந்தப் பரவசம் அவர்களை விட்டபாடாக இல்லை. பொதுவாகப் பொருள் இல்லாவிட்டால்த்தானே (சங்கீதத்தில் உள்ளதுபோல்) பரவசத்துக்கு உள்ளாகலாம். மேலும் மெய்ப் பொருட்கும் உட் பொருளை என்று சொல்வதில் வேண்டாதபடி நெருக்கடி உண்டாகிறது. அதை இளக்குவதற்காக,

"மெய்பொருளின் உட்பொருளை"

என்று மாற்றினேன். பாடலைத் தாங்கள் அனுபவித்ததின் காரணமாகத்தான் இத்தனை நீண்ட குறிப்பெல்லாம் எழுதுகிறேன்.

10-11-43ல் எழுத ஆரம்பித்த கடிதம் இன்று 15-11-43ல் ஒருவாறு முடிகிறது. எத்தனையோ விஷயங்கள் குதித்துக் கொண்டு வருகின்றன. ஆனால் அஹிம்சைத் தத்துவத்தை அனுசரிக்கவேண்டாமா என்றுதான் நிறுத்திக்கொள்கிறேன்.

எனக்குப் பல்லினால் யாதொரு அசௌகரியமும் இல்லை. மொத்தத்தில் சௌக்கியமாகத்தான் இருக்கிறது. தங்களுக்கு உடம்பு சுகமாய் இருக்கிறதல்லவா. நரசிம்மம், பாப்பா அம்மாள் * குழந்தைகள் எல்லாரும் சௌக்கியந்தானே?

குற்றாலம் ரொம்ப சௌகரியமாகவே இருக்கிறது.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்

---

* ராஜாஜியின் மகன், மகள், பேரன் பேத்திகள்.

அன்பார்ந்த

'திருப்புகழ்மணி' அவர்களுக்கு.

தமிழ் நாட்டில் இன்று மூன்று மணிகள் உண்டு. சங்கீத வானிலோ, நாடக மேடை களிலோ தோன்றி மறையும் மணிகள் அல்ல அவை. இலக்கிய உலகில் இலக்கிய அன்பர் களின் உள்ளத்தில் இடம்பெற்றிருக்கும் மணி கள் தாம் அவை. ஒவ்வொரு மணியும் ஒவ் வொரு விதமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. உண்மைக் கவிகளை, உயர்ந்த கவிகளை, உதவும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைத் தமிழ் உலகம் நன்கறியும். தமிழுக்காகவும் தமிழ்க் கவிதைகளுக்காகவுமே வாழ்கின்ற ரஸிக மணியின் புகழோ இன்று இமயம்வரை எட்டி நிற்கிறது. தமிழ், இசை, பக்தி மூன்றையும் இழைத்துக் குழைத்து தமிழ் மக்களுக்கு ஊட்டி அவர்களின் ஞான குருவாக விளங்கும் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களோ ஒரு பெரிய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார்கள். இன்று மூன்று மணிகளும் நம்மிடையே இருப்பது நமது பாக்கியம்.

ராஜ்ய ஸேவப்ரவீன ஸ்ரீ டி. எம். கிருஷ்ண சாமி ஐயர் அவர்கள் அன்று சென்னையில் பிரபல வக்கீல். இன்று திருவாங்கூர்ப் பிரதம நீதிபதி. இதைத் தமிழ் அன்பர்கள் அத்தனை பேரும் தெரிந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் கையில் ஜால்ராவுடன் கம்பீரமாக மேடைமீதிருந்து முருகன் புகழைப்பாடி உளம் உருகித் திருப்புகழ் பஜனை செய்யும் திருப்புகழ்

மணியை அறியாதவர் இல்லை. அந்த பஜனையில் ஈடு படுபவர்கள் முருக பக்தர்கள் மட்டுமல்ல, சைவ வைஷ்ணவ சமயிகள் மட்டுமல்ல. புறச் சமயிகள் என்று நம்மால் கருதப்படும் சவரி முத்துப் பிள்ளையும், முகமது நயினூர் சாகிபு * அவர்களும் என்றால் கேட்பானேன்.

14-5-45ம் தெய்தியன்று இரவு 11-மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் வசந்த மண்டபத்தில் பஜனை ஆரம்பித்தது. பஜனைக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் ஐயாயிரம்பேர். வீட்டில் சோபாக்களை விட்டும், கட்டில்களை விட்டும் இறங்காத ஜமீன்தார்கள், கலெக்டர்கள், பிரபுக்கள் எல்லாம் விஜயம் செய்திருந்தனர். 'மண்மகள் அறியா வண்ணச் சீறடி' வருந்தக் கால்களை மடக்கித் தரையிலிருந்து பஜனையை அனுபவிக்க ஆரம்பித்தனர் அவர்கள். பஜனை முடியும்போது மணி இரண்டோ மூன்றோ இருக்கும். அத்தனை நேரமும் அத்தனை பேரும் மெய்ம்மறந்து பஜனையைக் காதுகுளிரக் கேட்டனர். நல்ல தமிழ், நல்ல இசை, நல்ல பக்தி மூன்றும் சேர்ந்துகொண்டு வந்திருந்தவர்களை என்ன என்னவெல்லாமோ செய்துவிட்டன. பஜனை செய்தவர்கள் திருப்புகழ் மணி.

இவர்கள் வாழ்க்கையிலே ஒரு ரகஸ்யம்: சென்னை நகரில் பிரபல அட்வகேட்டாய் இருக்கும்போதே அவர்கள் ஜாலராவைத் தூக்கிக் கொண்டு வெளிக்கிளம்பி விட்டார்கள், பஜனை

---

* ஸ்ரீ சவரிமுத்து பிள்ளை S. I. R. எலக்டிரிகல் இன்ஸ்பெக்டர்; பண்டித சவிராய பிள்ளையின் பேரர்.
ஜனுப் முகம்மது நயினர் மேலப்பாளையத்தில் ஒரு வியாபாரி; நல்ல ரவிகர்.

செய்ய. "இந்த ஞானப் பயித்தியம் வந்தபின் நமது கேஸ்களை எங்கே இவர் கவனிக்கப்போகிறார் என்று கட்சிக்காரர்கள் எண்ணுவார்களோ, அதனால் இவர்கள் 'ப்ராக்டிஸு'க்கே பங்கம் நேருமோ" என்று அஞ்சினார்கள் குடும்பத்தார். இந்த அச்சத்தையும் கொஞ்சம் பக்குவமாகவே திருப்புகழ் மணியிடம் சமர்ப்பித்தார் அவர்களுடைய மனைவியார். அப்போது இவர்கள் சொன்னதெல்லாம் இவ்வளவுதான்: "வேலையையும் பார்த்துக்கொண்டு பஜனையையும் செய்து கொண்டிருப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா? இல்லை: வேலையையும் உங்களையுமே உதறிவிட்டு, ஜிப்ளாக்கட்டையைத் தூக்கிக்கொண்டு நான் சென்னையைவிட்டே புறப்பட்டுவிடுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று. இதே மனப்பான்மையுடன் தான் இன்றும் அரசாங்க சேவை செய்கிறார்கள். உலக உத்தாரணத்துக்காக என்றுவது அவர்கள் வேலையை உதறிவிட்டு தம்பூரும் கையுமாக ஒரு பஜனைக் கோஷ்டியுடன் வெளிக்கிளம்பி விட்டார்கள் என்று செய்தி வந்தால், அது ஆச்சர்யப்படத் தக்கதொன்றில்லை. ஆனல் அவர்களுடைய ஜால்ரா ஒலிக்க ஒலிக்க அவர்களுடைய பதவியும் புகழும் ஓங்குகின்றது.

இந்தத் திருப்புகழ்மணி நமது ரஸிகமணியின் மதிப்பிற்குரிய பெரியார்களில் ஒருவர் அவர்களுக்கு டி. கே. சி எழுதியனுப்பிய மூன்று கடிதங்களுமே அதற்கு நல்ல சான்று பகரும். டி. கே. சியைத் திருப்புகழ்மணி எப்படி மதிக்கிறார்கள் என்பதை

"தமிழைக் கலையாகவும் வேதமாகவும் கூடி அனுபவிக்க உதவி புரியும் அருமை

யான நண்பர் அவர் செந்தமிழ் இன்பத்தில் ஈடு பட்டுத் தமிழர்கள் தமிழை நாவிலே வளர்க்க வேண்டும் என்ற பெரும் கொள்கையைக் கொண்டவர் அவர்'' என்று அவர்கள் "ரஸிக மணி டி. கே. சி" யின் முகவுரையில் எழுதுவதி லிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

திருப்புகழ்மணியை நினைத்தால் தமிழை நினைப்போம்; ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவனை நினைப்போம்; அந்த இறைவன் பேரில் பாடப்பட்டிருக்கும் எண் ணிறந்த பக்திப்பாடல்களை நினைப்போம். வல்ல வேல் முருகனை நினையாமல் இருப்பதோ சாத்தி யமே இல்லை.

இனி, கடிதங்களைப் படியுங்கள்.

வண்ணார்பேட்டை, திருநெல்வேலி.
10—5—42.

அருமை நண்பர் டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இன்று காலை முற்றத்திலிருந்துகொண்டு நண்பர்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். நடராஜனும் தங்கச்சியும் * ஓடிவந்து 'தாத்தா தாத்தா! பாட்டுத் தாத்தா பாட்டுப் பாடுகிறார்கள்' என்று சொன்னார்கள். சொன்னதோடு விட்டுவிடவில்லை. கையைப் பிடித்திழுத்து ரேடியோவுக்குமுன் உட்கார்த்திவிட்டார்கள். வீரட்டானப் பதிகம், கந்தர் அலங்காரம், திருப்புகழ் இவைகளைத் தனியான அழகு வாய்ந்த ராகங்களில் குழைத்து ஊட்டிக்கொண்டிருந்தீர்கள். 'உலகம் ஏது உயிர்வைத்துக் கொண்டிருக்கத் தக்க இடமாய் அல்லவா இருக்கிறது!' என்று பட்டது.

தங்கள் பக்தியும் தமிழும் இசையும் அபூர்வமான கிளர்ச்சியை எனக்குக் கொடுத்துவிட்டன. உலகத்தில் வேறு எங்கேயாவது யாராவது இந்த விதமான உணர்ச்சியை அனுபவிப்பதுண்டா என்று வினவத் தோன்றுகிறது. நம்முடைய நண்பசிகாமணிகள் "நீ என்ன எல்லோருடைய இதயத்தையும் கண்டுவிட்டாயா?" என்று கேட்கலாம். இதயத்தைக்காணவில்லை தான். ஆனால் நம்முடைய சாவேரி போலவும், அடாணா போலவும் உயர்ந்த ரகமான தேன் எங்கும் கிடையாது.

தன்னை மறந்து
தலைவாசல் தாள்போட்டு
உன்னை நினைந்து
உறங்குவ தெக்காலம்

போலவும்

---

* நடராஜன் — டி. கே. சியின் பேரன். தங்கச்சி அவன் தங்கை டி. கே. சியின் பேத்தி.

பாழ்வாழ் வெனும்
இப்படு மாயையி லே
விழ்வாய் என
என்னை விதித்தனை யே
தாழ்வா னவை
செய்தன தாம்உள வோ
வாழ்வாய் இனி
நீ மயில் வாகனனே!

போலவும் தமிழுண்டா? குன்று தோருடிய முருகன் உண்டா? வேலுண்டா? தங்கள் இதயத்தைப் பிணித்து நிற்கும் பக்தி உண்டா? கிடையாதுதான் என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு. 'டாங்கிகள்' நம்மிடம் இல்லைதான்; 'எயர் கிராப்ட் காரியர்கள்' நம்மிடம் இல்லைதான். 'டைவ்பாம்' போடத்தகுந்த விமானங்களும் இல்லைதான்.

கிளைபட் டெழு
சூருரமும் கிரியும்
தொளைபட் டுரு
வத்தொடு வேல்

இருக்கிறது. இந்தவேல் போனபோன இடமெல்லாம் நாலா பக்கமுமே நின்று காக்கிறது. இத்தகைய ஆயுதத்தை ஜப்பானியர்தான் செய்துகொண்டார்களா! "மேல்" நாட்டார்தான் செய்து கொண்டார்களா? இல்லை. நான் சொல்லுவது உபசாரமும் அல்ல, சௌடால்த்தனமும் அல்ல, வெறும் உண்மை.

காலையில் அனுபவித்த விஷயமாகத் தங்களைப் பாராட்டுவதா? தமிழ்ப் பாடல்களை ஆதரிக்கவேண்டும் என்று சொல்பவர்களைப் பாராட்டுவதா? ரேடியோ நிலையத்தாரைப் பாராட்டுவதா? கிராமபோனை சிருஷ்டித்த எடிசனைப்பாராட்டுவதா? இப்படிப் பிரிவினை செய்வதும் பாராட்டுகளை வினியோகம் செய்வதும் கஷ்டம். ஆனதால்,

"ஜெனித்த பிறவியைக்
கொடுத்த திருவடி
ஜெனியா தெமைஇனி
விடுத்த திருவடி
பனித்த சடையினர்
பிடித்த திருவடி
இனித்த எமதுளம்
உடுத்த"

திருவடியைப் பாராட்டிவிடுவோம்.

* * •

தங்கள் "கந்தர் அனுபூதி" நல்ல பொக்கிஷம். அதில் கரன்ஸி நோட்டுகள் இல்லை. ஆனால் எந்த மார்க்கெட்டிலும் செல்லும்படியான பொன்னும் ரத்தினங்களுமே கிடக்கின்றன. மூன்றாவது பாட்டு

வானோ? புனல்பார் கனல்மா ருதமோ?
ஞானோ தயமோ? நவில்நான் மறையோ?
யானோ? மனமோ? எனையாண் டஇடந்
தானோ? பொருளா வதுசண் முகனே

அருமையான பாட்டு. விஷயம் பெரிய விஷயம். பரதத்துவ லக்ஷணத்தை அழகாய் எடுத்துச் சொல்லியிருக்கிறது. தொண்ணூற்றாறு தத்துவங்களையும் சொல்லிவிட்டு (ஒதுக்கியும் விட்டுத் தான்)

"எனையாண்டஇடந்தானே
பொருள்"

என்று முடித்ததின் நயம் தனி. செய்யுளுக்குத் தாங்கள் அழகாகப் பொழிப்புரை கொடுத்துவிட்டீர்கள். பொழிப்பே விளக்க உரைதான். 'என்னை ஆட்கொண்ட இடம்தானே!' என்று சொல்லிவிட்டு - 'நின் கருணைதானே' என்று வியாக்கியானமும் கொடுத்துவிட்டீர்கள். உண்மையை, அதாவது பரதத்துவத்தை

அறிந்து அனுபவித்திருந்தால்த்தான் இப்படியெல்லாம் லகுவாக வும் விளக்கமாகவும் வியாக்கியானம் செய்யக்கூடும். புஸ்தகத்தை வாசிக்கும்போது தங்களையும் தங்கள் பக்தி பாவங்களையும் நேரில் காண்கிறேன். ரொம்ப திருப்தி.

தங்கள் அன்புள்ள,
டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றலம்,
15—9—43.

அன்பார்ந்த திருப்புகழ்மணி அவர்களுக்கு,
நமஸ்காரம்.

என் பேரனுக்குத் தங்கள் ஆசி பூரணமாய்க்கிடைத்தது. கலியாணம் சிறப்பாய் நடந்தேறியது. பல நண்பர்களும் தங்கள் ஆசிக்கடிதத்தைப் பார்த்து ரொம்பவும் பாராட்டினர்கள். லகுவில் கிடைக்கிற காரியமா உள்ளன்போடு கூடிய தங்கள் ஆசி!

பொதிகை மலைக்கு இப்பாலும் அப்பாலுமாக நாம் இருந்து கொண்டிருக்கிறேம். எப்படியோ சந்திக்க முடியாமல் காலம் நகர்கிறது. தங்களுடைய வேலையோ பெரிய தர்மத்தைச் சாதிக்கிற காரியம். *ரிப்போர்ட்டைப் பார்த்தால் ஆனந்தத்தை விட அதிசயந்தான் அதிகமாகிறது. என்னுடைய தம்பி V. T. பழனியப்ப முதலியார் (Retired Subjudge) தங்களைத் தெரிந்தவர்தான், ரிப்போர்ட்டை வாசித்துவிட்டு இது பகீரத வேலை என்று வியந்தார். மலையாள ராஜ்யம் பாக்கியம் செய்த ராஜ்ஜியம்தான் என்றும் சொன்னர். குடிபடைகள் எத்தனையோ பேர் தங்களை வாழ்த்த இருக்கிறர்கள். சிவில் கேசுகள் இருக்கட்டும்; கிரிமினல் கேசுகளுக்கு விமோசனம் ஏற்பட்டதே பெரிய புண்ணியம்.

வேலை யென்று ஒன்று வந்து விட்டால் பிசாசாய்ப் பிடித்துக் கொள்ளுகிறது என்று சொல்லுகிறீர்கள். முருகப் பெருமானிடத்துள்ள பக்தி போலத்தான்.

---

* திருவாங்கூர் Administration ரிப்போர்ட். திருவாங்கூர் ஹைகோர்ட்டில் எத்தனையோ வருஷங்களாகக் கட்டிக்கிடந்த சிவில் கிரிமினல் அப்பீல்கள் எல்லாம் நமது திருப்புகழ் மணி அவர்கள் வேலை யேற்றதும் பைசலாகி விட்டன என்பது பிரசித்தம்.

தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருவர்—ஒருவர் பேயாழ்வார் மற்றவர் குலசேகர ஆழ்வார். குலசேகர ஆழ்வார் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதைப் பாருங்கள்.

பேய ரே எனக் கு
யாவரும்; யா னும் ஓர்
பேய னே எவர்க் கும்
இது பேசி என்?
ஆய னே அரங் கா!
என்ற ழைக்கின்றேன்
பேய னாய் ஒழிந் தேன்
எம்பி ரானுக் கே!

இந்தப் பாசுரம் பக்தி நிலை இன்னதென்று நன்ருய்க் காட்டுகிறது. தங்களுடைய மனசுக்கு மிகவும் உவந்த பாடல். தாங்கள் பாடினல் autobiographical என்றுதான் என்போலியருக்குச் சொல்லத் தோன்றும். பாடவேண்டிய அவசியம் இருக்கலாம் என்று அலகு பிரித்திருக்கிறேன்! மன்னிக்கவேணும்.

* * * *

குற்ருலத்திலிருந்து ஒன்றறை மைல் தூரத்தில் இலஞ்சிக் குமார் கோயில் என்று வெகு அழகான ஸ்தலம்; இயற்கை வனப்பையும் வளத்தையும் பார்த்துத்தான் ஆசாமி முருகன் அங்கே வந்து சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டாரோ என்று சொல்லத்தோன்றும். கோயில் உள்ளும்புறமும் மனசைக் கவரும்படி அமைய வைத்திருக்கிருர்கள். மூர்த்தி காட்சி கொடுக்கிற தென்ருல் பேசவே செய்யும். நல்ல கவிகள் நம்மிடம் பேசுகின்றன அல்லவா, அந்த முறையில் மூர்த்தி பேசும். அகப்பட்டுக் கொண்டால் தீர்ந்ததுதான் காரியம். மீளுவது ரொம்பக் கஷ்டம்.

இந்த ஸ்தலத்துக்கு ஸ்ரீ விஸ்வநாதராவ் அவர்கள் (திருநெல்வேலி ஜில்லா கலெக்டர்) அவர்களது மனைவியார் இருவருமே சேவிக்க வருவதாகச் சொல்லியிருந்தார்கள். நானும்

போனேன். உடம்பு இடம் கொடுத்தது. மாலை எட்டு மணிக்குச் சேவை கார்த்திகையானதால் தீபாலங்காரம் ஒரே ஜோதிமயமாய் இருந்தது. எல்லாருமே மிக்க ஆசையோடு அனுபவித்தோம். இதை எழுதும்போதும் காட்சி அப்படியே வந்து கண் முன் நிற்கிறது.

தாங்கள் அங்கே ஒருதரம் வரவேணும் என்று தர்மகர்த்தா-நல்ல சீல முள்ளவர்-சொன்னர். "ஏன் ஒரு தடவை? பல தடவை வருவார்கள். பஜனையெல்லாம் கோலாகலமாய் நடத்த வேண்டும்" என்று சொல்லியிருக்கிறேன்.

பிரசாதம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்,
13—2—1946.

அருமை நண்பர்

திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களுக்கு நமஸ்காரம்

அன்பைக்கண்டால் யாருக்குமே பயந்தான். "அதெல்லாம் சொல்லாதேயுங்கள் ஐயா" (Please don't mention) என்று தடுத்துச் சொல்கிற வார்த்தை நம்முடைய காதில் விழத்தானே செய்கிறது. அன்பு அதிகமாகப் போன உடனே, கிருஷ்ண பரமாத்மாவும் பயந்துபோய் அவல் தின்பதை நிறுத்திவிடவில்லையா குசேலரைக்கண்டு! அவ்வளவு பயந்து விட்டார் எல்லாம் வல்ல இறைவன் கூட. இந்த நிலைமையில் என் போலியரது பாடு எடுத்துச் சொல்லவேண்டிய காரியமா?

பாஸ்கரன் அவர்கள் என்னிடம் அபாரப் பிரியம் உள்ளவர்கள். அந்தப் பிரியத்தை எப்படி எல்லாமோ காட்டியிருக்கிருர்கள். அவ்வளவையும் உணர்ந்தவன்தான் நான். அனுபவித்தேன் என்றும் சொல்லவேண்டியதுதான்.

ஆனல் அதெல்லாம் புஸ்தகமாயும், தெருச் சுவர் விளம்பரமாயும் ஆகவேண்டாமே என்று இரண்டு வருஷத்துக்கு முன் புஸ்தக வெளியீட்டைத் தடுத்து விட்டேன். பல உபாயங்களும் கையாண்டுதான் தடுக்க முடிந்தது. அன்புடையவர்களது வாயைக் கட்டிவிடுவது அவ்வளவு சுலபமா! இந்த விதமாக புஸ்தக வெளியீட்டை நிறுத்திவிட்டு, நிறுத்திவிட்டோம் என்ற அமைதியில் இருக்கும்போது 15—1—46 அன்று புஸ்தகமே கைக்கு வந்துவிட்டது. 'ஸ்டார் பிரசுர' கர்த்தாக்கள் சும்மாவா இருப்பார்கள். விளம்பரம் விநியோகம் எல்லாம் ஒழுங்காய் நடக்கிறது.

ஆசிரியர் பாராட்டு ஒருபுறம் இருக்க ராஜாஜியின் அன்பும் பாராட்டும் புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. தங்கள்

உள்ளுவந்த முகவுரையும் அலங்கரிக்கிறது. இத்தனை அன்புக்கும் நான் பாத்திரமாயிருக்கிறேன் என்பதை உணர்ந்துகொண்டேன். உணர்ச்சி அற்றவஸ்து அல்லவே நான்.

எனக்குள்ள திருப்தி ஒருபுறம் இருக்க, எனக்குரிய உற்ருர் உறவினர் நண்பர் எல்லாருக்கும் அளவற்ற திருப்தி. அவர்களுக்குத் திருப்தி உண்டாக்குவதற்காக என்னை என்னவேண்டுமானுலும் செய்யலாம். புஸ்தகத்தை எழுதலாம், அதற்கு முகவுரையும் எழுதலாம் !

முகவுரையைப்போலவே தாங்கள் 28-1-46 அன்று எழுதி அனுப்பிய கடிதமும் என்னை ரொம்பவும் பெருமைப் படுத்துகிறது. உள்ளன்போடு பெருமைப்படுத்துகிறது. நேரில் கண்டு ஆனந்திப்பதற்கு முன்னமேயே இந்த முறையில் என் நன்றியைச் சமர்ப்பித்து விடவேண்டும் என்றே இதை எழுதுகிறேன். நேரில் உள்ளத்தை வெளியிடுவதற்கான வார்த்தைகள் வராமல் திண்டாட வேண்டியிருக்கும் அல்லவா !

* * * *

சென்னையில் காந்திஜியின் பஜனைக் கோஷ்டிக்குப் போயிருந்தேன். இரண்டு லக்ஷம் பேர் கூடியிருந்தார்கள். பாட்டைக் காதினுல் கேட்டுக்கொண்டிருந்தால் போதாது, கைகொண்டு தாளம் கொட்டி பஜனையில் எல்லோரும் கலந்து கொள்ளவேண்டும் என்ருர். அடுத்ததடவை வரும்போது ஆடவும் வேண்டும் என்று சொல்லப் போகிருர்.

50 வருஷத்துக்கு முன் ஒருவர் காவடி எடுத்தால் உறவினர்களும் நண்பர்களும் சேர்ந்து ஆடவேண்டும். அதுதான் மரியாதை. தாங்கள் காவடி எடுத்தால் நான் கட்டாயம் ஆஜராக வேண்டும். ஆடவும்வேண்டும். அப்படிவந்து ஆடாமல்போனுல் என் யோக்யதையைப்பற்றி எப்படி எல்லாமோ பேசி விடுவார்கள் மற்றவர்கள். நண்பர்கள் செய்யவேண்டிய கடமை அப்படி இருந்தது. அது எல்லாருக்கும் பிரயோசனமாய் இருக்கும். ஆடுகிறவருக்குத்தான் அதிக பிரயோசனம்.

நம்முடைய யுனிவர்சிட்டி கிராஜுவேட் கேட்பான் "துரைமார்கள்" ஆடுகிறார்களா என்று. அவர்கள் ஆடுகிறார்கள் என்று தெரிந்து விட்டால் அவனும் ஆடத்தயார்தான். உள்ளானமர்மமும் தெரிந்து விட்டால் ரொம்ப ரொம்பக் கூத்தாடி விடுவான்—சாராயத்தைக் குடித்துவிட்டு ஆடுகிறார்கள் என்ற மர்மத்தைத்தான் !

யுனிவெர்சிட்டிப் படிப்பெல்லாம் பலாச்சுளையை வீசி எறிந்துவிட்டுக் கொட்டையைக் கடித்துக் கொண்டிருக்கிற காரியந்தானே.

ஆங்கில மோகமும் வெறித்த வாழ்க்கையும் கொண்ட பாலைவனத்தில் அல்லவா கற்பகக்காட்டுக்கு வித்து விதைத்தீர்கள். ஜாலராவைத் தட்டினீர்கள். என்ன தைரியம் !

தாங்களா தட்டினீர்கள், பொற்றாளத்தை முருகன் கொடுத்துத் தட்டச் சொன்னான். தமிழ் நாடெங்கும் அந்தத் தாளமும் ஜாலநும் கேட்கிறது.

முருகன் துணை.

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு

இது பாரதி சகாப்தம். தேசீயகவி சுப்பிர மணியபாரதியின் பாடல்களுக்கு அடுத்தபடி தமிழர்கள் உள்ளத்தை இன்று கவர்ந்திருப்பது ஸ்ரீ தேசிகவிநாயகம்பிள்ளை யவர்கள் பாட்டுக்கள் தான். இருபது வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் பலருக்கு அவர் பெயர் தெரியாது. காரணம் அவர் அப்போது கவி ஒன்றும் எழுத வில்லை என்பதல்ல, அவருடைய கவிதையின் அருமையைத் தமிழர்களுக்கு எடுத்துக்கூறுவார் இல்லாத குறைதான். அன்று அவர் எழுதிய கவிதைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பாடப் புத்தகங்களிலோ வாரப் பத்திரிகை களிலோ தோன்றத்தான் செய்தன. பலர் படித் தனர். 'ஏதோ எளிமையும் இனிமையும் வாய்ந் தவை அவை; அவ்வளவுதான். சங்கச் செய்யுள் களுக்கு ஈடாகுமா என்று' எண்ணினார்கள் பண்டிதர்கள்; ஒதுக்கினார்கள் தமிழர்கள்.

இந்த சமயத்தில்தான் இவர் பாடிய சில பாடல்கள் டி.கே.சியின் பார்வையில் விழுந்தன. பாட்டைப் படித்துப் பார்த்தார். பாடிப்பார்த் தார். உடனே ஒரே உத்சாகத்தில் குதிக்க ஆரம் பித்துவிட்டார். "ஓ! நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். இவர்தான் உண்மைக் கவிஞர்" என்றார். 'உள்ளத்து உள்ளதுதானே கவிதை; இன்பம் உருவெடுப்பதுதானே கவிதை; அதுவும் தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தெரிந்துரைத்துவிட்டால் உயர்ந்த கவிதையே

ஆகிவிடாதா?' என்றெல்லாம் பேசினர்; எழுதினர். இப்படி கிணற்றுக்குள் வைத்த விளக்குப் போல் இருந்த கவிஞரையும் அவரது கவிதைகளையும் வெளியேகொண்டுவந்து பிரசாரம் செய்த பெருமை டி. கே. சி. யுடையதுதான். அதன் காரணமாகவே அவருடைய கவிதைத் தொகுதி 'மலரும் மாலையும்' என்ற உருவில் வெளி வந்தது. தமிழ் மக்களும் வாங்கி வாசித்து ஸ்ரீ தேசிக விநாயகம்பிள்ளையை கவிமணி என்று பாராட்டத் தொடங்கினர்கள். செட்டி நாட்டு இளைஞர்கள் தங்கள் ஊருக்குக் கூட்டிச் சென்று, ஆத்தங்குடியில் அவருக்குப் பொன்னுடை போர்த்தி மகிழ்வித்தார்கள். திருநெல்வேலி அன்பர்களும் சளைக்காமல் உபசாரத்திற்கு மேல் உபசாரமாகச் செய்து வாழ்த்தினர்கள்.

ஆனல் இந்த டி. கே. சி மட்டும் இன்னும் ஒரு புகார் சொல்லிக்கொண்டே இருக்கிறர். "இவரை ஏன் கவிமணி என்று தமிழன்பர்கள் அழைக்கிறர்கள். தேவியைக்கவிமணி என்று சொல்லுவதினல் எத்தனையோ கவிஞர்கள் தமிழர்களுக்கு இருப்பதுபோலவும் அவர்களுக்குள் மணியான இவரைக் கவிமணி என்பது போலவும் அல்லவா படுகிறது. அப்படியா நம்மிடையே கவிஞர்கள் இருக்கிறர்கள்? தேவி ஒருவர்தானே கவிஞராக நம்மிடையே இருக்கிறர். உண்மையான கவிதை எழுதுகிறவன் தானே கவிஞன். அவரைப்போய் ஏன் 'கவிமணி' 'கிவிமணி' என்றெல்லாம் சொல்ல வேண்டும். கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை என்று மட்டும் சொன்னல்ப் போதுமே. அப்படிச் சொல்வதுதானே பொருத்தம். அதுதானே சரி"

என்றெல்லாம் வாதிடுகிருர். இந்த ஒரு சிறு குறிப்பிலிருந்தே கவிமணியை, ரசிகமணி எப்படி மதித்திருக்கிருர் என்பது தெரியும். நாவில் போட்டுப் போட்டுச் சுவைத்து அனுபவிக்கிருர் என்பதற்கு கவிமணிக்கு டி. கே. சி. எழுதிய கடிதங்களை மட்டும் பார்த்தால் போதும். கவிமணியின் சிலபாடல்கள் இன்று தமிழன்பர்கள் நாவிலும் சிரத்திலும் நின்று நடம் புரிகிறது என்ருல் அதற்கெல்லாம் காரணகர்த்தா டி. கே. சி. அந்த காரணகர்த்தா நல்ல காரியவாதியாகவும் இருந்து எப்படி தனக்கும் அழியாவரம் பெற்ற மூன்று மணியான பாடல்களை† கவிமணியிடம்—இல்லை—கவிஞரிடம் பெற்றுக்கொண்டார் என்று தெரிய விரும்பினுல் கடிதங்களைப்படியுங்கள்.

---

† கன்னித் தமிழேபோல் கம்பன் கவியேபோல்
மன்னும் பொதிகை மலையேபோல்—பன்னுநம்
நாடு மகிழச் சிதம்பர நாதநண்பா!
நீடுநீ வாழ்க நிலைத்து.

என்னருமை நண்பா! இனிய கலை ரஸிகா!
தென்னர் தமிழ்வளர்க்கும் தேசிகா! — நன்னயச்
சீலம் சிறந்த சிதம்பர நாதவள்ளால்
சாலநீ வாழ்க தழைத்து.

அன்னை தமிழ்ச் செல்விக்கு அருந்தொண்டு செய்தின்னும்
மண்ணுலகில் பல்லாண்டு வாழியவே—என் இனிய
நண்பா! சிதம்பர நாதாநம் மாமுருகன்
கண்பார்த்து அருளக் கனிந்து.

எயரோ
மீனம்பாக்கம்,
25—3—41.

அருமை நண்பர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கு

தங்கள் ஆர்வம் நிறைந்த கடிதம் கிடைத்தது. செல்லையா விடம் தங்களுக்கு எவ்வளவோ பிரியம். தங்கள் கவியைக் கண்டவர்களில் அவன் ஒருவன். சதா மலரும் மாலையைப் படித்துக்கொண்டிருப்பான். அவன் மூலமாகத் தங்கள் கவிப் பண்பு உலகத்துக்கு வருங்காலத்தில் தெரிய வேண்டும். அப் படித் தங்களுக்குச் சேவை செய்யக்கூடியவன் போய் விட் டான். எல்லாம் கடவுள் செயல். நாம் என்ன செய்யக் கிடக் கிறது. தங்கள் உள்ளத்தின் கனிவு வெண்பாவில் தெளிந்து கிடக்கிறது. தமிழுலகில் இந்த வெண்பா எழுத ஒருவர்தான். அது தாங்கள்தான். வேறு யாருக்கும் கவி என்பது வருகிற தில்லையே. நண்பர்கள் எல்லாரும் கவியில் உள்ள சோக ரசத்தைச் சுவைத்து வியந்தார்கள். எனக்கு என்னவோ ஒரு தமிழ்க்கவி உதயமாய் வருவதைப் பார்ப்பதில் அளவிறந்த ஆனந் தம். கவிக்கு உயிரையே கொடுக்கலாம் என்று சொல்லுவது நம்மவர் மரபு. தங்கள் கவி உயிரைக்கொடுத்து வந்தமாதிரியே இருக்கிறது.

"இசைத் தமிழ்ச் செல்வா" எவ்வளவு வாய்ப்பு! "என் அப்பா" எவ்வளவு கனிவோடு விளிக்கிறது. "அழகிய செல்" என்று நின்று மூன்றுவது சீரில், "ஐயா" என்று மோனையில் விழும்போது அருமைப் பாடெல்லாம் பிறந்து விடுகிறது. தமிழ் பாஷை தங்களுக்கு அருமையாய்த் துணைபுரிகிறது.

Keats சொன்னர் "Truth is Beauty" என்று. தங்கள் பாடல் அதற்குத் தக்க இலக்கியம் என்று எல்லாருக்கும் தெரி கிறது. கல்கி, ராஜாஜி வெளியில் இருந்தால் தங்கள் வெண் பாவை ரொம்ப அனுபவிப்பார்கள்.

ஆசிய ஜோதியில் தங்கள் கவிதையை (மகனை இழந்த தாய்) வாசித்தேன். தாங்களும் தமிழுமாகச் சேர்ந்து எவ்வளவோ ஆறுதலைத் தருகிறீர்கள்.

உடல் நலத்துக்காக கன்யாகுமரியில் தங்குகிறதாகத் தெரிகிறது. சௌக்கியந்தானே.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சியின் ஒரே புதல்வன் ஸ்ரீ தெ. சி தீத்தாரப்பன் (செல்லையா என்று செல்லப் பெயர்) மரணமடைந்த சமயம் தேவி எழுதியனுப்பிய பாடலே இங்கு குறிக்கப்படுகிறது. அது வருமாறு :—

எப்பாரும் போற்றும் இசைத்தமிழ்ச் செல்வாஎன்
அப்பா அழகியசெல் லையா—இப்பாரில்
சிந்தை குளிரச் சிரித்தொளிரும் நின்முகத்தை
எந்நாள்க் காண்பேன் இனி.

எயரோ
மீனம்பாக்கம்,
17—3—42.

அருமை நண்பர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கு.

ஒருநாள்க் கடிதம் எழுதாமல் இருந்துவிட்டால் அது காரணமாகவே லஜ்ஜை ஏற்பட்டு விடுகிறது, கடிதம் எழுத ஆரம்பிக்கும்போது. ஆனல் லஜ்ஜை எல்லாம் போய்விடுகிறது காரியமாக எழுத நேர்ந்து விட்டால்.

தங்களுடைய தேக அசௌகரியம் காரணமாகவே பல இடங்களுக்குத் தங்களை அழைத்து மரியாதை செய்ய முடியாமல்ப் போய்விட்டது. தங்களைப்போன்ற உண்மைக் கவிஞர் தமிழ் அல்லாத மற்றவர்களுக்குக் கிடைத்தால் எப்படியெல்லாமோ போற்றுவார்கள். பத்திரிகைகளில்ப் பத்தி பத்தியாய் எழுதுவார்கள். ஸ்ரீ வள்ளத்தோல் எழுதிய கவிகள் எப்படி இருக்குமோ எனக்குச் சொல்ல முடியாது. மெட்ராஸ் யுனிவெர்சிட்டிப் பட்டதாரிகள் ஒரு விஷயத்தை மெச்சுகிறுர்கள் என்ருல், அந்த விஷயம் மோசமாயிருக்குமோ என்று சந்தேகங் கொள்வதுண்டு நான். அது எப்படியேனும் போகட்டும். வள்ளத்தோல் சென்னைக்கு வந்திருந்தபோது ஹிந்துப் பத்திரிகையிலும் மெயில் பத்திரிகையிலும், கவிஞரைப்பற்றித் தினந்தோறும் பத்தி பத்தியாய் ஆங்கிலத்தில்க் கற்ற வாழ்த்துக்களையெல்லாம் கொட்டி விட்டார்கள். மங்கை நாடகத்தில் வாழ்த்துச் சொல்ல வரும் கட்டியக்காரன் தோற்றுப்போய் விடுவான்.

ஆனல் தமிழர்கள் காரியம் வேருயிருக்கிறது. தங்களைப் பற்றி ஒரு வார்த்தையும் "ஆசிரியர்கள்" சொல்லுவதில்லை. ஆனல் நான், தங்கள் பாடல்களே பாடல் என்று சொல்லி வருவதால் ஆசிரியர்களுக்குக் கோபம் வருகிறது. சில சந்தர்ப்பங்களில்,பல சந்தர்ப்பங்களிலுந்தான், என்னை விளாசுகிறுர்கள். நான் அதை எல்லாம் அனுபவித்துக் கொண்டுதான் இருப்பேன்.

என்னை வைதாவது கவியைப் பற்றிப் பேச்செடுக்க நேர்ந்த தல்லவா என்று !

தங்கள் கவிகளைக்கண்ட மாத்திரத்தில் எனக்கு ஒரு தனி யான ஆனந்தம் பிறக்கிறது.

ராஜாஸர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களைப்பற்றி (சஷ்டியப்தபூர்த்தி) ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் வந் தன. அனேகத்தைக் கேட்கவும், சிலவற்றை வாசிக்கவும் நேர்ந் தது.

தங்கள் வாழ்த்துப்பாவை 'இந்திரா' என்னும் ஒரு பத்திரி கையில்ப் பார்த்தவுடன் எனக்கு அபூர்வமான மன எழுச்சி உண்டாயிற்று – அடடா, தமிழ் எவ்வளவு அருமையான பாஷை என்று. தமிழைப் பாடுபட்டுக் கற்றவர்களுக்கெல்லாம் அப் படியே உண்டாக வேண்டும்.

"தில்லைப் பதியுடையான்
சிற்றம் பலந்தன்னில்
அல்லும், பகலும் நின்(று)
ஆடுகின்ருன்—எல்லைக்கண்
அண்ணு மலைமன்
அமைத்த கலைக்கழகம்
கண்ணுரக் கண்டு
களித்து"

இதிலிருந்து தாங்கள்தான் பழந்தமிழை அனுபவித்தீர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. இது உண்மையே. ஏனெ னில்த் தமிழ்ப் புலவர் உலகம், ரஸம் பாவம் ஒன்றும் இல்லாத வறண்ட தமிழையே பாராட்டிக்கொண்டும் அனுபவித்ததாகச் சொல்லிக்கொண்டும் இருக்கிருர்கள். உண்மையான பழந் தமிழை, பசுந்தமிழை அவர்கள் அனுபவித்ததாகவே தோன்ற வில்லை. பண்டித உலகம் எப்படியோ வெளிச்சத்தை இருட்

டென்றும், இருட்டை வெளிச்சம் என்றும் சொல்லுகிறது. ஆந்தை வைத்த கண்ணாடிக் கடையில்த்தான் வாங்கியிருக்கிறார்கள் மூக்குக் கண்ணாடியை.

தங்கள் உடம்புநிலை எப்படி இருக்கிறது. கொஞ்சம் சௌகரியப் பட்டிருப்பதாக ஒரு நண்பர் சொன்னார். பிரயாணம் செய்வதற்கு உடல் வசதி இருக்கிறதா? வீட்டில் அம்மாள் சௌகரியமாயிருக்கிறதற்கும் தங்கள் சௌகரியத்திற்கும் கடிதம் எதிர் பார்க்கிறேன்.

கம்பராமாயணம்—பால காண்டம்: அயோத்தியா காண்டம்—செருகு கவிகளை நீக்கியும் பிழைகளைத் திருத்தியும், என்னுடைய பதிப்பு ஒரு வாரத்தில் வெளிவரும். அதை நம்மவர் பாடிப் பார்த்தால் தங்கள்

"கம்பன் கவியின்
களி அமுதம் உண்டிடமால்
அம்புவியில் வந்திங்(கு)
அவதாரம் செய்தானோ"

என்ற தாலாட்டின் உண்மையும் அழகும் புலப்படும். அதுவரை புலப்பாடது என்றால்க் குற்றமில்லை. இது வரையும் சரிகைத் தலைப்பாகை என்று சொல்லி வைக்கோல்ப் புரியை கம்பர் தலையில் வளைத்து வளைத்துச் சுற்றிவைத்தார்கள். வைக்கோல்புரி, களையப் பட்டிருக்கிறது இப்போது. புலவர்கள் என்னுடன் சண்டைக்குத்தான் வரப்போகிறார்கள்.

இங்கே யுத்தம் காரணமாக ஒரே பயம் ஜனங்களுக்குள். என்னை விரட்டத்தான் செய்கிறார்கள். ஒரு மாசத்தில் திருநெல்வேலிக்கு எல்லாருமாகத் திரும்பலாம் என்று உத்தேசிக்கிறேன்.

மற்றவை பின்பு.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்

முகாம்
போடி பங்களா
திருக்குற்றலம்,
6—9—42.

அருமை நண்பர் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை
அவர்களுக்கு

ஆடம்பரம் இல்லாமல் அறுபதாண்டு நிறைவை ஒரு சிறு கிரியையாக நடத்த ஏற்பாடாயிருந்தது. திருக்குற்றலநாதரை இன்று காலை 10 மணிக்கு சேவித்து வருவதற்கு, குறிப்பிட்ட நண்பர்களையும் இங்கு சாரலுக்கு வந்திருந்த செட்டி நாட்டு நண்பர்களையும் அழைத்திருந்தேன். என் ஜாகைக்குப் பல நண்பர்களும் வந்திருந்தார்கள், கோவிலுக்குப் போவதற்காகத்தான்.

அப்போது தபால்க்காரன் வந்து வெளியே நின்றான். உள்ளேயிருந்த ஏழு வயசுப் பையன் (என் தமக்கையார் பேரன்) வெளியேபோய்த் தபால்க்காரனிடமிருந்து தபால்களை வாங்கிக்கொண்டு வந்தான். மொத்தமாக நாலு கடிதங்களும் ஒரு பத்திரிகையும் இருந்தன. எப்படியோ பையன் மூன்று கடிதங்களையும் பத்திரிகையையும் வேறே வைத்து விட்டு ஒரு கடிதத்தை மாத்திரம் என் கையில்க் கொண்டுவந்து கொடுத்தான். நான் பிரித்துப் பார்க்கவும் தங்களுடைய கடிதமும் வாழ்த்துப்பாக்களும் இருந்தன.

நண்பர்களைப் பார்த்துக் கடிதம் எங்கே இருந்து வந்திருக்கிறது தெரியுமா என்று கேட்டுவிட்டுச், சொன்னேன் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களிடமிருந்து என்று.

செய்யுள்கள் மூன்றிலும் வாழ்த்தோடு புகழ்ச்சியும் இருந்தது பற்றி நானே வாசித்துக் காட்டுவதில் கொஞ்சம் அலௌகிகம் இருந்ததை உணர்ந்தேன். ஆனாலும் அவைகள் தமிழ் மகளுக்கு அர்ப்பணமாய் இருந்தது பற்றி நானே வாசிக்கலாம் குற்றம் இல்லை என்று எண்ணி வாசித்தேன்.

கேட்டவர்கள் அப்படியே லயித்து விட்டார்கள். அடிகளையும் வார்த்தைகளையுமே மடக்கி மடக்கி வாசித்தேன். உள்ளத்தின் ஆர்வமும் தமிழ்ப் பாஷையின் லாகவமும் மயக்கி விட்டது எல்லாரையும். வந்திருந்தவர்கள் எல்லாரும் ஏதாவது ஒரு அடி ஒரு வார்த்தையைப் பிடித்து அப்படியே சுவைத்துக் கொண்டிருந்தார்கள்.

பாட்டு முடிந்ததும் கோயிலுக்குச் சுவாமி தெரிசனத்துக்காக எல்லாருமே புறப்பட்டுப் போனோம். போகிற வழியெல்லாம், பையன் தெய்வப் பிரசாதமாகக் கடிதத்தை கொடுத்ததாகவே பாராட்டிப் பாராட்டிப் பேசிக்கொண்டு வந்தார்கள். அனேகருக்குப் பாடல்கள் பாடமாய் விட்டன. அவைகளைச் சொல்லிக்கொண்டும் தலையை அசைத்துக்கொண்டும் வந்தார்கள்.

இதெல்லாம் இயல்பான காரியம். நண்பர்களாயிருப்பதால் என்னிடம் ஆர்வம், என்னோடு ஒட்டியிருக்கிறார்கள். தாங்கள் என்னோடு ஒட்டியிருக்கும் உண்மையைப் பேசுகிறீர்கள். தங்கள் தமிழ் தொன்மையான தமிழ், கேட்டவர்களுக்குச் சொந்தமான தமிழ், உண்மையை அப்படியே பளிங்கில் வைத்துப் பரிமாறுகிறது. நண்பர்கள் கவிகளை அப்படியே விழுங்குகிறார்கள். உண்மையான தமிழ்க்கவிகள் மூன்றோடு என் பெயர் ஒட்டிக் கிடக்கும் பாக்கியம் பெற்றேன்.

முதல்க் கவி ஆசை பாவத்தை அழகாய்க் காட்டுகிறது. ஆசைக்கு அளவு கிடையாது. எந்தத் தாய்க்கும் தன் குழந்தை ராஜா அல்லவா! வாழவேண்டும் நிலைத்து வாழவேண்டும், எப்படி:

"கன்னித் தமிழேபோல் கம்பன் கவியேபோல்"
இவைகளுக்குமேல்—ஸ்தூலமாக,

"மன்னும் பொதிகை மலையேபோல்"
இரண்டாவது கவியில் அருமை பாவம் அப்படியே கிடக்கிறது.

"என்னருமை கண்பா!
இனிய கலைரசிகா!
தென்னர் தமிழ் வளர்க்கும்
தேசிகா"!

என்று பாடும்போது தாங்கள் என்னை ஆர்வத்தோடு தழுவிக் கொள்ளுவதாகவே உணர்ச்சி வருகிறது. மூன்றுவது கவியில்—தமிழிடத்திலுள்ள ஆத்திரம் போய் முருகனது திருவடியைப் பற்றுவது வெகு அழகான பாவம்.

"அன்னை தமிழ்ச் செல்விக்(கு)
அருந்தொண்டு செய்தின்னும்
மன்னுலகில் பல்லாண்டு
வாழியவே"—

முருகன் கண்பார்த்துக் கனிந்து அருள்பாலிக்கும் காரணமாக.

இந்த உண்மைப் பண்புக்கும் எளிமைக்கும் தமிழுக்கும் எங்கே போகத் தங்களைத் தவிர்த்து! இது வரையும் "பாடல் பெறுன" என்ற சொல்லிலுள்ள வேகத்தை அவ்வளவாக உணர்ந்தேன் இல்லை. தங்கள் கவிகளைப் பார்த்ததும் அவை களின் உள்ளக் கிடையைப் பார்த்ததும்,—சொல்லின் வேகம் தெரிந்தது.

கவிக்குள்ப் போதிந்து வைத்து விட்டால் எந்தப் பொருளும் பழுது படாமல் இருக்கும் என்று முன் ஒரு கவிஞர் சொல்லியிருக்கிறுர். ஆயிரரூபாய் கொடுத்து வாங்கிய டெக்கா மஸ்லின் கொண்டு பதிந்து வைத்தாலும் பயனில்லை.

“ நாற்றுப்பத் தாயிரம்
　　பொன்பெறினும் நாற்சிலை
நாற்றிங்கள் நாளுக்குள்
　　நைந்து விடும்—மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப்
　　போர்வேல் அகளங்கா!
என்றுங் கிழியாதென்
　　பாட்டு.”

தமிழ் உணர்ச்சி என்று ஒன்று இருக்கும் வரை தங்கள் பாட்டு நிற்கும். அதை ஒட்டி என் பெயரும் நின்றுதானே ஆக வேணும்.

மனங் கனிந்து வந்த சொல்லுக்கு மாற்றுப் பத்தரை மாற்ரு? அல்ல. ஆயிரத்தரை மாற்றல்லவா? அதற்கு விலையேது. விலைமதிக்க முடியாத கவிகள்.

நண்பர்களுக்கு எடுத்துச்சொல்ல நேர்ந்த விஷயம்: Truth is Beauty. உண்மையே அழகு. மற்றவை அழகல்ல. தங்கள் கவிகளைக்கொண்டு விஷயத்தை எளிதாய் விளக்கி விட்டேன். உண்மையை நான் ஒரு வகையாக எடுத்துச் சொன்னேன். தாங்கள் என்னை எவ்வளவாக உள்ளத்தில் வைத்துப் பாராட்டுகிறீர்கள் என்பதைப்பற்றி விளக்கி விளக்கி வசனத்தில்ச் சொன்னேன். என் வார்த்தை அவ்வளவாக உண்மையை வெளிப்படுத்தி விடவில்லை. தங்கள் கவி, ஒரு கவியே, பளிங்கிற்குள் வைத்த ஜோதி மாதிரி உண்மையை - தங்கள் இதயத்திலுள்ள உண்மையை விளக்கிவிட்டது. அழகு தென்பட்டுவிட்டது எல்லாருக்கும். அழகு தென்பட்டுவிட்டால் மனசை விட்டு அகலாது: நாவை விட்டும் அகலாது. நண்பர்கள் கவிகளைப் போன போன இடமெல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

நேற்று (5-9-42) குற்றாலத்துக்கு அருகேயுள்ள இலஞ்சி குமாரர் கோயிலில், இங்கு தங்கும் நகரத்தார் நண்பர்கள் எல்லாருமாக என் பேருக்கு முழுக் காப்பு விருந்தெல்லாம் நடத்தினார்கள். மாலையில் ஒரு சிறு பாராட்டுச் சபையும் கூட்டினார்கள். அதில் நகரத்தார் பையன், ஏழு வயசுப் பையன் ஒருவன், தங்கள் மூன்று கவிகளையும் மனப்பாடஞ்செய்து சபையில்ப் பாடினான். பையனுக்கு ஆசை எப்படி வந்தது. தகப்பனார் பாடிக்கொண்டேயிருந்த காரணமாகத்தான். தங்கள் அருமையான பாஷையில் "கிளிகள் பாடிக்கொண்டிருந்தன" என்று தான் சொல்லவேண்டும்.

என்னுடைய தனித்த முறையில் தங்களுக்கு நன்றி சொல்லி முடியாது. கவிகளை அனுபவித்தவர்கள் எல்லாருடைய சார்பாகவும் என் நன்றியைச் செலுத்திக் கொள்ளுகிறேன்.

தங்களுக்கு உடம்பு சௌகரியமாய் இருக்கும் என்று நம்புகிறேன். தமிழர்களின் பிரார்த்தனைகளில் இது ஒன்று.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றலம்,
4—4—43.

அருமை நண்பர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு

சமீபத்தில் திருச்சினப்பள்ளிக்குப் போய் வந்தேன். அங்கே புதுமைப் பதிப்பகம் நடராஜ செட்டியார் அவர்களுடன் இரண்டு நாள் தங்க முடிந்தது. கம்பர் விழா நடக்காமல்ப்போனது பற்றிக் காரைக்குடியில் எல்லாருக்கும் ஏமாற்றந்தான். ஆனல்த் தங்களைப் பார்த்துக் களிக்கும் பாக்கியம் இல்லாமல்ப் போயிற்றே என்றுதான் வருத்தம். எத்தனையோ வருஷம் முயன்றதில்க் குறையில்லை: தாங்கள் காரைக்குடிக்குவர இயலவில்லை. இந்த வருஷம் உடல்நிலை ஏதோ வசதியாய் இருந்தது. இருந்தாலும் தெய்வ சங்கற்பம் இடம் கொடுக்கவில்லை. பெரிய ஏமாற்றந்தானே. 'கண்ணுரக்காணக் கவிஞர்' ஒருவர் கிடைத்தார் என்று எல்லாரும் எக்களிப்புக்கொள்ளச் சந்தர்ப்பம் கம்பர் விழா. எப்படியும் அந்த ஆனந்தத்தை ஒற்றி வைக்கும்படியாகத்தானே போய்விட்டது! இந்தவிதமாக நண்பர் நடராஜ செட்டியார் அவர்களும் அவர்களது நண்பர் ராமசாமி செட்டியார் B.A. அவர்களும் ஓயாமல்ச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

உண்மையில்த் தங்களையும் தமிழையும் மதிக்கிறதென்ருல் செட்டி நாட்டில்த்தான். நகரத்தார்களை நாம் எல்லாவிதத்திலும் போற்ற வேண்டும், நன்றியே செலுத்த வேண்டும்.

"தேவி"யில் வெளியான தங்கள் "எது கவிதை" என்னும் கவியைப் பார்த்தேன். தங்கள் கவித்திறம் அதில் நன்ருய்த் தெரிகிறது. புலவர்கள் 'ஏதோ பெரிய பெரிய விஷயந்தான் கவிக்குரிய பொருள்' என்று விஷயம் தெரியாமல்ச் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். ஆங்கிலேயர்களும் (Critics) முக்காலே மும்மாகாணிப் பேர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். அதைப் படித்துவிட்டு நம்மவர்களும் ஒத்துப் பாடுவார்கள். ஆகவே விஷயம் விஷயம் என்று ஒரே கூக்குரலாய்ப்

போய்விட்டது கவியுலகம். எஞ்சினைப்பற்றிப் பாடுவார்கள், Steam, Hammer, போர்க்கப்பல், திமிங்கலம் அல்லது மனசில் எழும் பெரும் பெரும் நிகழ்ச்சிகள், கோபம், சோகம், காதல் இவைகளைப்பற்றிப் பாடினால்தான்—ஏன் பாடி விட்டாலே, பாட்டு என்கிறார்கள். தாள இயல், உருவம் இவை வேண்டாம் என்று சொல்லி வசன கவிகளைப் பாராட்டுகிறார்கள். சிலவேளை எழுதியே விடுகிறார்கள். இந்த அமாவாசைக்குள்த் தாங்கள் விளக்குப்போட்டு விட்டீர்கள்.

வண்டி, மாடு இவைகளைவிட கீழான பூட்டாங்கயிறு எல்லாம் கவிஞனுக்கு (தங்களுக்குத்தான்) அற்புதப் பொருள். மேலும் சென்னை யுனிவெர்சிட்டி எம்.ஏ., பி.ஏ., பி.எல்., அற்புதப் பொருள்கள் அல்ல. எந்திரசாலைகள் கடைஞ்சு தள்ளியஜாதிக்கா கம்புகள்தானே அவைகள். ஆனால் வண்டல் கிண்டி உழுவோன் உண்மையிலேயே அதிசயப்பொருள். அற்புதமான தானியத்தை விளைத்து அற்புதமாகவே மக்களைக் காப்பாற்றுகிறான். ஏதோ லக்ஷக்கணக்கான வருஷமாக அல்லவா காப்பாற்றி வருகிறான்!

கல் சொன்ன கதைகளைத் தாங்கள் காதுகொடுத்துக் கேட்டிருக்கிறீர்கள். அல்லாத பக்ஷம் எப்படி வரும் இந்தக் கவி.

“கல்லின் கதைகள் எல்லாம் - இரு
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சும் அறிவேன் - அதைப்
புராண மாக விரிப்பேன்”

ரொம்பவும் அற்புதம் என்கிற பாவம் புல்லின் என்ற எதுகையில் இங்கு அழகாய் அமைந்து விட்டது. கடைசிக் கவி ரொம்பவும் வாய்ப்பு. உண்மையை அப்படியே சொல்லிவிட்டீர்கள். உண்மை ஒன்று இதயத்தில் இருந்தால்த்தானே கவி உண்டாகும். அல்லாத பக்ஷம் காளைமாடு கன்றீன்ற கணக்குத்தான்.

“உள்ளத்துள்ளது கவிதை”

சித்ரவதையிலிருந்து சித்ர கவிதானே பிறக்கும். ஒரு நாளும் கவிதை பிறக்காது. சென்ற அறுபது எழுபது வருஷமாகத் திருநெல்வேலிப் புலவர்கள் சித்ர கவிகள்தானே செய்தார்கள். கவி வந்ததா அவர்களுக்கு! என் கவி இன்ன தென்றே தெரியாமல்ப் போய்விட்டது. பாவி கலைமகள் அவர்களது கண்ணைக் கெடுத்துவிட்டாள்.

"இன்பம் உருவெடுப்பது கவிதை"

என்று தெள்ளத் தெளிந்த தமிழில்ப் பாடிவிட்டீர்கள். ரொம்ப சந்தோஷம்.

"இயற்கை வாழ்வை"யும் பல தடவை படித்தேன். நண்பர்களுக்கும் பாடிக் காட்டினேன். அருமையான உண்மைதான், உணர்ச்சிதான். தங்கள் முத்திரை கவியில்த் தெளிவாய் இருக்கிறது. குமரிமலரிலிருந்து தங்கள் பாடலைக்கிழித்து மலரும் மாலையில்க் கடைசிப் பக்கத்தில் ஒட்டிவைத்துக் கொண்டேன். பாடல் காணாமல்ப் போய்விட்டால் பிசகல்லவா? என் கைக் காப்பிக்கு (மலரும் மாலையும்) தோந்தி பருத்து வருகிறது பாடல்களை ஒட்டி ஒட்டி. இதுவரை விஷயத்தை இத்தனை இயற்கையான உள்ளக் கனிவோடு யாருமே பாடவில்லை. ஆர்வம் முதலிலிருந்தே ஆரம்பித்துவிடுகிறது. கடைசிச் செய்யுள்கள் வெகு அழகாய் விஷயத்தைப் பூர்த்தி செய்கின்றன. ரொம்ப உண்மை. ஏதோ ஆயிரம் வருஷத்துக்குப் பின் காண வேண்டிய அற்புத உலகத்தைக் கண்டுவிட்டீர்கள். எங்களுக்குக் காட்டியும் விட்டீர்கள். ரொம்ப சந்தோஷம்.

தாங்கள் எப்பொழுது இங்கே வரச் சௌகரியம்? சித்திரை மாசம் இங்கே சௌகரியமாயிருக்கும்.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றாலம்,
23—11—44.

அருமை நண்பர் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை
அவர்களுக்கு

நமஸ்காரம்.

தங்கள் அருமை மருமகனது கடிதம் வந்தது. அதிலிருந்து தங்கள் உடல்நிலை பூரண திருப்தி அளிக்கவில்லை என்று தெரிந்து கொண்டேன். இப்போது சௌகரியமாய் இருக்கும் என்று நம்புகிறேன். எனக்கும் ஒருமாசமாக உடம்பு சரியாய் இல்லை. முழங்காலில் ஒரு சிறு புண் உண்டாயிற்று. அதுவேறு இரண்டு புண்களை உண்டாக்கிக்கொண்டு ரொம்பத் தொந்தரவு கொடுத்து விட்டது. காய்ச்சலை உண்டாக்கி விட்டது. போதும் போதும் என்றாய்விட்டது. அதன்பேரில் என்னை ஒரு டாக்டரிடம் ஒப்பித்து விட்டேன். தற்காலத்து முறைப்படியே சிகிச்சை எல்லாம்! எப்படியோ புண் செம்புண்ணாய் விட்டது. காய்ச்சல் நின்று விட்டது. இரண்டு மூன்று நாளில் டிரஸ் பண்ண வேண்டிய அவசியம் இராது என்றுகூட டாக்டர் சொல்லுகிறார். ஆகையால் இனிக் கவலை இல்லை. மலைபோல் வந்தது பனி போல்ப் போய்விட்டது. உட்காருவது கஷ்டமாய் இருந்ததால்த் தான் கடிதம் எழுதுவதற்குத் தடை. இப்போது கொஞ்சம் உட்கார்ந்து கொள்ளலாம்.

கல்கி ஆனந்த விகடன் தீபாவளி மலர்களில் வந்த தங்கள் பாடல்கள், ரொம்ப அழகாய் இருந்தன, பொதுவாகச் சங்கீத சாகித்யம் என்றால் உணர்ச்சி, கட்டுக்கோப்பு, பொருள், இலக்கணம் மூன்றுமே வேண்டாம் என்று எண்ணுவதாகத் தோன்றும். தங்கள் சாகித்தியங்களில் அவைகள் எல்லாம் நன்றாய் அமைந்திருக்கின்றன. நம்முடைய சங்கீதத்திற்கு சாகித்யம் அல்லவா வேண்டும். “Music married to immortal verse”

என்றிருக்கவேண்டாமா? தங்கள் சாகித்யங்களைப் பார்க்க ரொம்பத் திருப்தியாய் இருந்தது.

சகுந்தலா நினைவு மலருக்குத் தாங்கள் உதவிய பாடல் அருமையான சோக பாவம் கொண்டதாய் இருக்கிறது. அதை நண்பர்களுக்கு வாசித்துக்காட்டிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறேன். மூன்றுவது விஷயத்தைச் சொல்லிவிட்டு நாலாவது அடியில் விளியை வைத்ததில் இதயத்தின் ஏக்கமே ஒலித்து விடுகிறது. அபூர்வமான சோக பாவம் வந்துவிட்டது.

கண்ணிற் காணு
விண்ணுலகம்
கடந்து சென்ற
தேனம்மா!
வண்ணக் கிளியே
மடமயிலே
மாதர் மணியே
சகுந்தலையே!

தாங்க முடியாத சோகத்தைத் தமிழ்ப் பண்ணில் வைத்துவிட்டால் கற்கண்டாய்ப் போய்விடுகிறது அந்த சோகம்! என்ன விசித்திரம்!

தமிழுக்கு அருமையான சோக உருவம் வாய்ந்த கவி யொன்று கிடைத்திருக்கிறது. நஷ்டத்திலிருந்து லாபம் உண்டாகிற காரியத்தைப்பற்றி எண்ணும்போது மனசு திணறத்தான் செய்கிறது. உலகத்தின் லாப நஷ்டம் எப்படிப் பின்னிக் கிடக்கிறது பாருங்கள்!

ஆசியஜோதி, மலரும் மாலையும் - புதுப் பதிப்பு - இரண்டு புஸ்தகங்களையும் எனக்கு அனுப்பினார்கள் புதுமைப் பதிப்பகத்தார். தங்கள் கவிகள் அடங்கிய புஸ்தகம் மேல் நாட்டில்

வெளியாகிறதென்றால் பொன் மயமாய் இருக்கும். நம்மவர்களுக்குக் கவியை மதிக்கத் தெரியவில்லை. யுனிவெர்சிடிக்காரர் கவித்துவத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யவேண்டும் என்று கூடச் சொல்லுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் தமிழ் மகள் முன் ஜென்மத்தில் மகா பாதகம் செய்ததுதான். ஆனால் தமிழ்மக்கள் ஆடவர் பெண்டிர் பையன்கள்—விழித்துக் கொண்டார்கள். யுனிவெர்சிடியைக் கவனியாமலே கவிஞர் தே. வியை சொந்தம் பாராட்டிக் கவிகளை அனுபவித்து விடுகிறார்கள்: அது போதும் நமக்கு. விளம்பரம் என்பது இல்லாமலே மூன்று பதிப்பு ஆய்விட்டது. நாலாவதும் சீக்கிரம் வந்து சேரும். தமிழருக்குக் கவிநாடி நன்றாய்ப் பேசுகிறது.

தங்களுக்கு உடம்பு சீராய் இருக்கிறதா. அம்மாள் மருமகன் மகள் குழந்தை எல்லாரும் சௌக்கியந்தானே. உடம்பு சௌகரியமாய் இருக்கும்போது வந்து சில நாளாவது தங்க வேண்டும். யாவருடைய ஆசையுந்தான் இது.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

அருமை நண்பர்

டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

ஆங்கில Alphabetல் எல்லாம் மொத்தம் இருபத்தாறு எழுத்துக்களே. அதில் கிட்டத்தட்ட இருபது எழுத்துக்களைப் பட்டமாகவே பெற்றிருக்கிறார் ஒருவர் என்றால் நீங்கள் மூக்கின் பேரிலே விரலைவைத்து அதிசயித்துத்தானே நிற்பீர்கள். டாக்டர் T. S. திருமூர்த்தியின் பெயர்ரொம்பவும் சின்னப்பெயர். ஆனால் அவர் பெற்றிருக்கும் பட்டங்களோ அவர் பெயரைவிட இரண்டத்தனை நீளமாய் இருக்கின்றன. B. A., M. B., & C. M. D. T. M. & H. (Lond) என்பது அவர் பெற்றிருக்கும் பட்டங்களைக்குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள். இத்தனையும் காணாதென்று நமது காருண்ய கவர்ன்மெண்டார் "ராவ்பகதூர்" என்ற பட்டத்தையும் அவருக்கு அளித்து ஆளையே கொஞ்சம் நீட்டியிருக்கிறார்கள்.

டாக்டர் திருமூர்த்தி என்றால் வைத்திய உலகிலேயே ஒரு பிரபலமான பெயர். ஸ்டான்லி மேடிகல் காலேஜின் பிரின்சிபலாகப் பல வருஷம் இருந்த காரணத்தால் இன்று சென்னை மாகாண முழுவதும் நிரம்பியிருக்கும் எத்தனை எத்தனையோ பெரிய டாக்டர்களால் 'எங்கள் ஆசிரியர்' என்று பாராட்டப்படுகிறார். ஒருகாலத்தில் ஆந்திர சர்வகலாசாலையின் வைஸ்சான்ஸ்லர் பதவியையும் வகித்தவர். அவர் இன்றும் சென்னை யூனிவர்சிட்டி செனட் சின்டிகேட் அண்ணாமலை யூனிவர்சிட்டி செனட் சபைகளில் எல்லாம் அங்கத்தினர். அங்கத்தினர் என்றால் பலரைப்போல்

பேசாமடந்தையல்ல. செனட் சபைக்கூட்டம் உண்டென்றால் அங்கு அவருடைய பேச்சும் இருக்கும் கட்டாயமாக.

இப்படியெல்லாம் யூனிவர்சிடியோடு யூனிவர்சிடியாய் ஒட்டிக்கிடக்கும் ஆசாமிக்கு "இந்த யூனிவர்சிடிகளால் எல்லாம் ஒரு பிரயோஜனமும் இல்லை. இந்த யூனிவர்சிட்டி கிராஜுவேட் என்றால் மகாமட்டம்" என்றெல்லாம் எழுதுகிறதென்றால் அது சிங்கத்தின் குகையில் நுழைந்து அதன் பிடரியைப் பிடித்து ஆட்டுகிற கணக்குத்தான். இந்த வேலையைத்தான் செய்கிறார் டி. கே. சி. இத்தனை ஆட்டபாட்டங்களுக்கு உள்ளாகியும் "சபாஷ்; பேஷ்" போட்டுக்கொண்டிருக்கிறார் டாக்டர் திருமூர்த்தி.

கல்கியில் வரும் "கம்பர் தரும் காட்சிக்" கட்டுரைகளை டாக்டர் கையிலே ஒரு சிவப்புப் பென்சிலோடுதான் படிக்க ஆரம்பிப்பார். வரி வரியாக, சொல் சொல்லாக ஆராய்ந்து அலசி மார்க் செய்துவிடுவார் படித்து முடிப்பதற்குள். பின்னால் ஒவ்வொரு இதழில் வந்த பாடல்களையும் அதன் விளக்கங்களையும் பற்றி ஒரு நீண்ட கடிதமோ கட்டுரையோ — எழுதி டி. கே. சிக்கு அனுப்பிவிடுவார். டி. கே. சிக்கு டாக்டர் எழுதும் கடிதங்கள் எல்லாம் டானிக் கொடுப்பது போலத்தான்.

டாக்டர் திருமூர்த்தி தம்முடைய இந்தப் பென்ஷன் வாழ்க்கையில் வந்து சரணபுகுந்திருப்பது கம்பன் கழல் அடிகளிலேதான். அப்படிச் சரண்புகச் செய்தவர் டி. கே. சி. டி. கே. சி

யுடன் சில வருஷங்கள் பழகியது காரணமாகவே தமிழ்ப் பாடல்களை அனுபவிக்கிறார்; கம்பனை அனுபவிக்கிறார்; குற்றாலக் குறவஞ்சியையோ அனுபவிப்பதுடன் மட்டுமல்லாமல் பொக்கிஷமாகவே போற்றுகிறார். "அவரிடம் போய் உடம்பு தேறுவதற்கு யாராவது மருந்து கேட்டால் கம்பன் பாடல்களை பிரஸ்கிரிப்ஷனாக எழுதிக் கொடுத்தால் அது ஆச்சரியமில்லை." அத்தனை ஈடுபாடு நம்பிக்கையெல்லாம், தமிழிடத்தும், கம்பனிடத்தும் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

சமீபத்தில் வேலை செய்த கலைச்சொல்லாக்கக் கமிட்டிக்கு அவர்தான் தலைவர். "கலைச்சொல் ஆக்கத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன" என்று டாக்டர் கேட்டுவைக்க ரஸிகமணி அதைப்பற்றி விளாசு விளாசென்று விளாசி விட்டார்கள் மூன்று கடிதங்களில்! அந்த அபிப்பிராயங்களை "நேருக்குநேரே" தெரிந்துகொள்ளக் கடிதங்களையே படித்து விடுங்கள்.

திருக்குற்றலம்,
7—3—45.

அருமை நண்பர் டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

நமஸ்காரம்

தாங்கள் 1-3-45 அன்றும் 5-3-45 அன்றும் அனுப்பிய கடிதங்கள் கிடைத்தன.

கம்பர் தரும் காட்சிகளைத் தாங்கள் எப்படி அனுபவிக்க வேண்டுமோ அப்படி அனுபவிக்கிறீர்கள். பிப்பிரவரி மாசம் வந்த காட்சிகள் அற்புதமான காட்சிகள். தங்களைப் போல மனசை லயப் படுத்திக் கொண்டு படித்தால்த் தான் அதன் அற்புதம் தெரியவரும் : அல்லாத பக்ஷம் வெறும் வார்த்தைக் கோவைகளாகத்தான் தோன்றும்.

கல்கியில் கம்பர்தரும் காட்சி இல்லாவிட்டால் அந்த இதழில் ஏதோ பெருங்குறை யிருப்பதாகத் தங்களுக்குத் தோன்றுகிறது. வாஸ்தவந்தான். தமிழ்க் கவி என்றால் அதிலும் கம்பரது கவி என்றால் தமிழனது இதயத்தை என்னமோ பண்ணுகிற காரியம் அது. கவியை அனுபவித்துக் கொண்டே இருந்தால் நம்முடன் ஒரு அங்கமாக ஆய்விடுகிறது அது. இதர கவிகள் அவ்வளவாக லகுவில் ஒட்டுகிற காரியங்கள் அல்ல தான். தமிழர்களாகிய நாம் ஏதோ வீண் பெருமைக்கு ஆளாய் விட்டோம் என்று சிலர் சொல்லலாம். தமிழ் அகராதியை ஒன்பது வருஷத்துக்கு முன் திருத்தமாக எழுதி வைத்த *Rev. Dr. Winslow* மேல் நாட்டு பாஷைகள் இந்திய பாஷைகள், வேறு பாஷைகள், பலவற்றையும் ஆராய்ந்தவர்.

"It is not perhaps extravagant to say that Tamil in its poetic form is more exact and polished than the Greek"

என்றார் Dr. Winslow. இதைவிட ஒரு பாஷைக்குப் புகழ்ச்சி சொல்ல முடியாது.

இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், கலாக்ஷேத்திரத்தில் நடந்த குறவஞ்சி நடனத்தைப் பார்த்திருந்தால் அது தீர்ந்து போயிருக்கும். தமிழ்க் கவியை அறிவதற்குச் சங்கீதமும் அபிநயமும் இல்லாமல் முடியாது என்று இரண்டு மாசத்துக்கு முன்தான் ராஜாஜி சொன்னார்கள்; வெகு உறுதியோடு சொன்னார்கள். 'இசையோடும் நடனத்தோடும் பந்தடிக்கும் பாடலைக் கேட்ட பிறகுதான் குறவஞ்சி பாடியவருடைய உயர்ந்த மேதா விலாசம் தெரிய வந்தது' என்று நண்பர் கி. சந்திரசேகரன் எழுதுகிறார்கள். இப்படித் தெரியவந்தது பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம். நாம்தான் இதைப்பற்றி முன்னமே பேசியிருக்கிறோமே. தமிழ்க் கவியைக் கண்டு கொள்ளுவதே இவ்வளவு கஷ்டம். ஆங்கிலக் கவியைக் கண்டு கொண்டோம் என்று சொல்லுவதெல்லாம் அநேகமாய்ச், சந்திரனை அமாவாசை இரவில்க் கண்டோம் என்று சொல்லுகிற கணக்குத்தான். விரதத்துக்கு வார்த்த தோசையைத்தான் சந்திரன் என்று எண்ணிக்கொண்டார்கள்.

தாங்கள் குறவஞ்சி சம்பந்தமாக ஒரு classic ஆய் விட்டீர்கள். "குறவஞ்சியைக் கேட்க வேண்டும் பிறகு குற்றாலம் போக வேண்டும்; குற்றாலம்போக வேண்டும், பின்பு குறவஞ்சியைக் கேட்க வேண்டும்" என்று அற்புதமாய்ச் சொன்னீர்கள். சொன்னது போதாதென்று அருவிப்பக்கம் நின்றுகொண்டு 'மடியில் என்ன இருக்கிறதென்று தெரியுமா' என்று கேட்டு விட்டு, பிளானல் சட்டைக்குள்ளிருந்து குற்றாலக் குறவஞ்சிப் புஸ்தகத்தை வெளியே எடுத்துக்காட்டினீர்கள். தமிழ்க் கவி தங்களை அப்படிப்பற்றிக் கொண்டது. தப்ப வழியில்லை தங்களுக்கு. இலக்கிய அனுபவம் என்றால் அப்படி அல்லவா இருக்கவேண்டும்!

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்
7—5—45

அருமை நண்பர் டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

நமஸ்காரம்

தங்கள் கடிதம், கார்ட், தனிகை பற்றிய கட்டுரை எல்லாம் என் கைக்கு வந்தன. கட்டுரை மிக்க உணர்ச்சி மேலீட்டி லிருந்து எழுதியிருக்கிறது. அதற்கு முன்னுரை ஒன்று நான் எழுதினல் கட்டுரையின் ஆர்வம் விளங்கும். அதையும் எழுதி வசந்தத்துக்கு அனுப்பிவிடுகிறேன்.

தங்கள் கட்டுரையை (மேல் நாட்டார் இசை பற்றிய கட் டுரையைத் தான்) நான் ரொம்ப அனுபவித்தேன். தங்கள் மனக்கொதிப்பு அதில் எவ்வளவு அழகாய் வந்திருக்கிறது! ஆங்கிலம் கற்றவர்கள் எல்லாரும் படிக்கவேண்டும். ஆங் கிலம் கல்லாதவர் படிக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர் கள்தான் அந்தப் பைத்தியத்துக்கு உள்ளானவர்கள் அல்லவே. தாங்கள் சொன்னதுபோல் காவேரியைப்போல் ஆறும் இல்லை சாவேரியைப்போல் ராகமும் இல்லை என்று கஷ்டமில்லாமல் சொல்லிவிடுவார்களே அவர்கள்.

ஆங்கிலங் கற்றவர்கள் இருக்கிறுர்களே, அவர்களுக்கு அப்படியெல்லாம் பேச வராது. Handel, Wagner இவர் களைப் பற்றி ஏதோ புஸ்தகத்தில் எவனே ஒரு அபத்தத்தை எழுதுகிறது; நம்மவர்கள் படே படே கைகள் - தாளம் போடுகிறது!

நம்முடைய சங்கீதத்தை எத்தனையோ தடவை கேட்டு, அதன் பின்தான் அனுபவித்து நிர்ணயிக்க முடிகிறது. ஜெர் மனியர்களுக்கும் அவர்களுடைய சங்கீதத்தை எத்தனையோ தடவை எப்படி எப்படியெல்லாமோ கேட்டபிறகுதான் நிர்ண யிக்க முடிகிறது.

நம்முடைய யூனிவர்சிடிப் பட்டதாரிகளுக்கு மட்டும் கேளாமலே நிர்ணயித்து அனுபவிக்க முடிகிறது! பாக்யசாலிகள்தான்!

* * *

ஒரு விஷயம் சொல்லவேணும்: கொஞ்ச காலமாகச் சில வித்வான்களும் வித்வான்களாக அல்லாத தமிழ் ஆராய்ச்சியாளர்களும் கம்பரைக் குறைத்துவிடவேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு வருகிறார்கள். தமிழர் இருக்கும் இடம் எல்லாம் கம்பரை மதிக்கிறார்களாம், அது கூடாது என்பது அவர்களது கருத்து. அந்தப் பாழாய்ப்போன மனது அவர்களைச் சும்மா இருக்க விடமாட்டேன் என்கிறது.

கம்பரது பெருமையைக் காண எவ்வளவோ படிப்பு வேண்டும். படிப்பே இல்லாமல் (B. A. B. L., M. A., M. L. களைப் படித்தவர்கள் என்று சொல்ல முடியாது) கம்பரிடம் போவதால் வந்த அசம்பாவிதந்தான் தாங்கள் சொல்லும் பத்திரிகையில் வந்த கட்டுரை.

கட்டுரையில்க் கண்டுள்ள குறைபாடுகள் எல்லாம் செருகு கவிகளில் மலிந்து கிடக்கும். சந்தேகம் இல்லை. ஆனால் கம்பரது முத்திரை வைத்த கவியை யல்லவா பார்க்கவேண்டும். அதைப் பார்த்தாலும் மேற்படியார்களது காமாலைக் கண்ணுக்கு அப்படியேதான் தோன்றும். அது ஒரு சாபம். அவர்களுக்கு இந்த ஜென்மத்தில் விமோசனம் இல்லை.

இந்தக் கறுப்புக்கொடி எல்லாம் கம்பரது சூரியப் பிரகாசத்தை மறைத்து விடும் என்பது முடியாத காரியம். கம்பர் இப்போது வீட்டுக்குள்ப் புகுந்துவிட்டார். பெண்களது பராமரிப்பு உண்டாய்விட்டது. நம்முடைய பூர்வமான பண்பாட்டைப் பாதுகாத்து வருவதுபோல் கம்பரையும் பாதுகாப்பார்கள்: பட்டதாரிகள் காரியம் ஒப்பேறாது.

ஒரு பெண்மணி ராஜபாளையத்திலிருந்து எழுதுகிறாள்: "கம்பர்தரும் காட்சி" என்ற தலைப்பில் வாராவாரம் கல்கியில் பிரசுரமாவதைச் சென்ற ஆறு மாதங்களாகப்

படித்து வபவருள் நான். இதுவரைக்கும் நான் எனது அனுபவங்களைத் தெரிவிக்கவில்லை. தெரிவிக்கத் தைரியம் இல்லை. ஆனால் இந்த வாரம் எப்படியும் எழுதி எனது வந்தனத்தைத் தங்களுக்குத் தெரிவித்துவிட வேண்டும் என்று தூண்டிற்று என் மனது.

“கம்பராமாயணம் ஒரு பெரிய கற்கண்டு பருவதம்! அதைப் புலவர்கள் என்ற போலீஸார்கள் யாரும் அணுக விடாதபடி காத்து வந்தார்கள். ஆனால் இன்று தாங்கள் அவர்களை விரட்டித் தமிழ் மக்கள் ஆண் பெண் பலரையும் சனிக்கிழமை தோறும் மகிழச் செய்கிறீர்கள்.

“இவ்வளவு பெரிய தொண்டு தாங்கள் தமிழர்களுக்குச் செய்த உபகாரத்திற்கு நாங்கள் செய்யப் போகும் உதவி, என்ன என்றால், மீதம் உள்ள காண்டங்களைச் சீக்கிரத்தில் எழுதி முடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று தூண்டுவதுதான்.

ஐயா அவர்களின் தேக சௌக்கியத்தை என்றென்றும் விரும்பும்”

கடிதம் எழுதின பெண்ணின் குடும்பஸ்தர் எல்லாரும் எனக்கு ரொம்ப வேண்டியவர்கள்தான். ஆனால்க் கடிதம் எழுதிய குழந்தையை நான் நேரில்ப் பார்க்க நேரவில்லை.

கம்பரை யாரிடம் ஒப்படைத்திருக்கிறோம் என்று தெரிகிறதல்லவா!

கடிதம் எனக்கு எவ்வளவோ ஊக்கம் கொடுத்தது. உடம்பின் சௌகரியத்தைக் கவனிக்காமலே சுந்தர காண்டத்தில் முனைந்து வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டேன்.

* * *

தங்கள் அருமைப் புதல்விக்கும் குழந்தை பிறந்து தாயும் குழந்தையும் சௌக்கியமாய் இருப்பதுபற்றி ரொம்ப சந்தோஷம்.

தங்களிடம் மிக்க மதிப்புள்ள நண்பர்கள் பலர் எனக்குண்டு. அவர்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷம் அளிக்கும். புண்ணியா வாசனம் வெகு அழகாய் ஆனந்த மயமாய் நடந்திருக்கும். மாப்பிள்ளையும் வந்திருந்தார்கள். அல்லவா? ரொம்ப சந்தோஷம்: அம்மாள் குழந்தை எல்லாருக்கும் என் சந்தோஷத்தைச் சொல்ல வேணும்.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றலம்,
13—7—45.

அருமை நண்பர் டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

நமஸ்காரம்.

தாங்கள் 10—7—45 அன்று விடுத்த கடிதம் கிடைத்தது. கடிதம் அன்பும் ஆனந்தமும் கலந்தமயமாய் இருக்கிறது. நண்பர்கள் பலரும் வாசித்தார்கள். ரொம்ப ரொம்ப அனுபவித்தார்கள். பாக்கிய லக்ஷ்மி அம்மாளுக்கும்* வாசித்துக் காட்டினேன். அம்மாளுக்கு சந்தோஷம் அவ்வளவு இவ்வளவு என்றில்லை.

அம்மாளையும் சேர்த்து சிடன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அம்மாளின் இலக்கணத் திருத்தம் ஒன்றைச் சொல்லிவிட வேண்டியதுதானே. பெண்பாலரைச் சிடன் என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல, தன்னைத் தனியாக வைத்துச் "சீடை" என்று சொல்லிவிடலாமே என்கிருர்கள்—எப்படி இருக்கிறது இலக்கணம்!

அவர்கள் ஒரு விஷயம் சொல்லுகிருர்கள். அதில் ஒரு உண்மை இருக்கவே செய்கிறது:— நேரில்த் தாங்கள் கேட்டிருப்பதால் கம்பர் தரும் காட்சிகளை அவ்வளவு நுட்பமாக அனுபவிக்க முடிகிறதென்றும், இப்போது நேரில்க் கேட்டு வருவதால் இனிதானும் பூரணமாய்க் கம்பர் பாடல்களை அனுபவிக்கலாம் என்றும் சொல்லுகிருர்கள். வாஸ்தவந்தான். பாடல்களைக் கண்ணுல்ப் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை. எழுத்தாய் இருப்பது ஒலியாய்க் காதில் வந்து விழவேண்டும். அப்

* Mrs. பாக்கியலக்ஷிமி சங்கர் B.A., L.T., டி. கே. சி.யிடம் பெருமதிப்பு உடையவர். சிம்லாவில் இருப்பவர். இவருக்கு டி. கே சி. எழுதிய கடிதங்களும் பின்னுல் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

போதுதான் கவிரூபம் அந்த எழுத்துக்கு உண்டாகிறது. இந்த உண்மை தென்படவேண்டும் என்றே கம்பர் பாடல்களைப் பாட வேண்டும்; வாய்விட்டுப் பாடவேண்டும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

மேல்நாட்டில் தாங்கள் எழுதும் கம்ப விமரிசனங்களை ரொம்ப ரொம்பப் போற்றுவார்கள். தங்கள் அதிசயம் ஆனந்தம் கும்மாளி இவைகள்தான் விமரிசனம்.

ரசிகர் என்றால் தேன் வண்டைப்போல் அனுபவிப்பது தான். மறுபடியும் மறுபடியும் புஷ்பத்தில் வந்து விழவேணும். கவியை விட்டு நம்மால்ப் போக முடிகிறதா. இல்லை.

தங்கள் கடிதங்கள் எனக்கு எவ்வளவு ஊக்கத்தைக் கொடுக்கின்றன என்பது தங்களுக்குத் தெரியாதுதான். அருவியின் பிரயோசனம் குளிக்கிறவனுக்குத் தெரியுமே ஒழிய அருவிக்குத் தெரியவா செய்யும்.

தாங்களும் நீண்ட நீண்ட கடிதம் எழுதிக்கொண்டே இருக்கவேண்டும். பாக்யலக்ஷ்மி அம்மாளும் குற்றாலத்தை விட்டுப் போனபிறகு கடிதம் எழுதிக்கொண்டேதான் இருக்க வேண்டும்.

தமிழ் வெள்ளத்தை யாராலும் தடுத்துவிட முடியாது. கம்பரையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கிவிட முடியாது. நாளுக்கு நாள் கம்பனது விளக்கம் பரவியே வருகிறது.

இங்கே கம்பராமாயண வாசிப்பைப் பலரும் ரொம்ப வியந்து வருகிறார்கள். வியப்புக்குள் அனுபவம் எல்லாம் அடங்கி விடுகிறதல்லவா.

சென்னையிலிருந்துகொண்டே புதிய குற்றாலத்தை நிர்மாணிக்கிறீர்கள்; அனுபவிக்கிறீர்கள். 'கோயில் கொண்டிருக்கும் குற்றாலத்து நாதரது தெரிசனம், ஊட்டி முதலிய இடங்

களில்க் கிடைக்குமா? குற்றுலம் குற்றுலந்தான்' என்று அழகாய்த் தீர்மானம் கொடுக்கிறீர்கள்.

தங்கள் மூலமாகக் குற்றுலத்தின் சோபை அதிகமாகிறது. கண் தெளிவாகிறது என்று சொல்லவேண்டும்.

ஜுலை 8-உ கல்கியில் வந்திருக்கும் கம்பர் பாடல்களை அற்புதமாய் அனுபவிக்கிறீர்கள்.

"ஓங்குமரம்" என்ற பாட்டிலுள்ள ஓசை உருவத்தைத் தாங்கள் வெகு அழகாய் அனுபவித்துவிட்டீர்கள். இங்குள்ள நண்பர்கள் அந்தக் குறிப்பை ரொம்பவும் பாராட்டினார்கள்.

உண்மைக்கு ஒவ்வாததாய்க் கம்பர் வருணனைகள் இருக்கும் என்று இலக்கிய யாத்திரிகர்கள் சொல்லுகிறார்களே! தலையில் அடித்துக்கொள்ள வேண்டியதுதான்.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்,
12—7—46.

அன்பு ததும்பும் டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

நமஸ்காரம்.

தாங்கள் 30—6—46 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. அரசியலைப்பற்றி வெகு அழகாக எழுதியிருக்கிறீர்கள். அதுவிஷயமாக நாம் செய்யக்கூடியதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு சும்மா இருப்பதுதானே?

சதுரங்கத்திலுள்ள காய்கள் ராஜா ராணி வேறு—அங்கும் இங்குமாக நகர்கின்றன. அவைகளாகவா? அல்ல. ஆடுகிற ஆசாமிகள் வேறல்லவா—அரசியல் விளையாட்டில் நாம் காய்கள் தான்.

காய்களுக்கும் நமக்கும் ஒரு வித்யாசம். நமக்குக் கண் இருக்கிறது. மூடிக்கொள்ளும் வேலை இருக்கிறது. அது இல்லை காய்களுக்கு.

* * *

'கலைச் சோல்க் கமிட்டி'யில் தங்களைத் தலைவராக நியமித்திருக்கிறார்கள். ரொம்ப திருப்தி. சையன்ஸ் சம்பந்தம் இல்லாதவர்களே இதுவரை கமிட்டியில் இருந்து வந்திருக்கிறார்கள் அவர்களுக்கு ஒரே நோக்கம், வடமொழியை விருத்திபண்ணி விடவேண்டும், அல்லது தமிழை விருத்திபண்ணிவிடவேண்டும். சையன்ஸ் எப்படியேனும் போகட்டும்—என்றுதான் எண்ணுகிறார்கள். விஷயந்தான் முக்கியம் என்று எண்ணிவிட்டால் வார்த்தைகளின் ஆதிக்கம் முன்னணிக்கு வராது.

மேல்நாட்டான் ஒரு பிள்ளையைப் பெற்றான். அதற்கு ஏதோ 'விக்டர்' என்றும் பெயரிட்டான். நாமும் அவனை 'விக்டர்' என்று சொல்லிவிட்டால்த் தமிழ் கெட்டா போகும்? போகாது.

அதுபோல, உடம்பைப் பிரித்துப் பார்த்தான். ஒரு உறுப்புக்கு 'மால்பிகியன் காப்ஸியூல்' என்று ஏதோ பெயரிட்டான். நாமும் அந்தப் பெயரையே இட்டு அழைத்தால் கேடு ஒன்றும் விளைந்துவிடாது. நாளடைவில் வேறு பெயர் இட்டு நம்மவர்கள் அழைக்க ஆரம்பித்தால் அதைச் சேர்த்துக் கொள்ளுகிறது. ஆனாலும் மேல்நாட்டு சையன்ஸோடு கலந்து கொள்ளுவதற்கு மேல்நாட்டார் நாமகரணம் செய்தபடியே பெயர் வைத்துக்கொண்டால் பிரயோஜனமாய் இருக்கும். தாங்கள் சொல்லுகிற முறையே சரியான முறை. அதைத் தான் பதினைந்து வருஷங்களாகச் சொல்லிவருகிறேன். இதைப் பற்றி யுனிவர்ஸிட்டி கமிஷன் முன் வாக்குமூலம் முன்னமேயே கொடுத்திருக்கிறேன். ரிக்கார்டுகளைப் பார்த்தால் தெரியவரும். ஆனால் இதெல்லாம் உருப்படுகிற காரியமாகத் தோன்றவில்லை.

மக்கள் மனம் உடும்பைச் சேர்ந்தது. பற்றியதை விடாது. பட்டினியாய்க் கிடந்து சாகும் பாருங்கள்லைக் கட்டித் தொங்க விட்டாலும்,

கலைச்சொல் ஆக்கக்காரர் அநேகமாய்ச் சாகத்தயாராய் இருக்கிறார்கள். பிடித்ததை விடப் போவதில்லை. தமிழை வைத்தோ வடமொழியை வைத்தோ தொங்கிக் கொண்டே இருக்கத் தயார் கடைசி வரையுமே!

தாங்கள் சொல்லுகிறபடி ஆங்கிலச் சொற்களையே வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்பட்டுவிட்டால் எல்லாம் எளிதாய்ப் போய்விடுகிறது. அதன் பிறகு, 'கலைச்சொற் கழகம்' என்று ஒன்று வேண்டாமென்றல்லவா ஆய்விடும். பெரிய விபத்தல்லவா அது?

மோட்டார் டிரைவர்களும், கிளீனர்களும் கலைச் சொற் கழகத்தின் உதவி இல்லாமலே மோட்டாரை ஓக்கிட்டு விடுகிறார்கள்—ஓட்டி விடுகிறார்கள்.

நம்மை விட்டு வார்த்தை மோகம் என்று ஒழியுமோ தெரிய வில்லை. அது ஒழிந்தால்த்தானே சையன்ஸ் கைக்குவரும்.

ஏதோ காரமாகச் சொல்லுகிறேன் என்று எண்ணலாம் தாங்கள். ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

முன்னேறிய நாடெல்லாம் சையன்ஸை வாழ்க்கைக்கும், பொருள் விருத்திக்கும், சாலைத் தொழில்களுக்கும் உபயோகப் படுத்திக் கொண்டிருக்கும்போது, நாம் சௌகரியமாக, சாவ காசமாகப் பிரதி பதங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

பெயர் வைக்க மறந்து போனதால் பதினெட்டு வயதுப் பையனை, தொட்டிலிலேயே கிடத்தி வைத்த கணக்குத்தான்.

பிரதி பதங்களைச் சரிவரக் கண்டு பிடிக்க நூறு வருஷம் ஆகும். அதுவரை கைத்தொழில்களையும் சாலைகளையும், ரசாயன ஆராய்ச்சிகளையும் நிறுத்தி வைத்துவிடவேண்டும்!!!

* * *

கரன் வதைப் பாடல்களை அபூர்வமான முறையில் அனுப வித்து விமரிசனம் எழுதி இருக்கிறீர்கள். நம்மிருவரையும் கருதியே கம்பர் பாடல்களைப் பாடினாரோ, என்று எண்ணத் தோன்றுகிறது. பைத்தியக்கார எண்ணந்தான்; அப்படியே இருந்து விட்டுப்போகட்டுமே!

வில் முறிந்ததும் கட்டத்தை எவ்வளவு அழகாக அமைத் துச் சமாளிக்கிறார் கம்பர்! Reflex action ஆனதத்துவத்தை ராமனுக்கு ஏற்றுவது எவ்வளவு அழகாய் இருக்கிறது.

இந்தக் கட்டத்தைப் புலவர்கள் இதற்கு முன் அவ்வளவாக அனுபவித்ததில்லை. பாடச் சிதைவு ஏற்பட்டிருப்பதால் விஷயத் துக்கு வலியில்லாமல்ப் போய்விடுகிறது.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்,
20—7—46.

அருமை நண்பர் டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

நமஸ்காரம்.

போஸ்டாபீஸ் கலவரங்களுக்குள் தப்பிப் பிழைத்து வந்து விட்டது தங்கள் கடிதம். ரொம்ப சந்தோஷம்.

போஸ்டல் நிர்வாகம் குலேந்து போகிறது என்று ஏற்பட்டு விட்டால் தங்கள் கடிதத்தில் அடங்கிய அருமையான கருத்துக்களும் அன்பும் எப்படி எனக்குக் கிட்டும்.

எப்படியோ என் அபிப்பிராயங்களும் தங்கள் அபிப்பிராயங்களும் எல்லாத் துறைகளிலும் ஒன்ருகவே இருக்கின்றன.

சையன்ஸ் சம்பந்தமாக வார்த்தைகளுக்கென்று அலந்து நிற்கிற காரியம் பரிதாபமான காரியமே. சூரியனுக்கு தக்க பிரதிபதம் கிடைக்காமல் போனுல் அப்பாவிகள் கண்ணை இறுக மூடிக் கொள்ளுவார்கள். பாஷை உண்டாவதற்கு முன்னும் ஆதி மனுஷன் சூரியனை இனங்கண்டு அனுபவித்துக் கொண்டான். என்—நம்முடைய கண் முன்னுலேயே பக்ஷிகள் சூரியனை இனங்கண்டு கொள்ளுகின்றன. சந்தோஷத்தில் பாடவும் செய்கின்றன. கண்டு ஆனந்தித்துப் பாடுவதை அகராதிக்காக ஒற்றிப் போடவில்லை, பறவைகள். நம்முடைய நிபுணர்களாய் இருந்தால் கண்ணை மூடிக்கொண்டு கப்சிப் என்று இருந்து விடுவார்கள்.

தாங்கள் நன்ருய்ச் சொல்லிவிட்டீர்கள்—'தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கிற காரியந்தான் எல்லாம்' என்பதாக.

குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா என்ருர்கள். வெள்ளெழுத்துத்தான்; வேறென்ன?

சையன்ஸ் சம்பந்தப்பட்ட உண்மைகள்தான் எத்தனை? எந்திரங்கள்தான் எத்தனை? என்ன பெயரை வைத்தாவது அவை களை நமக்கு ஆக்கிக் கொள்ளவேண்டியதுதானே?

பெயர் தெரியாது என்ற காரணத்தால்த் தின்னுமல் விடுவதா, கையிலுள்ள ஹல்வாவை?

'தமிழ் இலக்கியத்தைத் தமிழர்களுக்கே வேப்பங்காயாக அடித்துவிட்ட பண்டிதர்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்—ஏதோ தமிழுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமுண்டென்று சொல்லிக்கொள்ளுகிருர்கள்; ஆனுல் சையன்ஸுக்கும், அவர்களுக்கும் ஸ்நாநப்பிராப்தியே கிடையாது! அப்படியானுல் சையன்ஸை எவ்வளவு தூரம் வேண்டுமானுலும் துரத்தலாம் அல்லவா? புது வார்த்தைகளைக் கொண்டுதானே துரத்தலாம்? கம்பும் கழியுமாக வரவேண்டியதுதானே!

தாங்கள் தமிழ்ப்பண்டிதர்களைப்பற்றி ஒருபடலம் வாசித்திர்கள். இந்த வாரத்துக் கல்கியில் ரா. கி-யின் விமரிசனம் அற்புதமாய் வந்திருக்கிறது. ஒன்று தமிழ்ப் பண்டிதர் எழுதிய இலக்கணம். மற்றது பூமி சாஸ்திரப் பண்டிதர் எழுதிய இலக்கணம். இரண்டும் செத்த இலக்கணம். ரா. கி. சொல்லுகிறபடி குழந்தைகளைச் சித்திரவதை செய்வதற்காக எழுதிய புஸ்தகங்கள். என்ன கொடுமை இழைத்து வருகிருர்கள் பாருங்கள். டிரைக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன், இன்ஸ்பெக்டர், ஹெட்மாஸ்டர், உபாத்தியாயர் எல்லாரும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்?

நேருக்கு நேராகப் படித்தால்த்தான் படிப்பு. அப்படிப் படிப்பு ஏற்பட்டால் பள்ளிக்கூடத்தில்ப் பிள்ளைகள் ஒரு மணி நேரத்துக்குமேல் இருந்து தொலைக்கவேண்டாம்.

கரன் வதைப் படலத்தைத் தாங்கள் அனுபவிக்கிறீர்கள்! கம்பரது கட்டுக்கோப்பு எவ்வளவு அற்புதமான சிருஷ்டி! அதை

எல்லாம் சூர்ந்து பார்த்து அனுபவிப்பதற்கும் கொஞ்சக்கால மாவது தமிழ் நாட்டை விட்டு லண்டனுக்குப் போய் தமிழ் சம் பந்தம் இல்லாத கலை ஒன்றைக் கற்க வேண்டும்—அப்படி எல் லாம் போகாதவர்களைச் சொல்லி என்ன பிரயோசனம்.

தங்கள் அரிய விமரிசனத்தை இங்குள்ள நண்பர்களுக்கு வாசித்துக் காட்டிக் கொண்டிருக்கிறேன். நான் எழுதுவதைத் தாங்கள் வாசிப்பதும், அனுபவிப்பதும், அதை எழுதுவதுமே நமக்குக் கம்பர் விழா !

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்
தென்காசி
10—9—47

அருமை நண்பர் டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு

நமஸ்காரம்.

எப்படியோ தத்திப்பித்தித் தங்கள் கடிதங்கள் வந்துவிட்டன. 16—8—46, 28—8—46 இரண்டு தேதிகளில் எழுதிய கடிதங்களும் கிடைத்தன.

தங்கள் மாணவர் டாக்டர் சேஷகிரி ராவ் அவர்கள்தான் இங்கே எனக்கு வைத்தியம் செய்பவர்கள். அவர்களிடமும் தங்கள் கட்டளையைச் சொன்னேன். அவர்களும் தங்கள் கட்டளையை நிறைவேற்றிக்கொண்டு வருகிருர்கள்.

இங்கே நண்பர்கள் கூட்டம். சாரலுக்கென்றும் என்னுடன் தங்குவதற்காகவும் வந்திருக்கிருர்கள். ஆர்.வி.சாஸ்திரிகள் பி. ஏ., பி. எல். ஹரிஜன் ஆசிரியராய்க் காந்திஜீயுடன் இருந்தவர்கள் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிருர்கள்.

அவர்களைப் போல்த் தமிழை ஆராய்ந்து அனுபவிக்கும் புலமை வாய்ந்தவர்கள் இல்லை. ஆகவே சென்ற ஒரு மாசமாக நாங்கள் இருவரும் தமிழ்க் கடலுக்குள் இறங்கி, அங்கு தளத்தில் கிடக்கும் அரிய மணிகளைப் பார்த்துப் பார்த்து அனுபவித்த வண்ணமாய் இருக்கிருேம். அரிய அனுபவம். தாங்கள் அனுபவிக்க உடன் இல்லையே என்று ஆற்ருமைப்பட்டுக் கொள்ளுவோம்.

காரியம் இப்படி இருந்தால் உபவாசம் எப்படி இருக்கிறது? அதை மாத்திரம் ஒத்திப் போட்டிருக்கிறேன். அதையும் சீக்கிரம் அனுசரித்து விடுகிறேன்.

தங்களைப்போன்ற அன்பர்களின் மனோசக்தி என் உடம்புக்குப் பலம் கொடுக்காமல் என்ன செய்யும். மிக்க நன்றி.

கலைச் சொற்கள் பற்றிய வேலை மும்முரமாய் நடந்தேறி வருகிறது. ரொம்ப சந்தோஷம். அச்சிட்டபாகம் வந்து சேர்ந்தது. சொற்களுக்காக இவ்வளவு கஷ்டம் எல்லாம் பட வேண்டுமா என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. டெக்ஸ்ட் புத்தகங்கள் சையன்ஸை சொல்லிக்கொடுத்து விடுமா? இதுவரையும் அவைகள் ஒன்றையும் சொல்லிக்கொடுக்கவில்லை என்றால் மிகையல்ல. டார்வின், எடிசன் முதலியவர்கள் நம்முடைய மாணவர்கள் மாதிரி டெக்ஸ்ட் புத்தகங்களையா கட்டிக்கொண்டு அழுதார்கள். விஷயங்களோடு நேர் நேராகக் கலந்தார்கள். அந்தச் சன்னிதியில் நின்றே தியானித்தார்கள். ஒளி பிறந்தது. ஒளியைப் பிறக்க ஒட்டாமல் அமிழ்த்திவிட அல்லவா செய்து விடுகின்றன டெக்ஸ்ட் புக்குகள்!

உடல்க் கூறுகள் சம்பந்தமாக மாணவர்கள் டெக்ஸ்ட் புக்குகளை வாசித்துக் கஷ்டப்பட்டு இருட்டில் மூழ்கித் திண்டாடுவதை நான் பார்த்திருக்கிறேன். நேர் நேராகக் கற்றாலோ வெகு சுலபம். தலை கண் மூக்கு என்னும் உறுப்புகள் கண் முன்னும் பிறகு மனக்கண் முன்னும் நின்று விட்டால் எந்தப் பதமும் அவைகளில் லகுவாய் ஒட்டிக்கொள்ளும். தமிழோ, வடமொழியோ, ஆங்கிலமோ, லத்தீனோ, கிரீக்கோ எந்தப் பதமும் ஒட்டிக்கொள்ளும்.

உள்ளத்தில் நில்லாத உறுப்புக்கு எந்தப் பெயரைக் கொடுத்தாலும் பிரயோஜனம் இல்லை. உள்ளத்தில் இல்லாத பொருள்களுக்குப் 'பதி' 'பசு' 'பாசம்' என்று பெயர் கொடுத்ததால் என்ன ஆயிற்று.

கொஞ்சம் என்னை மன்னிக்கவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் ஆசிரியராய் இனி அமரப்போகும் மாணவர்களுக்கும் விஷய அனுபவம் என்

பது இல்லாதபோது வார்த்தையை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றுதான் கேட்கிறேன். பள்ளிக்கூடங்களில் சையன்ஸே கற்பிக்கவில்லை. கற்பிப்பது எல்லாம் அப்பாவி மாணவர்களுக்குள் வார்த்தைகளைத் திணிப்பதுதான்.

குருட்டுப் பள்ளிக்கூடத்தில் விண்மீன்களையும் வான வில்லின் தத்துவங்களையும் பற்றிப் பேசி என்ன செய்ய! பெயர்களையும் இலக்கணச் சூத்திரங்களையும் பாராமல்ப்படித்துக் கொட்டி விடுவார்கள் குருடர்கள்!

அதுபோலத்தானே பள்ளிக்கூடங்களில் சையன்ஸ் பாடங்கள் நடக்கின்றன. எல்லாம் அறிவைக் கெடுக்கிற காரியம் என்றால்க் குற்றமில்லை.

நம்முடைய வயசான பி. ஏ. பி. எல்களிடம் ஐந்து நிமிஷம் பேசிப்பார்த்தால்ப் போதும். எந்த விஷயமானாலும், தாறுமாறுமாய்த்தான் பேச்சு வரும்.

இதெல்லாம் சாபமோ என்று கூடச் சொல்லத்தோன்றும். ஆனால் அது சாபம் அல்ல, பள்ளிக்கூடங்களில் படித்த படிப்பின் விளைவுதான்.

சரியான முறையில் சின்னஞ் சிறு விஷயமாகச் சில சையன்ஸ் அம்சங்களையாவது நேரில்ப் பார்த்து ஆராய்ந்து அனுபவித்திருந்தால் 'குழப்பம்' 'கலக்கம்' 'அந்தகாரம்' 'சாபம்' என்றெல்லாம் பேச நேர்ந்திருக்குமா?

எல்லாம் நேர்முகமான கல்விமுறை இல்லாததால்த்தான்; அது வந்து விட்டால் கலைச்சொல் ஆக்கம் பயன்படும். அது வரை பயனை எதிர்பார்த்தால் ஏமாற்றந்தான்.

* * * *

சூர்ப்பனகையின் காயங்கள் எல்லாம் Self inflicted wounds தான் என்ற முடிவுக்கு வந்தார்களே அரக்க வீரர்கள்! இதிகாச ஓட்டத்தை அந்த விஷயம் எவ்வளவு அற்புதமாய்,

எப்படி அழகாய் எடுத்துக் காட்டுகிறது! தாங்கள் அதை வெகு நன்ருய் அனுபவித்தீர்கள்.

இப்படிப்பட்ட இலக்கிய பொக்கிஷம் ஒன்றைக் கண்டு பிடித்து விட்டால், ஜெர்மெனியில் ஒரு தனியான பரபரப்பு உண்டாய்விடும். கூத்தாடுவார்கள் ஜனங்கள். நம்முடைய "தமிழ் ஆசிரியர்களோ" கிணற்றில் போட்ட கருங்கல்போல் அப்படியே கிடக்கிருர்கள். இவர்களைப் பற்றிப் பேசுவானேன்? கம்பரைப்பற்றித் தியானிக்கலாம்.

One law, one all pervasive principle is the basic cause of all phenomena. Creation—plants and animals i. e., life Static and Dynamic are but the manifestations of the Supreme One. This one primordial principle governs the whole universe. This is what our science tells us. Kambar also tells the same thing; but with a wonderful cadence and joyous rhythm.

வயிரவாள் பூண்அ ணி
  மடங்கல் மொய்ம்பி னுன்
உயிரெலாம் தன்னு யிர்
  ஒப்ப ஓம்ப லால்
செயிர் இலா உலகி னில்ச்
  சென்று நின்று வாழ்
உயிர் எலாம் உறைவ தோர்
  உயிரும் ஆயி னுன்

—பால காண்டம் அரசியல்

[சென்று நின்றுவாழ்-உயிருக்குள் எல்லாம் உறையும் பரமான்மா-Cosmic soul]

நமஸ்காரம்.

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

பால் நாடார் அவர்களுக்கு

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெருநீர் போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே

என்பது அருமையான திருவாசகம். இதை மாணிக்கவாசகர் தன்னை ஆட்கொண்ட திருப் பெருந்துறையுறை சிவனை நினைந்து பாடினாலும் மற்றவர்களும்—வைஷ்ணவர்கள் கிறிஸ்தவர்கள் முகம்மதியர்களுந்தான்-பாடி அனுபவிக்க வேண்டிய பாட்டுத்தானே. இந்தப் பாட்டில் சிவமே என்று வந்து விட்டதே என்பதற்காகப் பாட்டை ஒதுக்கவோ அல்லது அதைப் பரமே என்று திருத்தவோ வேண்டும் என்று நினைத்தால் அது தவறுதானே. இப்படிப்பட்ட தவற்றை ஒழிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் உடையவர்தான் ராவ் சாஹிப் ஸ்ரீ A. C. பால் நாடார். பெயரிலிருந்தே அவர் கிறிஸ்தவர் என்று தெரிந்து கொள்ளலாம். தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் மருமகன் என்றும், தூத்துக்குடி கிறிஸ்தவ சங்கத் தலைவர் என்றும், சொல்லிவிட்டால் கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் விலகிவிடும்.

ஸ்ரீ பால் நாடார் மீசை நரைத்தும் ஆசை நரைக்காதவர். கம்பன் விழா காரைக்குடியில் நடந்தாலும் சரி, இல்லே தோழுந்தூரிலேயே நடந்தாலும் சரி அங்கெல்லாம் சென்று பிரசன்னமாயிருப்பார். கம்பன் கண்ட கடவுள் தத்துவத்தையும் கிறிஸ்து சொல்லும் கடவுள் தத்துவத்தையும் ஒப்பிட்டு கிறிஸ்தவ பாதிரிமார்களிடையே நின்று பிரசங்கம் செய்யத்துணிவார்.

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் கேனும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவ ரும் தொழும் தேவ ராகுவர்

என்ற பாட்டில் தேவரும் தொழும் தேவர் என்று கம்பரால் குறிப்பிடப்படும் நபர் இயேசு கிறிஸ்துவாகவே ஏன் இருக்கக் கூடாது என்று வாதமிடுவார்!! இத்தனையும் தூத்துக்குடியில் பிரபல வக்கீலாய் இருந்துகொண்டு மட்டுமல்ல, அங்குள்ள கம்பன் கழகத்தின் தலைவராயும் இருந்து கொண்டேதான்!

ஸ்ரீ பால் நாடார் ஆங்கில இலக்கிய அறிவும் சரித்திரக்கண் கொண்டு எதையும் நோக்கி ஆராயும் திறனும் உடையவர். கவின் கலைகளில் உள்ளம் பறிகொடுப்பவர். எதைப்பற்றியும் திட்டமான அபிப்பிராயத்தைத் தக்க ஆதாரங்களுடனேயே விளக்கக்கூடியவர். டி.கே.சி. யுடன் (சென்னை கிறிஸ்துவ கலாசாலையில்) ஒருசாலை மாணக்காரயிருந்த காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்புவைத்துக் கொண்டவர். கம்பன் மூலமாக இவர்கள் நட்பு பலப்பட்டுப் பலப்பட்டு

இனிப்பிரிக்க முடியாதென்ற ஒரு நிலையையே எய்தி இருக்கிறது. டி.கே.சியைப்பெரிதும் மதிக்கும் பெரியார் அவர். இதுபோலவே டி.கே.சியாலும் பெரிதும் மதிக்கப்படும் நண்பர்களில் அவரும் ஒருவர்.

டி. கே. சி, டி. கே. சி, கூட்டத்தார்; கம்பன், அவன் புகழ்பாடும் பக்தர்கள் எல்லாம் அவருக்கு வேண்டியவர்கள். அத்தனைபேருடனும் உற்ற உறவினராகவே நடந்து இன்று அன்பர் பலர் உள்ளங்களைக் கவர்ந்தவர். இவருக்கு டி. கே. சி. எழுதிய கடிதங்கள் இரண்டுதான் கிடைத்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ருசி.

'எயரோ'
மீனம்பாக்கம் 13—10—41

அருமை நண்பர் பால் நாடார் அவர்களுக்கு

ரொம்ப சந்தோஷம், கம்பரைப் பற்றிய கட்டுரைப் (Guardian) பிரதி நண்பர் பாஸ்கரன் மூலமாக எனக்குக் கிடைத்தது. கம்பர் கழகத்துத் தலைவர் நிலையில்த் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்; ஆதாரங்களோடு எழுதியிருக்கிறீர்கள்; V. V. S. அய்யர் சொன்னதையே மேற்கோளாகக் காட்டி இருக்கிறீர்கள். அதனால் தங்கள் வார்த்தைகளுக்குத் தமிழ் தெரியாதவர்களும் மிக்க மதிப்புக்கொடுக்கவேண்டும்.

தமிழ்ப்பாவியல் உலகத்திலேயே தனி. பாட்டுக்கும் இசைக்கும் தமிழ்ப்பாட்டியலே ஒத்தது. முந்நூறு வருஷங்களுக்கு முன்தான் தெலுங்கில் ஒருவர் இருவர் காப்பியடித்தார்கள். ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தமிழில் வழங்கி வந்த எதுகை மோனைகளை வேறொரு பாஷை கையாண்டால் இவ்வளவு நயம் வந்தாவிடும்! அதனால் தாமிழ்நாட்டுத் தெலுங்கு சாகித்யங்கள் எல்லாம் மட்டம் என்றே இதுவரையும் தெலுங்கர்கள் ஒதுக்கிவந்தார்கள். தற்போதுள்ள பிரசாரத்துக்காக அங்கீகரிக்க முன்வந்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்.

இங்குள்ளவர்கள் என்? தமிழ் நாட்டிலுள்ளவர்கள் தமிழ்ப்பாட்டையே கேட்டறிந்தவர்கள் அல்ல. இந்த மாதிரி மனிதர்கள் தாய்பாஷை சம்பந்தமாக வேறு எந்த தேசத்திலும் கிடையாது. தமிழ்நாட்டுக்குத் தனியான சிறப்பு! அவர்கள் துணிச்சலாகத் தமிழில் ஒன்றுமே கிடையாது என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய துணிச்சலை வியக்கிறதா, அறியாமையை வியக்கிறதா என்று தோன்றவில்லை!

ஆனாலும் நாம் அழுத்தமாய்த் தமிழ்தான் மேலானது என்று சொல்லவேண்டும். தங்கள் கட்டுரையை நண்பர்கள் ரொம்ப அனுபவிக்கிறார்கள். இலக்கியப் பண்ணைபற்றிய குறிப்பை நீலாவதி ராமசுப்பிரமணியம் ரொம்ப அனுபவிப்பார்கள். அவர்களுக்கும் காட்டுகிறேன் கட்டுரையை.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றலம்
30—3—45.

அருமை நண்பர் ஏ. சி. பால் நாடார் அவர்களுக்கு

நமஸ்காரம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. தாங்கள், நண்பர் மகாராஜன்* இருவர்களும் சேர்ந்து என்ன செய்யச்சொன்னுலும் நான் இணங்கவேண்டியதுதான். வேறுபுகல் இல்லே. நட்பின் ஆதிக்கம் எல்லா ஆதிக்கத்தையும்விட அதிகம்.

எனக்கு உடப்பு இன்னும் வசத்துக்கு வரவில்லே. பலஹீனம் இருந்துகொண்டுதான் இருக்கிறது நண்பர் கல்கியிடமிருந்து தாக்கீது தாக்கீதாகத்தான் வருகிறது: வருகிற 4-4-45 அன்று நான் சென்னேக்கு வந்து விடவேண்டுமாம். அவர்களுடன் சில வாரமாவது இருந்து உடம்பைத் தேற்றிக்கொள்ளவேண்டுமாம். அவர்கள் சர்டிபிக்கட்டின் பேரில்த்தான், தலேமை வகிக்கிறது பிரசங்கம், அதிகப்பிரசங்கம் செய்கிறது என்பதை எல்லாம் வைத்துக்கொள்ள வேண்டுமாம். அவர்கள் சொற்படிதான் நடந்துவருகிறேன்.

ஆனல் தூத்துக்குடி காரியம் வேறு. அங்கே கலே, பண்பாடுகளின் ஆர்வம் தாண்டவம் ஆடுகிறது. அதை எப்படியாவது கண்டுகளிக்கவேண்டும் என்பது எனக்கு ஆசை. தாங்களும் மகாராஜன் அவர்களும் சந்தர்ப்பம் கொடுக்கிறீர்கள். சரி என்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். உடம்பின் காரியத்தைப் பார்த்துக்கொள்ளுகிறது என்று அலக்ஷியம் வந்துவிட்டது. நண்பர்கள் டாக்டர்கள் முதலானவர்களுடைய சம்மதத்தை எல்லாம் பெற்றுக்கொண்டு தூத்துக்குடி வந்துசேருகிறேன். தங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் மிக்க நன்றி.

நண்பர் முத்துக்குமாரசாமிப்பிள்ளே † யவர்களேத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். அவர்களால்த்தான் தென்காசி

---

* டிஸ்டிரிக்ட் முன்சீப் ஸ்ரீவில்லிப்புத்தூர்.

† தூத்துக்குடி சிவன்கோவில் எக்சிகூடிவ் ஆபீஸ்.

தமிழ்க்காசி ஆயிற்று. அவர்கள் எங்கு போனாலும் ஊரை ஒரு கலக்கு கலக்கியேதீரும். தூத்துக்குடி கலங்குகிறது. ரொம்ப சந்தோஷம். விழாவுக்கு வேண்டிய தொண்டெல்லாம் செவ்வையாய்ச் செய்தாகும்.

தனபாண்டியன் * பி. ஏ. பரீக்ஷையைத் தீர்த்துவிட்டு சங்கீதம் கற்க ஆரம்பித்திருக்கிறார்கள். பரம்பரை விட்டபாடில்லை. ரொம்ப சந்தோஷம். திருச்சினாப்பள்ளியில் சந்தித்து சங்கீதத்தைப்பற்றியே பேசுகிறேன்; பாட்டனார்பேரைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லுகிறேன்.

நம்முடைய இசைக்கலையானது உலகத்தில் எங்கும் இல்லாத சிறந்தகலை, அதை இதுவரை பாகவதர்கள் கெடுத்தது போதும். இளைஞர்கள் முன்வந்து உண்மையான இசைக்கலையை வளர்க்கவேண்டும். இப்போது நடமாடுகிற சங்கீதம் நம்முடைய உண்மைச் சங்கீதத்தின் போலி; கேலிக்கூத்து (Caricature). அதை மீட்கவேண்டும். தெய்விக சங்கீதம்தான் என்று காட்டவேண்டும். இதை எல்லாம் பற்றிப் பேசுகிறேன்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

---

*ஆபிரகாம்பண்டிதர் மகள் ஸ்ரீமதி மரகதவல்லி துரைப்பாண்டியன் மகன்

அருமை நண்பர்

சிவஞானம்பிள்ளை அவர்களுக்கு

எல்லா உத்தியோக காலத்திற்கும் ஒரு வரையறை உண்டு. சர்க்கார் வேலைக்காரர்கள் ஐம்பத்தைந்து வயதுவரைதான் வேலை பார்க்கலாம் என்றால், ஹைகோர்ட் ஜட்ஜுகள் அறுபது வயதுவரை உத்தியோகத்தில் இருக்கலாம். ஆனால் இந்த வக்கீல் வேலைக்கும் மந்திரிமார் வேலைக்கும் வயது நிர்ணயம் ஒன்றுமே இல்லை. வக்கீல் வேலை பார்ப்பவர்கள் மட்டும் தலை நரைத்து வழுக்கை விழுந்தாலும், பல்லெல்லாம் போய் முகத்தில் திரை விழுந்தாலும் உள்ளங்கால் வெள்ளெலும்பு தேய்ந்தாலும், கடைசிக் காலம்வரை வேலைபார்த்துத் தீர்த்து விடுவது என்றிருப்பார்கள்.

இப்படிப்பட்ட கூட்டத்திற்கிடையில் ஒரு 'ரிடையர்டு வக்கீல்' என்றால் அவர் யாரென்று தெரிய நமக்கு ஆசை ஏற்படத்தானே செய்யும்! அவர்தான் அம்பாசமுத்திரம் வக்கீல் ஸ்ரீ K. A. சிவஞானம்பிள்ளை. வயது ஐம்பத்தைந்து ஆயிற்றோ இல்லையோ, கோர்ட்டுகளுக்கும் கட்சிக்காரர்களுக்கும் சலாம் போட்டுவிட்டு அப்படியே விலகிவிட்டார் வேலையில் இருந்து. வேலையில் இருக்கும்போதே பொதுஜன சேவையில் ஈடுபட்டவர் அவர். தாலூகா போர்ட் தலைவர், ஜில்லா போர்ட் மெம்பர், என்றெல்லாம் பல காலம் பணி புரிந்தவர். சைவசமயப் பற்று நிரம்பவும் உடையவர். தேவார திருவாசகங்களை உளம்

உருகிப் பாடுபவர். காலத்துக்கேற்ற சமயவளர்ச்சிக்கான திருத்தங்களையும் விரும்புபவர். கலை வேகத்தை எதிர்த்து நிற்பவர்களைக் கடிபவர். எல்லாவற்றையும்விட டி. கே. சி. யிடம் பெரு மதிப்பு உடையவர். டி. கே. சி. யிடத்திலும் துணிந்து சில காரியங்களைத் தீவிரமாகவே வாதிக்கக் கூடியவர்.

அவருக்கு ஒரு கடிதம், ஒப்பற்ற கடிதம், டி.கே.சி. எழுதியிருக்கிறார்கள். சுந்தரர் தேவாரத்தில் ஒரு பாட்டில் எப்படி ஒரு எழுத்துப்பிழை விழுந்து பாட்டைக் கெடுக்கிறது; அதைத் திருத்தியமைத்தால் எவ்வளவு அருமையாகி விடுகிறது என்பதை டி. கே. சியே எழுதியிருக்கிறார்கள. மேலும் பாட்டை எப்படிப் பாடவேண்டும் என்பதையும் அழகாக விளக்கியிருக்கிறார்கள் கடிதத்தில்.

உண்மையில் இந்தக் கடிதம் கண்டபின் தான் எனக்கு டி. கே. சியின் கடிதங்களைத் தொடுத்தால் பயன் உண்டு என்று தோன்றியது. அதன் பயனே இப்புத்தகம். இந்தக் கடிதம் உருவாக்கிய புத்தகம் இது என்றால் அதுமிகையல்லதானே.

திருக்குற்றலம்,
21—9—44.

அருமை நண்பர் சிவஞானம்பிள்ளை அவர்களுக்கு,

நமஸ்காரம்.

அன்று ரயில் சௌகரியமாகவே கிடைத்தது. ரயிலில் ஒரு பிரபல சங்கீதவித்வான் உடன் பிரயாணம் செய்தார். சங்கீதத்தைப்பற்றிப் பல விஷயங்களை அலசமுடிந்தது. சங்கீத உலகம் தற்போது பைத்தியக்கார உலகமாய்த்தான் இருக்கிறது என்று ஒருவகையாய் ஒப்புக்கொண்டார். உயர்ந்த சங்கீதத்தை வித்வான்களும் ஒப்புக்கொள்வதில்லை, கேட்பவர்களும் ஒப்புக்கொள்வதில்லை. வெறும் படாடோபத்தை, பொருள் அற்ற சப்தத்தை ஹா! ஹோ! என்றெல்லாம் பாராட்டுகிறார்கள். தலை அசைக்கிற அசைப்பில் தலையும் குடுமியும் தெறித்துப்போய் எங்கேயாவது விழுந்துவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கும்.

உண்மையான உணர்ச்சியோடு கூடிய சங்கீதத்தை ஏதோ ஒன்றுக்கும் உதவாதது என்று பாகவதர்கள் தீர்ப்புச் சொல்லி விடுவார்கள். நம்முடைய பி. ஏ. பி. எல். அண்ணாக்கள் இருக்கிறார்களே அவர்களும் ஆமாப்போட்டுவிடுவார்கள்.

இதையெல்லாம் வித்வான் ஒப்புக்கொண்டார். வருந்தவும் செய்தார். எனக்கு எவ்வளவோ திருப்தியாய் இருந்தது.

* * *

மேலப்பாளையம்* ஊர், கீழரதவீதி, தேர் நிலையம், தங்கள் வீடு தாங்களுமே எல்லாம் சேர்ந்து அருமையான காட்சி. அமைதி தரும்படியான இடம். சில நாளாய் நண்பர் ஆவுடையப்ப பிள்ளை † அவர்களுடன் தங்கினால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று எண்ணுகிறேன். ஆனால் இந்த ஆசையை நிறைவேற்று

---

* அம்பாசமுத்திரத்தில் ஒருபகுதி.

† திவான்பஹதூர் ஸ்ரீ P. ஆவுடையப்ப பிள்ளை-வண்ணாரபேட்டை டி. கே. சி. யின் பள்ளித்தோழர்-அத்தியந்த நண்பர்.

வதற்கு ஜாதகம், கடவுள், கட்சிக்காரர் எல்லாருமாக அல்லவா அருள் செய்யவேண்டியிருக்கிறது.

அன்று சுந்தரமூர்த்தி நாயனுர் கண்ணும்பொத்தி விளையாடிவிட்டார். பாடல் அகப்படமாட்டேன் என்று விட்டது. திருக்குற்ருலம் வந்து சேர்ந்ததும் ஞாபகத்துக்கு வந்து விட்டது. ஸ்தலத்தின் மகிமைதானே என்னவோ !

திருக்கடவூரிலுள்ள வீரட்டான ஆலயத்துக்குள் சென்ருர். மூர்த்தியை வழிபட்டார். என்றும் இல்லாத தெளிவு மனசுக்கு ஏற்பட்டு விட்டது. இறைவனது உண்மையான தத்துவம் விளங்கிவிட்டது. அடடா! இதுவரை விளங்காமல் போயிற்றே என்று ஆற்ருமைப்படுகிருர். ஆற்ருமையைவிட உண்மையில் எக்களிப்பு பாவம் அதிகம் என்பது பாடலில்த் தெளிவாய் தொனிக்கும்.

மையார் கண்டத்தி னய்—மத
    மாவுரி போர்த்தவ னே!
பெய்யா(து) என்னுயி ருள்—புகுந்
    தாய் முன்னம் போந்தறி யாய்!
கையார் ஆடர வா—கட
    ஆர்தனுள் வீரட்டத்(து) எம்
ஐயா! என் அமு தே—எனக்(கு)
    ஆர்துணை நீயல தே

அருமையான பாடல். உணர்ச்சியிலிருந்து எழுந்தபாடல். மெள்ள (Pause) இடைகொடுத்து உணர்ச்சியுடனேயே பாடினல் சுந்தரமூர்த்திகளது உணர்ச்சி அப்படியே நம் இதயத்துக்குள் பாய்ந்துவிடும். நமக்கு வேறென்ன வேண்டும் என்று சொல்லத் தோன்றும். இனிக் கொஞ்சம் செய்யுள் விளக்கம்.

'மதமா வுரி போர்த்தவனே' என்று பாடி பாவத்தைக் குலைத்துவிடக்கூடாது. 'மத' என்று தாழ்த்திச் சொல்லிவிட்டுப் பிறகு அழுத்தமாக 'மாவுரி-போர்த்தவ-னே' என்று முடிக்க வேண்டும்,

'புகுந்தாய்' என்று பாடக்கூடாது, 'புகுந்–தாய்' என்று பாடவேண்டும். தாய் என்பதில் அழுத்தம் விழுந்தால்த்தான் உணர்ச்சி வெளியாகும்.

'ஐயா' என்று அலற வேண்டும்; 'எம்மையா' என்று பாடக்கூடாது. 'ஆர்துணை' என்பதில் 'ஆர்' என்பதை உணர்ச்சியோடு பேசவேண்டும்.

தலைவலி போதும் அல்லவா! ஆனாலும் ஒரு விஷயத்தைச் சொல்லி ஆகவேண்டியிருக்கிறது. எழுதினவன் எட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்ற வழக்கு இருக்கத்தானே செய்கிறது. ஆகவே ஒரு நல்லபிழை பாடலுக்குள் சௌகரியமாகப் புகுந்துகொண்டது.

இரண்டாவது அடியிலுள்ள விஷயம்: "உண்மையாகவே இப்போது என் உள்ளத்துக்குள் புகுந்துகொண்டாய் கடவுளே: ஏமாற்றமான காரியம் அல்ல. ரொம்ப ரொம்ப சந்தோஷம், இதற்குமுன் வர வழி தெரியாமல்த் தானே போயிற்று" என்பதான ஹாஸ்யமும் எக்களிப்பும் கலந்த பாவத்தில் நிற்பது.

"முன்னம் போந்தறியாய்" என்பதின் பொருள் தெரிகிறதல்லவா? இதைக் காணமல் "இன்னம்போந்தறியாய்" என்று பிழையாய் எழுதிவிட்டார் Copyist இந்தப் பாடத்துக்குப் பொருள் ஏது? "பொய்யா தென்னுயிருள்–புகுந்-தாய்" என்பதோடு பொருந்தவில்லை அல்லவா? பிழைபட்ட பாடத்தோடு சங்கடப் பட்டுக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் என்ன? Copyist முக்கியமா, ஜட்ஜ்முக்கியமா? ஜட்ஜ் அபத்தமாக எழுதுவார் என்று சொல்லுவதில் என்னபுண்ணியமோ? பாடல் உண்மையான உணர்ச்சியிலிருந்து எழுந்தது. ஆயிரத்துச் செல்வான் வருஷங்களுக்குப்பின் வந்த நமக்கு உண்மையைக் காட்டுகிறது, ஆனந்தத்தை அளிக்கிறது!

அப்பர் இல்லத்திற்கு* இது ஒரு காணிக்கை.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

---

* சிவஞானம் பிள்ளையவர்கள் வீட்டின் விலாசம் அப்பர் இல்லம்

அருமை நண்பர்கள்

கல்கி

K. சந்திரசேகரன்

C. V. RM. அழ.

பட்டாபி

A. L. நடராஜன்

அருமை நண்பர்

கல்கி அவர்களுக்கு

கல்கி என்றால் அது ஒரு வாரப் பத்திரிகை என்கிறார்கள் பலர். கல்கி என்றால் அது ஒரு நபர் என்கிறார்கள் சிலர். இல்லை கல்கி யென்றால் ஒரு தத்துவமே அது என்கிறார் டி. கே. சி. இவற்றில் எது உண்மை? எல்லாமே உண்மை தான். கல்கி என்ற அறிஞர் இல்லாமல் கல்கி பத்திரிகை இல்லை. கல்கி பத்திரிகை இல்லாமல் தத்துவமும் இல்லை. கல்கி தத்துவம் இன்று தமிழ் நாட்டில் இல்லாவிட்டால் தமிழ் மொழி வளர்ச்சியுமே இல்லைதான்! மூன்று குலத்தமிழ் மன்னர் அன்று மூண்ட நல்லன்பொடு நித்தம் வளர்த்த தமிழைத்தான் இன்று கல்கி வளர்க்கிறார். இது உபசாரமல்ல. உண்மை.

எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்தக் கட்டடத்தில் அஸ்திவார விழா நடந்தபோது மேடை மீது பிரசன்னமாயிருந்த ராஜாஜி, கல்கி, டி.கே.சி மூவரையும் தமிழ் நாட்டின் பிர்மா, விஷ்ணு, சிவன் என்று குறிப்பிட்டுப் பேசினார் நாவலர் சோமசுந்தர பாரதியார். ராஜாஜியும் டி.கே.சியும் பிரம்ப ருத்திரர்களோடு போட்டி போடுகிறார்களோ என்னவோ! கல்கியைத் தமிழ் நாட்டின் காத்தற் கடவுள் எனக் குறிப்பிட்டது பொருத்தமானது. உண்மையானது.

கல்கி-இல்லை-அந்தப் புனைபெயரைத் தாங்கிய நண்பர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி இன்றையத் தமிழ் நாட்டுக்கு நன்கு தெரிந்தவர். இருபது வருஷத்திற்கு முன் திரு. வி. க. வின் நவ சக்தியில்

தமிழ்த் தேவியாக விளங்கினர். பின்னர் ஆனந்த விகடன் துணை ஆசிரியராக இருந்து நாடு முழுவதையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தார். தமிழ்நாட்டின் பத்திரிகை உலகிலும், எழுத்தாளர் உலகிலும் முன்னணியில் நிற்கிறார். அவருடைய பார்த்திபன் கனவு, சிவகாமி சபதம் என்னும் தொடர்கதைகள்-நாவல்கள் எல்லாம் சர் வால்டர் ஸ்காட் நாவல்களுடன் ஒப்பிடத் தகுந்தவை. சிறுகதை இலக்கியத்திலோ அவருக்கு ஒரு சிறந்த ஸ்தானமே உண்டு. இதற்காக எல்லாம் அவரைப் பலர் மதிக்கலாம். ஆனால் அவர் இன்று செய்துள்ள சேவை, ஆம், பாரதி ஞாபகார்த்தக் கட்டடம் கட்ட முனைந்து வேலை செய்து முடித்துக் கொடுத்தாரே அந்த ஒரு சேவைக்காக மட்டுமே அவரை மதிக்கலாம்; பாராட்டலாம், இன்னும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!

இந்த சேவையை நன்கு மதித்திருக்கிறார் டி.கே.சி. கல்கியைப் பாராட்டி அவர் நடத்தித் தந்த அஸ்திவார விழாவைப் பாராட்டி எழுதிய கடிதங்கள்தான் பிரசுரிக்கப்படுகின்றன. கல்கிக்கு டி. கே. சி. எழுதிய கடிதங்கள் எத்தனையோ இருக்கும். பல ஜோலிகளுக்கிடையில் பலவற்றைத் தவற விட்டு விட்டார் அவர் என்றே தெரிகிறது. கிடைத்ததைக் கொண்டுதான் நாம் திருப்தி யடைய வேண்டியிருக்கிறது!

திருக்குற்றலம்,
5—6—45

அருமை நண்பர் கல்கி அவர்களுக்கு

மாயவரத்தில் 23—5—45 அன்று காலையில் எல்லாருமாகச் சந்தித்தோம். நேற்றுக் கோயில்பட்டியில் பிற்பகல் 2-20 மணிக்குப் பிரிந்தோம்.

இடையில் ஆனந்தித்த அநுபவம் கொஞ்சநஞ்சம் அல்ல: அதோடு நெஞ்சைவிட்டுப் போகாத அநுபவம்.

ராஜாஜி எல்லாவற்றையும் ரொம்ப அநுபவித்தார்கள்: அநுபவித்தார்கள் என்பது எட்டயபுரத்திலிருந்து தூத்துக்குடிக்குப் போகும்போது "எல்லாவற்றிற்கும் இப்படித்தான் முடிவு உண்டேன்பதை எண்ண வேண்டியிருக்கிறது" என்று சொன்னதிலிருந்து தெரிந்தது.

சாதாரணமாய் மகாநாடு கூடிப் பிரசங்கம் செய்கிறது என்றால் கஷ்டமான காரியந்தான். ஆனால் ராஜாஜி தலைமையில் நடந்த மகாநாடோ ஒரே ரஸமயமாய் இருந்தது. எல்லாருமே உணர்ச்சியோடு பேசினார்கள். ராஜாஜி பெரிய விஷயங்களை நன்றாய் விளக்கினார்கள். எல்லாவற்றையும்விடத் தங்கள் வந்தனோபசாரம் கேட்கக் கேட்க ஆனந்தமாய் இருந்தது சதாசிவம் சிவகாமி சபதத்தில் ஒரு பாத்திரமோ என்று சொல்லும்படி அவரைப்பற்றிச் சொன்னது அவ்வளவு ரஸமாயிருந்தது. பேச்சு முடிந்ததும் வந்தனத்துக்கு உரியவர்கள் வேறு இல்லையா என்று எண்ணத்தோன்றியது.

பொதுவாக எந்த மகாநாட்டிலும் வந்தனோபசாரம் சங்கீதக் கச்சேரியில் "மங்களம்" போன்றதுதான். அதாவது சபையோரை எழுந்துவிடச் செய்கிற காரியந்தான். துண்டை உதறச் செய்கிற காரியந்தான். தங்கள் வந்தனோபசாரமோ பதிவுக்கு மாறாக எல்லாரையும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்தது.

உயிரோடிருக்கிறவர்களுக்கு, நல்லகாலம் பிறப்பதுபோல அமரநிலை அடைந்தவர்களுக்கும் நல்லதசை திடீர் என்று ஏற்படுகிறது. பாரதிக்கு அப்படி ஏற்பட்டுவிட்டது-ரொம்ப சந்தோஷம்.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

பிற்குறிப்பு. (10—6—45)

கல்கி நேற்றுமாலைதான் கிடைத்தது. அதற்காக இங்கே ஒரே அடிபிடிதான்.

'பொழுது புலர்ந்தது' ஒன்றைத்தான் படித்திருக்கிறேன். நேயர்களை எட்டயபுரத்துக்குக் கொண்டுபோய் பெரிய நெருக்கடிக்கு உள்ளாக்கி விடுகிறது. கட்டுரையும் வாய்ப்பான படங்களும் சேர்ந்து என்றுமில்லாத விழா, எதிர்பாராத கூட்டம், ஒரே கோலாகலம், வாழை, தோரணம், மங்களகிரியை, ராஜாவும் ராஜாஜியும் சேர்ந்து கொத்துவேலை செய்கிற காரியம் எல்லாவற்றையும் அற்புதமான பிரகாசத்தோடு கண்ணுக்கு முன் கொண்டு வருகின்றன. எட்டயபுரத்துக்கு வந்தவர்கள் ஜோர் ஜோர் என்று சொல்லுகிறார்கள். வராதவர்கள், 'அடடா! வராமல்ப் போய்விட்டோமே' என்று சொல்லுகிறார்கள்.

ராஜாஜிக்கு ரொம்ப திருப்தி. எட்டயபுரத்துக்கு வந்தவர்கள் தானே அவர்கள்.

பிள்ளையாரை எங்கே வேண்டுமானாலும்—குளக்கரை, ஆற்றங்கரை, முக்கு முடுக்கு எங்கே வேண்டுமானாலும் வைத்துக் குழையோ பூவோ போட்டு ஆராதனை செய்து விடலாம். யாரும் குற்றம் சொல்லமாட்டார்கள். அதுபோலத்தான் பாரதி அஸ்திவாரவிழாவுக்கு என்னை உபயோகப்படுத்தியிருக்கிறது.

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்
20—5—43.

நண்பர் கல்கி அவர்களுக்கு

ஆத்தங்குடியில் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கு நடந்த பாராட்டு வெகு சிறப்பாய் இருந்தது. இரண்டாயிரத்து ஐநூறுபேர் கூடியிருந்தார்கள். ஹால் விசாலமாகவும் அழகாகவும் இருந்தது. கவிஞருக்குப் பொன்னடை போர்த்துப் பச்சைமாலை பாதம் வரை தொங்கும்படியாகப் போர்த்தபோது கவிஞரைப்பார்க்கப் ஆயிரங்கண் வேண்டும் என்று சொல்லலாம். அவ்வளவு அழகாய் இருந்தது. தங்கள் கடிதத்தில் முதல் இரண்டு பாராக்களையும் நண்பர் சோ. முருகப்பா வாசித்தார். ஒரே சிரிப்பும் கரகோஷமும் உண்டாய் விட்டது. அதெல்லாம் நிற்க கொஞ்சநேரம் ஆயிற்று. ராஜாஸரும் மற்றவர்களும் ரொம்ப நன்றாயிருக்கிறது வாழ்த்து என்று சொன்னார்கள். நல்ல ஹாஸ்யத்தோடு வாழ்த்து வந்துவிட்டால் இதயத்தை எப்படித்தாக்காமல் இருக்கமுடியும்?

பள்ளத்தூர், கோட்டையூர், காரைக்குடி முதலிய இடங்களிலும் பாராட்டு விமரிசையாய் நடந்தது. ஒரே கோலாகலந்தான். ராஜாஸர் வெகு அழகான முறையில் விருந்து நடத்தினர்கள். அது எப்படி இருந்தது என்று எழுதி முடியாது உடனிருந்து அருந்தினல்த்தான் தெரிய முடியும். விருந்து முடிந்ததும் பரிசுச் சாமான் வாங்கிக் கொடுப்பதற்காக முருகப்பா அவர்களிடம் ரூ. 1001/- கொடுத்தார்கள்- கவிஞரை ராஜாஸர் எப்படி அநுபவித்திருக்கிறார்கள் பார்த்தீர்களா! ரொம்ப திருப்தியான காரியம் இது.

16—5—43 அன்று கவிஞரும் நானும் இங்கு வந்துசேர்ந்தோம். தென்காசியில் 18-5-43 அன்று ஒரு பெரிய பாராட்டு. தமிழுக்கு இவ்வளவு பாராட்டெல்லாம் வந்துவிட்டது. இருபது வருஷத்துக்கு முன் இப்படியெல்லாம் நடக்கும் என்று சொப்பனத்திலும் எண்ண முடியாது. ஆங்கிலத்தில் ஏதாவது கோணல்

மாணவாக எழுதியிருந்தால் அதற்குப் பாராட்டும் சம்மானமும் எவ்வளவோ உண்டாய்விடும். தாங்கள் தமிழ் உலகத்தில் வந்த பிறகு அந்தப் பாராட்டும் புகழும் தமிழுக்குத் திரும்பி விட்டன. தமிழாத மனப்பாங்கு தமிழ் சார்பில் நாளுக்கு நாள் வளர்ந் தேறி வருகிறது கண் கூடாக நாம் பார்க்கிறோம்.

எல்லாருக்கும் முத்தோள்ளாயிரம் விளங்குகிறது. அனுப விக்கக் கூடியதாகவே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ராஜாஜி வாசிக்க வாசிக்கக் கடிதம் எழுதிக்கொண்டேயிருக் கிறார்கள். அபாரமாக முத்தொள்ளாயிரப் பாடல்களை அனுபவிக் கிறார்கள். அதைவிட என்னுடைய குறிப்புகளைப் பாராட்டுகிறார் கள். மற்றவர்கள் என்ன சொன்னாலும் எனக்குக் கவலை இல்லை. ராஜாஜியும் தாங்களும் என் புஸ்தகம் உபயோகமான புஸ்தகம் என்று சொல்லுகிறீர்கள், அது போதும்.

என்னைப்பற்றி கல்கியில் ராஜாஜி எழுதிய கட்டுரையைச் செட்டி நாடெங்கும் வாசித்தார்கள். என்னுடன் ரொம்ப அனு தாபப்பட்டார்கள். ராஜாஜியின் மனம் எப்படியோ யாராலோ புண்பட்டுவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். ஆம், எப் படியோ புண்பட்டுவிட்டது உள்ளம். உள்ளத்திலிருந்ததை அப் படியே வெளியிட்டு விட்டார்கள். என்னை எப்படி எல்லாமோ உயர்த்திச் சொல்லத் தோன்றிவிட்டது. இதற்கெல்லாம் என்ன நன்றி செலுத்தமுடியும். அவர்களுடைய கட்டுரைக்கு ஒரு உதா ரணப் படம் போட்டமாதிரி தாங்களும் முத்தொள்ளாயிரச் செய்யுளை நாலாவது தடவையாகப் போட்டுவிட்டீர்கள். எல்லாம் சேர்ந்து எனக்கு ஒரு பாராட்டு மாதிரியே ஆய்விட்டது. பண்டித உலகமோ இதர உலகமோ என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். தாங்களும் ராஜாஜியும் என்னிடம் பரிவு காட்டுகிறீர்கள், அதுபோதும்.

குற்றாலம் ரொம்ப ஜோராய் இருக்கிறது. எதிர்பாராதபடி சாரல் மழை முன் கூட்டியே ஆரம்பித்துவிட்டது. அருவி அமோகமாய் விழுகிறது. தாங்கள் இங்கே வர உடம்பு இடங் கொடுக்குமா?

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

சந்திரசேகரன் அவர்களுக்கு

ஸ்ரீ. கி. பாலசுப்பிரமணிய அய்யர் B. A. B. L. ஸ்ரீமதி கி. சாவித்திரி அம்மாள், ஸ்ரீமதி கி. சரஸ்வதி அம்மாள், ஸ்ரீ கி. சந்திரசேகரன் M. A. B. L. எல்லோரும் இன்றைய தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் ஆனவர்கள். எல்லோரும் உடன் பிறந்தவர்கள் என்பதும் தெரிந்திருக்கலாம். சென்னை மயிலாப்பூரில் 'ஆசிரமத்தில்' இல்லறத்துறவியாயிருந்த ஸ்ரீ V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் மக்கள் இவர்கள். கிருஷ்ணசாமி அய்யர் அவர்களோ ஒரு புகழ்ச்செல்வர். ஹைகோர்ட் ஜட்ஜ், எக்சிகியூடிவ் கவுன்சிலர் பதவியை எல்லாம் திறம்பட வகித்தார்கள். அவர்களுடைய மக்கள் நால்வர் இன்று தமிழ் நாட்டில் கலைக்கும் பண்பாட்டுக்கும் ஆதரவாக இருக்கிறார்கள் என்றால் அது அதிசயமில்லைதானே. இந்த நால்வருமே டி. கே. சியிடம் ஈடுபாடு மிகவும் உடையவர்கள்.

இந்த நான்கு சகோதரர்களில் கடைக்குட்டி தான் ஸ்ரீ. கி. சந்திரசேகரன். ஆங்கிலம், தமிழ் சமஸ்கிருதம் இலக்கியங்களைத் துருவித் துருவிப் படிப்பார் அவர், ஸமஸ்கிருத மகாகவியான காளிதாசனுடைய நாடகங்களிலும், வங்கக் கவீந்திரராகிய ரவிந்திரநாத் டாகூரின் கவிதைகளிலும் உள்ளம் பறி கொடுப்பார். உண்மையான கவிதையை நன்றாக அனுபவிக்கத்தெரிந்த நல்ல ரஸிகர் அவர். சமீபத்தில் எழுதிய 'ரவீந்திரநாத்

டாகூர்' 'கலையும் ரஸிகனும்' (தினமதி வெளியீடுகள்) அவருடைய வசனச் சுவையையும் எழுத்து வன்மையையும் காட்டும். அவர் தன் தந்தையின் ஜீவிய சரித்திரத்தை தக்க ஆதாரங்களுடன் பெரியதொரு புத்தகமாகவே வெளியிட்டிருக்கிறார்.

டி. கே. சியின் மகன், காலஞ்சென்ற ஸ்ரீ தீத்தாரப்பனுடன் நெருங்கி உறவாடி அதன் மூலம் டி. கே. சியுடனும் நெருங்கிய தொடர்புவைத்துக்கொண்டவர். டி. கே. சி கவிதையை எடுத்துக் கூறும் முறையை பெரிதும் அனுபவிக்கிறவர். சில விஷயங்களில் டி. கே. சியின் கொள்கைகளோடு ஒத்து நோக்க இயலாதவர் என்றாலும் பல விஷயங்களில் டி. கே. சி. சொல்வதை யெல்லாம் பெரிதும் மதிக்கிறவர், பாராட்டுகிறவர்.

"டி. கே. சி விசேஷமாக ஒருவரையும் பாராட்டுவதில்லை. அவரை அண்டி உறவாடும் ஒரு சிறு கூட்டத்தைத்தான் பாராட்டுவார். அவர்களும் அவரைப் பாராட்டுவார்கள். எல்லாம் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் காரியந்தான் Mutual Admiration Society அங்கத்தினர்தான் எல்லாரும்" என்றெல்லாம் புகார் கூறுபவர்கள் உண்டு. அதில் கொஞ்சமும் உண்மையே கிடையாது என்பதற்கு நண்பர் சந்திரசேகரனுக்கு டி. கே. சி. எழுதியுள்ள நாலு கடிதங்களை மட்டும் பார்த்தால் போதும். டி. கே. சி. சந்திரசேகரனை மட்டுமல்ல அவர் குடும்பத்தினர் அத்தனை பேரையுமே அருமையாகப் பாராட்டியிருக்கிறார். மற்ற நண்பர்களைப்பற்றிய பாராட்டுகளும் இடையிடையே வரத்தான் செய்கிறது இக்கடிதங்களில்.

பிறரைப் பாராட்டுவதையே ஒரு கலையாக வளர்த்திருப்பவர் டி. கே. சி என்பதைத்தான் இக் கடிதங்கள் காட்டுகின்றன. கடிதங்களைப் படித்துப் பார்த்து நீங்களே தீர்மானித்துக்கொள் ளுங்கள்.

எயரோ
மீனம்பாக்கம்
19—9—40

நண்பர் சந்திரசேகரன் அவர்களுக்கு

நமஸ்காரம்

செவ்வாய்க்கிழமை காலேயே இங்கு வந்துவிட்டேன். வந்த பிறகுதான் லோகோபகாரி பாரதிமலரைப் பார்த்தேன். அநேக கட்டுரைகள் ரஸமாய் இருக்கின்றன. ஆசிரியர் சாமிநாதன் குடுமியை எட்டிப்பிடித்தமாதிரி விஷயத்தை எட்டிப் பிடித்தது நன்ருய் இருக்கிறது. நண்பர் க. நா. சுப்பிரமணியம் எழுதிய சம்பாஷணேயும் வியப்பாய் இருக்கிறது.

தாங்களும் அக்காளும் எழுதிய கட்டுரைகள் உயர்ந்த வர்க்கத்தைச் சேர்ந்தவைகள். நல்ல பாவத்துடனேயே விஷயமும் தமிழும் அமைந்திருக்கின்றன. நீங்கள் இருவரும் ஏதோ தமிழ் வராது வராது என்று வேண்டாத பல்லவி போட்டுக் கொண்டிருப்பீர்கள். அதெல்லாம் பொய்த்துப் போய்விட்டது கட்டுரைகளில்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
—இனிதாவது எங்கும் காணேம்!"

என்று பாடினர். அச் சொற்களில் எவ்வளவு கர்வமும் தைரியமும் பிரகாசிக்கின்றன!

என்று சாவித்திரி அம்மாள் எழுதியிருக்கிருர்கள். உண்மையையும் பாவத்தையும் உள்ளூற உணர்ந்தல்லவா எழுதியிருக்கிருர்கள்! இந்த ஒரு குறிப்பு பாரதியாரின் கவி நயத்தை அறிவதற்குப் போதுமான வழிகாட்டி என்று சொல்லவேணும்.

தங்கள் கட்டுரையில் எப்போதும்போல யுத்த சன்னத்தராகவே விளங்குகிறீர்கள்.

"எல்லோருக்கும் மனத்தில் பாவங்கள் ஏற்பட்டு விட்டால் நாம் எல்லோருமே சுப்பிரமணிய பாரதியாராகவும், தேசிகவிநாயகம் பிள்ளையாகவும் மாறுவதில் ஐயம் இல்லை. அப்புறம் தெய்வத்திற்கே தாங்காது. அதற்காகவே நம் நடுவில் பண்டிதர்களை பகவான் சிருஷ்டித்திருக்கிறார்"

யுத்தத்திற்குப் புறப்படுவதைத் தவிர வேறு என்ன இது! உண்மையை ரொம்ப நன்றாய்ச் சொல்லிவிட்டீர்கள். "தெய்வமாவது தாங்காததாவது, பண்டிதர்களை அதற்கென்று சிருஷ்டிக்கவாவது" என்று நம்முடைய ரீயலிஸ்டிக் நண்பர்கள் மறுக்க முன் வரலாம். வந்தால் அது அவர்கள் பாடு. தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக்கொள்வார்கள். பண்டிதர்கள், என்று! அவ்வளவுதான்! ரொம்ப சந்தோஷம்.

தாங்களும் சாவித்திரி அம்மாளும் தமிழ்க்கவியை மனமாரப் பாராட்டி அனுபவித்தவண்ணமாகவே விளக்கம் எழுதியிருப்பதானது தமிழுக்குப்பெரிய தொண்டு. இப்படி எல்லாம் பேரம் பண்ணாமல்ப் பேச வேண்டியது மிக்க அவசியம் - தற்சமயமாவது.

நேற்றுத்தான் கல்கியைச் சந்தித்துப் பேச நேர்ந்தது. மாம்பலத்தில் ராமகிருஷ்ண பள்ளிக்கூடத்தில் ஒரு நாள் அண்ணா ரொம்ப அருமையாய்ப் பேசினதாகவும் தானும் ராஜாஜியும் கேட்டு ரொம்பவும் மகிழ்ச்சியுற்று அனுபவித்ததாகவும் சொன்னார்கள். அதோடு அனுபவிப்பதற்கு நான் இல்லாமல்ப் போனேனே என்றும் வருத்தப்பட்டார்கள். ஆர்வம் பாவம், லாகவம் எல்லாம் பேச்சில் ரொம்ப நன்றாய் அமைந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். சரோஜனி தெருவில் அவர்கள் செய்த பிரசங்கத்தை அனுபவித்துவிட்டு அவர்களிடமே சொன்னேன்.

"நம்முடைய உயர்ந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் வின்னியோகம் செய்யும் வேலையை பண்டிதர்களிடம் ஒப்புவித்துவிட்டோம். அது ரொம்ப

பேசுு. தங்களைப் போன்றவர்கள் வின்னியோகம் செய்தால்த்தான் விஷயம் வெளியாகும். கேட்பவர் களுக்கு உண்மைதான் என்ற உணர்ச்சியும் ஏற்படும். இவ்வளவு உயர்ந்த விஷயங்கள் மேல் நாட்டார் இடத் தில் இல்லையென்றும் எண்ண இடந்தரும். நாமும் நம் முடைய பண்பாடும் ஏதோ பாமரம், ஆங்கிலத்துக்குக் கீழ் என்று எண்ணுகிற பரிதாபப்படவேண்டிய உணர்ச்சி நம்மவரை விட்டுத்தொலையும்"

என்பதாகச் சொன்னேன். நான் சொன்னதற்கு ஏற்க வின்னி யோகம் செய்ய முன் வருகிறார்கள். ரொம்ப சந்தோஷம். எல்லோருக்கும் என் நமஸ்காரம்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு :—

மேலே எழுதிய கடிதம் முடிந்தபிறகுதான் தாங்கள் 5-9-40 அன்று எழுதிய கடிதத்தைப் பார்க்க நேர்ந்தது. 4–9–40 அன்று நான் பேசியதைப்பற்றித் தாங்களும் சகோதரிகளும், அண்ணு வும் பிரசங்க மண்டபத்தைவிட்டுப் போனபிறகும் பாராட்டிப் பொழுது போக்கியிருக்கிறீர்கள். உங்கள் நால்வருடைய முக விலாசத்திலிருந்தே எவ்வளவாக என்னோடு இதயம் ஒத்து விஷயங் களை அனுபவித்தீர்கள் என்பது நேர் முகமாக நான் பேசிக் கொண்டிருந்தபோது தெரியவந்தது. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்றபடி காரிலும் வீட்டிலும் விஷயங்களை அலசி அலசி சந்தோஷப்பட்டிருக்கிறீர்கள். சரக்குகளை விற்பதற்கு இப்படி ஒரு குடும்பமே கிடைத்துவிட்டால் ஹாக்கர் வியா பாரிக்கு வேறு என்னவேண்டும். இப்போது மளிகை வியாபாரி யாகவே ஆய்விட்டேன், தங்கள் குடும்பத்தால்! ரொம்ப சந் தோஷம். ரொம்ப வந்தனம்.

அரசர்களுக்குள்ளுமே கிரீடத்தை தானே தூக்கித் தலையில் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற ஆசாரம் புராதனமாக

உண்டு. தங்கள் கட்டுரை மிக அருமையாகவும் அழகாயும் இருக்கிறது என்று சொல்லித்தான் தீர வேண்டியிருக்கிறது. அரசர்கள் ஆசாரத்துக்கு முரணுகத்தான் நான் செய்யவேண்டியிருக்கிறது. நான் அனுபவித்த பாவங்களை எல்லாம் அப்படி அப்படியே எழுதியிருக்கிறீர்கள். நான் அனுபவிப்பதெல்லாம் மனப்பால் தானே என்ற சந்தேகம் அடிக்கடி எனக்குத் தோன்றுவதுண்டு. தாங்கள் அதையெல்லாம் சுட்டிச்சுட்டி விளக்குவதால் என் சந்தேகம் தீருகிறது. இப்படி விமரிசனம் எழுதுவது ரொம்ப கஷ்டம். இதுதான் இலக்கியம் என்று சொல்லுவேன். ரொம்ப திருப்தி.

டி. கே. சி.

எயரோ
மீனம்பாக்கம்
3—2—41

நண்பர் சந்திரசேகரன் அவர்களுக்கு
நமஸ்காரம்

பாஷாஞானம் என்பது ரொம்பவும் அபூர்வமான காரியம். இதுவிஷயமாக மேல் நாட்டாரும் ரொம்ப ரொம்பத் திண்டாடி இருக்கிறார்கள்.

ஆங்கிலபாஷை இன்னது என்று தெரிய ஜான்ஸனுக்கு அநேக வருஷம் ஆயிற்று. பல வருஷங்கள் கழித்துத்தான் ஆங்கிலபாஷையின் உண்மையான பாவம் அடிசன் எழுதிய கட்டுரைகளில் இருக்கிறது என்று தெரியவந்தது. தான் எழுதியது எல்லாம் 'கக்கா புக்கர' பாஷைதான் என்றும் தெரியவந்தது. முன்னாலே போகிறவன் அடி பிசகிக் கீழே விழுந்தால் பின்னால் போகிறவனுக்குத் நிவர்த்தி பிடித்த கணக்கு என்று சொல்லுவார்கள். ஆனால் ஆங்கிலபாஷை சம்பந்தமாக அப்படிச் சொல்ல இடமில்லை. ஏனென்றால் பின்னால் வந்த ரஸ்கினும் அடி பிசகி விழுந்தார். செடி, கொடி, களிமண் எல்லாவற்றையும் வாரிப் போட்டுக்கொண்டு தன்னை இன்னார் என்று காட்ட முன் வந்தார். கடைசியில் இதெல்லாம் தவறு 'பேசுகிற பாஷையில்த்தான் எழுதவேண்டும்; பாஷையின் நயம் பாவம் எல்லாம் அப்போதுதான் கைவரும்' என்று அழுத்தமாய்ச் சொல்லிவிட்டார்! இப்படியாக ஜான்ஸனும் ரஸ்கினும் வாக்கு மூலங்கள் கொடுத்தும் ஆங்கிலேயருக்கு அவ்வளவாகப் பிரயோசனம் இல்லாமல்த் தான் போயிற்று! பத்து வருஷமாகத்தான் பேச்சு முறையிலே எழுதவேண்டும் என்று எழுத்தாளர் எல்லாரும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். என்றாலும் யூனிவெர்சிடிகளில் பழைய சொக்கனே, சொக்கன்தான் என்று பேர்னார்டுஷா சொல்லுகிறார்.

ஆகவே பாஷையின் நயத்தை பாவத்தை எல்லாம் சரியான முறையில்ப்பார்த்து அனுபவிப்பவர்கள் ரொம்ப சொற்பம் மேல் நாட்டில்: இங்கே அதைப்பற்றிக்கேட்கவே வேண்டாம்.

தமிழ்ப் பாஷையைப்பற்றி யாராவது பேசும்போது எனக்குப் படுவது, அடடா இவர்களுக்குத் தமிழை அனுபவித்த பழக்கமே இல்லாமல்ப் போய்விட்டதே என்றுதான் 'தமிழ்பாஷையானது, அதைச் செய்துவிடும்! இதைச்செய்துவிடும்!' என்றெல்லாம் விண்ணுக் கேற்றிப் புகழ்வார்கள். ஆனால் தமிழை அனுபவித்ததாகச் சொல்லமாட்டார்கள். படே படே கைகள் சம்பந்தமாகவும் இப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் பாஷையின் உணர்ச்சியில்லைதான்.

நேற்று சாயங்காலம் P. S. ஹைஸ்கூலில் * அண்ணா அவர்கள் தமிழ் பாஷை என்னும் நைந்துபோன விஷயத்தை எடுத்துக் கொண்டு பேசினார்கள். தமிழைப்பற்றி இதுவரை இப்படி உண்மையான உணர்ச்சியோடு யாரும் பேசக்கேட்டதாக ஞாபகம் இல்லை; எல்லாம் அனுபவத்திலிருந்தே உணர்ந்த உண்மைகள். தமிழ்ப்பாஷையை ரொம்ப அனுபவித்து இதயத்தில் வைத்துப் பாராட்டியிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய சரஸமான இயல்பான பாவமான பாஷையிலேயே தெரிய வந்தது. இதயத்தை ஒட்டவைத்து பாஷையை அனுபவித்து வந்ததால் பாஷையின் நயம் வேகம் எல்லாம் அவர்களுக்குத் தெரியவந்திருக்கிறது. அவர்கள் சொன்ன ஒவ்வொரு உண்மையையும் ஆர்வத்தோடு கூடிய வார்த்தையையும் நான் ரொம்ப உணர்ந்தேன்; அனுபவித்தேன். உண்மை அனுபவத்தோடு பேசுகிற பேச்சைக் கேட்பது தற்காலம் ரொம்ப அரிதாய்ப் போய்விட்டதால் அண்ணா அவர்கள் பேசிய பேச்சு கேளாததையெல்லாம் கேட்டதாகத் தோற்றியது. ரொம்ப அனுபவிக்கத் தக்கதாயும் வியக்கத்தக்கதாயுமே இருந்தது.

அவர்களுக்கு ஏற்பட்ட ஹிதப் போக்கிலேயே பேச்சு வந்து கொண்டிருந்தபோதிலும், அபூர்வமான ஒரு காரமும், ஆசியமும் ஊடாடிக்கொண்டே வந்தது. கேட்க வந்தவர்களில் அநேகர் தமிழ் என்றாலே கண்ணடித்துப் பேசுகிறவர்கள்தான். அவர்களுக்கும் விஷயம் மனதில் தைத்திருக்கும், யோசனை

---

* ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர்.

பண்ணுவார்கள், தர்க்கிப்பார்கள் ஆனல் மறந்துவிட கச்சை கட்டுவார்கள். பூர்வவாசனை போகாதல்லவா! சரஸ்வதி தேவி தான் மறந்து போகாதபடி அருள் செய்யவேணும்.

சங்கராந்திக்காக விட்டை ஒட்டரையடிக்கிறமாதிரி நம்மவர் மண்டைக்குள் அடைந்திருந்த ஒட்டரையை எல்லாம் அப்புறப்படுத்தினர்கள்; புண்ணிய தினந்தான்.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

ஏயரோ
மீனம்பாக்கம்
பல்லாவரம் P. O.,
17—2—41.

நண்பர் சந்திரசேகரன் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் பிரதி வருவதற்கு முன்னுலேயே "காளிதாஸரும் ரவீந்திரநாத் டாகூரும்" என்ற கட்டுரையைப் படித்து விட்டேன்.

பொதுவாகக் கவிகள் என்ருல் அவர்கள் உலகத்து விஷயங்களை யெல்லாமே அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்று சொல்லலாம். மற்றவர்களுக்கு ரூபாயைத்தவிர மற்றவைகள் எல்லாம் அப்படி அப்படித்தான். தாமரை மலர் அழகாய் இருக்கிறது – சரி அதற்கென்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிருய்; அட்டா சந்திரன் உதிப்பதைப் பார்த்தால் இன்றுதான் முதல் முதலாக உலகத்துக்குச் சந்திரன் வருகிறது (வால் வெள்ளிபோல) என்று சொல்லத் தோன்றுகிறது – இது மறதி அல்ல, வம்பு; சூரியன் அஸ்தமிக்கும்போது ஐயோ முழுகிப் போய்விட்டதே, இனி நமக்குச் சூரியனே கிடையாது போல் இருக்கிறதே என்ற சோகம் உண்டாகிறது. இது சிறுபிள்ளைத் தனங்கூட அல்ல, வெறும் பைத்தியப்; சுத்தக் கீழ்ப்பாக்கம்.

இதிலிருந்து உலகத்தாரை இரண்டு விதமாகப் பிரித்து விடலாம் அல்லவா! ஒன்று கவிஞர்; இரண்டாவது – குருடர்.

கவிஞர்களுக்குள் ஒரு ஒற்றுமை உண்டு; மற்றவர்களுக்குள்ளும் ஒற்றுமை உண்டுதான்!

தாகூரும் காளிதாஸரும் கவிஞர்கள். அவர்களை அனுபவிக்கக் கூடியவர்களும் ஒரு வகையில் கவிஞர்கள்தான்: அல்லாத பக்ஷம் எப்படி கவிஞர்களுடைய இதயபாவத்தை உணர முடியும்.

தாகூரும் காளிதாஸரும் இதய உணர்ச்சியால் ஒரு இனத்தைச்சேர்ந்தவர்கள். இருவருக்கும், கடல், மலே, வானம், மரம், சூரியன், சந்திரன், குழந்தை, பெண், வீரன், கொம்பன் (யானே) மான் எல்லாம் மனசைக் கவர்ந்து களிப்பை உண்டு பண்ணுகிற பொருள்கள்.

திமிங்கிலத்தின் சுபாவத்தை நாம் எல்லாரும் வாசித்து அனுபவித்திருக்கிறோம். தாகூரும் அனுபவித்தவர்தான். காளிதாஸரும் அனுபவித்தார் என்று தெரியவரும்போது ஒரு சகோதரத்துவ உணர்ச்சி உண்டாகி நமக்கே ஒரு பலம் புதிதாக ஏற்பட்டமாதிரி இருக்கிறது.

"உடன்பிறப்போடு தோள்வலி போய்விடும்" என்று ஔவை சொல்லியிருக்கிருள்.

அடிக்கடி நாம் எதையாவது மேகத்தையோ, தண்ணீர் கடகட என்று ஓடுவதையோ பார்த்து சந்தோஷப்பட்டு விடுகிறோம். சில நிமிஷம் பார்த்துக்கொண்டே நின்று விடுகிறோம். அப்போது ஒரு பயம் - யாராவது அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் நம்மைப் பார்த்துவிடுவார்களோ என்கிற பயந்தான். யாராவது கிட்டவந்து என்னத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிருய் என்று கேட்டுவிட்டால் "ஒன்றும் இல்லே, சும்மாதான் நின்றுகொண்டிருந்தேன்" என்று அசடுவழியச் சொல்லித் தீர்க்கிறது. இந்த லஜ்ஜையையெல்லாம் ஒருவாறு அடக்கிக்கொண்டு வீட்டுக்குப் போகிறோம். தாகூரை ஷெல்பிலிருந்து எடுத்து வாசிக்கிறோம். அப்போது தெரிகிறது அவர் நம்மைவிட ஏமாளி என்று. நம்மைவிட எத்தனேயோ மடங்கு மேகத்தையும் தண்ணீர் ஓட்டத்தையும் பார்த்து அனுபவித்து விட்டதாகத் தெரிகிறது. பைத்தியத்திலும் நமக்கு ஒரு அண்ணு ஏற்பட்டுவிட்டார் என்று தெரியவருகிறது. எப்படியும் அது நமக்கு ஒரு பக்க பலந்தானே.

தாகூரை அனுபவிக்காதவர்கள், 'அவர் விளங்காததை - விஷயம் அல்லாததை எழுதிக்கொட்டுகிருர்' என்று கேவலமாகப்

பேசுகிறுர்கள். ஆனல் காளிதாஸனைப்பற்றிப் பேசும்போது மாத்திரம் ‘ அடடா ! என்ன கவித்துவம் !’ என்றெல்லாம் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவதெல்லாம் கிளிப்பிள்ளை பாடந்தான். ‘அவாள் சொன்னுர்கள்; இவாள் சொன்னுர்கள்’ என்ற கணக்குத்தான் கடைசியில் வந்து சேரும்.

விஷயத்தை அனுபவிக்கிறது பொதுவாகப் பலருக்கும் முடியும். ஆனல் அதன் பாவ உருவத்தைக் கண்டனுபவிப்பது வெகு சிலருக்கே முடிகிற காரியம். மேலே சொன்ன காளிதாஸ அபிமானிகள் கவியைக் கண்டுவிட்டோம் என்று சொல்லுவது வெறும் ஏமாளித்தனம்தான்.

தாங்கள் உருவத்துக்குப் போகாமல் விஷயத்தையே எடுத்துக்காட்டி காளிதாஸர் தாகூர் எப்படி அனுபவித்திருக்கிறுர்கள் என்று விளக்குகிறீர்கள். கொஞ்சம் சாவகாசமாய்ப் பார்த்தால் அனுபவ உணர்ச்சி தட்டுப்படும். தாகூரை அப்படியெல்லாம் எளிதில் தள்ளிவிட முடியாது என்று தென்படும்.

காளிதாஸர் காலத்திலிருந்ததைவிட இப்போது உலகம் எவ்வளவாகவோ விரிந்திருக்கிறது. சையன்ஸ்களையும் சேர்த்துக் கொண்டால் சொல்லவே வேண்டாம். இவ்வளவையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைதான் தாகூருக்கு.

In one salutation to Thee, O God!
Let all my senses spread out
And touch this world at Thy feet

—Gitanjali 103

காளிதாஸரும் அப்படியே ஆசைப்படுவார்; சந்தேகம் இல்லை. காளிதாஸர் தற்காலத்து ரஸிகரைக் கண்டு பெருமைப் படவேண்டியதுதானே. தாகூருக்கு வக்காலத்து வாங்கி வெற்றி கிடைக்கச் செய்துவிட்டீர்கள்.

சகோதரி சாவித்திரி அம்மாள் மொழி பெயர்ப்பு * நன்ருய் இருக்கிறது. மூலத்தில் (ஆங்கிலத்தில்) வாசித்தால் இவ்வளவு ரஸம் இருக்காது. பாத்திரங்களும் அவர்கள் போட்டுப் பார்க்கும் கண்ணுடிகளும் நம்மை சேர்ந்தவைகளாய் இருப்பதால் தமிழே சரியான பாஷை.

பொதுவாய் புராணக்கதைகளேயும், இதிகாசங்களேயும் வாசிக்கும்போது அவைகளில் சிருஷ்டி தத்துவம் ஒன்று இருக்கிறது என்பதை மறந்து விட்டு ஏதோ London Times நிருபர் பார்த்ததைக் கேட்டதை அப்படி அப்படியே எழுதுகிற மாதிரி எழுதியதுதான் என்று எண்ணி நம்மவர் தங்களுடைய சொந்த சிருஷ்டி தத்துவத்துக்குத் தொழில்பட இடங்கொடுப்பதில்லே. ஆகவே கதையில் முக்கியமாகக் கவனித்து அனுபவிக்கவேண்டிய அம்சத்தைக் கவனியாமலும் அனுபவியாமலும் விட்டு விடுகிருர்கள். கம்பரும் இந்தக் கஷ்ட நஷ்டத்துக்கு உள்ளாகிறவர் தான். பெயினே வாசித்தால், முக்கியமாகத் தமிழில் வாசித்தால், கம்பருடைய சிருஷ்டி தத்துவத்துக்குள் பிரவேசிப்பது எளிதாயிருக்கும். அம்மாள் செய்கிறது நம்முடைய இதிகாசங்களுக்குச் செய்கிற ஒரு நல்ல உபகாரம். நான் ரொம்ப அனுபவிக்கிறேன். அடுத்த பாகத்தை ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சுமித்திரை † யையும் வாசித்தேன் பேரண்டத்தில் ஒவ்வொரு வஸ்துவும் இதர வஸ்துக்கள் எல்லாவற்ருேடும் இழுக்கிற சக்தியினுலோ நெருக்குகிற சக்தியினுலோ இணைக்கப்பட்டு பேரண்டம் (Universe) ஒரே தத்துவந்தான் என்று சொல்லும் படியாக இருக்கிறது. இராமாயணமாகிய ஒரே பேரண்டத்திலும் சுமித்திரை என்கிற பாத்திரம் இதர பாத்திரங்கள் எல்லாவற்ருேடும் இடம் பெயர முடியாதபடி இணைப்புண்டு கிடக்கிறது என்பதை விளக்கிக் காட்டியிருக்கிருர்கள். இராமாயணத்தை

---

* F. W. Paine எழுதிய காலைப் பிறையின் மொழி பெயர்ப்பு

† ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் எழுதிய கட்டுரைத் தலைப்பு

இப்படி யெல்லாம் பார்ப்போமானுல் நம்முடைய வாழ்க்கையையும் அப்படியே பார்க்கத் தூண்டும். அவ்வளவுதான் வேண்டும் :— "ஒன்ருகக் காண்பதே காட்சி" என்பதன் உண்மையை உணர்ந்து கொள்ள கட்டுரை ராமாயணத்துக்கு ஒரு நல்ல வியாக்கியானம். கட்டுக்கோப்பை எடுத்துப் பிரித்து விளக்கும் வியாக்கியானம் !

கடிதம் நீண்டுபோகிறது, நிறுத்திக்கொள்ளுகிறேன். அண்ணுவுக்கு உடம்பு சௌக்கியந்தானே.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

வண்ணார்பேட்டை
திருநெல்வேலி
18—8—42

அருமை நண்பர் சந்திரசேகரன் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் கடிதம் இரண்டும் வந்துவிட்டன. உடனேக் குடனே பதில் எழுதவேண்டியதுதான். எப்படியோ உள்ளத்தி லுள்ள ஆசை கடிதமாக எளிதில் வெளிப்படுகிறதில்லை. அண்ணு கடிதமும் வந்தது. என்னை ரொம்பவும் அருமை பாராட்டி எழுதி யிருக்கிறுர்கள். மயிலாப்பூரில் ஒரு குடும்பம் கலேக்கும் பண் பாட்டுக்கும் ஆதாரமாயிருக்கிறதென்றல் தங்கள் குடும்பம் தான். குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில் அன்பு பாராட்டி வருகிறீர்கள் என்றுல் எவ்வளவு எக்களிப்புக்கு அது காரியம். சகோதரிகள் சகோதரர்கள் எல்லாரும் உயர்ந்த கலேகளில் ஈடுபட்டிருக்க நானும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரனுயிருக்கிறதென்றுல் எளிதில் கிடைக்கக்கூடிய காரி யமா அது? இடையிட்ட தூரம் ஏதடா - நானூறு மைலாய்ப் போய்விட்டதே என்று ஏங்கவேண்டியதாயிருக்கிறது. இந்த ஒரு சிறு ஏக்கத்தைக்கொண்டு அளந்து பார்த்தால் ஆங்கிலக் கவி கௌப்பர் எழுதிய அடிகளின் உண்மையான ஏக்கம் இன்னதென்று தெரியவரும். கப்பல் உடைந்த காரணமாக அலேக்ஸாண்டர் ஸேல்க்கிர்க்கு ஏகாந்தமான தீவு ஒன்றை அடைய நேர்ந்தது. ஒரே பயம், ஒரே ஏக்கம், சத்சங்கங் களேப்பற்றியும், குடும்பத்தினரைப்பற்றியும் நண்பர்களேப்பற்றி யும் நினைவு வந்துவிட்டது! பள்ளிக்கூடத்தில் படித்த காரண மாக சுவையற்றுப் போயிருக்கவும் கூடும். குற்றம் இல்லே. இப்போது நாம் பள்ளிக்கூடத்தில் இல்லே அல்லவா! அது போதும், செய்யுளேப் பார்க்கலாம்,

Society! Friendship! and Love!
Divinely bestowed upon man
Had I the wings of a dove
How soon would I taste you again

நம்முடைய சிறு ஏக்கத்தைக்கொண்டு பார்த்தால்த்தானே கவியிலுள்ள ஏக்கத்தின் ஆழம் தெரியவரும்.

* * *

கலைமகளில் வந்த என்னுடைய கட்டுரையைத் தாங்கள் ரொம்பவும் பாராட்டியிருக்கிறீர்கள். கௌரவமான ஸ்தானம் கொடுத்தெல்லாம் பார்த்திருக்கிறீர்கள். இங்குள்ள நண்பர்கள் சிலர் சிரத்தை எடுத்து வாசித்துப் பார்த்தார்கள். 'தலைகால் புரியவில்லை' என்று சொல்லிவிட்டார்கள். . அவர்கள்மேல் குற்றம் இல்லை. என்மேல் குற்றமில்லை. தாகூர் மேலும் குற்றமில்லை. குற்றம் எங்கேயிருக்கிறது. யூனிவெர்சிட்டி மேலும் பள்ளிக்கூடங்களின் மேலுந்தான் (கட்டிடங்களைக் குறிக்கவில்லை நான்) கலை இன்னதென்று சிறு பையனாக இருக்கும்போதும் சொல்லிக்கொடுக்கவில்லை. கலைச் செல்வனுக்கும் (Bachelor of Arts) சொல்லிக்கொடுக்கவில்லை; கலை நாயகனுக்கும் (Master of Arts) சொல்லிக் கொடுக்கவில்லை.

கலை எவ்வளவோ தமிழ்நாட்டில் நெடுகிலும் பிரகாசித்துக் கொண்டுதானிருக்கிறது. இருந்தென்ன செய்ய? நம்மவருக்கு முப்பது நாளும் கிருஷ்ண பக்ஷந்தான்; ஒரே அமாவாசைதான் ஆசிரமத்தில் உள்ளவர்களுக்கு எல்லாம் பிரகாசம். "கலைமகள் தாகூர் இதழ், இந்த ஒரு கட்டுரையின் காரணம் பிரமாதமாகி விட்டது" என்று எழுத உங்களுக்குத்தானே அதிகாரம் உண்டு. தாகூர் சொல்லுகிறதின் பெரிய உண்மையை வேறு யார் அறிந்து கொள்ள முடியும். ரொம்ப திருப்தி.

வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்கள் வந்து இதயத்தைத் தாக்குகின்றன. உண்மை எப்படி இருக்கிறதென்றாலோ?

இதயம் மனசு என்கிற காரியம் ஒன்றும் கிடையாது. அந்தப் படலங்களுக்கும் (Film) பின்னுல் நிரந்தரமாய் எங்குமாய் நிற்கும் இறைவனைத்தான் தாக்குகின்றன துன்பங்கள். கஷ்டப்படவேண்டியது அவன் தானே. அவனுக்கு இதுவும் வேண்டும் இதற்கு மேலும் வேண்டும் என்று சிரித்துக் கொண்டிருக்க வேண்டியது தானே நமக்கு உரிய செயல். பிறவி என்கிற உணர்ச்சியிலிருந்து தான் இந்தத் துன்பம் எல்லாம்— ஆகவே அந்த வேடிக்கைத் துன்பங்களையும், அவைகளை உண்டாக்கின ஆசாமியையும் (இறைவன்), அனுபவிக்கிற அதே ஆசாமியையும் பார்த்துச் சிரிக்காமல் என்ன செய்கிறது. மாணிக்கவாசகர் சொல்லுகிறுர் பிறப்பையும் அந்த உணர்ச்சி காரணமாக ஏற்படும் துன்பங்களையும் என் அறிவைக்கொண்டு சிரிக்கச் செய்வேன்; பிறகு மிஞ்சுவது இறைவன் தானே. அவனுக்கே தொண்டாகும் என் வாழ்க்கை முழுவதும்;— என்கிறுர்.

> "சிரிப்பிப்பன் சீறும் பிறப்பை;
> தொழும்பையும் ஈசற்கென்று
> விரிப்பிப்பன்"

"இவ்வளவு திடமான உறுதி எனக்கு ஏற்பட்டிருக்கிறது இதை அங்கீகரிக்க வேண்டாமா? அங்கீகரியாமல் அலக்ஷியம் செய்கிறுயே கடவுளே! இது தகாது எந்த விதத்திலும். அலக்ஷியம் செய்து என்னைக் காப்பாற்ருவிடில் என்ன செய்வேன் தெரியுமா! வைய ஆரம்பிக்க வேண்டியது தான்."

> "சிரிப்பிப்பன் சீறும் பிறப்பை;
> தொழும்பையும் ஈசற்கென்று
> விரிப்பிப்பன்: என்னை விடுதிகண்டாய்
> விடின் வெங்கரியின்
> உரிப்பிச்சன், தோலுடைப் பிச்சன்,
> நஞ்சுண்பிச்சன், ஊர்ச்சுடுகாட்(டு)
> எரிப்பிச்சன்"

இந்தவசவோடு சேர்ந்த Irony யோடு

"என்னையும் ஆளுடைப்
பிச்சன் என்று ஏசுவனே!"

மெய்யில்த் (Reality) திளைத்த மாணிக்க வாசகர் வாழ்க்கை முழுவதையும் சிரிப்பில்ப் போட்டு அப்படியும் இப்படியுமாகத் தாலாட்டுகிறார்.

எவ்வளவு உயர்ந்த லக்ஷியம்.

தாகூரும் இந்த நிலையில் நிற்கிறார். நிற்கவும் முடிகிறது அவருக்கு.

'சிரிப்பை வாழ்கையின் அடிப்படையான தருமமாகக் கொள்ள மிகுந்த பாடுபடவும் வேண்டியதில்லை' என்று தாங்களும் நன்றாய்ச் சொல்லுகிறீர்கள். தாங்கள் சொல்வது நம்முடைய பேரறிஞர்கள் கண்ட உண்மையே.

தாங்கள் குறிப்பிடுகிறபடி, ஒவ்வொரு வாழ்க்கை அம்சத்தையும் (நல்லதையும் பொல்லதையும்) எண்ணிவிட்டால் அந்த அம்சம் ஒவ்வொன்றும் தெய்வமலராய் அழகுடனும் மணத்துடனும் நம்இதயத்தை அலங்கரிக்கும். இந்த அர்ச்சனைக் கான மலர்கள் இறைவனுக்கு உவந்தவை ஆகின்றன. சிரத்தையோடு நேயர்கள் தங்கள் கட்டுரையை வாசித்தால் ரவீந்திரரின் திடசித்தம் இன்னது என்று தெரியவரும். அந்த திடசித்தத்தினால் விளைவது ஆனந்தந்தான். சிரிப்புத்தான் என்பதும் தெரியவரும்.

* * *

எஸ். ராஜன் எழுதியுள்ள முகப்புப்படம் * ஒரு காதல் தத்துவத்தை அழகாய் விளக்குகிறது. மனசு எங்கேயோ போய்விட்டது. கை தயிர்மத்தை வேண்டாதபடி கடைந்து கொண்டிருக்கிறது. கண்ணும் வெறும் விழிப்போடு ஒன்றையும் பாராமல் செயலற்ற நிலையில் இருக்கிறது. படம் பரவசத்தை நன்றாய்க் காட்டுகிறது; ரொம்ப திருப்தி கலைஞருக்குச் சொல்ல வேணும்.

---

* கலைமகள் பத்திரிக்கையில் வெளியானது

ரைட் ஆனரபிள் சாஸ்திரிகள் எழுதிய "எங்கள் ஊர்" வெகு ரஸம். வலங்கைமானுக்கு நான்போனதில்லை. ஆனாலும் அங்கே நெடுநாள் வசித்தமாதிரி இருக்கிறது. கிழமேல் ஓடிய மூன்று தெருக்களும், இரண்டு குறுக்குத் தெருக்களும், மூன்று படித்துறைகளும், அரசும் வேம்பும் சேர்ந்து கொடுக்கும் நிழலும் நேரில்க் கண்டது போல்த் தெரிகின்றன. கனவில் நிதர்சனமாகக் கண்டதுபோல் நிச்சயமாய்த் தெரிகின்றன.

உள்ளுணர்ச்சியோடும் அனுதாபத்தோடும் 'கிராம முன்னேற்றம்' பற்றி எழுதியிருக்கிறார்கள்—வாஸ்தவம்தான்; பழைய முறையில் ரஸம் உண்டு—எவ்வளவோ உண்டு. ஆனால் வசதிகள்—லகுவாய் ஆக்கிக்கொள்ளும் வசதிகள் கூட—அரிதுதான்.

'மோசம்போன கதை' ரொம்ப நன்றாய் இருக்கிறது. வேடிக்கை போலிருந்தாலும், ஊர்க்காரருக்குக் கல்வியின் மேலிருந்த ஆசையை வெகு தெளிவாய்க் காட்டுகிறது.

ஒவ்வொரு குறிப்பையும் நான் ரொம்ப அனுபவிக்கிறேன். வரப்போகும் இதழை எதிர்பார்த்த வண்ணமாயிருக்கிறேன். தமிழர்களுக்கான கட்டுரை. வலங்கைமான் தமிழின் லாகவத்தை ரொம்ப அனுபவிக்கவேண்டும்.

* * * *

ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் எவ்வளவோ நுட்பமான ஆராய்ச்சி உள்ளவர்கள். அப்படியேதான் சரஸ்வதி அம்மாளும். அவர்கள் இருவரும் "டி. கே. சி. யைப்போல்க் கவியை அனுபவிக்க வேணும் என்றும், டி. கே. சி. வாசிக்கிறதாகத் தோன்றவில்லை, கவிகளை நாமே வாசித்துக் கொண்டு போவதாகத் தோன்றுகிறது" என்றால் எனக்கு எப்பேர்ப்பட்ட பாராட்டு! அவர்களுக்கும் மற்றும் எல்லா உறவினர்களுக்கும் என் நமஸ்காரத்தைச் சொல்லவேணும்.

பக்கம் ஒன்பதுதான்; பத்தாகவில்லை. வேணும் என்று வைஷம்யத்துடன் எழுதினது அல்ல இவ்வளவும். பேனுப் போன போக்கில் போனது தான்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

C. V. RM. அழ. அவர்களுக்கு,

காரைக்குடியில் கம்பன் திருநாள் சென்ற பத்து வருஷ காலமாகக் கோலாகலமாக நடைபெறுகிறது. எல்லாம் தேச பக்தர் ஸ்ரீ சா. கணேசன் பெரு முயற்சியால்த்தான். ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும், விழா நடக்கும் மூன்று நாட்களும் செட்டி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து குழுமி விழாவை நடத்துகிறார்கள். தினசரி காலையில் மூன்று மணி நேரமும் மாலையில் ஐந்து மணி நேரமும் கூட்டம் நடைபெறும். ஒரே பிரசங்க மாரியும் இசை நிகழ்ச்சிகளும்தான். கூட்டத்திற்கு வந்தவர்கள் சிலர் இடையே எழுந்து போவார்கள். சிலர் இடையிலே வந்து கூட்டத்தில் உட்காருவார்கள். ஒரு சிலர் மட்டும் கூட்டம் ஆரம்பித்த நேரத்திலிருந்து, வந்தனோபசாரம் சொல்லி கூட்டம் முடியும் வரை இருந்த இடத்திலேயே இருந்து கௌரவிப்பவர்கள். அப்படி கௌரவிப்பவர்கள் கூட்டத்தில் ஒருமுகம் எப்போதும் துடியாகவே இருக்கும். அந்த முகத்தைப் பார்த்தே அப்பொழுது நடக்கும் பிரசங்கம் ரஸமாய் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளலாம். பேச்சு ரஸிக்கத் தக்கதாயிருந்தால் அந்த முகத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றும். பேச்சின் தராதரத்தையே நிர்ணயித்து விடலாம் அந்த முகத்தைப் பார்த்து, பிரசங்கத்தைக் காது கொடுத்துக் கேட்காமலேயே. அத்தகைய முகத்தை உடையவர்தான் ஸ்ரீ C. V. RM. அழகப்பச்செட்டியார். அவர் ராஜா சர் அண்ணு

மலைச் செட்டியார் அவர்களின் மருமக்கள்மாரில் ஒருவர். கானுடுகாத்தான் C. V. RM. குடும்பத்தில் கடைக் குட்டித் தம்பி. நல்ல ரஸிக உள்ளம் படைத்தவர். கம்பன் கவிதையை அனுபவிப்பதில் யாருக்கும் சளைக்காதவர்.

வருஷத்திற்கு ஒரு முறை குற்றாலத்திற்கு வந்து டி. கே. சி. யுடன் ஒரு மாத காலத்திற்கு மேலாகவே தங்குவார். காரியார்த்தமாக சென்னை சென்றாலும் பெங்களூர் சென்றாலும் அப்போதும் டி. கே. சி. யுடன் கடிதத்தொடர்பு வைத்துக் கொள்வார்.

அவருக்கு டி. கே. சி. எழுதிய கடிதங்கள் நான்கு பிரசுரிக்கப்படுகின்றன.

சென்னை
23—1—44

அருமை நண்பர் C. V. RM. அழ. அவர்களுக்கு,

நேற்றுக்காலை சௌகர்யமாகவே இங்கு வந்து சேர்ந்தேன்.

காலை பத்துமணிக்கே ராஜாஜி இங்கு வந்துவிட்டார்கள். மாலை ஆறு மணிக்குத்தான் அவர்களும் நானுமாக அவர்கள் வீட்டுக்குப் போனோம். பகல் முழுதும் அநேகமாய் அவர்களுடனும், நண்பர் கல்கியுடனும் நேரம் நன்றாய்க் கழிந்தது.

இருவரும் தங்களைப்பற்றி விசாரித்தார்கள். தங்கள் விருந்தாளி நான் என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். தங்கள் அன்பு, ஆர்வம், மதிநுட்பம் இவைகளைப்பற்றி ரொம்ப ரொம்பப் பேச நேர்ந்தது. மக்களின் மதிநுட்பத்தைக் கண்டு தெரிவதில் ராஜாஜி மிகச் சமர்த்தர். இரண்டொரு வார்த்தையிலேயே கண்டு கொள்ளுவார்கள். தங்களை முதலில் சந்தித்த போதே, 'a very bright young man' என்று வியந்து பாராட்டினார்கள். மேலும் என்னுடைய வார்த்தைகளில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு. தங்களைப்பற்றி நான் ஏதேனும் சொன்னால் அடிப்படையில்லாமல் பேசமாட்டேன் என்பது தெரியும்.

ராஜாஜியைச் சந்தித்துப் பேசியதிலிருந்து தங்களுக்கு உண்டான திருப்தியையும் அவர்களிடம் சொன்னேன்.

இப்படி எல்லாம் உயர்ந்த பண்புடையவர்களோடு உறவாடக் கிடைத்திருப்பது எனது பெரும் பாக்கியம்.

நான் தங்கக் கிடைத்த நாலு நாளும் தங்கள் வீட்டில் ஒரே விழாவாயிருந்தது. கலைவாணர், கலைரசிகர் வந்து விழாவை உண்டாக்கி விட்டார்கள்.

Madame-de-Stael என்று கல்வியும் செல்வமும் நிறைந்த மாதொருத்தி பாரிஸ் நகரத்தில் இருந்தாள். Dr. Johnson

காலத்தில்தான் இருந்தாள். ஐரோப்பாக் கண்டம் முழுவதி லும் அவள் புகழ் பரவியிருந்தது. ஐரோப்பாவிலுள்ள பெரும் புலவர்கள் எல்லோரும் அவள் வீட்டில் மாதக்கணக்காய்த் தங்குவார்கள். இங்கிலாந்திலிருந்து Gibbon (Decline and Fall of the Roman Empire எழுதியவர்) போயிருந்தார்-கேட் பானேன். பேராசிரியர் கூட்டம். பெரிய விருந்து. அந்த நிலே யத்திலிருந்து உயர்ந்த பண்பாடு பிறந்தது. இங்கிலாந்துக்கும் பண்பாட்டின் லாபம் கிட்டியது. இதையெல்லாம் பற்றி நான் அடிக்கடி பகற்கனவு காண்பதுண்டு. அவ்வளவும் நினைவுக்கு வந்தது தங்கள் அரண்மனையில் தங்கியபோது. பண்பாடு, இடம், பொருள், ஏவல் எல்லாம் வேண்டிய மட்டில் இருக் கிறது. புலவர்களைக் கூட்டுவதுதான் கஷ்டமாய் இருக்கிறது.

எப்படியோ நம்முடைய ஸ்காலர்களுக்கு கலை உணர்ச்சி வறண்டு போய்விட்டது. பெரிய கொம்பன் யானையைக் கண் டால் தந்தத்தின் முனையில் மண் ஒட்டிக்கொண்டிருக்கிறதே என்று சொல்லுவார்கள். ரோஜாமாலை வாசனை வீசுகிறது என்ருல், மாலைக்குள் முள்ளிருக்கிறதே என்பார்கள். மேன கையைப் பார்க்கச் சொன்னுல், 'ஐயோ, மீசை துளிக்கூட இல்லையே' என்று கையை நெரிப்பார்கள். இதெல்லாம் வின் னியாச வார்த்தையாக ஒலிக்கலாம். ஆனல், வித்வான்களைச் சுட்டிச்சொல்லும்போது தன்மை நவிற்சி அணிதான்.

ஆனலும் தங்கள் வீட்டில் (உண்மையில் வீடுதான்—அரண் மனை அல்ல!) நல்ல ரசிகர்களாய்க் கூடிவிட்டார்கள். ஏதோ கம்பர் பேசினர், மாணிக்கவாசகர் பேசினர் என்று மாத் திரம் சொல்லிவிட முடியாது. கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் முகபாவங்களால் பேசிக்கொண்டு தான் இருந்தார்கள். பொதுவாகப் பெண்கள் அடக்கக்காரர் கள் என்று பேர். ஆனலும் ராவணனது ஆங்காரம், அவ மானம், சோர்வு எல்லாவற்றையும் மரகதவல்லி அம்மாளும் [1], நிலாவதி அம்மாளும் [2], எப்படி எப்படி எல்லாம் அனுபவித்

1. குமரன் ஆசிரியர் ஸ்ரீ சொ. முருகப்பாவின் மனைவி.
2. ஸ்ரீமதி நிலாவதி ராமசுப்பிரமணியம்.

தார்கள்! அவர்களது அருமையான முகபாவங்களை Film எடுத்தால் கம்பரது கவிதா விலாசத்துக்கு அரிய வியாக்கியான மாய் இருக்கும். தாங்களும், அண்ணா அவர்கள் மூவரும் அனுபவிக்கும் முறையைப் பார்க்கும்போது அதுவும் பிதுரார் ஜிதமாகவே தோன்றுகிறது. C. V. Ct.* தங்களுடன் இல்லா தது ஒரு குறைதான். தாங்கள் ஐவரும் சேர்ந்து விட்டால் எந்த இடமும் அலங்காரம் பெற்றுவிடும். வையைக் கரை பெற்று விட்வில்லையா!

அண்ணா ராம. அவர்களுக்கு நான் அங்கு வந்ததில் ஏதோ கிடையாத வஸ்து கிடைத்து விட்டதாகவே எண்ணம். இரும் புப் பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவோமா என்று கூடத் தோன்றியிருக்கும். ஆனால் அங்கேதான் காற்றோட்டம் இல் லையே என்று வெளியிலேயே போட்டு வைத்து விட்டார்கள். அவ்வளவு பாராட்டு!

தங்கள் சகோதரர் சித. அவர்களும், நா. அவர்களும் சாப் பாட்டு விஷயத்தில் என்னிடம் செலுத்திய கண்டிப்பு அசாத் தியம். நேரம் வந்துவிட்டால் 'டிரில்' வாங்குகிற காரியம்தான். 'Stand-Sit' என்றுதான் சொல்ல வில்லை. 'பேச்சை நிறுத்தி விடவேண்டும், எழுந்திருக்கவேண்டும், இலையில் போய் உட்காரவேண்டும்!' இப்படி எல்லாம் அன்பும் ஆதரவும் பெற எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும் நான்? தமிழும் ரொம்ப புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

தாங்கள் நால்வரும், குமாரர்களும் பந்தி விசாரித்த முறை அபாரந்தான். எல்லாருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி. ஆனாலும் உள்க்கட்டிலிருந்து அன்னைமார் எடுத்துக்கொண்ட ஆர்வமும், சிரமமும் தனி. அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

ராஜாஜி அவர்களுக்குத் தங்கள் வீட்டிலிருந்து எழுதி அனுப்பிய என் கடிதத்தை அவர்கள், கல்கி, சதாசிவம்

---

* திவான் பஹதூர் ஸ்ரீ C. V. Ct. வெங்கடாசலம் செட்டியார், ராஜாசர் மருமகன்.

எல்லாரும் வாசித்துப் பாராட்டினர்கள். தங்கள் விட்டிலுள்ள நீர்வளத்தை ஒட்டிப் பாரதக் கதையை விளக்கியிருந்தது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதை ராஜாஜி ரொம்பப் பாராட்டினர்கள். அவர்கள் எழுதுகிற ஒவ்வொரு கட்டுரைக்கும், கதைக்கும் நான் ஒரு சுட்டிக்காட்டும் விளக்கம் எழுதினல் பிரயோசனமாய் இருக்கும் என்று சொல்லுவார்கள். சந்தனுவின் கதை விஷயமாய் எழுதிய விளக்கத்தையும் ரொம்பப் பாராட்டினர்கள். எல்லாம் வீட்டுத் தண்ணீர்க் குழாயிலிருந்து வந்ததுதான். ரொம்ப சந்தோஷமான காரியம்.

* * *

சென்னையில் தமிழிசை மகாநாடு பெரும் வெற்றி பெற்றது. அதற்கு ஒரு அற்புதமான பாராட்டு பெங்களூரிலிருந்து வந்திருக்கிறது. ரிடையர்டு ஹைகோர்ட் ஜட்ஜ் A. S. R. Chari அவர்கள் V. V. சீனிவாச ஐயங்கார் அவர்களுக்குப் பந்து. உத்யோக சம்பந்தம் காரணமாகப் பழக்கம் எல்லாம் கன்னடந்தான். அதனலேயே அவர்களுக்குத் தமிழினிடத்தில் அபார மோகம். பங்களூர் (மைசூர்) யுனிவர்சிட்டி சார்பில் நடந்த தமிழ் மகாநாட்டுக்கு என்னை அழைத்து, நான் போயிருந்த போதுதான் A. S. R. சாரி அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. என்னிடம் அவர்களும், அவர்களுடைய அருமை மனைவியாரும் மிக்க அன்புகாட்டினர்கள். அடிக்கடி அருமையாய்க் கடிதம் எழுதுவார்கள். விஷயம் என்ன? தமிழினிடத்தில் அவ்வளவு ஈடுபாடு. அவர்கள் இருவரும் சமூகத் தொண்டில் ஈடுபட்டுழைப்பவர்கள். தர்ம ஆத்மாக்கள். பெங்களூரில் அவர்களுக்கு அளவிறந்த மதிப்பு. A. S. R. சாரி அவர்கள் எனக்கு ஒரே ஆர்வத்தோடு கடிதம் எழுதியிருக்கிறார்கள் அவர்களுக்கும் ஆங்கிலப் பத்திரிகைக்கும் ஊடே நடந்த போக்குவரத்துக்கும் நகல் அனுப்பியிருக்கிறார்கள். வெகு ரஸமான கடிதங்கள். நகல்களை ராஜா ஸர் அவர்களுக்கு அனுப்பி

யிருக்கிறேன். தங்கள் பார்வைக்கும் அவை வரும். தாங்கள் எல்லாருமாகப் பார்த்து அனுபவிக்க வேண்டிய காரியம்.

கடிதம் புஸ்தகம் ஆகப் பார்க்கிறது. நிறுத்திக் கொண்டேன். எத்தனையோ காரியங்களை எழுதத் தோன்று கிறது. அவைகளுக்கு வாய்தாப் போட்டு விட்டேன்.

தங்கள் அன்புள்ள,

டி. கே. சிதம்பரநாதன்.

குறிப்பு :— குற்றாலத்தில் என் சஷ்டியப்தபூர்த்தி விசேஷத்தைக் கொண்டாடியபோது கி. நா. அவர்கள் என்னைச் செட்டி நாட்டுக்குத் தத்துப் பிள்ளை என்று சொன்னார்கள். தாங்கள் ராஜாஸர் அவர்கள் எல்லாரும் அதை எப்படி ஒப்புக்கொள்ளு கிறீர்கள் பாருங்கள் !!

திருநெல்வேலி
3—8—44

அருமை நண்பர் C. V. RM. அழ. அவர்களுக்கு

19உ ராஜாஜி சென்னைக்கு வந்தார்கள். 21உ நான் சென்னையை விட்டுப் புறப்பட்டேன். அந்த மூன்று நாளும் அவர்கள் கல்கி வீட்டுக்கு வந்து விடுவார்கள். ஒருவேளை அல்லது இரண்டுவேளை உடனிருந்து சாப்பிட ஸ்ரீமதி கல்கி ஏற்பாடு செய்து விடுவார்கள். அதனால் கல்கி வீடு ஒரு குற்ருலம் ஆய்விட்டது. சர்ச்சைகளுக்குக் கணக்கே இல்லை. தாங்கள் இல்லாதது ஒரு பெரிய குறைதான். அதைப்பற்றியும் பேச நேரும்.

அடையாற்றில் குழந்தை சௌகரியமாய் இருக்கிறதல்லவா? படிப்பும் விளையாட்டும் ஒன்றியிருப்பதால்க் குழந்தைக்கு உல்லாசமாகப் பொழுதுபோகும். அப்படிப் பொழுது போவதுதானே கல்வி.

ஏர்க்காட்டிலும் குழந்தை நல்ல ஆரோக்கியத்தோடு படித்து வரும் என்று நம்புகிறேன்.

சென்னையிலிருந்து திரும்பும்போது திருச்சியில் ஒரு நாள் தங்கினேன். ஏன், ஒன்றரை நாள் தங்கினேன். எனக்காக ஒருநாள்; ரயில்க்காரனுக்காக அரைநாள்; ஆக மொத்தம் ஒன்றரை நாள். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். சரி, மத்தியானம் ஒரு மணி ரயிலிலாவது போடப்பா என்று சொல்லி, அந்த ரயிலைப் பிடித்துக்கொண்டேன். ஆங்கிலேயனும் இந்த ரயில்க் கஷ்டத்தை எல்லாம் தெரிந்துதான் "ரயிலைப் 'பிடித்து'க் கொண்டோம்" என்று சொல்லுகிருன் போலிருக்கிறது.

நாம் ரயிலைப் பிடிப்பது என்பதுபோக, ரயில் நம்மைப் பிடிக்கிறது என்றில்லையல்லவா. ரொம்ப திருப்தி!

திருச்சியில் மூப்பனுர் அவர்களைச் சந்தித்துப் பேச நேரம் இருந்தது. எனக்கு நேரம் வேண்டிய மட்டுந்தான். ஆனுல் அவர்களுக்கு விட்டாற்றி நேரம் குறைவுதானே.

முன்னம் ஒரு தடவை திருவாசகத்தில்க் கொஞ்சம் கேட்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். திருவாசகத்திலிருந்து இரண்டு பாடல் சொன்னேன். ரொம்ப அனுபவித்தார்கள். 'தமிழில் தத்துவ ஞானம் இல்லை என்று சொல்லுகிருர்களே திருவாசகத்தைப் பார்த்துவிட்டால் தமிழில்த்தான் தத்துவ ஞானம் இருக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது' என்று சொன்னுர்கள். தமிழுக்கு நல்ல வாய்ப்பான மாணவர்கள் அவர்கள். Dr. G. U. போப் தன்னைத் தமிழ் மாணவர் என்று குறித்துக்கொண்டார். அது ஆர்வத்தைத்தான் காட்டுகிறது. ஆகையால் நம் போன்ற மாணவர்கள்தான் உண்மையான மாணவர்களாய் இருக்கக்கூடும் தமிழுக்கு.

இங்கு நேற்றும் இன்றுமாகக் கம்பர் விழா. இளைஞரது சங்கங்களாக ஐந்து சேர்ந்து நடத்துகிற காரியம். இளைஞரது உத்ஸாகத்தில் கம்பரையும் என்னையும் என்ன செய்யவேண்டு மென்ருலும் செய்யத் தயாராய் இருக்கிருர்கள். கம்பரை வெறுக்கிற புலவர்கள் அணிவகுத்து ஒருபுறம் நிற்க, கம்பரைச் சாம்பலாக்கி விடவேண்டும் என்று யுத்த சன்னத்தராய் வேருெரு குழாம் நிற்கும்போது திருநேல்வேலி இளைஞர் கம்பர் மோகம் கொண்டவர்களாய் விழாக் கொண்டாடுகிருர்கள் என்ருல் கண்ணுக்கு உவந்த காட்சியல்லவா? செட்டி நாட்டு விழாக் களில் நடக்கும் விமரிசைகளைப் பார்த்துப் பார்த்து, கழுத்தி லிருந்து கரண்டை வரை எட்டும்படியான ஆரம் தயாரித்து எனக்குப் போட்டார்கள். எல்லாம் தமிழுக்கு நல்ல சகுனம் என்பதைக் காட்டுகிறது.

பேசுகிறவர்களில்ச் சில நாள்ப்பட்ட கிழங்களும் இருக் கின்றன. அவர்களுக்கு எப்படியோ கற்பனைச் சக்கைகளில் பிரியம் உண்டாய்விட்டது. மூக்கைத்தொடுகிறவன் காதைச்

சுற்றிவிட்டுத் தொட்டானானால் அடடா என்று வியந்து வியந்து கரைந்து விடுவார்கள். செருகுகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு சபையோரையும் தமிழையும் படுத்தின பாடு இன்ன தென்று சொல்ல முடியாது.

ஆனால் இந்தப் பிரசங்கத்தில்க் குற்றம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. காரணம் ஒருவருக்கும் விளங்கவில்லை. காது கொடுத்து யாரும் கேட்கவில்லை.

நாளை திருநெல்வேலிதான். நாளைக் கழித்துச் சீவிலி புத்தூர். மறுநாள் அதாவது 6வ குற்றாலம். எட்டாந்தேதி S. I. R. வண்டி. இப்படி இருக்கிறது என் காரியம்.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றலம்,
20—10—47.

அருமை நண்பர் அழ. அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அழகான கடிதம் கிடைத்தது. கையெழுத்து, தமிழ், இதயப் பாங்கு எல்லாம் ஒரே அழகுதான். தங்களைப் போலவேதான் நானும் எண்ணினேன். கடிதப் போக்கு வரத்தும் இல்லாமல்ப் போனதுபற்றி மனசுக்கு ஏதோ சஞ்சலம் ஏற்பட்டிருந்தது சிலவேளை சஞ்சலத்துக் காரணம் இன்ன தென்றுகூடத் தெரியாது. இதையெல்லாம் நான் அனுபவித் தேன். தாங்களும் அப்படியே அனுபவித்திருக்கிறீர்கள். மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் - மூன்றும் புண்ணியம் செய்தவர் களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். வாஸ்தவந்தான். கடுதாசி, பேனு, போஸ்டாபீசு - இந்தத் திரிபதார்த்தங்களையும் அவை களோடு சேர்க்கலாம் போல்த் தோன்றுகிறது.

நான் தங்களுக்குக் கடிதம் எழுதும்போது, தங்களோடு அம்மாளும் முன்னிற்கிருர்கள். அரிய பண்பாடு உடையவர் களானதால்த் தானே! அன்று கல்கி வீட்டுக்கு வந்திருந்த போது நான் ஏதாவது சொல்வேன், கேட்கலாமே என்று நாற்காலியில் வந்து உட்கார்ந்தார்கள். அதுமுதல் அவர்கள் என் குற்ருலத்துக்கு வந்து தங்கவில்லை - என்று என் மனம் புகார் சொல்லிக் கொண்டிருக்கிறது. எப்படியோ எனக்கு ஒரு உறுதியான அபிப்பிராயம்; அன்பு, ஆர்வம், பக்தி எல்லாம் ஊறியுள்ளது தமிழ்; ஆகவே தமிழுக்கு உரிய வர்கள் தாய்மார்தான் என்பதாக. இந்த விஷயத்தைத் தங்க ளிடம் பலதடவை நேரில்ச் சொல்லியிருக்கிறேன். அதனுல் அம்மாளுக்கு முகஸ்துதியாக ஒன்றும் இல்லை அதில்.

பெங்களூரில் இந்த வருஷம் இருக்கத் தீர்மானித்திருக் கிறீர்கள். ரொம்ப சந்தோஷம், தங்கள் காரியத்திறமைக்கு

வழி வாய்க்கால் வேண்டுமல்லவா? பெங்களூர் அதற்கு வாய்ப்பான இடம். ரொம்ப சந்தோஷம்.

இன்னொரு விஷயம்; ஏ. எஸ். ஆர். சாரி அவர்களைப் பார்க்கவேண்டும் என்பது எனது பேரவா. அவர்களுடைய நேர்மை என்ன, பக்தி என்ன, லக்ஷியம் என்ன. எல்லாவற்றையும் விட அவர்களுடைய அருமை மனைவியாரும் என்னிடம் காட்டும் அன்பும் ஆர்வமும், இப்படி அப்படி என்று சொல்ல முடியாது. அவர்களை அடிக்கடி பார்த்துக் கண்ணையும் இதயத்தையும் தடைத்தத் துலாம்பரமாக்கிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது போகிறோமே? என்று மனம் வருந்துவதுண்டு. இனி அவர்களைப் பார்த்து விடுவேன். தாங்கள்தான் இருக்கிறீர்களே பெங்களூரில்.

சாரிகள் இருவருக்கும் என் நமஸ்காரம் சொல்லவேணும்.

அடுத்த வருஷம் (1945) முதல் குழந்தைகள் பாடு நல்லது தான். அதைவிட நல்லது தங்களுக்கும், அம்மாளுக்கும். சென்னையிலே இருந்துகொண்டால் அவர்களுக்கு வேண்டி படிப்பும் நடக்கும்; நம்முடைய வீடும் நிறைந்திருக்கும். ரொம்ப திருப்தி. நானுந்தான் சென்னைக்கு 'மாதாந்தம்' வருகிறேனே.

இந்த வாய்ப்பான சௌகரியங்கள் பற்றிக் காரணம் ஒன்றும் சொல்லமுடியாது. "கூட்டுவித்தால் யாரொருவர் கூடாதாரே"— என்றுதான் சொல்லவேண்டும்.

எம். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மையார் தமிழ் உலகத்துக்கு ஒரு அரிய பாடலைக் கொடுத்திருக்கிறார். உள்ளத்தை உருக்கக் கூடிய பாடல். அதோடு உத்ஸாகத்தையும் கொடுக்கக்கூடியது. கர்நாடக சங்கீதத்தின் பண்பாடு பாடலில் நன்றாய் அமைந்து வந்திருக்கிறது. தாங்களும் அம்மாளும் ரொம்ப அனுபவிப்பீர்கள். 'காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே'— என்ற பாடலைத் தட்டுத்தான்.

கல்கி - தீபாவளி மலரும், வெகு அழகாய் வந்திருக்கிறது. படங்கள் அற்புதமான படங்கள். கனுதேசாயின படம் ஒன்றையே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருச்சுற்றாலம்,
7—11—45.

அருமை நண்பர் C. V. RM. அழ. அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் 18—10—45 அன்று அனுப்பிய கடிதம் சென்னையில் வைத்தே கிடைத்தது.

பெங்களூர் ஜோலி முடிந்தது என்றும் எழுதியிருக்கிறீர்கள். ஆகையால் குழந்தைகளின் படிப்பையும், பராமரிப்பையும் கவனித்துக்கொண்டு, தாங்களும் அம்மாளும் சென்னையிலேயே இருக்கலாம்.

எனக்கு இன்ஸுலின் இஞ்செக்ஷன் செய்தபிறகு ரொம்பவும் சௌகரியமாய் இருக்கிறது. சுமார் இரண்டு மாசமாகச் செய்த சிகிச்சையில் உடம்பு எவ்வளவோ தேறி யிருக்கிறது. இஞ்செக்ஷன் இனி வேண்டியதில்லை, என்று எண்ணுகிறேன்.

3—11—45 அன்று மீரா படத்திறப்புக்காகத் திருநெல் வேலி போயிருந்தேன். படத்தைப் பார்த்தேன். அபாரமாக இருந்தது. உன்னதமான பக்தியானது உருவவழி பாட்டோடு எப்படி வளர்ந்தேறிப் பழுக்கும் என்பதைப் படம் தெளிவாய்க் காட்டுகிறது. ராதாவையோ நமக்குத் தெரியும். குழந்தை உள்ளத்தைக் கண்ணாடியில் வைத்துக் காட்டுகிறாள். எம். எஸ். சாதிக்கிற காரியம் இதுவரை யாரும் சாதிக்கவில்லை.

கிருஷ்ணன் மலையைத் தாங்கினான் என்றால், எல்லாம் வல்ல கடவுள் அண்டபிண்ட சராசரங்களை யெல்லாம் அற்புதமாய்த் தாங்கிக் கொண்டிருக்கிறான், என்பதுதான் பொருள். அடையாளத்தையும் விஷயத்தையும் அப்படி யெல்லாம் அனுபவிக்க வேண்டும். அந்த ஈடுபாட்டைத் தான் பக்தி என்கிறோம்.

பக்தியானது எத்தனையோ விதத்தில்ப் படலம் படலமாக வெளியாகிறது. அவ்வளவையும் தெள்ளத் தெளிந்த விதமாக எம். எஸ். வெளியிடுகிறார். பக்தி வெள்ளத்தில் பாத்திரம் கரைகிறதைப் பார்க்கும் நம் உள்ளமும் கரைகிறது. அபூர்வமான அனுபவம் அல்லவா நமக்கு!

"தமிழ் நாட்டில் இத்தகைய புனிதமான படம் வந்ததேயில்லை. நெறிபிறழ்ந்த காதல் இல்லாமல்ப் படம் எடுக்கவே முடியாது என்பது படம் எடுப்பவர்களது கொள்கையாய் இருந்து வருகிறது. 'மீரா' இதற்கெல்லாம் மாறான படம். யாரும் போய்ப் பார்க்கலாம். குடும்பத்தோடு இருந்து பார்க்கக் கூடிய படம் ஒன்று வந்திருக்கிறது" என்று பாஸ்கரத் தொண்டைமான் சொன்னார்கள்.

பக்தி மேலீட்டினால், சாதாரண குடும்ப வாழ்க்கை இதயத்தை விட்டு ஒதுங்குகிறது. இதை எப்படி யுனிவர்ஸிடி கிராஜுவேட் அறியமுடியும். ஆனால் பெண் பாலரும், பட்டிக் காட்டு ஜனங்களும் அறிந்து அனுபவித்துக் கொள்வார்கள். அப்படி இருக்கிறது படம்!

இவ்வளவு விஷயத்தையும் தங்களுக்கு எளிதில் எழுதி விடுகிறேன். ஆனால் ஆங்கிலம் கற்ற புலவர்களுக்கு எப்படிச் சொல்லமுடியும்.

எறும்பூரக் கல்லும் தேயும். பக்தி ஊரவும் இதயம் தேயலாம் அல்லவா. பார்க்கலாம்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

பட்டாபி அவர்களுக்கு

"இந்த யூனிவர்சிட்டி படிப்பால் யாதொரு பிரயோஜனமுமில்லை. இருக்கிற கலையறிவையும் அது கெடுத்தேவிடும்." என்று அழுத்தமாகச் சொல்கிறவர் டி. கே. சி. அவர் சொல்வது அப்படியே ஒத்துக்கொள்ளத் தக்கதல்ல; விதி விலக்குகளும் உண்டு என்று நிரூபிப்பவர் நண்பர் ஸ்ரீ G. C. பட்டாபிராமன்.

பிரபல மோட்டார் வியாபாரியும் நகை வியாபாரியுமான மதுரை ஸ்ரீ G. N. சக்கரபாணி செட்டியார் அவர்கள் குமாரர் அவர். செல்வத் திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்தவர். சென்னை யூனிவர்சிட்டியில் பி. ஏ. பட்டமும் பெற்றவர். இத்தனையிருந்தும் கலை ஆர்வத்தில் யாருக்கும் சளைக்காதவர் அவர்.

கவின் கலைகளில் அவருக்குப் பற்று அதிகம். சங்கீதம் நடனம் என்றால் உள்ளம் பறி கொடுப் பவர். நல்ல இளைஞர். கர்னாடக சங்கீதத்தில் நல்ல ஞானம் உடையவர் என்று சொன்னால் மட்டும் போதாது. சங்கீதப் பித்தர் என்றே சொல்ல வேண்டும். இந்த சங்கீத கிறுக்கு அவருக்கு மட்டுமல்ல, அவருடைய மனைவி, அவருடைய தம்பி, அவருடைய அத்தையம்மாள் எல்லாரையுமே ஆட்டி வைக்கிறது.

ரஸிகமணி டி. கே. சி. யிடத்தில் இந்த ரஸிக குடும்பத்தினர் அத்தனை பேருக்குமே ஈடுபாடு.

அவர் மதுரையில் இறங்கினுலும், திருச்சியில் இறங்கினுலும், ஏக உபசாரம்தான். அத்தையம்மாள் பக்குவமாய்த் தயாரித்த வத்தல் வடகங்கள் 'பாக்கெட் பாக்கெட்டாக குற்ருலத்திற்கு வரும்; சென்னேக்கும் போகும். டி. கே. சி. வீட்டுத் தோசையுடன், இலக்கிய உலகில் போட்டி போட நண்பர் பட்டாபிராமன் அவர்களின் வத்தல் வடகங்கள் புறப்பட்டிருக்கின்றன என்ருல் அது மிகையல்ல.

டி. கே சி. யை நீண்ட ரஸமான கடிதம் எழுதச் செய்வதற்கு என்ன வழி என்று பலநாள் எனக்குத் தெரியாமல் இருந்தது. அந்த ரகசியத்தைத் தெரிந்து வைத்திருக்கிருர் பட்டாபி. அவருடைய சிந்தனையைத் தூண்டத்தக்க முறை ஏதாவது சொல்லிக் குத்திக் கிளப்பினுல் போதும் அருமையான கடிதம் ஒன்று வரும் என்று. பாவ சங்கீதம் என்பதைப்பற்றி நண்பர் ஏதோ பத்திரிகையில் வந்ததைச் சொல்லி சமாதானம் கேட்கப்போக, அதற்குப் பதில் ஒரு ரஸமான கடிதம் வந்தது. டி. கே. சி. சங்கீதத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களையெல்லாம் கூறிவிடுகிறது அந்தக் கடிதம். இனி டி. கே. சி. யைப்பற்றியோ அவர் கொண்டுள்ள அடிப்படையான கருத்துக்களைப் பற்றியோ யாதொரு புகாரும் இருக்க முடியாதல்லவா ?

நண்பர் பட்டாபி சமஸ்கிருதம் படித்தவர். வால்மீகி ராமாயணத்தையும் படித்தவர்தான். டி. கே. சி. சொல்லும் கம்பன் பாடல்களைக் கேட்கும்போது சுரங்கத்திலிருந்து பேர்த்தெடுத்த

ரத்தினத்தை பட்டைப்போட்டு பிரகாசிக்கச் செய்வது போலல்லவா இருக்கிறது என்று அதிசயிக்கிறார். அவர் எப்படி கம்பனையும் டி. கே. சி. யையும் ரஸித்திருக்கிறார் என்பது இப்போது தெரியும் அல்லவா!

திருக்குற்றலம்,
2—9—44.

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. ரொம்ப சந்தோஷம். நண்பர்கள் விஷயத்தில் என் பாக்கியமே பாக்கியம். ஆம். ராஜாஜி என்னிடம் மிக்க அன்புடையவர்கள். அப்படி அன்பு பிறப்பதற்கு சந்தித்தும், உடன் உறைந்தும், அளவளாவியும் இருக்கும் அடிப்படையான காரணங்கள் உண்டு. ஆனல் தங்கள் விஷயத்தில் அது ஒன்றும் கிடையாது. ஏதோ சில விஷயங் களில்த் தங்கள் இதயத்தோடு என் இதயம் ஒட்டுவதாகத் தெரியவந்தது. அதிலிருந்து தங்களுக்கு அன்பு பிறந்துவிட்டது. இத்தகைய அன்பை (வைரத்தை மதிக்கிற காரியம் என் துறையல்ல) மதிக்கத் தெரியாதா எனக்கு?

எப்படியோ இறைவன் தங்களுக்கு இதயப்பாங்கை ஏராளமாகக் கொடுத்துவிட்டார். சங்கீதத்தைத் தாங்கள் எப்படி எப்படி எல்லாமோ அனுபவிக்கிறீர்கள். இவ்வளவு சிறு வயசில் இந்த அனுபவம் கிடைப்பது அரிது. சங்கீதம் போலவே இலக்கியத்தையும் அனுபவிக்கிறீர்கள். அதைவிட என் போன்ற சிநேகிதர்களை அனுபவிக்கிறீர்கள். இதை எல்லாம் எண்ண எண்ண எனக்கு ஒரே ஆனந்தமாய் இருக்கிறது.

தங்கள் அன்பு, உற்ருர் உறவினர் எல்லாருக்கும் பொது வாக அல்லவா ஆய்விட்டது! அருமை மனைவியார், அன்னையார் எல்லாரும் என்னிடம் எவ்வளவு அன்பு! ரயிலேறியதும் தங்கள் அருமைத் தம்பியார் தாகத்துக்குத் தம்ளரை நீட்டிய அழகை மறக்கவே முடியாது. அதோடு நிற்கவில்லை. மதுரையிலிருந்து கடிதம் எழுதியிருக்கிருர்கள். "தாங்கள் கம்பராமாயணத்தைப் பற்றி சம்பாஷனை செய்தது இன்னும் என் ஞாபகத்திற்கு

வருகிறது. தாங்கள் மதுரைக்கு வரும்பொழுது, வரவை எனக்கு முன்னுடியே தெரிவிப்பீர்களானுல் தங்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்பாடு செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்" - பார்த்தீர்களா? தங்கள் அன்பின் வியாபகம் எப்படி இருக்கிறது?

என்னைத் தங்கள் குடும்பத்துக்குத் தத்து எடுக்கத்தான் பார்க்கிறீர்கள். இதைவிட பாக்கியம் ஒன்றிருக்கவா செய்கிறது? தங்கள் மைத்துனர் G. ராமசாமி அவர்களும் என்னை மதுரைக்கு அழைக்கிருர்கள். "தாங்கள் ஊட்டிய 'காலத்திகிரி', 'ஞாலத்திகிரி' என்ற இரு நேத்திரங்களுக்குச் சமானமான சொற்கள் என் செவியில் ஓங்காரம்போல் சப்தித்துவருகின்றன" என்றெல்லாம் ரொம்ப ஆர்வத்துடன் எழுதுகிருர்கள் பண்பாட்டை ஆதரிக்க எத்தனை பாண்டியர்கள்! எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றி.

இனி இசைக்கு வரலாம்.

கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருப்பதற்காக ஒரு விஷயத்தைக் குறியாக நட்டுவைத்துக்கொண்டீர்கள். அதாவது 'தமிழிசை என்பது பாவ இசை' என்று நான் சொல்வதாக. நான் அப்படிச் சொல்லவில்லைதான். ஆனுலும் விவாதம் ஒன்றை நடத்தி விவாதத்தைத் தெளிவுபடுத்துவதற்கு அது ஒரு வசதிதானே?

உலகம் எங்குமே சங்கீதம் இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. அந்த சங்கீதத்தில் பாவமுள்ள சங்கீதம் என்றும், பாவமற்ற சங்கீதம் என்றும் இருக்கின்றன.

மேல் நாட்டில் நடைபெறுகிற சங்கீதம் எல்லாம் அநேகமாய் ஜெர்மன் சங்கீதத்தைத் தழுவியதுதான். மேலான ஜெர்மன் சங்கீத கர்த்தாக்கள் சங்கீதத்தை ஜெர்மன் சாகித்தியத்தோடு சேர்த்து மிக்க உணர்ச்சிபாவம் விளையும்படி செய்தார்கள். அந்த சாகித்தியங்களுக்கு மேல்நாட்டு முறைப்

படி சுரம் அமைத்து வைத்தார்கள். பியானோவில் அந்த சுரத்தை அழுத்தி ஏதோ பாடியும் விட்டார்கள். ஜெர்மன் பிராந்தியத்தையும் இங்கிலிஷ் 'சானலை'யும் கடந்து போன போது சுரமும் பியானோவும்தான் மிஞ்சின. ஜெர்மன் பாஷையின் உணர்ச்சி, ஊக்கம், பக்தி முதலிய உயிரான அம்சங்கள் எல்லாம் ஜெர்மன் பூமியிலேயே தங்கிவிட்டன.

ஆங்கில நாட்டின் சங்கீதம் அது காரணமாக உணர்ச்சி யற்றுப் போய்விட்டது. கேலிக் கூத்தாகவே போய்விட்டது. கார்லைல் ஆசிரியருக்கு வெகு கோபம் வந்துவிட்டது.

பல்லைக் கடித்தார் – தலை ரோமத்தைப் பிய்த்தார்.

Music has, for a long time past, been avowedly mad, divorced from sense and reality of things.

(இதய ஒலி - பக்கம் 171)

—இப்படியெல்லாம் கதறுகிறார் - ஆங்கிலேயரது சங்கீதத்தைப் பற்றியும் சங்கீதக் கொள்கையைப் பற்றியும்.

தமிழ் நாட்டுக்கு வருவோமானால் இங்கேயும் சங்கீதத்தை இரண்டு விதமாகப் பிரிக்கவேண்டும். பாவமான சங்கீதம் பாவமற்ற சங்கீதம் என்பதாக. தெலுங்கு சங்கீதத்திலும் அப்படியேதான். தெலுங்கு சாகித்தியத்தை உணர்ச்சியோடும், பக்தியோடும் பாடும்போது அது பாவ சங்கீதம். வெறும் விளையாட்டாக, உணர்ச்சியில்லாமல் பாடும்போது சாமான்யம் என்று சொல்லிவிட வேண்டியதுதான். ஏதோ காதின் சவ்வுக்கு சுகமாயிருக்கலாம்; அவ்வளவுதான். Tympanic என்று பெயர் இட்டழைக்கலாம்.

தெலுங்குக்குச் சொன்னது தமிழுக்கும் அப்படியே பொருந்தும்.

ராகம் பாடும்போது தமிழருக்கும், தெலுங்கருக்கும் பொதுத்தான். இருவரும் அனுபவிக்கலாம். அதில் பாஷை கலப்பில்லாததால் இருவருக்கும் பொது என்கிறோம். தெலுங்கர்களும் - சிலபேராவது கேட்டு வந்திருக்கிற காரணத்தால் - அவர்கள் ராகங்களை அனுபவிக்கிறார்கள்.

ஆனால், தெலுங்கு தேசத்துக்கு வடக்கிலுள்ள பங்காளிகள் ராகங்களை - சங்கராபரணம், தோடி போன்ற கர்னாடக ராகங்களை – கேட்டு அனுபவிக்க முடியாது. ஆங்கிலேயரும் அனுபவிக்க மாட்டார்கள். ஏதோ சுரங்கள் அப்படி ஏறுகின்றன, இப்படி ஏறுகின்றன என்று அறியலாம். ஆனால் அனுபவிக்க முடியாது. அனுபவிக்கிறோம் என்று அயலார் சொல்லும்போது ஏதோ முதுகைத் தட்டிக்கொடுக்கிற காரியந்தான் என்று நாம் மனசில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ராகம் பாடுவது என்பது கெண்டியை வைத்துக்கொண்டு சுண்ணாம்புக்கோலம் போடுவது போன்றது. கை லாகவத்தைக் கண்டு அனுபவிக்கிறோம். வளைவும், நெளிவும் அந்த லாகவத்தைக் காட்டுகின்றன. அதுபோல சாரீரத்தின் லாகவத்தைக் கண்டு ராகத்தின் நயத்தை அனுபவிக்கிறோம்.

ஆனால் சாகித்தியத்துக்கு வரும்போது பாவத்தை எதிர் பார்க்கிறேம். உள்ளிருக்கும் உணர்ச்சி வேகம் சங்கீதத்துக்கு ரூபம் கொடுக்கிறது.

கவியைப் பற்றி

Metre forging argument
[argument - emotional reality]

என்று மில்டன் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் சங்கீதத்தில் பாவரூபம் என்று ஒன்று இருக்கிறதென்றும், அதுவே சங்கீதத்துக்கு லக்ஷியம் என்றும் தெரியவரும்.

நான் சொல்லுவதெல்லாம்: சங்கீதம் பாவ சங்கீதமாகவே இருக்க வேண்டும். தெலுங்கர்கள் பாவத்தை உணரவேண்டும்

என்ருல் தெலுங்கு பாஷையில்த்தான் சாகித்தியமும் இருக்க வேண்டும்; தமிழில் இருந்தால் விஷயம் புரியாது. உணர்ச்சியை உணரமுடியாது. பாவத்தைக் காணமுடியாது.

ஷெடி ஷெடி தான் காம்ட்ச்சட்காவில் உள்ளவர்களுக்கும், தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கும்.

தமிழ் சங்கிதந்தான் பாவசங்கீதம் என்று நான் சொல்ல வில்லை - அப்படிச் சொல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்காது.

ஆனுல் பத்திரிகைகள் என்னவெல்லாமோ என்னைப்பற்றி எழுதுகின்றன. பேனு ஓடுகிறபடி எல்லாம் எழுதுகின்றன. அப்பாவிகள் என்ன செய்வார்கள். சங்கீதத்தைப்பற்றியோ எழுதமுடியாது. மனுஷர்களைப்பற்றி எழுதித்தான் பத்தியை நிரப்பவேணும். டி. கே. சி. கவியும், சங்கீதமும் ஒன்றென்று எண்ணிக்கொண்டிருக்கிருர் - என்று எழுதுவார்கள். உடனே கவிக்கும் சங்கீதத்துக்கும் சம்பந்தமே கூடாது என்று கூசாமல் எழுதுவார்கள். அதில் அவர்களுக்கு லஜ்ஜையே இல்லை - எனக்கோ, சர்க்கரைக்கும், கடலைமாவுக்கும் வித்தியாசம் தெரியும். கடலைமாவை மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டிருக்க முடியாது. சர்க்கரையைத் தனியாய்ச் சாப்பிடவும் முடியாது. ஆனுல் லட்டு செய்து கொடுத்தால்ச் சாப்பிட முடியும்.

பதங்களை உயர்ந்த பாவ உருவத்துக்காக - தெய்வத் தன்மை வாய்ந்தது என்று அனுபவிக்கிறேன். பக்தி உணர்ச்சியோடு, கிளிக்கண்ணி, சித்தர் பாடல், காவடிச் சிந்து முதலியவைகளைப் பாடினுலும் பரவசம் அடையத்தான் செய்கிறேன். ஆனுல், சங்கதி சங்கதி என்று சுரங்களைக்கொண்டு கிச்சுக் கிச்சுத் தாம்பலம் விளையாடுகிறதை ரொம்ப அனுபவித்து விட முடியாது. அதோடு அபசுரமும் சுருதி இன்மையும் சேர்ந்துவிட்டால்க் கேட்கவாவேண்டும்? அமிர்தாஞ்சனத் துக்கு ஆர்டர் பண்ணவேண்டியதுதான்!

கல்வி, கலை விஷயங்களில் தாகூர் தெளிவான உண்மை ஒன்றை வெளியிட்டிருக்கிறர். அதாவது, பள்ளிக் கூடங்களிலும், யுனிவெர்ஸிட்டிகளிலும் மூளையை வளர்க்கிற காரியமாகத்தான் இருக்கிறது. அதற்குப் பதிலாக இதயத்தை வளர்த்தால் அளவில்லாதபடி கல்வி கலை எல்லாம் வளரும் என்பதாக. இதில் சந்தேகமே இல்லை. ஆனல் நம்முடைய கல்வி இலாகாவுக்கு அதில் நம்பிக்கையே இல்லை. நாம் என்ன செய்ய ?

பக்கம் அதிகம் ஆய்விட்டது. தங்களுக்கு எவ்வளவோ ஜோலி இருக்கும். என் பஞ்சு வெட்டுதல் போதும். தங்களுக்கு இப்படியெல்லாம் எழுதுவது எளிதாயிருக்கிறது. பத்திரிகைக்கு கட்டுரை எழுதுவது என்ருல் கஷ்டமாய் இருக்கிறது. காரணம் கட்டுரையைப் படிக்கிறவர்கள் எல்லாரும் பட்டாபிகள் அல்ல அல்லவா ?

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்,

திருக்குற்றலம்

13—1—45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு

நமஸ்காரம்,

தங்கள் கடிதம் இன்று இங்கே கிடைத்தது. சென்னையி லிருந்து 7—1—45 அன்று இரவே புறப்பட்டு விட்டேன்.

சுமார் 20 நாள் சென்னையில்த்தங்க நேர்ந்தது. பாட்டுக் கச்சேரிகளுக்கு அஜராக முடிந்தது. மொத்தத்தில் இந்த வருஷத்திய கச்சேரிகள் கொஞ்சம் தெளிவுதான். பாஷையை உணர்ந்து பாடவேண்டும் என்ற எண்ணம் பாகவதர்கள் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. அது காரணமாக அவர்களுக்குப் பாடுவதில் வசதி ஏற்பட்டு பாவத்தில் கொஞ்சம் ஒட்ட முடிந்தது. செப்பை கச்சேரி ஜனங்களுக்கு ரொம்பவும் பிடித் திருந்தது. தமிழ் வார்த்தைகளை ரொம்பத் தெளிவாய் உச்சரிக் கிறார். சுரமும், சுருதியும் அவரிடம் எப்பொழுதுமே ரொம்ப சுத்தம். இதெல்லாம் காரணமாக சபையோர்கள் முதலில் இருந்து கடைசிவரை கும்மாளி போட்டு அனுபவித்தார்கள்.

எம். எஸ். ஸின் கச்சேரியோ, எப்பொழுதும் போல ஜனங்களின் மனசைக்கவர்ந்தது. ஹால் நிறைந்த கூட்டம் - முற்றத்திலும் இடம் பண்ணியிருந்தது. வீதியில் உட்கார்ந்தும் நின்றும் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் 5000 பேர்.

மவுண்டு ரோடிலுள்ள சென்னைக் கார்போரேஷன் கச்சேரிக்கு (அழைப்புக்காகத்தான்) கல்கியும் நானும் போனோம். * C. K. விஜய ராகவன் - ஐ. ஸி. எஸ். ஸின் குழந்தையின்

---

* இப்பொழுது சமது மாகாணத்தின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருப்பவர்.

நடனத்தைப் பார்க்கத்தான் - உபசாரத்துக்குப் போன ஹோதாவில்த்தான் போனேம். ஆனல் அந்தக் குழந்தை நடனத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தே ஆடியது. அழகாய் இருந்தது. ஒன்றரை மணிநேரம் அனுபவித்துக் கொண்டேயிருந்தோம். ரொம்பத் திருப்தியாகவே இருந்தது. கடைசியில் தந்தை தாயர்களையும், பெண்ணையும் நேரில் போய்ப் பாராட்டினேன். அவர்கள் உண்மையில்ப் பாராட்டுக்கு உரியவர்கள் தான்.

நடனத்துக்கு அஸ்தஸ்துக் கொடுத்துவிட்டார்கள். தமிழ் நாட்டுக்கு அது பெரிய வருவாய்.

இதெல்லாம் போகட்டும் - ஒரு கச்சேரியில் தங்களை நினைத்து ரொம்பவும் ஆற்ருமைப் பட்டுக் கொண்டிருந்தேன்.

தமிழிசை அரங்கில் பாலசரஸ்வதி நடனமும் தாயார் ஜெயம்மாளின் பின்பாட்டும் நடந்தன. நடனம் அதாவது அபிநயம் வெகு அருமையாய் இருந்தது. உணர்ச்சி பாவங்கள் அப்படி அப்படியே உருண்டு புரண்டு வந்தன. அவைகளோடு நாங்களும் உருண்டு புரண்டு ஓடினேம்.

எனக்கு உற்ற நண்பரான மிஸிஸ் சாஸ்திரி பாம்பேயிலிருந்து வந்திருந்தார். அவருடைய மகளும் (உதய சங்கரின் தம்பி மனைவி) வந்திருந்தாள். பரத நாட்டியத்தில்த் தேர்ந்தவள் மகள். இருவரும் அபிநயத்தைப்பார்த்து உருகிப் போய் விட்டார்கள். ஜனங்கள் சரியான அளவுக்குக் கலையை அனுபவிக்கவில்லையே என்று மிஸிஸ். சாஸ்திரி ரொம்ப ரொம்ப ஆற்ருமைப் பட்டார். கலையை மதித்த உள்ளம் அப்படியும் பேசும், அதற்கு மேலும் பேசும்.

நடனம் இப்படி, இனி ஜெயம்மாளின் பாட்டு,

அற்புதமாய் இருந்தது. சங்கீதத்தில் பாவமேது - ஒன்றேது என்று சொல்லுகிறவர்கள் அந்தப் பாட்டைக் கேட்கவேண்டும். நவரஸங்களும் அங்கங்கே கனியும்; சொட்டும்; அந்த அந்த மயமாக்கி விடும் நம் இதயத்தை. தெய்வத்துக்கு ஏற்ற சங்கீதம்! என்ன எடுப்பு - என்ன நிச்சயம்! ஒரு சுருட்டு - ஒரு குழிசல் - அப்படியே பாவம் வந்துவிடும். காதினால் கேட்டாலும் கண்கொண்டு பார்ப்பது போல் இருக்கும் பாவ உருவம்.

கேட்டு உணர்ந்து அனுபவிக்கக் கொடுத்து வைத்து விட்டால் - நாமே பாக்கிய சாலிகள். கர்னடக சங்கீதத்துக்கு வாரிசுகளாய் இருக்கிறோம் அல்லவா என்று மார்பைத் தட்டத் தோன்றும் - இந்த சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த போதுதான், தங்களையும், தங்கள் குடும்பத்தையும் நினைத்து, உடனிருந்து அனுபவிப்பதற்கு இல்லையே என்று ஆற்றாமைப் பட்டது.

தாங்கள், தங்கள் அருமை மனைவியார் - அன்னையார், மைத்துனர் தம்பி எல்லாரும் ரொம்ப ரொம்ப அனுபவித்திருப்பீர்கள்.

எனக்கு உடம்பு ரொம்பத் தேறியிருக்கிறது. சென்னையிலிருந்த ஆட்டோட்டங்களுக் கெல்லாம் ஈடு கொடுத்தது அல்லவா

தங்கள் அன்பான - அழகான கடிதத்தை எப்போது எதிர்பார்க்கலாம்?

தங்களுக்கும் தங்கள் அருமை மனைவியாருக்கும், பொங்கல் விழா சகல மங்கலத்தையும் உண்டாக்குவதாக.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்,
18—4—45.

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

சென்னையிலிருந்து எட்டைய புரத்துக்குப் போய்விட்டு இரவு இங்கு வந்து சேர்ந்தேன். இந்த அலைச்சலுக் கெல்லாம் உடம்பு இடங்கொடுத்ததே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

தாங்கள் 12-4-45 அன்று அனுப்பிய கடிதம் சென்னைக்கே வந்து சேர்ந்தது. ஆனந்தி ராதாவின் நடனத்தைப் பற்றி ரொம்பப் பாராட்டி எழுதியிருக்கிறீர்கள். அவ்வளவு பாராட்டுக்கும் உரிய குழந்தைகள்தான். 13-ந்தேதி அன்று ஆடியது அற்புதமாகவே இருந்தது. சபையோர் அதிசயித்துப் போனார்கள். உண்மையும் உணர்ச்சியும் பாவங்களில் அப்படி அப்படியே வந்து பிரகாசித்தன. மானஸ உலகத்திலுள்ள ஒரு பொருளை ஜட உலகத்துக்குக் கொண்டு வருவதுதான் கலை. மனசில் ஆனந்தம் ஏற்படுகிறதென்றால் அந்த ஆனந்தத்தை ஜடதத்துவத்தின் மூலமாக வெளியிட ஆத்திரப்படுகிறது அந்தமனசு. அத்தகைய ஆத்திரம் இருந்தபோதிலும் அது சாத்தியமே ஆவதில்லை. சாதாரணமாக, வெகு அபூர்வமாகத் தான் சிலர் அதைச் சாதிக்கிறார்கள். அப்படிச்சாதிக்க முடிந்தவர்கள் உலகத்திலேயே அருமைதான்.

தங்கள் அருமைத்தம்பி மிக்க சிரமம் எடுத்து என்னைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுதுதான் அவர்களது அழகிய முகத்தை இரண்டாவது முறையாகப் பார்க்க முடிந்தது. வெகு நேரம் அளவளாவிக் கொண்டிருந்தோம் - அவர்களது இளமையும், அறிவுத்திறமையும் சேர்ந்து என்னை வியக்க அடித்து விட்டது.

முந்தின நாளே நடனத்துக்கு டிக்கட் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அதனால் எங்களுக்கான பாஸ் ஒன்றுதான் கொடுக்க முடிந்தது. தம்பியவர்கள் நடனத்துக்கு வந்தார்களோ

என்னவோ தெரியவில்லை. கூட்டமும், உத்ஸாக அமளியும் அபரிமிதம் - அதனால் அவர்களைத் தேடிக் காணமுடியவில்லை. அவர்கள், தாங்கள், மைத்துனர் மூன்றுபேரும் நடனத்தைப் பார்க்கவில்லையே என்று எனக்கு ரொம்ப ஆற்றாமை - கோபமே தான். ஏனென்றால் அத்தகைய ரஸிகக் கூட்டுறவைக் காண்பது அரிது.

குற்றாலம் மழை பெய்து சுகமாய் இருக்கிறது. இரண்டு நாளில் மேல்காற்று ஆரம்பித்துவிடும். தென்பக்கமாக முகாம் வந்தால் இங்கு வந்து போகவேண்டும்.

தூத்துக்குடியில்க் கம்பர் விழாவை 21, 22-தேதிகளில் வெகு விமரிசையாக நடத்துகிறார்கள். அதற்காக 20-உ இங்கிருந்து புறப்படுகிறேன். 24-உ இங்கு திரும்பலாம்.

அத்தையம்மாளின் அன்பும், விருந்தோம்பலும், ராமபக்தியும் கண்முன் நிற்கின்றன. ஔவைப் பிராட்டியார், காரைக்கால் அம்மையார் முதலியோரது ஞாபகம் தான் வருகிறது. அவர்களுக்கு என் நமஸ்காரம் சொல்லவேணும்.

தாங்கள் இல்லாதபோது, வீட்டில், எனக்கு எல்லோரும் சேர்ந்து உபசாரம் செய்து விடுகிறார்கள். அதைத்தாங்கள் கொஞ்சம் கண்டிக்கவேணும்- எல்லாருக்கும் என் அன்பு.

டி. கே. சி.

திருக்குற்றலம்.
27—4—45.

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் மதுரையிலிருந்து எழுதிய கடிதம் கிடைத்தது. ரொம்பசந்தோஷம். நடனத்தைத் தாங்கள் தான் பார்க்கவில்லை அருமைத் தம்பியாவது பார்த்தார்களே! ரொம்பத் திருப்தி. நடனசபையில் ஒரே கூட்டம். அங்கத்தினர்களே (900 பேர்) வந்து இடத்தை அடைத்துவிட்டார்கள். பிறகு நம்மவர்களை வரவேற்கிறது விசாரிக்கிறது என்பதேது? நண்பர்கள் குழுமாக எங்கெங்கோ உட்கார்ந்து கொண்டு பார்த்தார்கள். தம்பி அவர்களும் அப்படித்தான் பார்த்துக் கொண்டார்கள்.

எட்டையபுரத்தில், பாரதி நிலயத்துக்கு ராஜா அவர்களால் நன்கொடையாகப் பெற்ற இடம் வாய்ப்பான இடம். விஸ்தீரணம் ஒரு ஏக்கருக்கு மேல்தான். ஊர்முகப்பில் ரோட்டடியிலேயே இருக்கிறது. கட்டடம் அழகாயும், உபயோகமாயும் அமைவதற்காக ரோட்டடியிலேயே ஏற்பாடாகிறது.

நல்ல அமைப்பாய் ஒரு கவி (பாடல்) கிடைத்துவிட்டால் அந்த ஒரு கவிக்காகவே ஒரு நிலயம் கட்டலாம். அந்த நிலயத்துக்கு யாத்திரை போய்க் கொண்டிருக்கலாம். இது ஏதோ பொருளற்ற படாடோபம் என்று தற்காலத்து படாடோபிகள் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு கவி - உண்மையான கவி - நம்முடைய வாழ்க்கையை எப்படி ஒளி பெறச் செய்யும் என்பதை நம்முடைய Bachellor of Arts-கள், உணர்வார்களானால் நான் சொல்லுகிற சொல் பயனில் சொல் (Cant) அல்ல என்று சொல்லுவார்கள்.

நாடுதும் வா நெஞ்சே!
 நாரா யணன் பதிகள்;—
கூடுதும் வா மெய்யடியார்
 கூட்டங்கள்;—சூடுதும் வா
வீதியெங்கும் கார் அகிலின்
 வீசு புகை வாசம் எழும்
ஆதியிந்த ளூரான் அடி

இந்த ஒரு பாடலுக்காக இந்தளூருக்கு, (மாயவரத்துக்கு வடக்கே மூன்று மைலில்) யாத்திரை போகலாம் அல்லவா?

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்

திருக்குற்றலம்,
3—4—46.

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கல்கியும் நானும் நேற்று இங்கு வந்து சேர்ந்தோம். ராஜாஜி இன்று வந்து சேர்ந்தார்கள். ஆரோக்கியத்துக்காக வந்திருக்கிறார்கள். நல்ல வேளையாக, அருவியும் சுமாராய் ஸ்நானத்துக்குப் போதுமான படி விழுந்து கொண்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இங்கே அமைதியும், அரசியல் விட்டாற்றியும் இருக்கின்றன. இருவரும் சீக்கிரத்தில் உடல் நலம் பெறுவார்கள் என்று நம்புகிறேன். குற்றால நாதர் அருளும் இருக்கவே செய்கிறது.

தங்கள் மானேஜர் அனுப்பிய ரயில்ப் பார்ஸல் சரியானபடி சென்னை வந்து சேர்ந்தது.

பார்ஸலைத்திறந்ததும் வற்றல் வடகங்கள், அத்தையம்மாள் அருமையாய்ச் செய்தனுப்பிய வற்றல் வடகங்கள், என்பதைத் தெரிந்து கொண்டோம். அப்போது மற்றவர்களுக்கு விஷயம் விளங்கவில்லை. அன்று இரவு கல்கி வீட்டில் சாப்பாடு சாப்பிட்டோம். ராஜாஜி அவர்களும் அத்தருணம் வந்தார்கள்- சாப்பிட அல்ல அளவளாவத்தான் உட்கார்ந்தார்கள். கல்கி மனைவியார் எல்லாருக்கும் வற்றல் வடகங்களையும் பரிமாறிவிட்டு ஒரு வெள்ளித்தட்டில் அவைகளை வைத்து ராஜாஜி முன்னும் வைத்தார்கள்.

எல்லாரும் அந்த வற்றல் வடகங்களை ருசி பார்த்தார்கள் கண்ணிட்டும் ருசி பார்த்தார்கள் - என்று சொல்லவேண்டும்.

பார்வைக்கே அவ்வளவு அழகாய் இருந்தது. வடகத்துக்கு இவ்வளவு துய்ய வெள்ளை எப்படி வந்தது என்று வியந்தார்கள்.

வாயில் போட்டால் அப்படியே கரைந்துவிட்டது. உப்பு என்றால் மஞ்சாடி கூடக் குறைய என்றில்லை.

"திருச்சி நண்பருக்கு மோட்டார் வியாபாரம் இருக்கிறது. நல்ல வியாபாரந்தான். வற்றல் வடகம் வியாபாரம் செய்தால் எல்லாவற்றையும் தூக்கி அடித்து விடும்போல் இருககிறது. வெகு ருசி, வெகு மிருது, வெகு அழகு"— என்பதாக ராஜாஜி பேசினார்கள்.

இதை யெல்லாம் பற்றித் தங்களுக்கு எழுதவில்லை. தம்பி அப்பு கிருஷ்ணன் அவர்களுக்கு எழுதினேன். எங்கள் ரயில் அகாலத்தில் திருச்சிக்கு வருவதால்த் தங்களுக்கு எழுதக் கூடாது என்று எண்ணிவிட்டேன்.

தம்பியும் மைத்துனர் அவர்களும் மதுரை ஸ்டேஷனுக்கு வந்தார்கள். காப்பி உப்புமா எல்லாம் கொண்டுவந்தார்கள். கொண்டுவந்த அன்பையும் அழகையும் ராஜாஜி ரெம்பவும் பாராட்டி அனுபவித்தார்கள். ஆனால் சாப்பிடவில்லை - மதுரையில் இறங்கிவிட்டார்கள்.

ரயில் மதுரை ஸ்டேஷனை விட்டுப்புறப்பட்ட பிறகே காப்பி சாப்பிட உட்கார்ந்தோம். பொட்டலங்களை அவிழ்த்தோம்- இட்டலி உப்புமா காப்பி எல்லாம் வந்திருத்தன. வடகமும் ஒரு பொட்டலத்தில் இருந்தது. அந்த வடகத்தையும் அத்தையம்மா அனுப்பிய வடகத்தோடு இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

ராஜாஜிக்கு ஒரே அதிசயம். "குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாரும் எவ்வளவு பிரியமாய் இருக்கிறார்கள். குடும்பத்தில் ஆடவர், தாய்மார் எல்லோருக்கும் எப்பேர்ப்பட்ட பண்பாடு

இருக்கிறது" என்று பாராட்டினார்கள். உலகம் நல்ல உலகம் என்றே பட்டுவிட்டது அவர்களுக்கு.

அத்தையம்மாளுக்கும், அருமை மனைவியாருக்கும் என் அன்பைச் சொல்ல வேண்டும்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

நடராஜன் அவர்களுக்கு

"எல்லோருக்கும் எழுதிய கடிதங்களைக் காட்டிலும் எனக்கு எழுதிய கடிதம்தான் மிகவும் நீண்ட கடிதம்" என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் பாக்கியம் நண்பர் ஸ்ரீ A. L. நடராஜ செட்டியாருக்கு கிடைத்திருக்கிறது. அவரிடமிருந்து கிடைத்தது ஒரே ஒரு கடிதம்தான். அது 22 பக்கக்கடிதம். சாதாரணமாய் ஐந்து கடிதங்களின் நீளம்.

நண்பர் ஸ்ரீ அ. லே. நடராஜன் ஒரு செட்டி நாட்டு இளைஞர். 1941 வரை மலாய் நாட்டிலே இருந்தவர். அப்போதெல்லாம் அவர் பெயர் வெளியே தெரியவே காரணம் இல்லை. ஆனால் இந்த ஆறு வருஷத்தில் அவர் நடத்திவரும் புதுமைப்பதிப்பகம் மூலமாக, தமிழ் இலக்கிய உலகின் முன்னணிக்கு வந்திருக்கிறார். நண்பர் ஸ்ரீ மு. அருணசலம் அவர்கள் ஆரம்பித்த புதுமைப் பதிப்பகத்தை ஏற்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்களையெல்லாம் திரட்டி மலரும் மாலையும் என்ற தலைப்புடன் அழகாக வெளியிட்டிருக்கிறார். கம்பராமாயணம் - டி.கே.சி. பதிப்பை (Expurgated edition) யும் துணிந்து வெளியிட்டிருக்கிறார். ராஜாஜி நூல்களையும், காந்திஜீயின் நூல்களையும் நல்ல முறையிலே வெளியிட்டு தமிழ்ப் புத்தக உலகத்திற்கு சிறந்த தொண்டு செய்திருக்கிறார்.

அவர் மலாய் நாட்டில் இருந்தபோதெல்லாம் வருஷம் ஒருமுறை - காரைக்குடி கம்பன்

திருநாளை ஓட்டி - செட்டிநாட்டிற்கு வருவார் நான்கைந்து நாட்கள், டி. கே. சி.யை சுற்றிக் கொண்டிருக்கும் எண்ணிறந்த செட்டிநாட்டு இளைஞர்களில் ஒருவராக இருப்பார். டி. கே. சி. யோடு நெருங்கி உறவாடி அவர் சொல்லும் பாடல்களையும் அவர் பேசும் பேச்சுக்களையும் கேட்பார். டி. கே. சி. பேசுவதையும் பாடுவதையும் கேட்கக்கேட்க அவருக்கு விஷயம் விளங்க ஆரம்பித்தது. "ஏன்; டி. கே. சி. இத்தனை பாடல்களை கம்பன் பாடல்கள் அல்ல என்று ஒதுக்கித் தள்ளுகிறார்" என்று.

மலாய் திரும்பியவர் - இந்த விஷயத்தைத் துருவ ஆரம்பித்தார். நீண்ட கடிதங்கள் 'விடுத்' தார். பதிலுக்கு நீண்ட கடிதங்கள் பெற்றார். டி.கே.சி. சொல்லுவது போல, எல்லாம் பரீக்ஷை எழுதும் மாணவனைக் கேள்வி கேட்பது போலத் தான்; 'அது என்ன? இது என்ன? அந்தப் பாட்டை ஏன் வைத்திருக்கிறீர்கள்? இந்தப் பாட்டை ஏன் விட்டு விட்டீர்கள்?' என்றெல்லாம் கேள்விகள். டி. கே. சி.யும் இந்தப் பரீக்ஷைகளில் எல்லாம் தேறிவிட்டார். அதன் பயனே, அவர் இங்கு திரும்பியதும் துணிந்து டி. கே. சி. பதிப்பை வெளியிட முனைந்தது. இதிலிருந்தே தெரிகிறதல்லவா அவருடைய தமிழ் ஆர்வம்.

டி. கே. சி.யின் இந்தக் கடிதத்தில் 'பண்டிதர்கள்' கொஞ்சம் கடுமையாகவேதான் தாக்கப் படுகிறார்கள். ஆனால் ஏதோ கல்மிஷத்தினால் என்று அல்ல, ஒரு உண்மையை அழுத்தமாகச் சொல்வதற்காகவேதான். அப்படி எல்லாம் எழுதுகிறார் டி. கே. சி. இடைச் செருகல்களைப் பற்றி அவருடைய விளக்கமே நமக்குக் கிடைக்

கிறது இக்கடிதம் மூலம். அது முக்கியம் தானே.

கடிதத்தைப் படிக்கும்போது கம்பராமாயணம் பழைய பதிப்பு ஒன்றும் டி. கே. சி. பதிப்பு ஒன்றும் பக்கத்திலேயே வைத்துக் கொள்வது நல்லது.

எயரோ,
மீனம்பாக்கம், சென்னை.
14-1-41

அருமை நண்பர் நடராஜன் அவர்களுக்கு,

தாங்கள் 28-8-40 அன்று எழுதிவிடுத்த கடிதம் கிடைத்தது. உடனே பதில் எழுதாதற்குக்காரணம் பத்திரிகைக் காரர்களும் ரேடியோக்காரர்களும் சேர்ந்துகொண்டு சோம்பேறி ஆகிய என்னை ரொம்பவேலை வாங்கிவிட்டார்கள். எப்படியோ பதில் எழுத நாள் ஆகிவிட்டது. மன்னிக்கவேணும்.

தங்கள் கடிதம் ரொம்ப ரஸமாய் இருக்கிறது. கண்டவராயன்பட்டியிலும் தாகூர் வித்யாசாலையிலும் பேசிய பேச்சைப் பற்றிய குறிப்புகளைப் பார்த்ததில் தங்களுக்கு ஒரு திருப்தி. கூட்டாளி என்கிற காரணத்தால் என்னைப்பற்றிய எந்தக் குறிப்பையும் தாங்கள் ஆர்வத்தோடு பார்க்கிறீர்கள். இதெல்லாம் எனக்கு எவ்வளவோ களிப்பைக் கொடுக்கிறது. தாங்கள் ஒருவர் மலாய் நாட்டில் இருக்கிறீர்கள். எனக்கும் தமிழுக்கும் அது போதுமான பாதுகாப்பு. எத்தனை பண்டிதர்கள் வந்து படையெடுத்த போதிலும் கவலையில்லை.

இலக்கணமும் சமயமும் நாம் ஏதோ வேண்டாம் என்று சொல்லுவதாக அங்கே பிரசாரம் செய்கிறார்கள். உண்மையில் நாம்தான் இலக்கணம் வேண்டும் என்கிறோம். தமிழ்ப் பண்டிதர்கள் இலக்கணம் வேண்டாம் என்கிறார்கள். தமிழ் பாஷை மற்ற பாஷைகளையெல்லாம்போல தமிழ் மக்கள் நாவில் உருண்டோடிக் கொண்டிருக்கிற அழகான வஸ்து. நிமிஷந் தோறும் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. மாறுதல்களினால் லாபமும் உண்டு நஷ்டமும் உண்டு. ஆனால் மாறுதல்களை உண்டுபண்ணும் காரணங்களைப் பார்த்தாலோ அவைகள் கோடிக்கணக்காய் கிடைக்கின்றன. முன்னமே

வட மொழி, தெலுங்கு முதலிய பாஷைகள் வந்து சில சில மாறுதல்கள் உண்டுபண்ணின. இப்போது பார்த்தால் ஜப்பான் முதல் சூரியன் கடைசியாக அஸ்தமிக்கும் கலிபோர்னியா வரையுள்ள நாடுகள் எல்லாம் சேர்ந்து தமிழ் பாஷையில் மாறுதல்களை உண்டு பண்ணி விடுகின்றன. பண்டிதர்கள் எல்லாரும் சேர்ந்து எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும் மாறுதலைத் தடுக்க முடியாது. கடலில் நின்றுகொண்டு அலைகளைத் தடுக்க முயன்றால் என்ன கதியாகும்; அதேகதிதான். பண்டிதர்களும் இப்போது முழுகித்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மூக்கில்த் தண்ணீர் ஏறுகிறது; தும்முகிறார்கள்; அலறுகிறார்கள், ‘ லபோ லபோ என்று’ தலையில் (மாரில் அல்ல) அடித்துக் கொள்ளுகிறார்கள். நாமோ மிதப்புகளிலும் கட்டு மரங்களிலும் உட்கார்ந்து கொண்டு, தமிழில் அலையோடு அலையாய் கும்மாளி போட்டுக்கொண்டிருக்கிறோம். மூச்சு முட்டித் திணறிக்கொண்டிருப்பவனுக்கு நம்மைப் பார்த்தால் கோபம் வராமல் என்ன செய்யும்.

ஏதோ பள்ளிக்கூடத்து மாணவர்களையும் உபாத்தியாயர்களையும் வைத்துக்கொண்டு “பண்டிதர்கள்” ஒரு வகையாகக் காலந்தள்ளிக்கொண்டு வருகிறார்கள். மாணவர்கள் அனேகமாக விழித்துக்கொண்டார்கள். இனிமேல் அவர்களிடம் இவர்கள் (பண்டிதர்கள்) பருப்பு வேகாது.

பண்டிதர்கள் எல்லாரும் இலக்கணத்தைப் படித்திருக்கிறார்கள், மனப்பாடம் பண்ணியிருக்கிறார்கள். “வழக்கு” என்று ஒரு விஷயம் இலக்கணத்தில் இருக்கத்தானே செய்கிறது. “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல் கால வகையினானே” என்று சூத்திரத்தையும் படித்துக் கொண்டாடியிருக்கிறார்கள். இருந்தாலும் அவைகளுக்கு மாறாய் இருக்கிற வகைகளைத்தானே பாராட்டுகிறார்கள். வழக்கு என்றால் செத்துப் போனவன் ஒரு காலத்தில் பேசிவந்ததுதானா? உயிரோடிருக்கிறவன் பேசினால் வழக்கல்ல என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? கால் தள்ளாடுகிறது கொஞ்சம் கை கொடுங்கள்,

என்று சொல்லுவதற்குப் பதிலாக "காறள்ளாட்டின் கை கோடலே விழைவாம்" என்று பண்டிதர் சொன்னாரானால் அவர் பாடு அதோகதிதானே.

பண்டிதர்கள்தான், இலக்கணத்தில் சொல்லப்படுகிற இலக்கணம் அதாவது 'வழக்கு'—வேண்டாம் என்கிறார்கள். நாமோ வழக்குத்தான் வேண்டும், அதாவது இலக் கணந்தான் வேண்டும் என்கிறேம். அன்றியும் சமயமாவது ஒன்றுவது அவர்களுக்கு. ஏதோ கதையைச் சொல்லு வது; ஏமாற்றுவது. புராணங்கள் பாடுகிற வகை இன்ன தென்று அவர்களுக்குத் தெரியாதென்றல்ல. கதை என்று எல்லா ரிடத்திலும் சொல்லிவிட்டால் ஏமாற்றுகிறதெப்படி! ஜனங்களை வசக்குவதற்கு கதைகளை முறுக்கி மூக்கணாஞ் சரடாகப் போட்டால்த்தானே அப்படியும் இப்படியுமாக இழுக்கலாம். கதையெல்லாம் கதையென்று தெரியும். இருந்தாலும் மற்றவர் களை ஏமாற்றும்போது தன்னையும் கொஞ்சம் ஏமாற்றிக் கொள்ளுகிற வியாபாரமுந்தான். இதையெல்லாம் பார்த்துத் தானே

"பொய் வளரும் நெஞ்சினர்கள்
காணாத காட்சியே"

என்று அடித்துச்சொன்னார் தாயுமானவர்.

இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம் மலேயாவிலிருந்து எழுதிக் கடல்கடந்து வருகிறதென்றால் ரஸந்தானே.

25—8—40 அன்று கிள்ளானில் தாங்கள் பேசியது ரொம்ப அவசியமான பேச்சு. சபையோடு நானும் உடனிருந்து கேட்ட மாதிரிதான் இருக்கிறது. பண்டிதர்கள் வந்து கடைசியில் கேள்விமாரி பொழிந்ததும் என் கண்முன் நிற்கிறது.

இங்கேயே தாங்கள் பண்டிதர்களை வெளுத்துவாங்கி விடுவீர்கள். அவர்களுடைய ஆதிக்கம் குறைவான மலேயாவில்

வச்சா வைப்பீர்கள்! தங்களைப்போன்ற வீரர்கள், குழாமாகச் சேருகிறதினால்தான் பண்டிதர்கள் கொஞ்சம் யோசனைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

"சனி நீராடு" என்ற வாக்கியத்தைக்கொண்டே பண்டிதர்களைப் புரட்டிப்புரட்டி எடுத்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. பண்டிதர்கள் அதற்கு எத்தனையோ அர்த்தம் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் ஒன்றை விட்டுவிட்டார்கள். காய்ச்சல் அதிகமாகிச் சனி பிறந்துவிட்டால் (சனி=ஜன்னி) cold bath கொடுக்கவேண்டும் என்று டாக்டர் சொல்லுகிறார்கள். அதைத்தான் குறிக்கிறது "சனி நீராடு" என்ற வாக்கியம் என்று சொல்ல மறந்துபோய்விட்டார்கள். இந்த வாக்கியத்துக்கு இந்த அர்த்தமெல்லாம் சொல்லிக்கொண்டும் அதை ஆகா! அடடா! என்று அனுபவித்துக்கொண்டுமிருந்தால் அவர்களுக்குத்தான் ஏதோ ஜன்னிக்கோளாறு என்று சொல்லவேண்டும்.

தாங்கள் பேசியதையெல்லாம் பண்டிதர் ஒழிந்த சபையோர் ரொம்பவும் அனுபவித்திருப்பார்கள்.

இந்தக் கோலாகலத்துக்கெல்லாம் தங்களுக்கு வாய்ந்த துணை ஒன்று இருப்பதுபற்றி ரொம்ப சந்தோஷம். நண்பர் V. ராமசாமி B. A., அவர்களுக்கு என் வந்தனத்தைச் சொல்லவேண்டும்.

* * * *

கம்பராமாயணச் செய்யுள்களைப்பற்றியும் ரஸமான குறிப்புகள் - அயோத்தியாகாண்டத்தில் விட்டது விடாதது எல்லாவற்றையும் நன்றாய்க் கணக்குப்போட்டு பார்த்திருக்கிறீர்கள். ஐயோ 627 செய்யுள்கள் போய்விட்டதே! என்று வருத்தப்படவில்லை. கையை நெரிக்கவில்லை.

என்னுடைய கிராமத்தில் (தென்காசியில்) நல்ல நீர்வளமுள்ள புஞ்சை ஒன்று; ஒரு அடிக்குக்கீழ் தண்ணீர், அதில்

பூர்வமாக வளர்ந்த பனைகள் காடாய் நின்றன. பிறகு பனைகளுக்கிடையில் தென்னங் கன்றுகளை வைத்தார்கள். சரியான முறையிலேயே முப்பது அடிக்கு ஒன்றாக வைத்தார்கள். தென்னைகள் உண்டாய்விட்டன. தென்னை வைத்து இருபது வருஷம் ஆய்விட்டது: காய்ப்பே இல்லை: நான் முதல் முதலாகப் போய்ப் பார்த்தபோது இப்படி இருந்தது. சரி, இதற்குப் பனைகளையெல்லாம் வெட்டவேண்டியது என்றேன். கணக்குப்பிள்ளை, காவற்காரர் எல்லாரும் ஆதிகாலத்துப் பனையை வெட்டலாமா என்று ஆக்ஷேபித்தார்கள். தென்னைகளைக் காய்க்கவிடாமல் அவைகள் செய்துகொண்டு நிற்கலாமா என்று கேட்டு, உடனே பனைவெட்டுக்காரனுக்கு அச்சாரம் கொடுத்துவிட்டேன். ஒருவாரத்தில் பனைகளை அப்புறப்படுத்தி விட்டார்கள். அதுமுதல் தென்னை வீரியமாய் வளர ஆரம்பித்தன. சுற்றுவட்டகையில் அவ்வளவு வளமான தோப்பும் இல்லை; காய்ப்பும் இல்லைதான்.

களையாய் இருக்கிறவைகளைக் களைந்தெறியாமல் என்ன செய்கிறது. 627 'களை' இருந்தது. களைத்தெறிந்தாய்விட்டது என்று சந்தோஷப்படவேண்டியதுதானே. மிஞ்சிய 584 கவிகளும் வாடாத கற்பகத்தருக்கள் அல்லவா! என்றும் வாசனைதான். இதயத்தைப் போஷிப்பதுதான்.

"குலமுதற்குப்பையும்" என்ற கவியை எடுத்துத் தாங்கள் சொல்லுவது ரொம்பசரி. மந்திரப்படலம் 6, 10, 11 ஆகிய மூன்றும் மந்திரிகளின் லக்ஷணங்களை வெகு அழகாய் எடுத்துக் கூறுகிறது.

"சலமுதல் அறுத்(து) அருந்
தருமம் தாங்கினர்" (6)

இது அவர்களுடைய நேர்மை: அவர்களுடைய புத்தி கூர்மையம் எப்படி:

"தொல்லைநல் வினையென
உதவும் சூழ்ச்சியார்"

நம்முடைய பழைய மந்திரிகள் மூன்றுபேர்தான். அவர்களுக்குள் கக்ஷிகளும் மூன்று. திரிவிதம் துஷ்டலக்ஷணம் என்பதற்கு இலக்கியமாய் இருந்தார்கள். தசரதன் மந்திரிகளோ

அறுபதி னுயிரர்
எனினும், ஆண் தகைக்(கு)
உறுதியில் ஒன்று இவர்க்(கு)
உணர்வென் றுன்னலாம்

இந்த விருத்தங்களுக்கிடையே வேறுவேறு வகை பாவினத்தைக் கொண்டுவந்து, விஷயத்தைப் பிணையல் அடிக்கிறதில் என்ன நயம் இருக்கக்கூடும். தாங்கள் சொல்லுகிறபடி 7, 8, 9 செய்யுள்களில் கூறியது கூறல் இருக்கிறது. எல்லாவற்றையும் விட செய்யுள்களில் வேகம் இல்லை, பாவம் என்று சொல்லுவதற்கொன்றும் இல்லை.

21, 22, 23, 25, 26 (மந்திரப்படலம்) செய்யுள்களைப் பற்றியும் சரியான ஆராய்ச்சி செய்திருக்கிறீர்கள். அரசியலையும், போரையும், தசரதன் ரொம்பவும் அவசியமான காரியங்கள் என்றே கருதுகிறான். போரில் வெல்வதுமாத்திரம் அல்ல இறந்துபோவதே மேலான காரியம் என்று கருதுகிறான். போரில் இறந்தவர்களை ஞானிகளோடும், துறவிகளோடும், ஒக்க வைத்துப் பேசுகிறான் (20). மேலும், இனியும் அரசியல் நன்றாய் நடக்கவேண்டும் என்ற ஆத்திரம் அல்லவா இருக்கிறது. 'ஏதோ வயசாய் விட்டது மெள்ள "ரிடையர்" ஆகிவிட வேண்டியது; தகுதியுடையவரைப் பதிலியாக வைத்துவிட வேண்டியது' என்பதுதான் தசரதனுடைய பாவம். ராமனுக்குப் பட்டம் சூட்டுகிறது என்றால் நல்ல காரியத்தை அவனுக்குச் செய்வதாகத்தான் பாவம். கீழான காரியத்துக்கு அவனை உள்ளாக்குகிறது என்பது கருத்தல்ல. அதில் ஒரு எக்களிப்பு, உத்ஸாகம் எல்லாம் இருக்கிறது. இது காரணமாகவே பேச்சில் ஒரு ஹாஸ்யம் இருந்துவருகிறது.

"என்னுயிர்க் குறுவதும்
செய்ய எண்ணினேன்" (15)
"அரும்பொறை யினிச்சிறி(து)
ஆற்ற கிற்றிலேன்" (16)
"உள்ளுறை பகைஞருக்(கு)
ஒதுங்கி வாழ்வெனோ?" (18)

மேலும்,

"அஞ்சுதேர் வெல்லும் ஈது
அருமை யாவதோ" (19)

இதிலெல்லாம் ஹாஸ்யமும், ஆத்திரமுமே தெளிவாய் இருக்கின்றன. ஆனல் ஹாஸ்யபாவத்துக்கும் பண்டிதர்களுக்கும் வெகுதூரம். சிரிக்கிற படத்தை தலைகிழாகவைத்து அழுகிறதாக எண்ணித் தாங்களும் கண்ணீர்விட்டுவிடுவார்கள். தசரதன் பேச்சுக்கு இந்த வினைதான் வந்துவிட்டது. கர்மம்!

மங்களகரமான, கோலாகலமான பட்டாபிஷேகம் தன் அருமைமகனுக்குநடக்கப்போகிறதாம். அதைப்பற்றிப் பேச்சு வரும்போது "நாம் எல்லாரும் செத்துக் காடையத்தெல்லாம் கொண்டாடப் போகிருர்களே" என்று சொல்லிச் சுடுகாட்டையும் சாம்பல் கரைக்கிறதையும் ஞாபகப்படுத்தலாமா.

"இறப்பெனும் மெய்ம்மையை
இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின் மேல்க்
கேடு மற்றுண்டோ" (2)

மேலும் பொருள் தெரியாமலே

"பிறப்பெனும் பெருங்கடல்"

என்றும்; அடுத்த கவியில்

"பிறவியென்னும் இவ்
இருஞ் சிறை"

என்றும்

"இனியதுபோலும் இவ்வரசை யெண்ணுமோ?
தனியர சாட்சியில்த் தாழும் உள்ளமே"

என்றும் சொல்லுவது அசந்தர்ப்பம். ஆத்திரத்தோடு பேசினலோ அதிகப்பிரசங்கித்தனம்.

இப்படியெல்லாம் பேசுவது பண்டிதர்களுக்குப் பொருத்தமாய்த்தான் இருக்கும்.

உதாரணம்:

ஒரு கலியாண வீட்டில் முகூர்த்தம் ஆய்விட்டது. இலை போடக் கொஞ்சம் நாழியை இருந்தது. கூடி உட்கார்ந்திருந்த பெரிய மனுஷர்களில் ஒருவர் நல்ல பொழுதாகப் போகட்டுமே என்று அங்கு வீற்றிருந்த பண்டிதர் ஒருவரைப் பார்த்து "ஏதாவது பாட்டுச் சொல்லுங்களேன்" என்ருர். பண்டிதர் எக்களிப்பான முகபாவத்தோடு

"வாழ்வாவது மாயம் உடல்
மண்ணாவது திண்ணம்"

என்று அழுத்தம் திருத்தமாகப் பாட ஆரம்பித்துவிட்டார். "என்னடா இப்படி ஆரம்பிக்கிருரே" என்று எல்லாரும் திகைத்துப் போய்விட்டார்கள். ஒருவர் பார்த்தார்: சரி இனி

"கைப்பிடி நாயகன் தூங்கையிலே"

என்று பட்டினத்தார் பாட்டையும் ஆரம்பித்துவிடுவார் என்று பயந்து "இலை போட்டாய்விட்டது" என்று சொல்லி எல்லாரும் எழுந்திருக்கும் கலகலப்பில் பண்டிதரையும் பாட்டையும் மறக்கடித்தார்.

கலியாண வீட்டை இந்தப் பாடு படுத்தினவர்கள் கம்பராமாயணத்தை விட்டாவைப்பார்கள். கடவுளே! கம்பரைக் காப்பாற்றுவீராக – பண்டிதர்களை விட்டு;

இடைச் சேருகல்கள் பற்றி இந்தவிதமாகப் பேசிக் கொண்டே போகலாம் "பண்டிதவ்வியம்" (வைதவ்வியம் போல் ஒரு வார்த்தை) என்றால் இறுதியில்லாத தத்துவம் அல்லவா. ஆனால் உமிக்குவியலைக் கொழித்துக் கொழித்து அரிசியில்லை, அரிசியில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதும் ஒரு தொழிலா?

ஆனால் இந்த ஆராய்ச்சியெல்லாம் — உண்மைக்கவி, போலிக்கவி — என்கிற ஆராய்ச்சியெல்லாந்தான் பண்டிதர்களுக்கு விளங்கவே விளங்காதே!

உதாரணம்:

சென்ற ஆனந்த விகடன் தீபாவளி மலரில் 'கம்பர் கவிக்கு வந்த வினை' என்று கட்டுரை எழுதியிருந்தேன் ஜடாயு உயிர்நீத்த படலத்திலிருந்து "என் தாரம் பற்றுண்ண" என்ற கவி ரொம்ப பாவம் கொண்ட கவியென்றும், அதை அடுத்து வந்த "சொல்லுடையார் என்போல" என்ற கவி சேருகல், பிதற்றல் என்றும் காட்டியிருந்தேன்.

கட்டுரையை வாசித்துவிட்டு யாழ்ப்பாணத்துப் புலவர் ஒருவர் நான் தள்ளிய பாட்டுத்தான் மிகச்சிறந்த பாட்டு என்று ஸ்தாபிக்க நீண்ட கட்டுரை ஒன்று "இந்து சாதனம்" என்ற பத்திரிகையில் எழுதியிருக்கிறார். விசித்திரமான விஷயங்கள் பலவற்றை எழுதியிருக்கிறார். ஆனால் "எண்ணிலாப் பல்லுடையாய்" என்ற சொற்றொடரை ரொம்ப ரொம்ப அலசி அதுவே மிகச்சிறந்த கவித்துவம் உடையது என்று எழுதியிருக்கிறார்.

எண் இலா = எண்ணிக் கணக்கிட முடியாத ;
பல = எத்தனை எத்தனையோ ;
உடையாய் = உடைகளைத் தரித்தோனே ;

என்று அர்த்தம் பண்ணி ஜடாயுவானவன் எண்ணமுடியாத Featherly Gowns ஆகிய ஆடையை அணிந்தவன் என்று சொல்லி அதன் அழகை அப்படியும் இப்படியுமாகப் பாராட்டி, அத்தகைய விஷயத்தைக்கொண்ட அற்புதமான கவியை முதலியார் அவர்கள் தள்ளிவிட்டார்களே என்று கண்ணீர் வடித்திருக்கிறார் "என்தாரம் பற்றுண்ண" என்ற பாட்டு சாமானியப் பாட்டு என்றும் சொல்லியிருக்கிறார். நாம் சொல்லுவது ஒன்றும் பண்டிதர்களுக்குப் புரியாது என்று தெரிகிறதல்லவா.

பெருந்தோகைப் பாட்டைத் தாங்களும் நண்பர் ராமசாமி அவர்களும் அனுபவித்ததாக எழுதியிருக்கிறீர்கள். எந்தப் பாட்டை எழுதினேன் என்பது ஞாபகமில்லை. "சுந்தரமான பொருப்பு" என்று குறித்திருக்கிறீர்கள், அதிலிருந்து பாட்டை ஞாபகப்படுத்த முடியவில்லை.

இப்போது வேறொரு பாட்டைத் திருத்தத்துடன் சொல்லுகிறேன்.

வாணனாகிய அரசன் ரொம்பவும் பராக்கிரமம் உள்ளவன். அவனுக்குக் கீழ்ப்படிந்துவிட்டால் மற்ற அரசர்கள் காரியம் க்ஷேமந்தான். "வாண எங்களை மன்னிக்கவேண்டும், காக்க வேண்டும்" என்று பணியாதவர்கள்பாடு கஷ்டந்தான், என்பது பாவம். அவனுடைய சேனைகள் படையெடுத்து எதிர்த்தவர்களுடைய நாட்டை நாசக்கோட்டை செய்துவிடும். சோலையெல்லாம் அழிந்துபோகும்: நகரமெல்லாம் தூள் தூளாகச் சிந்திப்போகும், அணைகளையும் கரைகளையும் இடித்தெறிந்துவிடுவார்கள். பிறகு தண்ணீர் வருவதேது, பயிர்செய்கிறதென்றும் பயிரைப் பேணுகிறதென்றும் உண்டா? இப்படியெல்லாம் பாலையாய்ப்போய் மழை பெய்கிறதென்பதும் இல்லாமற் போய்விடுமாம் – பாட்டு:

தீய்ந்து பொழிலாகா,
[1][சிந்தி] நகராகா

ஆர்ந்து மணிநீர்த்
துறையாகா, – ஏந்து² [பயிர்]
³[பே]ணுகா, மாரி
⁴[பெய]லாகா! பொன்னெடுந்தேர்
வாணு! கா என்னுதார்
மண்.

பெருந்தொகை 1163-ம் செய்யுளின் திருத்தம் இது. புஸ்தகத்திலப் பாடம்

(1) "பேர்ந்து" (3) "பூ"
(2) "மூலை" (4) "விழலாகா"

அழகான பாட்டை எப்படிக் கெடுத்திருக்கிருர்கள் பாருங்கள்! தாங்களும் நண்பர் ராமசாமியவர்களும் கவியை அனுபவிப்பீர்கள்.

* * * *

கைகேசி சூழ்வினை 47-ல் தாங்கள் சொல்கிறுறபடி 'ரிதம்' இல்லை. ஏதோ விஷயத்தை (சாதாரணக் கற்பனை) வேகம், தாளம் ஒன்றும் இல்லாமல் எதுகை மோனைகளைக் கோத்து வைத்திருக்கிறது.

கங்குல் நீங்கியது அவமானப்பட்டு; சரிதான். அடுத்து வரவேண்டியது.

"விரித்த பந்தர் பிரித்தாயின
மீனேளித்த வானமே"

இடையில் வந்ததெல்லாம் அனுவசியம்; செய்யுள் வெறும் சொண்டி. நாலாவது அடியில் "கொண்டு தம் வயிறு" என்று எதுகை ஆரம்பிப்பது தமிழல்ல. நயமேயில்லை. இங்கிலீஷ் என்றுல் குற்றமில்லை. இங்கிலீஷ் கவியில் 'ரிதம்' வந்தால் அது Accident.

இதெல்லாம் காரணமாகத்தான் 47-ம் பாட்டு வெறும் பாட்டு என்று சொல்லுகிறோம்.

தங்கள் கேள்விகளுக்கு ஒருவகையாகப் பதில் எழுதி விட்டேன். 35% மார்க்கு கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படி அடிக்கடி பரீக்ஷை வையுங்கள். நான் பாஸ் செய்யப் பார்க்கிறேன்.

வருகிற 21—1—41 அன்று ராமச்சந்திரபுரத்தில் (via Thirumayam) நடக்கும் National Club ஆண்டுவிழாவுக்குப் போகிறேன். "தமிழ்ப் பண்பு" பற்றிப் பேசவேண்டுமாம். தாங்கள் காரைக்குடியில் இருந்தால் அங்குவந்து உறவாட இடம் இருக்கும். எனக்கும் எவ்வளவோ உத்ஸாகமாக இருக்கும்.

அடிக்கடி தங்கள் கடிதம் வந்தால் எனக்கு ரொம்ப குஷாலாயிருக்கும்.

தங்கள் அன்புள்ள,

டி. கே. சிதம்பரநாதன்.

குறிப்பு :—சென்னையில் கோக்கலே ஹாலில் சென்ற செப்டம்பர் மாதம் பாலகாண்டத்தை ஆரம்பித்து (வாரம் ஒரு நாள்) டிசம்பர் 18-உடயோடு முடித்தேன். நேற்று அயோத்தியாகாண்டம் ஆரம்பித்திருக்கிறேன். ஒழுங்காகப் போகும். சீக்கிரத்தில் பாலகாண்டத்தையும், அயோத்தியா காண்டத்தையும் நம்முடையமுறையில் அச்சிட உத்தேசம்.

டி. கே. சி.

வட்டத் தொட்டி சிஷ்யர்கள்

பாஸ்கரன்

மகராஜன்

சோமு

சுந்தரம்

கோபால் பிள்ளை

அருமை நண்பர்

பாஸ்கரன் அவர்களுக்கு

† திருநெல்வேலி வண்ணார்பேட்டை - வட்டத் தோட்டி - இன்றைய தமிழ் இலக்கிய உலகிற்கு நன்கு தெரிந்த ஒரு ஸ்தாபனம், மேலை நாட்டில் டாக்டர் ஜான்ஸனின் Literary Club—க்கு எவ்வளவு முக்கியத்வம் உண்டோ அத்தனை முக்கியத்வம் இந்த வட்டத் தொட்டிக்கு இன்று தமிழ் நாட்டில் உண்டு. தமிழ்க்கவியையும், கம்பனையும், அவன் கவிதா மேன்மையையும் அனுபவிப்பதற்காகவே ஏற்பட்டது இந்த 'வட்டத் தொட்டி'. டி. கே. சி. வீட்டின் நடுமத்தியிலுள்ள வட்டமான தோட்டிக் கட்டில் கூடிய காரணத்தால், வட்டத் தொட்டி என்று பெயர் பெற்றது. அப்பெயரே நிலைத்து விட்டது. "அதன் அங்கத்தினர்கள் எல்லோரும் இலக்கியப் பணியிலே பெரிதும் ஈடுபட்டவர்கள். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் சிறந்த பங்கெடுத்து தொண்டு புரிபவர்கள். பத்திரிகைகளில் கட்டுரை எழுதுவார்கள்; மேடைகளில் ஏறிப் பேசுவார்கள் ; ரேடியோவில் ஒலிபரப்புவார்கள். எல்லா இடத்தும் அவர்களுக்கு ஒரு ஸ்தானம் உண்டு தமிழ் நாடுமுழுவதுமே அவர்களின் வீர முழக்கம் கேட்கிறது இன்று" — என்று ராவ் சாகிப் ஸ்ரீ பால் நாடார் சமீபத்தில் "கார்டியன்" பத்திரிகையில் எழுதுகிறார் என்றால் அதிகம் சொல்ல வேண்டாம் தானே.

வட்டத் தொட்டியின் தலைவர் டி. கே. சி என்றால் அந்த வட்டத் தொட்டியின் ஸ்தாபகர்

அதைத் தாங்கி நிற்கும் "கற்றான்"— ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M. A. நல்ல தமிழறிவு படைத்த பரம்பரையிலே பிறந்தவர். வீட்டிலும் பள்ளியிலும் வளர்த்த தமிழ் ஆர்வத்தை மேலும் மேலும் அவருக்கு ஊக்கியவர் ஸ்ரீ ரா.பி. சேதுப்பிள்ளை. ஆனால் என்று டி.கே.சி யை அண்டி அவரது பிரதம சிஷ்யராக அமர்ந்தாரோ அன்றைய தினத்திலிருந்து தான் தமிழ் என்றால் என்ன? தமிழ்க் கவிதை என்றால் எப்படியிருக்கும்? கம்பன் என்றால் யார்? அவன் காவியம் எப்படிப் பட்டது? என்பதையெல்லாம் தெரிந்து கொண்டார் அவர்.

அதன்பின் அவருடைய பெயர் தமிழ் நாட்டில் பிரசித்தம். பாஸ்கரத் தொண்டைமானைத் தெரியாதவர்களும் அந்தத் 'தொமு' வைத் தெரிந்து கொள்வார்கள்.

சர்க்காரில் பொறுப்பான ஒரு உத்தியோகத்தை வகிக்கிறார். அந்த உத்தியோகத்தில் நேர்மைக்கும் திறமைக்கும் அவருக்கு ஒரு பெயருண்டு. நெருக்கடியான வேலைகளுக்கிடையே கிடைக்கும் அவகாசத்தை யெல்லாம் இலக்கியப் பணியிலேயே செலவிடுகிறார். கவிதை என்றால் உள்ளம் பறி கொடுப்பார். கலை என்றால் அதனைப் போற்ற விரைவார். கம்பன் கவிதையில் தோய்ந்து தோய்ந்து அனுபவிப்பதும், கல்லுக்குள் கனியாக இருக்கும் தமிழர் சிற்பச் செல்வத்தைத் தான் அனுபவிப்பதுடன் பிறரும் அனுபவிக்கும்படி செய்வதுமே அவருடைய பொழுது போக்கு. அவருடைய பணியைத் தமிழ் நாட்டில் மதிக்கிறார்கள் — என்றால் அது போதும் அவருக்கு.

உத்தியோக முறையில் அவர் எங்கே இருந்தாலும் அங்கே டி. கே. சி. போவார். அவருடன் வட்டத் தொட்டியுமே போகும். அங்கே விழாவுக்கு மேல் விழாவாகவே நடைபெறும். "தமிழின் பின் சென்றார் பச்சைப் பசுங் கொண்டலான பெருமான்; அந்தத் தமிழே இன்று இந்த பாஸ்கரன் பின்னே செல்கிறது"– என்று வியப்பார்கள் நண்பர்கள்.

டி. கே. சி. யுடன் பதினைந்து வருஷ காலம் பழகி, அவருடைய தொடர்பால் தனக்குக் கிடைத்த அறிவையெல்லாம் — அனுபவத்தை யெல்லாம் — '**ரஸிகமணி டி. கே. சி.**' என்ற அருமையான நூலிலே கொட்டியிருக்கிறார். 'வாழ்க்கை வரலாறு' — என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்று எல்லோரும் மூக்கில் விரலை வைத்து வியந்து நோக்குகிறார்கள். டி. கே. சி. யோ, "இதேதடா வம்பு" என்று அப்படியே அசந்து போய்விடுகிறார். டி. கே. சி. இந்த பாஸ்கரனை எப்படி மதிக்கிறார் என்பது, அவருக்கு எழுதியிருக்கும் கடிதங்களிலிருந்து மட்டுமல்ல, மற்ற நண்பர்களுக்கு டி. கே. சி. எழுதியிருக்கும் கடிதங்களிலிருந்தும் விளங்கும். டி. கே. சி. யை பாஸ்கரன் எப்படி மதிக்கிறார் என்பதோ பிரசித்தமானது.

"டி. கே. சி.யின் தமிழ்க் காதல், கம்பன் பக்தி, கலையறிவு, பண்பாடு எல்லாவற்றிற்கும் சரியான 'வாரிசு' நமது நண்பர் பாஸ்கரன் தான்—"என்று ஆசிரியர் கல்கி சொன்னால், அது உண்மை என்றே தமிழ் நாடு முழுவதும் ஆமோதிக்கும்.

டி. கே. சி. இந்த சிஷ்யருக்கு இதுவரை எழுதிய கடிதங்கள் அறுபதுக்குமேல். ஆனால் இட நெருக்கடியை உத்தேசித்து ஆறு கடிதங்களே பிரசுரிக்கப் படுகின்றன. ஒவ்வொரு கடிதத்திலும் டி. கே. சி. தன் உள்ளத்தை அப்படியே திறந்து காட்டுகிறார். அன்பையோ, அள்ளியே கொட்டுகிறார்.

ஏயரோ

மீனம்பாக்கம் 2-12-39

நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

தங்கள் அன்பான கடிதம் வந்தது. விளாத்திகுளத்து அறிக்கையைப் பார்க்க ரொம்ப சந்தோஷம். பொதுவாக உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு Red Tape ஒன்றில்தான் சுவை. அதையே இருபத்திநாலு மணி நேரமும், முந்நூற்று அறுபத்தைந்து நாளும் வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டிருப்பார்கள் (ஸிகரட்டை போல) வேறொரு விஷயத்தில் சுவையிருக்கக் கூடும் என்று எண்ணக் கூட அவர்களுக்கு முடியாது. பண்பாடு (Culture) என்பது அவர்களிடம் இருந்தால் ஒவ்வொரு ஊரிலும் எவ்வளவோ திருத்தங்கள் செய்து கிராமவாசம் நகரவாசத்தைவிட மேலானது என்று எளிதில் காட்டியிருக்கலாம். தாங்கள் எங்கே போனாலும் அந்த விதமாகக் கிராமத்தைத் திருத்தி விடுகிறீர்கள். நாங்குனேரி தாங்கள் இருந்தபோது கலகலப்பாய்த்தான் இருந்தது. விளாத்திகுளத்தில் இவ்வளவெல்லாம் நடந்திருப்பதைப் பார்க்கும் போது அவ்வூர்காரர்கள் ரொம்பவும் புண்ணியம் செய்தவர்கள்தான். தாங்கள் விளாத்திகுளத்தில் இருக்கும் போது அங்கு வர வேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. எப்படியோ சமயம் வாய்க்காமல் போய் விட்டது, விளாத்திகுளத்துக்காரர்கள் அதிருஷ்டசாலிகள் அல்ல என்றும் கோயில் பட்டிக்காரர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. எனக்கு சௌகரியம் தாங்கள் கோவில் பட்டியில் இருப்பது தான்.

† தீபாவளி மலரில் தங்கள் கட்டுரை ரொம்பவும் உபயோகமானது. நம்முடைய கலையோ மிகச் சிறந்தது. அதை எடுத்துக் காட்ட வேண்டியது தமிழன் ஒவ்வொருவனுடைய கடமை. மனுஷனுக்கு அறிவுணர்ச்சி எல்லாம் கெட்டுப் போவதற்குக்

† 1939 ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வெளியான 'இருஞ்ஞபுரம்' என்ற கட்டுரை,

காரணம் கலை உணர்ச்சி இல்லாதது தான் என்று Madam Montessori நேற்று மாலையில் அடையாற்று கலாக்ஷேத்திரத் திறப்பு விழாவில் சொன்னாள். ரொம்ப உண்மை. நேற்றுப் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தபோது தங்கள் கட்டுரை தான் ஞாபகத்துக்கு வந்தது. 'நம்முடைய தமிழ் நாட்டில் கலைச் செல்வம் எவ்வளவோ இருந்தும் நம்மவருக்கு அதைப்பற்றிய உணர்ச்சியே இல்லை.' தங்கள் கட்டுரையைப் பார்த்து ஏதோ கோணலும் கொத்தையுமான உருவங்களுக்கு இவ்வளவு தாபம் எல்லாம் வேண்டுமா என்று கூடச் சொல்லுவார்கள் எவ்வளவெல்லாமோ கஷ்டப்பட்டு பொருள் விரயஞ் செய்து சிற்பவேலைகள் செய்து முடித்தார்கள். அவர்களும் பைத்தியக் காரர்கள் தானே! ஆமா, சடையப்ப வள்ளலும் கம்பருமே பைத்தியக்காரர்கள் தான் அவர்களுக்கு! ஆகையால் தங்கள் கட்டுரை நம்மவரில் சிலருக்காவது சிற்பக்கலையின் முக்கியத்தை அறிவுறுத்தும் நல்லகாரியமே.

கம்பர் பற்றிய என்னுடைய ரேடியோப் பிரசங்கங்களை திருச்சி நிலையத்தார் புஸ்தகமாக வெளியிடுவதாகச் சொன்னார்கள். யுத்தம் காரணமாக ஒருக்கால் அதை ஒற்றி வைத்து விடலாம், ஆனால் புதுமைப் பதிப்பகத்தாருக்கு தாங்கள் அதை வெளியிட வேண்டும் என்ற ஆசை. ஆகையால் எப்படியாவது வெளி வந்து விடும் புஸ்தகமாக. தங்களுக்கு நிச்சயமாக ஒரு புஸ்தகம் வந்து சேரும்.

நான் இன்று திருச்சிக்குப் போகிறேன். நாளை இரவு ஏழு மணிக்கு ரேடியோவில் முத்தொள்ளாயிரத்தை பற்றிய பேச்சு. பேச்சு முடிந்ததும் நாளை இரவே செங்கோட்டை பாஸஞ்சரில் திருநெல்வேலிக்கு போகிறேன். கோயில் பட்டிக்கு காலை (திங்கள்) ஆறு மணிக்கு வந்து சேருகிறது. போகும்போது அங்கே இறங்க முடியவில்லை. திரும்பும்போது 7—11—39 அல்லது 8—11—39 வாக்கில் கோயில்பட்டி வந்து தங்கிவிட்டு காரைக் குடிக்குப் போகலாம் என்று எண்ணுகிறேன். காரைக்குடியில் ஒன்பதாம் தேதி இருக்கவேண்டும்.

கோயில் பட்டியானது விட்டம்மாளுக்கு ரொம்ப் பொருத்தமாய் இருக்குமென்று நம்புகிறேன், உடம்பு சீக்கிரம் ஆரோக்கியம் அடையும் என்று நம்புகிறேன். இங்கே எல்லோரும் சௌக்கியம் தான். வட்டத் தோட்டியிலிருந்து தீபாவளி மலருக்கு ரொம்ப விஷயம் வந்திருக்கிறது. நமக்கெல்லாம் திருப்திதானே.

இப்படிக்கு தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

"ஏயரோ"

மீனம்பாக்கம்

21—1—40

நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு

தாங்கள் மிக்க அருமையோடு அனுப்பிய பொங்கல் வாழ்த்து வந்தது. ரொம்ப சந்தோஷம். கைகுவித்து நண்பர்களை வரவேற்கிறது ரொம்ப வாய்ப்பாய் இருக்கிறது. முகப்பிதழானது சட்டமாகிப் படத்தை பின் வாங்கச் செய்வதால் தாங்கள் உருண்டுதிரண்டு நிற்கின்றமாதிரியே இருக்கிறது. முகப்பிதழைப் பின்புறமாக மடக்கி ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் உயரமும் விதியும் மாத்திரம் காட்டி மூன்ருவது பண்பான கனத்தை காட்டாது போய்விடும். நம்முடைய நண்பர்கள் எல்லாரும் "பால் பொங்கிற்ற?" என்று விசாரிக்கிற தங்கள் ஆர்வத்தை அனுபவிப்பார்கள். ஆகவே நல்ல பொங்கல்படி கிடைத்துவிட்டதுதான் எங்கள் எல்லாருக்கும்.

"பாலரை வாழ்த்திய கர்த்தரில்*" தமிழ்ப் பாடலின் பண்பு வாய்ந்திருக்கிறது.

"சின்னஞ் சிறுவர் சிறுமியர்கள் — நிதம்
சிந்தை களிக்கவே வாழ்ந்திருந்தார்"

ரொம்ப நயமாய் அமைந்திருக்கிறது. தாங்கள் கையாண்ட ஆங்கில மூலத்தையும் எதிர் பக்கத்தில் அச்சிட்

---

* கோடைக்கானல் ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது பிஷப் Pakenham Walsh அவர்கள் விருப்பப்படி ஆங்கிலப் பாடலை மொழி பெயர்த்தது.

டிருக்கிறது, ரொம்ப பிரயோசனம். ஆங்கிலக் கவி ஆங்கிலக் காதுகளுக்கு எப்படி இருக்குமோ? நம்முடைய காதுக்கு நன்றுயிருக்கா? இல்லவே இல்லை என்று சாதித்து விடுவேன்.

“ Some Caught
Minnows
in a
net

Some were
much too
small as
yet ”

தாளமும் யாப்பும் தெரிகிறது தான். ஆனால் எப்படியோ கல்த்தச்சன் வந்து காதில் வேலை செய்கிறமாதிரி தான் இருக்கிறது. தமிழிலோ தாளமும் யாப்பும் (சாமானிய விஷயங்கள்) மாத்திரம் அல்ல இசைப் பண்பே காதுக்கு தேன்பட்டு விடுகிறது. தமிழ்ப் பாஷையும் செய்யுளும் இசையோடு ஒட்டிக்கிடப்பதால் பாட்டு இயல்பான முறையில் நடக்கிறது. நமக்கு சுகத்தை விளைவிக்கிறது. ஆனாலும் ஒன்று. தமிழ் எவ்வளவு பயின்றிருந்த போதிலும் அயலார் (ஆங்கிலேயர் தான்) தமிழை அனுபவித்தோம் என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு அதில் நம்பிக்கையும் இல்லை. சரிதான் நம்மவர்கள் ‘ஆங்கிலக் கல்வியை அனுபவித்தோம்’ என்று சொல்லுகிறது ‘மயிலைத் தடவிப்பார்த்துவிட்டு, அடடா! எவ்வளவு அழகாய் இருக்கிறது!’ என்று குருடன் சொல்லுகிற கணக்குத் தான். நம்மவர்களுக்கு நாம் குருடர்தான் என்று சொல்லிக் கொள்ள மனமில்லை. ஆங்கிலேயனும் நம்மைப் பார்த்து ‘எல்லாம் குருடுகள்தான்’ என்று சொல்லிவிட்டால் காரியம்

கெட்டுப்போமே என்று பயப்படுகிருன். இது நம்முடைய தர் அதிர்ஷ்டம்.

* * *

ஜனவரி முதல் தேதி அன்று சிதம்பரத்தில் இருக்க நேர்ந்தது அங்குள்ள நண்பர் கம்பராமாயண வாசிப்புக்கு இடம் பண்ணினுர்கள். வக்கீல்கள் புரொபசர்கள் பலர் வந்திருந்தார்கள். மற்ற ஆடவரும் பெண்டிருமாக மொத்தம் முப்பதுபேர். இடம் சதுரத் தோட்டிக்கட்டு. வட்டத் தொட்டியில் வாசிக்கிறது போல இருபது பாட்டு வாசித்தோம். எல்லாருக்கும் ஒரே வியப்புத்தான்; 'இப்படியும் இலக்கியம் உண்டா ?' என்று வியந்தார்கள். இவ்வளவு நாளும் இது தெரியாமல்ப் போயிற்றே என்று ஏமாற்றத்தை உத்ஸாகமாக வெளியிட்டார்கள். மறு நாளும் வாசிக்கவேண்டும் என்று வற்புறுத்தி என் பயணத்தை ஒற்றிவைத்தார்கள். மறு நாளும் வாசித்தேன். முந்தின நாளை விட அதிகமாகவே அனுபவித்தார்கள். (வியக்காவிட்டாலும்) 'சிதம்பரத்துக்கு அடிக்கடி வரவேணும்; கம்பராமாயண வாசிப்பு நடத்தவேண்டும்' என்று ஆர்வத்தோடு கேட்கிருர்கள். வட்டத் தொட்டியின் கிளை ஒன்றை நிரந்தரமாக அங்கே அமைத்துவிட்டார்கள். வட்டத்தொட்டி விசாலம் அடைந்து வருகிறது சந்தோஷமான காரியம் அல்லவா!

தாங்கள் கோயில்பட்டியிலிருப்பது ரொம்ப சந்தோஷமான காரியம். எப்படியும் 31—1—40 அன்று திருநெல்வேலிக்கு வருகிறேன். தங்களையும் பார்த்துக்கொள்ளலாம் என்று நம்புகிறேன்.

செல்லையாவுக்கு* இப்போது காய்ச்சல் ஒன்றும் இல்லை. உடல் தேறியிருக்கிறது. இன்னும் ஒரு மாசமாவது சலனம் இல்லாமல் நிம்மதியாய் இருந்தால் உடம்பு பழைய நிலைக்கு வந்துவிடும். வைத்தியரும் அப்படியே சொல்கிருர்.

---

* டி. கே. சியின் மகன்.

செல்லையாவும் அண்ணியும் தங்கள் பொங்கல் விசாரிப்பை ரொம்பவும் அனுபவித்துப் பாராட்டினார்கள்.

வீட்டில் அம்மாளுக்கு இப்போது உடம்பு தன்னிலைக்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன். குழந்தைகளும் சௌக்கியந் தானே. தாங்களோ கட்டுமுட்டாய் உருண்டு திரண்டு இருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம்.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்.

வண்ணார்பேட்டை
திருநெல்வேலி
8—5—42

அருமை நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு

நேற்று இரவு ஒரு மணிக்கு இங்கு வந்து சேர்ந்தோம். காலை ஆறுமணி வரையும் கணேசன் அவர்களும் சிதம்பரம் அவர்களும்* நன்றாய்த்தூங்கினார்கள். தோசை காப்பி யெல்லாம் ஸ்ரீனிவாசராகவனுடன் இருந்து சாப்பிட்டார்கள். 8-30மணி பஸ்ஸில் ஏறி நாகர்கோவிலுக்குப் போயிருக்கிறார்கள். நாளைக் காலை இங்கே திரும்புகிறார்கள். நாளை மத்தியானமோ சாயங் காலமோ இங்கிருந்து புறப்பட்டுவிடவேண்டும் என்று சாதிக் கிறார்கள்.

வி. பி. எஸ்$ அவர்கள் இன்று சிறுகாலையில் புறப்பட்டுப் போயிருப்பார்கள். தஞ்சாவூரில் ஒருநாள் தங்கினால்போதும் என்று சொல்லியிருக்கிறேன். ஏதோ சொல்லி விட்டிருக்கிறோம். சொல்லுவதைக் கேட்டால்த்தானே? போர் முனைக்குப் போகத் தயாராய் இருக்கிறமாதிரி தோன்றுகிறது அவர்கள் படபடப்பு.

தேரழுந்தூரில் வருகிற ஆனிமாசம், 2, 3, தேதிகளில் கம்பர் விழாவைக் கொண்டாட மருதூர் கந்தசாமி பிள்ளை அவர்களும் மற்றவர்களும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தங்களைக் கட்டா யம் கூட்டிக்கொண்டு வரவேண்டும் என்று அவர்களும் பால கிருஷ்ணபிள்ளை அவர்களும் எழுதியிருக்கிறார்கள். கணேசன், M. N. S. Ct., ஸ்ரீனிவாசராகவன் மூவரும் தேரழுந்தூருக்கு வர இன்று காலையிலேயே திட்டம் போட்டுவிட்டார்கள். தாங் களும் இப்பொழுதே திட்டம் போட்டுக் கொண்டால் நல்லது.

---

* காரைக்குடி சா. கணேசன் - M. N. S. T. சிதம்பரம் செட்டியார்.

† 'சிந்தனை' ஆசிரியர்.

$ வெள்ளகால் ராவ் சாஹிப் சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

சங்கரன் கோவிலில் தமிழ்ச் சங்கத் திறப்புவிழா ஒரு மகா நாடு போலவே நடந்தேறியது. ஏதோ நம்முடைய பாக்கியந்தான். சா. கணேசன் M. N. S. Ct., ஸ்ரீனிவாச ராகவன் அங்குவந்து கலந்து கொள்ளநேர்ந்தது. நாம் எல்லாரும் பேசிய பேச்சை சபையோர் ரொம்ப நன்ருய் அனுபவித்தார்கள். நேற்று நடந்த விஷயங்கள் எளிதில் அவர்களது இதயத்தை விட்டுப் போய்விடாது. சங்கம் தழைத்தோங்குவதற்கு வேறு என்னவேண்டும். — வினைத்திட்பம் என்பது ஒருவர் மனத் திட்பம்தானே. தாங்கள் அன்பை எல்லாம் செலுத்தி சங்கரன் கோயில் வாசிகளுக்கு என்னை அறிமுகப் படுத்தி விட்டீர்கள். நேற்றுத் தாங்கள் பேசும்போது அவர்கள் என்னை இந்த உலக ஆசாமி என்றுகூடக் கருதியிருக்க மாட்டார்கள். (நானே கருதவில்லையே) இந்த அறிமுகத்துக்குப் பிறகு என்னுடைய சொல் எங்கே ஏறப்போகிறது அவர்களுக்கு என்றுகூடச் சந்தேகப்பட்டேன். எப்படியோ அவர்கள் எல்லாவற்றையும் மறந்து நான் பேச ஆரம்பித்ததும் அவர்களைச் சேர்ந்தவன்தான் நானும் என்று எண்ண ஆரம்பித்துவிட்டார்கள்; நான் சொன்னதை அறிந்துவிட்டார்கள்; அனுபவித்து விட்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்துக்கு எப்படியோ சிமெண்ட் கான்கிரீட் அஸ்திவாரம் போட்டாயிற்று. நமக்கு இனி கவலை இல்லை.

தாங்களும் அம்மாளும் செய்த விருந்தோம்பலை மறக்க முடியாது. ஸ்ரீனிவாசராகவன், M. N. S. Ct., கணேசன் மூவரும் அனுபவித்தார்கள். நானும் வி. பி. எஸ். அவர்களுமோ உடல் நலம் பெற்ருேம். 7—5—42ம் தேதியை அரியதோரு நாளாகத் தினக் குறிப்பில் பதிந்துக்கோள்ளவேண்டியது தான். இந்த மாதிரிப் பத்து நாட்கள் ஒருவருக்கு ஒரு வருஷத்தில் கிடைக்குமானல் பெரிய லாபம்தான். வாழ்க்கைக்குள் ரஸம் புகுந்துவிடும். தம்பி சிதம்பரம்* குழந்தைகள் எல்லாரும் விருந்தோம்பலில் பங்கெடுத்துக்கொண்டது அலங்காரமாய்

* தொ. மு. சிதம்பரரகுநாதன்—'முல்லை' ஆசிரியர்.

இருந்தது. நல்ல பயிற்சிதான் அவர்களுக்கு. நெருக்கடியான வேலைக்குள் தாங்கள் கன்றும் கருத்துமாய் விருந்தோம்பிய தைப்பற்றி, சா. கணேசன், ஸ்ரீனிவாசராகவன், M. N. S. Ct., நானுமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

இடம், பொருள், ஏவல் மூன்றும் வெகு சிறப்பாய் அமைந்தன. ரொம்ப சந்தோஷம்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

'கல்கி' ஆபீஸ்
கிழப்பாக்கம், சென்னை
2—10—44.

அருமை நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

தங்கள் அக்கரை காரணமாகவே டிக்கட்டு கிடைத்தது. பிரயாணம் செய்ய முடிந்தது. எழும்பூரில் வந்து இறங்கவும் முடிந்தது. கல்கி, கார், ஆட்கள் எல்லாம் ஸ்டேஷனில்த் தயாராய் நின்றன. சௌகர்யமாகவே கல்கி வீடுவந்து சேர்ந்தேன். இதெல்லாம் ஏது திருநெல்வேலியில் டிக்கட்டு கிடைக்காமல் போனால்.

'கலைவிழாவின்' அழைப்புப் பத்திரிக்கையைப் பார்த்து கல்கி ரொம்ப அழகாய் இருக்கிறது என்று பாராட்டினார்கள். விழா நடைபெற்றது அதைவிட அழகாய் இருந்தது என்று சொன்னேன். உயர்ந்த தோரணையில் இருந்தது என்றும் சொன்னேன்.

இதுவரையும் திருநெல்வேலி ஆடவர் பெண்டிற்குத் தமிழ் விழா என்றால் ஒரே தலைவலிதான். நம்மைப் போன்றவருக்கோ ஹிம்சைக்கு உட்படுத்த ஏற்பட்ட காரியம் என்றுதான் தோன்றும். அத்தகைய சூழ்ச்சிகளுக்குத் தாங்கள் உலைவைத்து விட்டீர்கள்.

எல்லாம் முதலிலிருந்து கடைசிவரை அனுபவிக்கத் தக்கதாய் இருந்தது. கவிஞர் தே. வி. அவர்கள் வந்து பிரசன்னமானது சாமானிய காரியமா? எத்தனையோ ஆடவர்பெண்டிர் அவர்கள் பாடல்களைப் பாடுகிறார்கள்; அனுபவிக்கிறார்கள். பாடும்போது கவிஞரைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை உண்டாவது இயல்பு. அந்த ஆசை தீரும்படி கவிஞரைக் கொண்டுவந்து காட்டினீர்கள். அருமையான வாழ்த்துப்பத்திரம் அழகான முறையில் அமைத்துக் கொடுத்தீர்கள். இதில் எல்லாம் கவிஞருக்கும் குடும்பத்தாருக்கும் எவ்வளவோ திருப்தி. அதைவிட ஒருவகையில் வந்திருந்த சபையோருக்குத் திருப்தி அதிகம்.

தங்கள் மூலமாகத் திருநெல்வேலி தமிழ்க் கவிதைக்குச் செய்யவேண்டிய கடமையை நன்றாய் செய்துவிட்டது. கவிஞரோடு சேர்த்து என்னையும் ரொம்ப ரொம்பப் பாராட்டி விட்டீர்கள். எல்லாவற்றிற்கும் என் மனமார்ந்த நன்றி.

தங்களுக்கு ரொம்ப சிரமம். ராஜேஸ்வரிக்கும் சிதம்பரத்துக்கும்* மற்றும் உத்தியோகஸ்தர்களுக்கும் ரொம்ப சிரமம். சிரமத்தால் ஒருபாதகமும் இல்லை. சிரமத்துக்குமேல்த் தான் கூலி கிடைத்துவிட்டதே. அபூர்வமான விழா அல்லவா நடந்தேறியிருக்கிறது.

* * * *

உபசாரப் பத்திரங்களில் உண்மையும் உணர்ச்சியும் எப்படித் துலங்குகின்றன என்று வாசித்துப் பார்த்தவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். உபசாரப் பத்திரம் உண்மைப் பத்திரமாய் இருப்பதாலேயே அனுபவிக்க கூடியதாய் இருக்கிறது. தமிழின் கதி (Style) வெகு அழகாய் இருக்கிறதென்று எல்லாரும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

கவிஞாது கவி இலக்கணம் வெகு அருமையாய் வாய்ந்திருக்கிறது. இந்தமாதிரி இலக்கணம் தொல்காப்பியர், பவணந்தி, தண்டி, மற்றும் யாப்பியலைக் கலக்கிய பிரகிருதிகள் ஒருவரும் எழுதவில்லை. அந்த இலக்கணத்தைத் தாங்கள் வெள்ளிப் பேழைக்குள் வைத்து துலக்கியிருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம். என்னையும் நீங்கள் லேசில் விடவில்லை. வெளுத்து வாங்கி விட்டீர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

கம்பருக்கு நான் செய்த சேவைகளில் எல்லாம் பெரிய சேவை—அவரை அனுபவித்த சேவைதான். நான் அறிந்த காரியத்தை "ஊரார் அறிந்ததில்லையே" என்று சொன்னால் ஈடு பாட்டைக் குறிக்கிறதே ஒழிய அகம்பாவத்தைக் குறிக்காது.

* கலைவிழா காரியதரிசிகள் ராஜேஸ்வரி பாஸ்கர், A. சிதம்பரம்.

ஈடுபாடுகளைச் சேர்ந்த உண்மை இது. ஆகையினால் யாரும் என்னோடு சண்டைக்கு வரக்கூடாது.

ஆனால் சண்டைக்கு வரக் காரணங்கள் பல இருக்கின்றன. ஒன்று:-விறகு பஞ்சத்தைக் கவனியாது வேண்டாத காரியத்தைச் செய்துவிட்டேன் என்று புகார் சொல்லலாம். கம்பரை எரித்து பெரிய தீ வளர்க்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிற வர்களுக்கு எரிதுரும்பு குறைந்துவிட்டதே என்று வருந்துவதில் பொருள் இருக்கத்தானே செய்கிறது. இரண்டு:- கம்பரைப் படிக்க ஜன்மம் காணாதே என்று பயந்து அதைத் தொடாதே இருந்தவர்களை எல்லாம் கம்பரைப் படிக்கச் செய்து காலத்தை வீணாக்கச் செய்துவிட்டாய்! என்று என்னை அதட்டலாம். மூன்று:- நல்ல மலையாளத்து அப்பளம். வாயிலே போடவேண் டியது – பல்லைத் தொடவேண்டியது, அப்படியே பொரு பொரு என்று தூளாய்ப் போய்விடும். 50 (ஐம்பது) அப்பளத்தையும் தீர்த்துவிடலாம் என்று படும். நம்மிடம் வஞ்சம் இல்லை. போடு வார் இல்லை என்பதுதான். போட்டால் மாயமாய்ப் போய் விடும். அப்பேர்ப்பட்ட அப்பளத்தில் இரண்டொரு மணலைத் தூவி விடவேண்டும். அப்பளத்தைக் கடிக்கும்போது இதோ இருக்கிறேன் நான் என்று கல் சொல்லிவிடும். பல்லின் பாட்டை சொல்லவேண்டுமா; வேண்டாம். அப்பளக்கூடையில் வறுத்து வைத்த அப்பளம் அப்படியே இருந்துவிடும். மிச்சந்தான்.

கம்பன் பாடல்களும் அப்பளம் போலத்தான். பிழை பட்ட பாடம் இருந்தால் பாடல் மிச்சம்தானே. 'கல்லை எப்படி எடுக்கலாம் நீ' என்று கோபிக்கிறார்கள்.

* * * *

அநேகர் இந்தவிஷயங்கள் சம்பந்தமாக வாய் எடுத்துப் பேசப்பயப்படுகிறார்கள். "டி. கே. சி. கம்பராமயணத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்" என்று வாய்தவறிச் சொல்லிவிட்டால் எங்கே ஜனங்கள் ராமாயணத்தை எழுதினது கம்பர் அல்ல, டி. கே. சி. தான் என்று தப்பாய் எண்ணிவிடுவார்களோ என்று

பயம். கம்பரிடத்தில் எவ்வளவு விஸ்வாஸம் பார்த்தீர்களா? 'டி.கே.சி.யைக் குறைவாய் மதிக்கிறேன் என்பதல்ல, கம்பரை அதிகமாய் மதிக்கிறேன் என்பதுதான் விஷயம்:'

"Not that I love Cæsar less
But that I love Rome most"

தங்களுக்கு இப்படி எல்லாம் சூத்திரங்கள் செய்யத்தெரியவில்லை. செருகுகவிகளை அகற்றினது பற்றியும் பாடல்களைத் திருத்தியது பற்றியும் மிக்க அனுதாபத்தோடு பாராட்டி பேசியிருக்கிறீர்கள். தாங்கள் சொன்னால் போதுமே எனக்கு. பண்டித உலகம், ஸ்காலர் உலகம் எல்லாம் சேர்ந்து கருத்தச் செண்டாவைப் பிடித்து வானத்தை மூடட்டுமே.

"மோனைக் கோடிகளின்
காடு, நெடுவெளி
மூடி அடங்கலும்
ஓடி யிருண்டபின்,—
ஏனைச் சுடர் விரி
இடபகேதனம்
எழுந்து திசை திசை
விளங்கவே"— குறவஞ்சி.

இருட்பிழம்புக்குள் கிழித்துக்கொண்டு வருகிறது தங்கள் பாராட்டு, C. R. அவர்களின் பாராட்டு, கல்கியின் பாராட்டு கவிஞர் தேவியின் பாராட்டு; இவைகளின் ஒளி, ஒளியின் அழகை அனுபவிப்பதற்கு இருட்டு எவ்வளவு அவசியம் தெரிகிறதா!

ராஜேஸ்வரியின் நடிப்பு நல்ல தோரணையிலிருந்தது: சகாக்களைகூட்டுவதற்கு அவளுக்கு அபாரமாய்த் திறம் இருந்திருக்கிறது. அந்தப் பெண்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒத்துழைக்கச் செய்கிற காரியம் எளிதா?

வந்தனோபசாரம் சொல்லுவது எப்பொழுதும் கஷ்டம், அதற்குவேண்டிய நன்றிபாவம் நமக்கு வருவதில்லை. ராஜேஸ்வரிக்கு தெளிவாய் வந்தது. எல்லாவற்றையும்விட அவள் என்னிடம் காட்டிய அன்பும் பரிவும் வெகு அழகு. அருமைப் புதல்விக்கு என் மனமார்ந்த ஆசி.

தங்கள்

டி. கே. சி.

c/o கல்கி,
கீழ்ப்பாக்கம் சென்னை,
17—10—45.

அருமை நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

அருமைப்புதல்வி ராஜேஸ்வரி 7-10-45 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதற்குப் பதில் இனிமேல்தான் எழுத வேண்டும். எப்பொழுதும்போல் அழகாய் உண்மை பொதிந்ததாய் இருக்கிறது கடிதம்.

மேல்நாட்டுப் பேராசிரியர்கள் சொல்லுவார்கள் பெண்டுகள்தான் கடிதம் எழுதத் தகுதி உள்ளவர்கள் என்பதாக: ஆனல் இலக்கியம் என்றலும் கடிதமாய் விஷயத்தை எழுதுவதுதானே; தான், வாசகர், விஷயம், மூன்றும் ஒன்றுபட்ட முறையில்ப் பேசவேண்டும். அப்போது இலக்கியம் பிறந்துவிடுகிறது. இது ஏதோ வேதாந்த ரகசியம்போல் ஒலிக்கிறதே என்று தோன்றும். அப்படி ஒன்றும் இல்லை, எழுதுகிறவர்,— வாசிப்பவர் மனசிலிருந்துகொண்டு எழுதுகிறர் என்றல் இருவரும் சேர்ந்து எழுதுகிறர்கள் என்று சொல்வதில்ப் பிசகில்லை. இனி விஷயமே பேசுகிறது என்று சொல்லும்போது தானே சங்கடம் வருகிறது. கடிதத்தில் அடுத்தவீட்டுக் குழந்தையைப்பற்றி எழுதுகிறதென்றல் எழுதுபவருக்கு எவ்வளவு ஆசை குழந்தையிடத்தில் இருக்கிறதோ அவ்வளவு ஆசையும் வாசிப்பவர் உள்ளத்திலும் ஏறிவிடுகிறது. அவ்வளவுதான். குழந்தை அப்படியே முன்னல் வந்துவிடுகிறது. அப்படி விளையாடும், இப்படி விளையாடும், அதற்குக் கொஞ்சம் காய்ச்சல் – குணமாய்விடுகிறது; விளையாடாமல் இரு என்றல் இருக்கமாட்டேன் என்கிறது. இப்படி எல்லாம் குழந்தை தெள்ளத் தெளிந்தவிதமாக நம் கண்முன் வந்து நின்று காட்சி அளிக்கிறது. "குழந்தை பேசுகிறது" என்று விஷயத்தைக் குறித்துச் சொல்லலாம் அல்லவா.

அப்படியேதான் கடிதத்தில் கையாளும் எந்த விஷயமும்.

* * * *

நமக்குத் தெரியும்,—நூல்களின் தாரதம்மியத்தைப்பற்றித் தாறுமாறுய்ப் பண்டிதர்கள் பேசுவார்கள் என்பது. கம்பருக்கு மேல் காளமேகம் என்று சொல்வதைக் காதாரக் கேட்டிருக்கிறோம். இந்த விஷயம்பற்றிக் கடிதத்தில் எழுத ஆரம்பித்தால் விஷயமே பேசுகிறது என்று சொல்லலாந்தானே. கடிதத்திலும் இலக்கியத்திலுந்தான் இப்படிச் சொல்லுவது பொருந்தும். ஆனல் சையன்ஸ் சம்பந்தமாக அவ்வளவாகப் பொருந்தாது. அதிலும் பொருந்துவதாகக் காணப்பட்டு விட்டால் இலக்கியமாய்ப் போய்விடும் அது. Tyndall's "Fragments of Science for the Unscientific People" என்ற கட்டுரைத் தொகுதியை வாசித்தால் விஷயமே முன்வந்து பேசுவதாய் இருக்கும். அது காரணமாக அந்த நூல் இலக்கியந்தான்.

ராஜேஸ்வரியின் கடிதத்துக்கு பதில் எழுதுவதை ஒற்றிப் போட்டுவிட்டு கடிதத்திலிருந்து இவ்வளவு நீண்டு போகிறது வியாக்கியானம் இருக்கட்டும்.

19—10—45 அன்று போட்மெயிலில் ஏறி எட்டயபுரம் போகிறேன். 21-ஆ ராஜாவின் பிறந்தநாள். அன்று எட்டயபுரம் கோயிலை ஹரிஜனங்களுக்குத் திறந்துவைக்கப் போகிறார்கள் ராஜா. அதற்காக ராஜாஜியும் வருகிறார்கள்.

23-ஆ பிற்பகல் கோயில்பட்டியிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வருகிறேன். 22-ஆ கோயில்பட்டியிலேயே தங்க உத்தேசம். சுப்பராயலு நாயுடு* அவர்களைப் பார்த்துவிட்டுவர

*டி. கே. சி. ஸ்ரீ திவான்பஹதூர் ஆவுடையப்ப பிள்ளை அவர்களின் உற்ற தோழர். பழைய சத்குண சபா—தலைவர்.

உத்தேசம். ஆகவே 23-உ சாயந்திரம் வண்ணார்பேட்டை வந்து சேருகிறேன். தங்களை ராஜேஸ்வரியை எல்லாம் பார்க்க ஒருநாள் வசதி வைத்துக்கொண்டு வருகிறேன்.

தாங்கள் 19-உ ஆழ்வார்மொழியிலிருப்பதாக அழைப்பிலிருந்து தெரியவருகிறது. ரொம்ப சந்தோஷம்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

முகாம்,
சென்னை,
22—1—46.

அருமை நண்பர் பாஸ்கரன் அவர்களுக்கு,

வி. ஆர். எம். செட்டியார் அவர்களிடமிருந்து புஸ்தகம் வந்துவிட்டது. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் வந்தது. உரையை அப்புறப்படுத்திப் பார்க்கவும், ஏதோ ஒரு அழகான புஸ்தகம் அல்லவா வந்திருக்கிறது — கைக்கே அலங்காரமான புஸ்தகம் என்று மிக்க திருப்தியோடு கையில் வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தேன். பிறகு தெரிந்து விட்டது,—என்னைப்பற்றிய புஸ்தகம்தான் என்று—பயமே உண்டாய்விட்டது. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்பதுபோன்ற பயந்தான். புஸ்தகத்தை ஊடே ஊடே வாசித்துப் பார்த்தபோது பயம் போய்விட்டது, லஜ்ஜை ஏற்பட்டுவிட்டது. அப்படியே புஸ்தகம் மேசைமேல்க் கிடக்கிறது பிடிக்கவில்லை. ஆனந்தி*யைக் கூப்பிட்டு மேலட்டை ஒன்று போட்டுக் கொண்டுவரச் சொன்னேன். அப்படி மேலட்டை போட்ட புஸ்தகத்தைத்தான் கையில் வைத்துக்கொண்டு படித்தேன். வந்தவர் போனவர்களுக்கு ஏதோ ஒரு புஸ்தகத்தை—எனக்கு சம்பந்தம் இல்லாத புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கிறேன் என்றுதானே படும்.

* * * *

அணையடைச்சேலையில் வைத்துப் பிள்ளையை எடுத்தமாதிரி, வெகு ஜாக்கிரதையாய் வெகு அருமையாய் என்னைக் கையில் எடுக்கிறீர்கள்.

பெரியாழ்வார் ஆய்ச்சியர்கள்—அவர்களுக்கு என்ன ஆசை, ஆர்வம், எல்லாம் ஏற்பட்டதோ அவ்வளவும் தங்களுக்கும் உண்டாய் விட்டது. தங்கள் பேச்சை வைத்துப் பெரியாழ்வார் பாசுரங்களை நன்றாய் விளக்கலாம். ஆழ்வார் குழந்தை

---

* ஆசிரியர் கல்கியின் மகள்

யோடு எப்படி ஒட்டுகிறரோ அப்படியே தாங்களும் என்னேடு ஒட்டிக்கொண்டீர்கள்.

மனசில் உண்டான எழுச்சிகளை அப்படி அப்படியே கொட்டி விட்டீர்கள். கொஞ்சம் குறைத்துக் கொட்டி யிருக்கலாமே என்று அடிக்கடி படத்தான் செய்கிறது. ஆனல் கரைபுரண்டுவரும் அன்பை யார் தடுக்க!

படிக்கும்போது அனுபவித்துக்கொண்டிருந்தது விஷயம் பற்றி அல்ல. வார்த்தைக்குப் பின்னல் துடித்துக்கொண் டிருந்த தங்கள் தூய உள்ளத்தைத்தான் பார்த்து அனுப வித்துக் கொண்டிருந்தேன். அன்பானது தான் பிறக்கும் உள்ளத்தை ஆனந்தமயமாக்குகிறது. அதோடு எந்த உள்ளத்தில் பாய்கிறதோ அந்த உள்ளத்தையும் ஆனந்தமயம் ஆக்குகிறது. ஆகவே நம்மிருவருக்கும் ஆனந்தப்பேறு கிடைத்து விட்டது; போதும்.

தங்கள் அன்பு, ஆர்வம், உல்லாஸம் எல்லாவற்றையும் பேச என்ன என்ன கும்மாளி எல்லாமோ போட்டுக் கூத்தாடுகிறது தமிழ். இவ்வளவு கூத்தாட்டமும் வேறு ஒரு பொருளைச்சுற்றி நடந்தால் எவ்வளவோ நன்ருயிருக்குமே என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனல்த் தமிழின் விளையாடல்களைக் காட்டவா புஸ்தகம் எழுதியிருக்கிறது.

இங்கே, ஆனந்தி, ஆனந்தியின் அம்மா, எம். எஸ். சதாசிவம், கல்கி, ராஜாஜி எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம். கலியாணப் பெண்ணை ஜோடித்த மாதிரி மேலே சொன்ன பாத்திரங்களை வைத்து புஸ்தகத்தை ஜோடித்துவிட்டீர்கள். ரொம்ப சந்தோஷம்.

ஐம்பது வருஷத்துக்குமுன் என்னைப்பெற்ற அண்ணி காலம் சென்று போனள். அவளுக்கு எவ்வளவோ சந்தோ

ஷத்தை அளித்திருக்கும் புஸ்தகம். அவள் ஸ்தானத்திலிருந்து இப்போது அனுபவிக்கிருள் அருமைப் புதல்வி ராஜேஸ்வரி.

மிக்க நன்றியுடன்,
டி. கே. சிதம்பரநாதன்

அருமை நண்பர்

மகராஜன் அவர்களுக்கு,

"Wanted a Red Red Revolution in Tamil Literature" — என்பது ஒரு பிரசங்கத் தலைப்பு. சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில், Y.M.C.A. ஆதரவில் பேச்சு நடந்தது. பேசியவர் ஒரு இளைஞர். B. Sc. B. L. பட்டம் பெற்று அப்போதுதான் ஊருக்குத் திரும்பியிருந்தார். காதுகளின் அடிவரை நீண்டிருந்த 'கிருதா' அவரை வீர மறவரோ என்று அச்சுறுத்தியது. பேச்சோ காரசாரமாய் இருந்தது. "தமிழ்க் கவிதையில், தமிழ் வசனத்தில், தமிழ்ப் பத்திரிகையில், தமிழ்ப் புத்தகங்களில், தமிழில் எழுதும் ஜீவிய சரிதங்களில் எல்லாம் புரட்சி வேண்டும்" — என்று புரட்சிப் பிரசங்கமே செய்து தீர்த்துவிட்டார் அவர். பேச்சு ஆங்கிலத்தில் இருந்தது என்பதுதான் ஒரு குறை. மற்றப்படி பேச்சில் தொனித்த ஆர்வம் இருக்கிறதே, அது அநேக இளைஞர்களை அன்றே பற்றிக்கொண்டது. அன்று முதல் அவர் நெல்லை இலக்கிய இளைஞர்களுக்குள்ளே தலைமையே வகிக்க ஆரம்பித்துவிட்டார். அந்த நண்பர்தான் ஸ்ரீ S. மகராஜன் B. Sc. B. L. விருத்தாசலத்திலும் தூத்துக்குடியிலும் டிஸ்டிரிக் முன்சீப் வேலை பார்த்துவிட்டு இப்போது ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மாற்றலாகி அங்கே வேலை பார்த்து வருகிறார். வட்டத் தொட்டியின் சிறந்த அங்கத்தினரில் அவரும் ஒருவர். பாஸ்கரத்

தொண்டைமானேடு போட்டி போட்டுக் கொண்டு, தாம் போகும் இடங்களுக்கெல்லாம் டி. கே. சியை அழைத்து விழாக்களும், விருந்துகளும், உபசாரங்களும் செய்து தீர்க்கிருர் கொஞ்சக் காலமாக.

பழைய பழக்கத்தில் சிலசமயம் ஆங்கிலப் பிரசங்கங்கள் ஒன்றிரண்டு நிகழ்த்திஞலும் இப்போது பேசும் பெரும் பேச்செல்லாம் தமிழிலே தான். "தமிழைவிட ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்ட முடியும் என்று நம்புகிறேன். ஆனல் தமிழ்ப் பேசினல்த்தான் சபையோரை மகிழ்விக்க முடியும் என்று தெரிகிறது" — என்பது தான் அவருடைய தற்போதைய சித்தாந்தம்.

டி. கே. சியை எங்காவது தலைமை வகிக்க கூப்பிட்டால், அக்கூட்டத்தில் அவர் பேசுவதற்குச் சிபார்சு செய்யும் பேர்வழிகள் இரண்டு பேர். ஒன்று மகராஜன்; மற்ருருவர் பாஸ்கரன். டி. கே. சியைத் தலைமை வகித்து நடத்த இணங்கும்படிச் செய்ய ஒன்றே ஒன்றுதான் வழி. பாஸ்கரனும் மகராஜனும் பேச இணங்கியிருக்கிருர்கள் என்று சொன்னல் போதும். மூச்சுப் பேச்சுக்காட்டாமல் தலைமை வகிக்க 'சரி' என்று தலையை ஆட்டி விடுவார் டி. கே. சி. இந்த மூன்று பேர்களுக்குள்ளே அத்தனை ஈடுபாடு.

இத்தகைய நண்பருக்கு நான்கு நல்ல கடிதங்கள். எல்லாம் நேருக்கு நேரேயே பேசும், ஹாஸ்யமோ எழுந்தே கூத்தாடும், படித்துத் தான் பாருங்களேன்.

திருக்குற்றலம்,
16—2—44

அருமை நண்பர் மகராஜன் அவர்களுக்கு,

தங்கள் அருமையான கடிதம். 10—2—44 அன்று அனுப்பிய கடிதம் வண்ணூர்பேட்டையில் வைத்து நேற்றுக் கிடைத்தது. ரொம்ப திருப்தியாய் இருந்தது.

நேற்று இரவுதான் இங்குவந்து சேர்ந்தேன். சென்ற நாலு நாளாகத் திருநெல்வேலியில்த்தான் முகாம், அதாவது திருநெல்வேலி, வீரராகவபுரம், வண்ணூர்பேட்டை, பாளையங் கோட்டை ஆகிய இடங்களில் அமர்க்களம் என்று அர்த்தம். தாங்கள் உடனிருந்து நடந்த வைபவங்களை பார்க்கவில்லையே என்று ஆற்ருமைதான். நாலு நாளில் ஐந்து பிரசங்கங்கள் செய்தேன். அத்தனையையும் சகித்துக்கொண்டேயிருந்தார்கள் திருநெல்வேலி நன்மக்கள். அவர்கள் ரொம்ப நல்லவர்களாய்ப் போய்விட்டார்கள். திருநெல்வேலியையும் நம்மவர்களையும் இப்போது இனம் கண்டுபிடிக்கவே முடியாது. அவ்வளவு தமிழார்வம்; என்றும் இல்லாத ஆர்வம்.

போன போன சங்கங்களுக்கு பெண்டுகள் வந்தார்கள்; மாணவர்கள் வந்தார்கள்; கிருஸ்துவ ஆசிரியர்களும் வந்து அனுபவித்தார்கள். St. John's காலேஜில் திரு அன்னக்கிளி என்று ஒரு தமிழாசிரியர். அவர் என்னைப்பற்றி அபாரமாய்ப் பாராட்டிப் பேசிவிட்டார்.

> "டி. கே. சி. யின் கம்பராமாயணம் வெளிவந்தது என்ருல் முதல் முதலாகத் தமிழ்ப் புஸ்தகம் ஒன்று வெளிவந்தது என்றுதான் சொல்லவேண்டும். முன்வந்த புஸ்தகங்களைத் தமிழ்ப் புஸ்தகம் என்று சொல்ல முடியாது. தமிழின் ஒப்பற்ற பெருமையை வெளியிடுவதுதானே தமிழ்ப் புஸதகம். இந்த உண்மையை அறிய தமிழ் உலகுக்கு நூறு வருஷம் ஆகும்." என்றெல்லாம் பாளையங்கோட்டையில் பேசிவிட்டார்.

ஹிந்து கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தில் என்னை வரவேற்றுப் பேசும்போது நண்பர் முத்துசிவன் மிக்க ஆவேசத்தோடும் உணர்ச்சியோடும் என் தமிழ்த்தொண்டைப்பற்றி பாராட்டிப் பேசினர். வந்திருந்த மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்னை சம்பந்தப்படுத்தி ஒரு ஆவேசத்தையே ஊட்டி விட்டார்.

C. M. S. High School Head Master, Mr. M. P. நவமணி என்பவர் இரண்டு நாள் கேட்டார். தமிழ் சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவும் நான் பேசியவற்றில் அபாரமாக ஈடுபட்டுவிட்டார். குருவுக்குச் செய்யவேண்டிய சிசுரூஷையே செய்ய ஆரம்பித்துவிட்டார்.

இந்த விதமாகத் திருநெல்வேலியைத் தமிழார்வம் பிடித்து ஆட்டுகிறது. மனசுக்கு எவ்வளவோ களிப்பை தருகிறது. தமிழுக்கும், தமிழனுக்கும் இனி யாதொரு குறையும் ஏற்படாது என்று உறுதிகூறலாம். இதை எல்லாம் நேராகக் கண்டிருந்தால் என்றும் இல்லாத எக்களிப்பு உண்டாயிருக்கும் தங்களுக்கு.

தாகூர் ஒரு கோடி ரூபாய்க்கு மேல்ச் செலவிட்டும் பங்காளப் பண்பாட்டைத் திருப்தியாகப் பங்காளிகளுக்குள்ளே பரவச் செய்தார் என்று சொல்ல முடியாது. ஆனல் நாம் ரூபாய் செலவழியாமல் தமிழர்களுக்கு ஒரு வகையாகத் தமிழ்ப் பண்பாடு இன்ன தன்மையது என்று தெரியச் செய்திருக்கிரேம். சில மோட்டாப் பண்டிதர்கள்கூட அதை ஒப்புக்கொண்டதாகத் தங்களுக்குப்படுகிறது. நல்ல காலம் பிறந்திருக்கிறது சந்தேகமே இல்லை.

தாங்கள் விருத்தாசலத்திலேயே இருக்கப் போவதில்லை. பல இடங்களுக்கு மாற்றப்பட்டு போவீர்கள். மேலும் மேலும் உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்பீர்கள். தமிழ்ப் பண்பாட்டை விளக்க எவ்வளவோ சௌகரியம் ஏற்படும். அங்கீகாரம் எளிதில் கிடைத்துவிடும், எனக்கு சந்தேகமே இல்லை.

கோயில் மானேஜிங் டிரஸ்டியிடமிருந்தும் கடிதம் வந்திருக்கிறது. 8—3—44 அன்று விருத்தாசலம் வந்து "சமயப் பண்பாடு" என்னும் பொருள்பற்றிப் பேசுவதாக ஒப்புக்கொண்டு கடிதம் எழுதியிருக்கிறேன். இங்குள்ளவர்கள் இப்படி கோயில் கோயிலாகப் போய்ப்பேச உடம்பு இடம்கொடுக்க வேண்டுமே என்று முட்டுக்கட்டை போட்டார்கள். 'கோயில் காரியம் அல்ல; சொந்த வீட்டுக்காரியம். மறுக்கிறது என்கிற பேச்சே கிடையாது' என்று சொல்லிவிட்டேன்.

தங்கள் கடிதம் படிக்கப்படிக்க ரஸமாய் இருக்கிறது: உண்மையும் உணர்ச்சியும் ததும்புவதால் அவ்வளவு ரஸம். *உருளைக்கிழங்கைப்பற்றி பாவம் நம்மைவிட அம்மாளுக்குத் தானே நன்றாய்த் தெரியும். அவர்கள் அதை அனுபவித்தது பற்றி ரொம்ப திருப்தி. நான்தான் அடிக்கடி சொல்லுகிறதுண்டே, தமிழும் கலையும் நம்முடைய சகோதரிகளுக்குப் போக மிச்சம் இருந்தால்த்தான் நமக்கு என்பதாக.

தாங்களும் அம்மாளும் சிவமும் சக்தியும்போல பரிணமித்து விட்டீர்கள். மிக வாய்ப்பான காரியம் இது. நீங்கள் இருவரும் விருத்தாசலத்தில் இருக்கிறீர்கள். நடராஜ நாடார் அவர்களும் புஷ்பம்மாளும் திருமங்கலத்தில் இருக்கிறார்கள். இப்படி எல்லாம் தொண்டர்கள் தமிழ் நாட்டுக்கு இதற்குமுன் வாய்த்ததில்லைதானே.

ஆவுடையப்ப பிள்ளை அவர்கள் மனைவியாரும் சென்ற நாலு நாளும் நான் பேசிய கூட்டங்களுக்கெல்லாம் வந்துகொண்டிருந்தார். பேச்சையும் பாட்டையும் ரொம்ப அனுபவித்தார். நேற்று விடைபெற்று வரும்போது "நாலு நாளும் நன்றாய்ப் பொழுது போனது. நாளைக்கு எப்படிப்போகும் என்று தெரியவில்லை" என்பதாகச் சொன்னார். தமிழ் அவ்வளவு எளிதாக இருக்கிறது.

மக்களை ஹிம்சிப்பதற்கு 'கோதண்டராமன்' போடலாம்; குட்டையில் அடிக்கலாம். தமிழை ஏன் அதற்குக் கருவியாக

* ஒருவர் பாடிய தமிழ் பாடல் ஒன்றைக்கேட்டுச் சுழித்த ரஸிகர் முகத்தை, சுட்ட உருளைக்கிழங்குக்கு உவமை கூறியது.

ஆக்கவேண்டும்? கண்ணைக் குத்துவதற்குக் கரும்பையா எடுக்கவேண்டும்.

அருவியில்த் தண்ணீர் குறைவுதான். ஆனாலும் எங்களை குளிப்பாட்டி விட்டுவிடுகிறது. மற்றப்படி காற்று சுகமாகவே இருக்கிறது. அமைதியாய் இருக்கிறது.

அம்மாள், குழந்தைகளுக்கு என் அன்பு.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்,
2—4—44.

அருமை நண்பர் மகராஜன் அவர்களுக்கு,

தாங்கள் 30-3-44 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. ரஸமயமாய் இருந்தது அது. இங்கே, என் மனையாள், நடராஜன், வேங்கடசுப்பிரமணியம் எல்லாருமாகத் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம். முக்கால்வாசி ஹாஸ்யங்களை நடராஜனே வாசித்துச் சிரித்துக்கொள்ளுகிறான். வந்த நண்பர்களுக்கு அவனே வாசித்துக்காட்டுகிறான். இன்று திவான்பஹதூர் ஆவுடையப்ப பிள்ளையவர்கள் வந்திருந்தார்கள். அவர்களும் வாசித்துப் . பார்த்து ரொம்ப ரொம்ப அனுபவித்தார்கள். ஒவ்வொரு விஷயத்தையும் அனுபவித்து எழுதுகிறீர்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு பண்பாடிருந்தால் அப்படி எழுத முடியும் என்று சொன்னேன்.

நடராஜன் வெள்ளிப்பேழையையும் கொண்டுவந்து கொடுத்தான். அதை ரொம்பப் பாராட்டினார்கள்; அதைவிட உள்ளிருந்த உபசாரப்பத்திரத்தை வாசித்துவிட்டு அபாரமாக அனுபவித்தார்கள்; எல்லாம் 'தங்கள் கைச்சரக்குத்தான்' என்று சொன்னேன். மற்றவர்கள் எப்படி அதுபோல் உண்மையும் உணர்ச்சியும் ததும்ப எழுதமுடியும் என்று சொன்னார்கள் அவர்கள். வேங்கடசுப்பிரமணியத்தை ஒரு பிரதி எடுக்கச்சொன்னார்கள். அவரும் ஒரு பிரதி எடுத்து வைத்திருக்கிறார். தங்களிடம் அச்சுப்பிரதி இருந்தால் ஆவுடையப்ப பிள்ளையவர்களுக்கு ஒரு பிரதி அனுப்பினால் நல்லது. ஆத்திரம் தணியும் அல்லவா !

ஆரணியகாண்டத்தை எப்படி வரவேற்கிறீர்கள். கவியைச் சுவைத்துக் கண்ட உள்ளம் அப்படி எல்லாம் அனுபவிக்கும்! வெளித்தோற்றம் - மணம் - காகிதத்தின் மணந்தான் - எல்லாம் சேர்ந்து வெறிகொள்ளச் செய்யும். கம்பனது உயர்தனிப் பண்பை அறியமுடியாத வித்வான்களுக்குத் தாங்கள் எழுதிய

தெல்லாம் பொருளற்ற எழுத்தென்றே தோன்றும். அவர்களது ஜாதகத்தை அப்படி வகுத்துவிட்டான் பிரமன்.

கம்பன் தனக்கொத்த தோரணையில் வந்தால் அனர்த்தம் தான்: ஒரு பெண்ணின் தனி அரசியலாய்ப் போய்விடும். கலை மடந்தையின் கொடுங்கோன்மை எல்லாவற்றையும் அதட்டி அடித்துவிடும். ராஜாங்கக்காரியங்கள் (சக்திதேவி) பொருள் ஈட்டுங் காரியங்கள் (லக்ஷ்மிதேவி) எல்லாம் அப்படியே கும்பிடு போட்டுவிட்டு ஒதுங்கவேண்டியதுதான்.

இமையவர்கள் மோலி
இணைமலர்த்தாள் சூடச்
சமையம் தொறும்நின்ற
தையல் சிமய
மலைமடந்தை யோடு
மலர்மடந்தை வாழ்த்தும்
கலைமடந்தை நாவலோர்
கண்.

'ஏப்பிரல் மாதம் எப்போது பிறக்கப்போகிறது ஆரணிய காண்டத்துக்குள் முழுக' - என்ற தங்கள் ஆத்திரத்தின் தன்மையைப் பூர்வமாக உள்ள ஒரு கவிஞர் நன்ருய் உணர்ந் திருக்கிருர். மலைமடந்தை ஒதுங்கத்தானே வேண்டியிருக்கிறது.

நம்முடைய இரண்டு கண்ணைக் கொண்டும் தூரத்தைக் கடக்கிறேம். புலமை என்னும் கண்ணைக் கொண்டு காலத்தை யும் கடக்க முடிகிறது.

"நாவலோர் கண்"

என்று அழகாய் சொல்லியிருக்கிருர்.

முதலில் கொடுத்திருக்கிற செய்யுளே தங்களுக்கு அவ்வளவு உவகை பூட்டுகிறது. போகப்போக கம்பரது விசித்திர சிருஷ்டி

வந்து வந்து திணற அடித்துவிடும். தங்களை நிச்சயமாய்த் திணற அடித்து விடும்.

சங்கம் என்ருல் பேசுகிறவரும் கேட்பவரும் சந்தித்தால்த் தான். பேசுகிறவர் பாதிதூரம் நடந்து வருகிருர். கேட்பவரும் பாதிதூரம் நடந்து வருகிருர். விருத்தாசலத்து நண்பர்கள் பாதிதூரத்துக்கு மேலேயே வந்து என்னைச் சந்தித்து வருகிருர் கள். வீட்டில் அளவளாவியது போகட்டும். கோயிலில் வந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தவர்கள் விஷயங்களையும் பாட்டையுமே எப்படி அனுபவித்தார்கள். விருத்தாசலம் இயற்கையிலேயே நல்ல ஊராய் இருந்திருக்கிறது. தாங்களும் அதை அழகாய்ப் பண்படுத்திவிட்டீர்கள். நான் சொல்லநேர்ந்த தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களை ஏன் மறக்கிருர்கள்!

"அவர்களுடைய கோபம் எல்லாம் இப்படித் தலையைக் காட்டிவிட்டு மறைந்து விடலாமா என்று தான்." என்பதி லுள்ள ஹாஸ்யத்தை நடராஜன் அனுபவித்து ரொம்ப ரொம்ப சிரித்தான்.

ரேடியோ பிரசங்கத்தைக் கேட்கவில்லைதான். தங்களும் பேசவில்லை தான். குற்றம் இல்லை. நேரிலே கேட்டுத்தான் ரொம்ப அனுபவித்தேனே.

நல்லசிலை ஒன்றைப் பார்த்தோம்; அனுபவித்தோம் பிறகு அதை உடைத்து எறிந்து துண்டு துண்டாய் கிடந்ததைப் பார்க்காதற்குப் பரிதாபப் படவேண்டுமா?

ஆனாலும் ஒரு லாபம். அதில் ரேடியோ வாசிப்பைப்பற்றிய தங்கள் விமரிசனம் ஒன்று கிடைத்துவிட்டதல்லவா! 'உணர்ச்சி யற்ற விதமாய்ப் பேசுவதே பேச்சு; வாசிப்பதே வாசிப்பு' என்று நமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டார்கள் அண்ணாவிகள் எல்லாம். படித்த பாடம் நம்மைவிட்டு எளிதில் போய்விடுமா? வசனம் இந்தப் பாடுபட்டால் பாடலைப்பற்றி கேட்பானேன். மங்கலவாழ்த்து யாதொரு கஷ்டமும் இல்லா மல் ஒப்பாரி ஆய்விடும்.

தங்கள் பிரசங்கத்தைப்பற்றிய தங்கள் விமரிசனத்தைப் படிக்கப் படிக்க இங்கே எல்லாருக்கும் ஒரே சிரிப்புத்தான். அநேகருக்கு ரெட்டை நாதஸ்வரத்தின்* குறிப்பு இன்ன தென்று விளங்கவில்லை. நான் விளக்கிச் சொன்னேன். ரேடியோவில் உண்மையில் தாங்களும் வாசித்த நண்பருமாக இருவரல்லவா ஒரே சமயத்தில் பேசினீர்கள். An intended comedy ended in a tragedy; அவ்வளவுதான். இரட்டை சங்கீதத்தின் தத்துவத்தை நாம் எல்லாரும் நன்கு உணர வேண்டியது அவசியம். நன்ருய்ப்பாடுகிற சங்கீதத்தை அது கெடுத்தவிடும். பிருந்தா, முக்தா இருவரும் உயர்ந்த சங்கீதத்தை சங்கீதத் தெளிவோடு பாடுகிருர்கள். அவர்கள் பாடுகிற மாதிரி பாகவதர்கள் பாட முடியாது. அவர்களை அழித்துச் செய்தாலும் பாட முடியாது. ஆனுல் அவர்கள் மட்டம் என்று சொன்னுர்கள். மற்றவர்கள் ஒப்புக்கொண்டார்கள். கச்சேரிக்கு வராமலே இருந்துவிட்டார்கள் ஜனங்கள். இது நஷ்டம். ஆனுல் லாபமும் உண்டு - எப்படி.

என்னுடைய நண்பருக்கு இரண்டு பெண் குழந்தைகள். பாகவதரை வைத்துப் பதினைந்து இருபது வருஷமாக சரளி என்ன, கீதம் என்ன, வர்ணம் என்ன, தெலுங்குக் கீர்த்தனங்கள் என்ன, தீக்ஷிதர் கீர்த்தனங்கள் என்ன, இவ்வளவையும் படித்துப்படித்து சங்கீதம் துளிக்கூட வராமல்போய்விட்டது.

---

* டி. கே. சிக்கு பிடிக்காத பல விஷயங்களில் இந்த ரெட்டை நாயனம் ஒன்று. கவிதை, சங்கீதம் முதலிய கவின் கலைகள் சம்பந்தப்பட்டமட்டில் ஒவ்வொருவருக்கு தனித்த உணர்ச்சி, கற்பனை, மனோதர்மம் எல்லாம் இருக்கும். அப்படி இருக்கும் இரண்டுபேர் சேர்ந்து நாதசாத்தை ஒரே படித்தாக ஊதித் தள்ளினுல் அதில் உணர்ச்சி, கற்பனை, மனோதர்மத்துக்கு எல்லாம் இடம் உண்டா? இது இரண்டு பெரிய பிரசங்கிகள் மேடைமீது ஒரே சமயத்தில் ஏறி "சகோதரர்களே! சகோதரர்களே! இன்று நாங்கள், இன்று நாங்கள்; பேச எடுத்துக் கொண்ட விஷயம், பேச எடுத்துக்கொண்ட விஷயம்; என்னவென்ருல்? என்னவென்ருல்?" என்று பேச ஆரம்பித்தால் - பேசித் தீர்த்தால் எப்படியிருக்குமோ அப்படித்தானேயிருக்கும் இந்த ரெட்டை நாயனம் வாசிப்பும் என்று அடிக்கடி கையாண்டி செய்வார் டி. கே. சி.

மிச்சம் மணல் சரக்குத்தான். அதைத் தூர எறிய முடியுமா? முடியாது. ரேடியோ ஆபீசிலுள்ள மைக்கில் அவ்வளவையும் கொட்ட ஏற்பாடாகியிருக்கிறது. இரண்டே பெண்களாய்ப் போய்விட்டது கொஞ்சம் ஏமாற்றந்தான். நாலு பெண்களாக இருந்தால் "விடமுசாயி" 'ரமணீசமா' முதலிய அற்புதமான கீர்த்தனைகளை ஒரேயடியாய் மொத்தமாய்ப் பாடுவார்கள். நாலு சுரம் சேர்ந்துவிட்டால் கேட்பானேன். பிரமாத சங்கீதந்தான்! யார் என்னத்தைக் காண முடியும்? சங்கீதம் என்ற பெயரைத் தான் கொடுத்துவிடுகிறோமே அதற்கு. இரட்டைச் சங்கீதத்தினால் லாபம் இருக்கிறது பார்த்தீர்களா?

என்ன ஏமாற்றம்! என்ன ஏமாளித்தனம்! தமிழ் உலகத்தை தூணில்கட்டி புளிய விளாறுகொண்டு வேளு வேளு என்று வேளுக்கத் தோன்றுகிறது.

மார்ச்சு மாதம் 31ம் தேதி கழிந்துவிட்டதால்த்தான் 15 பக்கம்.* அல்லாத பக்ஷம் இரண்டு பக்கத்தோடு நிறுத்தியிருப்பேன்.

நாளை காரைக்குடிக்குப் புறப்படுகிறேன். 7ம் தேதி திருச்சி ரேடியோவில் பேச்சு. 8ம் தேதி சென்னை. அம்மாள் குழந்தைகளுக்கு என் அன்பு.

தங்கள்,

டி. கே. சி.

---

* நண்பருக்கு கோர்ட் மூடி ரஜாக் கிடைத்திருக்கும் அல்லவா அதனால்த்தான்.

திருக்குற்றாலம்
7—2—46.

அருமை நண்பர் மகராஜன் அவர்களுக்கு,

தாங்கள் 10-1-46 அன்று அனுப்பிய கடிதம் சென்னையில் வைத்துக் கிடைத்தது. உடனே பதில் எழுதாததை மன்னிக்க வேண்டும்.

ஒரு மாதம் வரை சென்னையிலேயே இருக்க நேர்ந்து விட்டது. பாட்டு, நடனம், மீராப்படம் இவைகளைக்கொண்டு ஆனந்தமாய் நாட்கள் கடந்தன.

28—1—46 அன்று நான் இங்கு வந்து சேர்ந்தேன். உடல் ரொம்பவும் தேறி இருக்கிறது. வியக்கவேண்டிய காரியமே. ஆனாலும் மூன்று நாள் ஜலதோஷம் தொண்டைக்கட்டு வந்து தொந்தரவு செய்துகொண்டிருக்கிறது.

திருநெல்வேலி தருமபுரம் மடத்தில் “பேபல் கோபுரம்” ஒன்று இன்று முதல் 11ம் தேதி வரை முனைந்து கட்டிக்கொண் டிருக்கிறார்கள். நானும் ஒரு செங்கல் உதவவேண்டும் என்று கட்டளை பிறந்திருந்தது. அதாவது ஒரு புஸ்தகசாலையைத் திறக்க வேண்டும் என்பதாக. ‘உடல் சரியாக இல்லாததால் வர இயல வில்லை’ என்று தந்தி அடித்துவிட்டேன்.

நம்மோடு ஒருவகையாய்ப் பழகியவர்தானே திருமூலர். அவர் காலமும் இந்தக்காலத்தை ஒட்டியே ஒரே இருட்டடிப் பாய்த்தான் இருந்திருக்கிறது.

“குருடும் குருடும்
குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும்
குழி விழும் ஆறே”

இந்த வாக்கியத்தையும் அதன் வேகத்தையும் கார்லைல் ஆசிரியர் கேட்டால் எப்படி எல்லாமோ கூத்தாடுவார்.

வருகிற 10—2—46 அன்று அம்பாசமுத்திரத்தில் 'தமிழ்க் கழகம் ஒன்றும், பக்கத்தில் 1½மைலிலுள்ள மன்னார்கோயிலில் 'கம்பன் கழகம்' ஒன்றும் ஆரம்பிக்கப் போகிறார்கள். ஒருவருஷ காலமாக வேலைசெய்துவருகிற கழகங்கள்தான். சிலமுக்கியஸ்தர் களுக்கு தமிழில் அபூர்வமான ஆர்வம். ஒருவருஷமாக என்னைத் தொந்திரவு செய்து வருகிறார்கள். எனக்கு சௌகரியம் வாய்க்காமல் போய்விட்டது. இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறேன். 10ம்தேதிக்குள் உடம்பு சௌகர்யப்பட்டுவிடும் என்று நம்புகிறேன்.

தமிழார்வம் அப்படியெல்லாம் குக்கிராமங்களில் கூடப் பரவிக்கிடக்கிறது. புதுயுகம் பிறந்திருக்கிறது என்று சொன்னால் மிகையல்ல. என்னால் மறுக்க இயலவில்லை.

• • • •

தூத்துக்குடியில் சைவ சித்தாந்த சபையின் வருஷவிழா வெகு சிறப்பாய் நிகழ்ந்ததுபற்றி அறிய ரொம்ப திருப்தி. தாங்கள்தான் அநேக சங்கங்களுக்கு ஊசிபோட்டு உயிர் கொடுத்து வருகிறீர்களே. கஷ்டசாத்தியமான அனேக காரியங்களைச் சாதித்துவிடலாம் என்பதற்குத் தாங்கள் எடுத்துக் காட்டாய் இருக்கிறீர்கள். விருத்தாசலம் பண்பாடுடையதாய் மாறியது. தூத்துக்குடியும் மாறியிருக்கிறது. ரொம்ப சந்தோஷம்.

R. P. சேதுப்பிள்ளை அவர்களுக்கு நெடுகிலும் தமிழில் மிக்க ஆர்வம் உண்டென்பது வெளிப்படை. தலைமை உரையில் அதுவந்து உதவியிருக்கிறது. ரொம்ப சந்தோஷம். அவர்களுடைய ஒத்துழைப்பு நமக்கெல்லாம் ஏற்பட்டால் எவ்வளவோ உதவியாய் இருக்கும். சந்தேகம் என்ன! சென்னையிலிருந்து திரும்புகிற அன்று எழும்பூருக்குப்போய் அவர்களை வீட்டில் பார்த்துவிட்டு வந்தேன். ரயிலுக்குப் போகவேண்டிய அவசரமாய் இருந்ததால் சாவகாசமாகப் பேச முடியவில்லை.

தமிழ் வளர்ச்சியைப்பற்றி அவர்களிடம் விரிவாய்ப் பேசி இருக்கிறீர்கள் என்பது தெரியவருகிறது. அப்படிப் பேச வேண்டியது அவசியந்தானே. அப்படி எல்லாம் பேசிவந்த காரணத்தால்த்தானே, தூத்துக்குடித் தமிழ்ப் பண்டிதர்களுக்குத் தமிழ்ப் பண்பாட்டை நேர்முகமாகப் பார்த்து அனுபவிக்க முடிகிறது.

நண்பர் பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் ஒரு வேடிக்கையே பண்ணியிருக்கிறார்கள். என்னைப்பற்றி ஒரு புஸ்தகமே (பாட்டில் அல்ல) வசனத்தில் எழுதிவிட்டார்கள். வெளியாகியும் விட்டது. இனி என்ன செய்யக்கிடக்கிறது.

பாஸ்கரனது உள்ளம் ஆனந்தப்படுகிற உள்ளம்; கும்மாளி போடுகிற உள்ளம்; குழந்தை உள்ளமே. இந்தப் பண்பைப் புஸ்தகத்தில் முதலிலிருந்து கடைசிவரை காணலாம். உல்லாசம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பூனைக்குக் கொண்டாட்டம். எலிக்குத்தான் திண்டாட்டம். என் பாடுதான் பெரும் பாடாய்ப் போகிறது! அதனால் என்ன?

பிரிவி கவுன்ஸில் தீர்ப்புத்தான் இருக்கிறதே:—

"அறையும் ஆடரங்
கும்மடப் பிள்ளைகள்
தரையிற் கிறிடில்த்
தச்சரும் காய்வரோ"!

புத்திசாலிகள் அனுபவிக்கவேண்டியதுதான்.

* * * *

12—2—46 அன்று மறுபடியும் சென்னை போகிறேன். அங்கிருந்து பம்பாய்ப் பக்கமுள்ள ஒரு ஆரோக்கிய ஸ்தலத்துக்கு (Health Resort with Warm Natural Springs) சதாசிவம், எம். எஸ். நான் மூவரும் போவதாக உத்தேசம். அவர்களுக்காக நான் போகிறேனா? எனக்காக அவர்கள் வருகிறார்களா?

என்பது தீராத கணக்கு. பதினைந்து நாள் அங்கே தங்க உத்தேசம். உடம்பை அங்குள்ள வெந்நீரில்த் துவைத்தால் (வண்ணார்கள் மாதிரி) உடம்புக்கு நல்லது என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். பெரிய பெரிய டாக்டர்கள் மெள்ள மெள்ளத் தண்ணீரிடம் வருகிறார்கள்.

எத்தனையோ வெற்றிபெற்ற வீர மருந்துகள் வெற்றிவிழாக் கொண்டாடிக் கொண்டிருந்த காரியம் நமக்குத் தெரியும். அவைகளை டாக்டர்கள் இப்போது உபயோகிப்பது கிடையாது. அனேக நோயாளிகள் பிழைத்துப் போகிறார்கள். 'பெனிசிலின்' முதலிய சில புது மருந்துகள் நல்ல வேலை செய்து வருகிறதாகத் தெரிகிறது. மக்கள் இனத்துக்கு நல்ல காலம்.

* * * *

தூத்துக்குடி மார்ச்சு மாதத்தில் சௌகரியமாய் இருக்கும். வீடோ வெகு வாய்ப்பு. அம்மாளுடைய பக்குவமும் விருந்தோம்பலும் வா வா என்று அழைத்துக்கொண்டே இருக்கின்றன. சிலநாள் தங்க வசதி செய்துகொண்டு வருகிறேன். அம்மாள் குழந்தைகள் எல்லோரும் சௌக்கியந்தானே.

தங்கள்.

டி. கே. சிதம்பரநாதன்.

திருக்குற்றலம்
13—5—46

அருமை நண்பர் மகராஜன் அவர்களுக்கு

புனலூருக்குப் போய்விட்டுக் குற்றலம் வருவீர்கள் என்று நேற்று வரையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். செங் கோட்டை அம்பலவாண நூல் நிலையத்தின் ஆண்டுவிழாவுக்கு எப்படியும் வந்துவிடுவீர்கள் என்று வேறு எதிர்பார்த்தேன். எல்லாருமே, பாஸ்கரன் உள்பட எதிர்பார்த்தார்கள். வராதது பெரிய ஏமாற்றமே.

செங்கோட்டையில் விழா வெகுவிமரிசையாய் நடந்தது. திருவாவடுதுறை ஆதினத்தின் ஆதரவில் நடந்தது. ஆனாலும் செங்கோட்டையிலுள்ள சைவமக்கள் மிக்க ஊக்கத்தோடு வேலை செய்தார்கள். பொதுவாக அவர்கள் மூன்றும் பேஸ்து வைத்த மாதிரிதான் இருப்பார்கள். 'தான் பிறந்திருக்கவேண் டாமே!' என்ற பாவம் முகத்தில் வழியும். அதோடு நிற்கிறதில்லை 'நீ என் பிறந்தாய்?' என்று நம்மைப் பார்த்துக் கேட்கிற அழகிய பாவமும் இருக்கும்.

இதற்கெல்லாம் காரணம் தமிழ்ப்புலவர்களை காண நேருவதுதான். புலவர்கள் என்றால் கல்லுளி மங்கன்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். தங்களையே கோரைப்படுத்திக் கொள்ளுவார்கள் சங்க இலக்கியங்களைக்கொண்டு. அந்தக் கோரக்காட்சியைப் பார்த்து யார்தான் உத்ஸாகமாக இருக்க முடியும்? உயிர்மேலும் உலகத்தின் மேலுமே கசப்பு உண்டாய் விடுகிறது. ஆண்டுவிழா எல்லாம் கருமாதியாய்ப் போய்விடும்.

நம்மவர்கள் காரியம் எல்லாம் இப்படி இருக்க, செங் கோட்டை நண்பர்கள் எல்லாரும் உத்ஸாகமாக வேலை செய் தார்கள்; அலங்காரமாய் விழாவை நடத்தினர்கள். இதற்காக அவர்களை நான் பாராட்டிவிட்டேன்.

கொட்டகையில் மின்சாரவிளக்கு நன்ருய்ப் போட்டிருந்தது. சபையோர் நல்ல அறிவாளிகள், ரஸிகர்கள்.

இரண்டு பையன்கள் தேவாரம் பாடினுர்கள். மிக இனிமையாய்க் கேட்கும்படி இருந்தது சங்கீதம். பாகவதர்கள் பாடும் சங்கீதக் கச்சேரி என் தலைவலி கொடுக்கவேண்டும் என்று தெரியவில்லை. அவர்களுக்கு என் அவ்வளவு வர்மம்,

முதலில் ஒரு வித்வான் பிரசங்கம். நேற்றுத்தான் முதல் முதலாக என்னை அவருக்கு அறிமுகப்படுத்திக்கொண்டேன். அவர் பேசியபோது தனிமையான திறமை ஒன்று தென்பட்டது. நாம் எல்லோரும் ஏதோ தெரிந்ததைத் தெளிவாக எடுத்துச் சொல்கிருேம்; அதிகமாக அனுபவித்ததை ஆவேசத்தோடு எடுத்துச் சொல்லுகிருேம். இதில் எல்லாம் அப்படியாகத் திறமை ஒன்றிருப்பதாகச் சொல்ல முடியாது. ஆனுல் வித்வானுடைய பேச்சை அப்படி லேசாகச் சொல்லிவிடமுடியாது. தனக்குத் தெரியாததை—கொஞ்சம் கூடத் தெரியாததை வெகு தெளிவாக எடுத்து விளக்கி விடுகிருர். அதுபோலவே அனுபவியாததைப்பற்றிப் பேசும் போதும் ஆவேச மயமாகவே ஆகிவிடுகிருர். இதெல்லாம் லேசாகச் சாதிக்கக்கூடிய காரியமா? அல்ல.

கடைசியாக பாஸ்கரன் பேசினுர்கள். அப்போது தான் எங்களுக்கு இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்ததுபோல் இருந்தது. நடராஜ தத்துவத்தைப்பற்றிப் பேசினுர்கள். விஷயத்தில் தான் ஈடுபட்டார்கள்; சபையோரையும் ஈடுபடச் செய்தார்கள். மயக்கத்தைக் கொடுக்கும் விஷயம். மயக்கத்தைக் கொடுக்கும் பேச்சு. பின் என்ன? பேசுகிறவர்களும் கேட்பவர்களும் மயக்கத்துக்கு உள்ளாகவேண்டியதுதானே. அப்படியே எல்லாரும் உள்ளானேம்.

தாங்கள் விழாவுக்கு வராததுப்பற்றி மிக்க ஏமாற்றம். வந்து பேசியிருந்தால் விழாவுக்கு அதிகமான கலகலப்பு இருந்திருக்கும் என்று சபைக்குத் தெரிவித்தேன். பத்திரிகையில்

(துணிந்து) தங்கள் பெயரைப்போட அனுமதி கொடுத்ததும் நான்தான்.

19ம்தேதி இலஞ்சியில் இளைஞர் கழக ஆண்டுவிழா. அதற்குத் தாங்கள் வரவேண்டும் என்று நண்பர்கள் சொல்லு கிறார்கள். இன்று தந்தியும் கொடுத்திருக்கிறார்கள். இங்கு வந்து போகலாந்தானே? விழாவில் பாஸ்கரனும் கலந்து கொள்ளுகிறார்கள்.

*　　*　　*　　*

வீட்டில் அம்மாளுக்கு உடம்பு தேறிவரும் என்று நம்பு கிறேன். கறிவேப்பிலையும் பச்சைக்கொத்தமல்லியும் துவைய லாக ஆகாரத்தில் சேர்த்தால் நல்லது. Calcium அவைகளில் இருக்கிறது. அது உடம்பில் சேரவேண்டும். சேர்ந்தால் உடம்பு சிக்கிரத்தில் தேறும்.

குழந்தைகள் எல்லாரும் சௌக்கியந்தானே? நன்றாய்ப் பொழுது போய்க் கொண்டிருக்கிறதல்லவா அவர்களுக்கு. எல்லாருக்கும் என் அன்பு.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமைச்

சோமுவுக்கு

"வட்டத் தொட்டி" அங்கத்தினர்களில் எல்லோரிலும் வயது குறைந்த இளைஞர் நண்பர் சோமு. பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போதே வட்டத் தொட்டிக்குள் வந்தவர் அவர். அங்கு நிரந்தரமான ஒரு ஸ்தானத்தையுமே பெற்றுக்கொண்டவர். அவர்தான் இன்று திருச்சி ரேடியோ நிலையத்தில் 'புரோகிராம் அஸிஸ்டென்ட்' ஆக இருக்கும் ஸ்ரீ **M. P.** சோமசுந்தரம். இலக்கிய நண்பர்களால் எல்லாம் 'சோமு' என்று அருமையாக அழைக்கப்படுபவர்.

சோமுவை இன்று பார்த்தாலும் பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தையாகவே இருப்பார். ஆனால் பேசிப்பார்த்தால் பெரிய மனுஷன் உள்ளே இருப்பது தெரிய வரும். கவிதை, கலை முதலியவைகளில் எல்லாம் நல்ல தேர்ச்சி. அபிப்பிராயங்களெல்லாம் ஆணித் தரமாகவே இருக்கும். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால், 'What a head of wisdom on young shoulders !' என்று சொல்லத் தோன்றும்.

சிறுகதை - இலக்கியம் பிரமாதப்படுகிற காலம் இது. பத்திரிகைகள் தமிழில் வண்டிக் கணக்காய் வந்து குவிகிறது போல, பத்திரிகைகளின் பத்திகளை நிரப்பிக்கொண்டிருப்பது சிறுகதை. அவற்றுள் எண்ணிறந்தவை 'நித்ரத்வம்' பெறவேண்டியவை. 'நித்யத்வம்' பெறவேண்டிய கதைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்

படி. சாகாவரம் பெற்ற கதைகளான ‘கல்லறை மோகினி’ ‘சாவேரி’ முதலிய கதைகளை எழுதி, பாரதி தங்கப் பரிசெல்லாம் பெற்றவர். எல்லாம் இருபது வயது நிரம்பாத இளைஞராக இருக்கும் போதே.

சோமுவை, ‘சிறுகதை எழுத்தாளர்,’ ‘ரேடியோ நிலையப் பேச்சாளர்’ என்றுதான் தெரியும் எல்லோருக்கும். அவர் ஒரு நல்ல இளங் கவிஞர் என்பதையுமே வெளிப்படுத்திய வர்கள், ஸ்டார் பிரசுராலயத்தார். சோமுவின் ‘இளவேனில்’ கவிதைத் தொகுதி சமீபத்தில் வெளிவந்தது. அதில் வெளிவந்துள்ள திருக் குற்றாலம் என்னும் பாட்டை எட்டிவிருக்கும் போதே ஒரு கடிதத்துடன் டி. கே. சிக்கு அனுப்பி வைத்தார். டி. கே. சி. படித்துப் பார்த்தார். அப்போது திருக்குற்றாலத்திலேயே இருந்தார். கம்பராமாயண வகுப்பு வேறே நடத்திக்கொண் டிருந்தார். ஆதலால் பாட்டைப்பாடி அங்கேயே அரங்கேற்றி விட்டார் அவர்.

“கன்னித் தமிழுமுண்டு கம்பனுமுண்டே—இன்பக்
கனிமிகு வாழ்விதுமோர் காவியம்
அன்றோ!”

என்று பாட்டு முடிந்ததும், ‘ரொம்ப உண்மை, ரொம்ப உண்மை’ - என்று பாராட்டி விட்டார் கள் வந்திருந்தோர் அனைவரும். டி. கே. சியும், இந்தப் பாட்டு, ‘தமிழ் மகளுக்கு ஒரு சீதனம்’ என்று முடிவுகட்டி விட்டார். இந்தக்கவிதை யும், மற்றக் கவிகளுடன் சேர்ந்து புத்தகமாக உருவானபோது அது டி. கே. சிக்கே சமர்ப்பிக் கப்பட்டது.

'சோமு' சிறுகதை எழுத்தாளர், கவிஞர் என்பதெல்லாம் பலருக்கும் தெரியும். அவர் ஒரு அருமையான நண்பர். பிறரைப் பாராட்டுவதை யும், தன்னைத் தேடிவரும் நண்பர்களை உபசரிப் பதையும் - ஒரு கலையாகவே வளர்த்திருக்கிறார். இவையும் டி. கே. சியிடம் கற்ற கலைகளோ என்று தோன்றும் நண்பர்களுக்கு.

நண்பர் சோமுவும், டி. கே. சியின் அருமை மகன் தீத்தாரப்பனும் இணை பிரியாத் தோழர் கள். தீத்தாரப்பன் அந்தரங்கமெல்லாம் சோமு விடம்தான். தீத்தாரப்பனது கடிதங்களை கலைப் பொக்கிஷமாகவே வைத்திருக்கிறார். அத்தனை ஈடுபாடு, அவரிடம் இவருக்கு.

இப்படிப்பட்ட அருமையான ஒரு இளைஞ ருக்கு அடிக்கடி கடிதம் எழுதுவார் டி. கே. சி. அப்படி எழுதப்பட்ட கடிதங்களில் நான்கு:—

எயரோ,
மீனம்பாக்கம்,
ஆகஸ்ட் 40.

அருமைச் சோழவுக்கு,

உன்னுடைய கதையைப் (ஆனந்தவிகடனில் வெளியான சாவேரி என்ற கதை) படித்தேன். ரொம்ப ரஸமாய் இருக்கிறது. எப்படியோ சாவேரி ராகம், ராகங்களுக்குள் பலரும் பிரியம் காட்டும் ராகமாக இருக்கிறது. அதற்குச் சொல்லுகிற உபசாரங்கள் எல்லாம் உண்மை பாவத்துடனேயே வந்திருக்கின்றன. சிநேகத்தின் உள்ளான உணர்ச்சியை வைத்துக் கொண்டு, ஒரு புறத்தில் சங்கீதக்கலையைத் (தள்ளுகிற பாவனையில்) உயர்த்துகிறதும், மற்ருெரு புறம் மூட பக்தியைத் தகர்க்கிறதும் வெகு நயமாயும் சாதுரியமாயும் இருக்கிறது. வாசிக்கிறவர்கள் சிநேகத்தின் ஆழம் இன்னது என்று உணர்ந்திருக்கவேண்டும்; அதோடு அனுபவித்த அருமையான சங்கீதக் கலையைக் கைவிடுகிறதென்ருல் கண்ணையே பிடுங்கி எறிகிறது தான் என்றும் உணர்ந்திருக்கவேண்டும். அப்போது உண்மை விளக்கமும் அது காரணமாக உண்டாகும் அழகும் தென்படும். கதை வாய்ப்பாய் அமைந்துவிட்டது; ரொம்ப சந்தோஷம்.

ஆண்டியப்ப பிள்ளை* அவர்களுக்கு இப்போது உடம்பு ஆரோக்கியந்தான் என்று எண்ணுகிறேன். இடையில் ஏற்பட்ட அசௌகரியம் எல்லாம் நீங்கியிருக்கும். நம்முடைய வட்டத்தொட்டியில் இளைஞர் முதல் முதியோர்வரை கலந்து கொள்ளுகிருர்கள் என்று நாம் எல்லாருமே பெருமைபாராட்டிக் கொள்ளுவது சகஜந்தானே. நீதான் கடைக்குட்டி, ஆண்டியப்ப பிள்ளை அவர்கள்தான் கொம்பன்.

"இல்லாத உலகத்தெங்கும்"

என்ற கம்பர் பாட்டை அவர்கள் அனுபவித்து, அனுபவித்த

---

* வட்டத்தொட்டி அங்கத்தினர்களில் ஒருவர். பழுத்த கிழம். அத்துடன் பழுத்த ரஸிகரும்கூட.

அனுபவத்தை எடுத்துச் சொன்னது சிறந்த இலக்கியமாக இருந்தது.

"கம்பராமாயணம் என்று ஏதோ கேட்டுக் கேட்டு வருகிறீர்களே, அதில் ஏதாவது பிரயோசனம் உண்டா?" என்று கேட்ட கேள்விக்குப் பதில் விடுத்ததும் அருமையான இலக்கியந்தான்.

இரண்டு பேச்சுகளும் அபூர்வமான ரஸ உணர்ச்சியிலிருந்து உண்டான ஆவேசம். அவைகளை நான் என்றைக்கும் மறக்க முடியாது. ரொம்ப விசாரித்ததாக, அவர்களிடம் சொல்ல வேணும்.

இப்படிக்கு,

டி. கே. சி.

திருக்குற்றலம்,
8—10—45.

அருமைச் சோமுவுக்கு,

உன்னுடைய அழகான கடிதம் கிடைத்தது. இரவில் படுக்கையில் படுத்திருக்கும்போதுதான் வாசித்தேன். ஒரே சிரிப்பாய்ப் போய்விட்டது. ஸ்பிரிங் கட்டிலாய் இருந்திருந்தால்க் கீழேயே தூக்கிப்போட்டிருக்கும். ஒநாயைத் தொலைக்கிறதற்கு உபாயம் கண்டுபிடித்து விட்டார் பத்திரிகாசிரியர்!

சமீபத்தில் ஒரு சாக்ஷாத் "கவிஞரே" இங்கு வந்துவிட்டார். மூன்றுநாள் தங்கினர். போதும் போதும், என்று ஆய்விட்டது. பாடாய்ப் படுத்திவிட்டார். அவர் பாடிய பாடல்களைக் கொட்டிக்கொண்டே இருந்தார். தூங்கவே விடமாட்டார். நேமத்தான் பட்டியிலிருந்தும் நண்பர்கள் வந்திருக்கிருர்கள். அவர்கள் பாடும் பெரும் பாடாகத்தான் போய்விட்டது. என்னையும் வேண்டியமட்டும் விளாசினர். தெரியாத்தனமாக 'தேசிகவிநாயகம் பிள்ளை! தேசிகவிநாயகம் பிள்ளை!!' என்று சொல்லிக்கொண்டிருக்கும் நிர்அக்ஷரகுக்ஷி நான் என்பது அவருடைய ஆய்ந்து தெளிந்த அபிப்பிராயம். அதனல் அவருக்குக் கோபம்; கோபத்தைவிட இகழ்ச்சி. எல்லாவற்றையும் சரளமாய் என்னிடமே காட்டி விடுவார்.

நாலைந்து வருஷத்துக்கு முன் "வித்வான்" ஆனவர். வித்வான் ஆன உடனே தமிழ்ப் பண்டிதராக இரண்டுவருஷம் இருந்தாராம். பள்ளிக்கூடமும் மாணவர்களும் செய்த பூர்வ புண்ணியத்தால் ஆசிரியர் வேலையைத் துறந்து வியாபாரத் துறையில் இறங்கி இருக்கிருர்.

'ஆயிரம் வருஷத்துக்கொரு தடவை கவிஞன் பிறக்கிருன்' என்று அடிக்கடி நான் சொல்லுவேன் அல்லவா. அப்படிப் பிறந்தவர்தான், தான் என்று எண்ணிக்கொள்ளுகிருர். அவர் இப்போது வியாபாரம் செய்து வருகிருர். என்ன வியாபாரம்

செய்கிருரோ தெரியாது. சொல்லவும் இல்லே. லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கவேண்டும். சரஸ்வதி தப்பட்டுமே.

உனக்கு இங்கு வர இயலவில்லே என்று எழுதியிருக்கிருய். வாஸ்தவந்தான். சின்னஞ் சிறு வயதிலேயே நீ குடும்ப பாரத்தைப் பொறுக்கும் பிரதானி ஆய்விட்டாய். ஆனல் அதற்கு வேண்டிய அறிவாற்றல்களேயும் அந்தக் கடவுள் உனக்கு அருளினுரே என்று நான் வியப்பதுண்டு. இன்னும் அவருடைய அருள் இருக்கத்தானே செய்கிறது. காலாவதி கிடையாது. காலங் கடந்தவன் தானே அவன்.

சாரல்க் கூட்டம் குற்ருலத்தை விட்டுப் போய்விட்டது. ஆனல் சாரல் அருவி காற்று எல்லாம் நன்ருய் இருக்கிறது. குற்ருலம் குற்ருலமாகவே இருக்கிறது. திருச்சி சைனு பஜார் அல்ல!

நடராஜன், தங்கச்சி, குற்ருலிங்கம் மூவரும் அருவிக் கரையை நன்ருய்ப் பூரணமாய் உபயோகிக்கிருர்கள். உபயோகிக்கிறது என்ருல் குளிக்கிறது இருக்கவே செய்கிறது. முக்கியமான காரியம், அவர்களுடைய வேட்டி துண்டு, கோவணம் இவைகளேத் துவைக்கிறது, அலசுகிறது, பிழிகிறது முதலிய கிரியைகள்தான். வீட்டுக்கு வந்ததும் அவைகளே வைதீகமாக கொடிகளில் உலரப்போடவேண்டியது. இந்தப்படிப்பு எந்த யூனிவேர்சிட்டியிலாவது உண்டா என்றுதான் கேட்கிறேன்.

ஆம் ராஜேஸ்வரிக்குக் கடிதம் எழுதியிருந்தேன். என்னுடைய கடிதம் அனுபவிக்கக் கூடியதாயிருந்தது என்று எழுதியிருக்கிருய். என்ன எழுதினேன் என்று எனக்கு ஞாபகம் இல்லே. ஆனல் ராஜேஸ்வரி எழுதியிருந்த கடிதம் வெகு அருமையாய் இருந்தது. உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம் அப்படி அப்படியே பாவநாசத்துத் தண்ணீர் நெகிழ்ந்தும் நெளிந்தும் வட்டமிட்டு ஓடுகிறமாதிரி வார்த்தையாக ஓடுகிறது. அதுதானே இலக்கியம்.

நண்பர் பாஸ்கரன் நாகர்கோயில் போகாமலிருந்தால் தேசிகவிநாயகம் பிள்ளையின் மதிப்புத் தெரியவந்திராது. கவிஞருக்கு மாறுபட்ட படாடோபங்கள் சபையை அலங்கரிக்க வரவேயில்லை. வராமலிருந்த அந்தப் புண்ணியவாளர்களுக்கு, வீட்டுக்குப் போயே மாலை போட்டிருக்கலாம்.

மனித உடம்புக்கு என்ன என்ன வியாதிகள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அவ்வளவும் ஏற்பட்டிருக்கின்றன அம்மாள் தமிழ் மகள் உடம்புக்கும். வியாதிகள் என்றால் எத்தனையோ ரகம் :—காவியக்காரர்கள், நாவலர்கள், ஸ்காலர்கள், பாவலர்கள்! அடடா தனிப் பாதாலஜிதான் (Pathology). ஆனாலும் நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற வழக்குக்கிணங்க தே. வி. யின் பெயரும் புகழும் பரவியே வருகிறது.

அணைகிற கைத்திவட்டி, சூரியனை அணைத்தாவிடும்! உன்னுடைய பாடலை தே. வி. அவர்கள் உண்மையிலேயே அனுபவிப்பார்கள். அனுபவித்தும் இருக்கிறார்கள். ரொம்ப சந்தோஷம். கவிக்குள்ளே ஒரு இதயமும் அதன் துடிப்பும் இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பது கஷ்டந்தான். ஷர்ட்டைக் கழற்றியவுடன் கண்ணுக்குத் தெரியவா செய்யும் இதயத் துடிப்பு. அதைக் காதால்த்தான் காணமுடியும். ஸ்டெதாஸ்கோப்பும் வேண்டும்; அந்தக் கருவியோடு பழகியும் இருக்க வேண்டும். ஸ்டெதாஸ்கோப்பில் காதை வைக்கவேண்டும். கண்ணிட்டுப்பார்த்தால்....................?

இப்படிக்கு,
டி. கே. சி.

திருக்குற்றலம்,
8—8—46.

அருமைச் சோமுவுக்கு,

3—8—46 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது...........
....

மனுஷர்கள் ஏன் வேண்டாதபடி நடந்துகொள்ளுகிறுர்கள் என்ற கேள்வியே எழவேண்டாம். எல்லாம் விதி செய்கிற வேலைதான். "சூரியன் உன்னைச் சேர்ந்தவன்தானே. அவன் ஒழுங்காய்த் தினந்தோறும் காலாகாலத்தில் வந்து வந்து போகத் தானே செய்கிறுன். நீ ஏன் இப்படித் தாறுமாறுமாய் நடந்து கொள்ளுகிறுய்?" என்று சந்திரனைப் பார்த்துக் கேட்பதில் விஷயம் உண்டா? ஒரு நியதி இருக்கிறது; அதன்படி நடக்கிறது காரியம். ஒரு விநாடி நிற்கவோ, முன்போகவோ, பின் போகவோ முடியாது. மனுஷர்கள் காரியமும் அப்படித்தான்.

* * * *

கவி என்பது யாரையும் கண்ணும்பொத்தி விளையாடி விடும். கவியின் உருவத்தை அறிவது கஷ்டம். முடியாது என்ற முறையில் நடந்து கொள்ளுகிறுர்கள் பண்டிதர்கள்.

அவர்கள் இன்னும் பாரதியார் பாட்டை அறிந்து கொள்ள வில்லை. தேசிகவிநாயகம் பிள்ளை பாட்டையும் பாட்டில்லை என்றுதான் சொல்லுகிறுர்கள்.

கம்பர் பாடு, கீட்ஸ் பாடு எல்லாம் ஒன்றுய்த்தான் இருக்கிறது.

நம்மைப்பற்றி (பொதுவாகச் சொல்லுகிறேன்) யாராவது பாராட்டினுல் அவர்கள் நல்லவர்கள் என்று எண்ணிக்கொள்ள வேண்டியதே ஒழிய, விஷயத்தைத் தெரிந்துதான் பேசுகிறுர்கள் என்று எண்ணவேண்டாம். ஏன் என்றுல், கவி அவ்வளவு கஷ்டமான காரியம்.

இந்த நிலையில் சிலராவது கூர்ந்து கவனித்து உண்மை, உணர்ச்சி, உருவம் முதலியவைகளைக் கண்டுவிட்டார்களே என்பதுதான் எனக்கு வியப்பு.

ஆர். வி. சாஸ்திரிகள் இங்கே வந்திருக்கிறார்கள்........... நன்றாய் எதையும் கூர்ந்து கவனிக்கிறவர்கள். கவிகளையும் சொல், தாளம் இவைகளின் பாவங்களையும் பார்த்து அனுபவிக்கக் கூடியவர்கள்.

அவர்களுக்கு "காலதேவனை" வாசித்துக் காட்டினேன். (வாசித்தேன் = பாடினேன்) ரொம்ப அனுபவித்தார்கள். "கைலயங்கிரியில்"ப் பாடல்களையும் வாசித்தேன். அவைகளையும் ரொம்ப அனுபவித்தார்கள். கடைசியாக "சொன்ன கதை"யில்க் கண்ணிகளை 2, 1, 9 கடைசியாக 3 இந்த வரிசையில் வாசித்தேன். அபாரமாய்ப் பட்டது அவர்களுக்கு.

"மனமும் மரணமும்" 1, 4, 6, 7 பாடல்களில் உண்மையான சோகத்தின் சாயல் விளங்குகிறது. கடைசிப் பாட்டு பல்லவியாக பாவத்தை நன்றாய் அழுத்துகிறது.

பாடிக் காட்டினால்த்தான் அனுபவிக்க முடியும் என்பது என் கொள்கை. ஆனால்ப் பாடிக் காட்டினாலும் பயன்படப் போகிறதில்லை பண்டிதர்களுக்கு.

"பொதிகை மலை
உரைத்த கதை
சொல்லு—தமிழ்ப்
பேறப்பு வந்து
முளைத்த கதை
சொல்லு"

வெகு வாய்ப்பாய் அமைந்திருக்கிறது.

இப்படிக்கு,
டி. கே. சி.

திருக்குற்றலம்,
20—1—47.

அருமைச் சோமுவுக்கு,

தாமஸ் ஹார்டியைப்பற்றி ஆங்கிலேயர்கள் ரொம்பப் புகழுவார்கள். எஸ்ஸெக்ஸ் பிரதேசத்திலேயே எழுந்த காட்சிகளாய் இருப்பதால் அயல் பிரதேசத்திலுள்ளவர்கள் அங்கு போய்ப் பலநாள் தங்குவார்கள். எதற்கு? காட்சிகளையும் பாத்திரங்களையுமே சரியானபடி உணர்ந்து அனுபவிப்பதற்கு. அயல் பிரதேசத்தார் எஸ்ஸெக்ஸில் எவ்வளவு நாள் தங்கினாலும் எஸ்ஸெக்ஸ் வாசிகள் மாதிரி உணரவோ அனுபவிக்கவோ முடியாதாம். அதேபோலக் "கல்லறை மோகினிக்" கதைகளை நான் அனுபவிப்பதுபோல் திருச்சிக்காரரோ, தஞ்சைக்காரரோ, சென்னைக்காரரோ அறிந்தனுபவிக்க முடியாது.

எனக்கு அத்தனை பிரயோசனம்.

நடராஜனுக்கு உண்டாகும் பிரயோசனத்தைப்பற்றி இப்படி அப்படி என்று சொல்லிவிட முடியாது.

என்னுடைய சிறுபிராயத்தில் ஆங்கிலக் கதைகளைப் படி, படி என்று சதா தொந்திரவு செய்துகொண்டிருப்பார்கள்—பள்ளிக்கூடத்திலும், வீட்டிலுமே. பாஷை விளங்காது. விஷயமும் அனேகமாய் விளங்காது. கொஞ்சநஞ்சம் விளங்கினால், ஆசிரியன் எப்படி உண்டாக்கினான், எவ்வளவு நேர் அனுபவம், எவ்வளவு கற்பனை என்பதெல்லாம் ஒன்றும் தெரியாது.

ஒரு அழிப்பாங்கதை ஆங்கிலத்தில்.

What is the difference between a monkey and a novelist ?

The tail grows on the hind part for the monkey whereas for the novelist there grows from the head, the tail (tale)

ஆங்கிலக் கதைகள் தலைகளிலிருந்து வளர்ந்த அங்கந்தானே என்று எண்ணத் தோன்றும். வால் வந்தது எப்படி என்று தெரியாது. கதை வந்ததும் தெரியாதுதான்.

ஆனால் நடராஜனுக்கு சண்பகாடாவிக் குகையிலிருந்தும், ரயில்வே கம்பார்ட்மெண்டிலிருந்தும் எப்படிக் கதைகள் வளர்ந்து வரலாம் என்பதைக் கூர்ந்து கவனித்து அனுபவிக்க முடியும்.

அவன் வயசில் 'கல்லறை மோகினி'க் கதைகளை வாசித்திருந்தால் நானும் பெரிய ஆசிரியராக "மிளிர்ந்து" கொண்டிருப்பேன். காலாவதி ஆனபிறகு அந்த இலக்கிய ஆசையெல்லாம் வேண்டாத ஆசைதானே!

தமிழர்களுக்கு உவந்த கதைகள். முக்கியமாகத் திருநெல்வேலிஜில்லா வாசிகளுக்கு வாழ்க்கையின் அங்கமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் அவைகள்.

கதைகளை மிக ஆர்வத்தோடு அனுபவித்தவர் நெல்லை திரு ஆண்டியப்ப பிள்ளை. அவருக்கு சமர்ப்பணம் உரிமையானது பற்றி ரொம்ப திருப்தி.

இப்படிக்கு,
டி. கே. சி.

நண்பர்

சுந்தரம் அவர்களுக்கு

கல்கி ஆசிரியரின் 'கணையாழியின் கனவு' என்னும் கதைத்தொகுதி வெளியாவதற்குக் காரணமாயிருந்தவர், 'சுந்தா' என்னும் M.R.M. சுந்தரம். வட்டத்தொட்டியின் அங்கத்தினராய் இருக்கும்போது — 1937-ல் — பெருங்குளத்தில் அவருடைய கல்யாணம் நடந்தது. கல்யாணத் துக்கு, திருநெல்வேலியிலிருந்து வட்டத் தொட் டியே புறப்பட்டது. திருமணத் தம்பதிகளுக்கு பரிசு வழங்கப் புத்தகங்களைத் தேடினார்கள் நண் பர்கள் போகும் வழியில்—ஒரு புத்தக சாலையில். தமிழில் பரிசு கொடுக்கத் தகுந்த புத்தகம் ஒன்று அகப்படுவது குதிரைக் கொம்பாய் இருந்தது அன்று. ஆகவே, ஆங்கிலப் புத்தகத்தைத்தான் வாங்க முடிந்தது, நண்பர்களால். இதையெல் லாம் பார்த்துக்கொண்டிருந்த டி. கே. சி. இதை கல்கிக்கு எழுதி, அவர் கதைத் தொகுதி யொன்றை வெளியிடும்படிக் கேட்டுக்கொள்ள அது காரணமாகவே உருவாயிற்று. 'கணையாழி யின் கனவு.' எப்படியிருக்கிறது தமிழ்ப் புத்த கங்களின் கதை பத்து வருஷங்களுக்கு முன்பு.

டி. கே. சியை இந்த சுந்தரம் அண்டியதுமே ஒரு சிறு கதை போலத்தான். 1933-ல் கலை மகளில் ஒரு கவிதைப் போட்டி. அதற்கு ஜட்ஜ் டி. கே. சி. போட்டிக்கு வந்த பாடல்கள் பல. பரிசீலனைக்கு வந்தவற்றில் தாமரையைப் பற்றிய பாட்டு ஒன்று பரிசு பெறுவதற்கு யோக்யதை உடையது என்று தீர்மானித்தார் டி. கே. சி.

பரிசு பெற்ருர், நண்பர் சுந்தரம். அப்போது அவர் பள்ளி மாணவரே. டி. கே. சி. யை முன் பின் அறியாதவரே. டி. கே. சி. திருநெல்வேலி திரும்பிய பின் நேரில் வந்து கண்டார். டி.கே.சி. யுமே தெரிந்துகொண்டார், "இங்கே இருக்கிருர் தமிழ்ப்பற்றுள்ள ஒரு நல்ல இளைஞர்" என்று.

டி. கே. சியை அண்டுவதற்கு முன்னெல்லாம் சுந்தரம் சிறு கதைகளை ஆங்கிலத்திலேயே எழுதி வந்தார். வட்டத்தொட்டி அங்கத்தினர் ஆன பின்னுல்த்தான் அவர் கதைகள் தமிழில் உருவாக ஆரம்பித்தன. 'மணிக்கோடி' எழுத்தாளர்களில் ஒருவராக ஆனுர். அவர் எழுதிய 'அபலை மீராள்' சிறு கதை இலக்கியத்தில் சிறந்த ஸ்தானம் பெற வேண்டியதொன்று.

அவர் கதைகளைவிட, அவர் எழுதும் ஹாஸ்யத் துணுக்குகள்—Humorous Skits—பிரபலமானவை. ஆனந்த விகடன், கல்கி பத்திரிகைகளில் வரும் 'சுந்தா'வின் துக்கடாக்களுக்கு எப்போதுமே மதிப்பு உண்டு. அவையும் 'புன்னகை' என்னும் புத்தக உருவில் வெளிவந்திருக்கின்றன.

டி. கே. சி. அவருக்கு எத்தனையோ கடிதம் எழுதியிருப்பார். எட்டாத தொலை தூரத்தில் டில்லி ரேடியோ நிலையத்தில் இருப்பது காரணமாக பழைய கடிதங்களைத் தேடி எடுக்க முடியவில்லை. கையில் அகப்பட்டது இரண்டே கடிதங்கள். இந்தச் சின்ன இளைய—ஆசிரியரது அபிப்பிராயங்களை எப்படி டி. கே. சி. மதித்திருக்கிருர் என்பதை கடிதங்களைப் படித்துத்தான் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஏயரோ,
மீனம்பாக்கம்,
12—1—40.

நண்பர் சுந்தரம் அவர்களுக்கு,

தங்கள் கடிதம் வந்தது. ரொம்ப சந்தோஷம். தங்களையே நேரில் பார்க்கலாம் என்று எண்ணியிருந்தேன். கடிதமாவது கிடைத்தது என்பதில் ஒரு திருப்தி. என்னுடைய ரேடியோப் பேச்சை ரொம்ப ரொம்ப உற்றுக் கேட்கிறீர்கள் என்பது தெரிகிறது. பாக்கி இல்லாமல் ஒவ்வொரு விஷயத்தையும் குறித்திருக்கிறீர்கள். அவைகளுக்குத் தகுந்தவாறாக மதிப்பையும் அளவிட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். கவி இலக்கியம் வருவதற்கு வாய்தா கி. பி. 3000 என்று குறிப்பிட்டதை தாங்கள் நன்றாய் உணர்ந்து அனுபவித்திருக்கிறீர்கள். எத்தனை பேர் அதில் அடங்கியுள்ள விஷயத்தை கவனிப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்? சென்ற ஏழெட்டு வருஷமாய் வசன இலக்கியம் உண்டாய்க்கொண்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அதிகாரத்துடனேயே ஆமோதிக்கலாந்தான். இலக்கிய நாடாக்களைப் பற்றிச் சொன்னதை ஏதோ சௌடால்த்தனம் என்று அலக்ஷியம் பண்ணிவிடுவார்கள் சாமான்யத் தமிழறிஞர்கள். ஆனால், அதைத் தாங்கள் நல்ல முறையில் உணர்ந்து அனுபவித்திருக்கிறீர்கள். இப்படியெல்லாம் விஷயங்களைத் தாங்கள்தான் அனுபவிப்பீர்கள் என்றால் மிகையல்ல.

ஜனவரி முதல்த்தேதி சிதம்பரத்தில் தங்க நேர்ந்தது. அங்குள்ள நண்பர் ஒருவர் கூட்டம் ஒன்றைக் கூட்டி, கம்பராமாயணம் வாசிக்க எனக்கு இடங்கொடுத்து எல்லா உபசாரமும் செய்தார். அவர் பெயர் R. விநாயகம் பிள்ளை M. A., B. L., சிதம்பரம் போன வேளை எல்லாம் அவர்கள் வீட்டில்த்தான் தங்குவது. அவர்கள் வீட்டிலும் ஒரு தொட்டிக்கட்டு இருக்கிறது. அந்தத் தொட்டியில்த்தான் கம்பராமாயணம் வாசித்தது. ஜனவரி முதல்த்தேதி சாயங்காலம் வாசிப்பு. வக்கீல்கள், புரொபஸர்கள், மற்றும் சில தமிழ் அபிமானிகள், வால்மீகி ராமாயணப் பிரசங்கி

கள் எல்லாருமாக முப்பதுபேர் வந்திருந்தார்கள். ரஸமாகக் கேட்டனுபவித்தார்கள். கடைசியில் வால்மீகி ராமாயணப் பிரசங்கி மிக்க உருக்கத்தோடு (உபசார முறையில் அல்ல) உண்மையான பாவத்தோடு பாராட்டிப் பேசினர். மறு நாளும் தொடர்ந்து கட்டாயம் வாசிப்பு நடக்கவேண்டும் என்று முரண்டுகிற ஆசாமிகள் சொன்னர்கள். அன்று புறப்படுகிற காரியத்தை ஒத்திவைத்துவிட்டு மறுநாள் சாயங்காலமும் வாசிப்பு நடத்தினேன். எல்லாரும் கம்பருடைய பக்தர்கள் ஆய்விட்டார்கள். சதுரத் தொட்டியும் (தொட்டி அங்கே சதுரம்தான்) நிலைவரமாய் ஆய்விட்டது. கம்பன் தொட்டிக் கட்டுகளை முற்றுகை போட்டுக் கைப்பற்றுவதில் திறமையுள்ளவன்தான் என்று சொல்லலாம்.

சிதம்பரத்தில் இப்படி வட்டத்தொட்டியின் கிளை ஏற்பட்டதில் எனக்கு ரொம்ப திருப்தி. தமிழ் நாட்டுத் தமிழ்ப் புலமை எல்லாம் ஒன்று கூடி, அண்ணமலை நகரை அழுத்திக்கொண்டிருக்கிறது. சிதம்பரமும் ஒட்டிக் கஷ்டப் பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இங்குள்ள அறிவாளிகளுக்குத் தமிழ் அனுபவிக்கக்கூடிய காரியந்தான் என்று தெரிந்தால் பிரயோசனந்தான். இனிமேல், அண்ணமலை நகரிலும், சிதம்பரத்திலும் தமிழ் சம்பந்தமாகக் கலகலப்பு ஏற்படும். இது பெரிய விஷயம். தமிழ்ப் பண்டிதர்களுக்கும் கஷ்டந்தான். ஆனல் தமிழ் மகளுக்கு சந்தோஷம். போதுந்தானே.

வண்ணர்பேட்டைக்கு எப்படியும் 30—1—40ல் வந்துவிடுவேன்.

தாங்கள் இங்கு வராதது இங்கே எல்லாருக்கும் ஏமாற்றம். சிதாராமய்யர் அவர்களுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லவேணும். அக்காள், அம்மாள், தாங்கள் எல்லாரும் சௌக்கியந்தானே. செல்லையாவுக்கு ஒரு வாரமாக குணந்தான். காய்ச்சல் இல்லை.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

சம்பாத்தெரு,
தென்காசி,
3—2—40.

நண்பர் சுந்தரம் அவர்களுக்கு,

செல்லையாவுக்கு நேற்றுக்காலை ஆண் குழந்தை பிறந்து தாயும் குழந்தையும் சௌக்கியமாக இருக்கிறார்கள். முந்தா நாள் இரவு எட்டு மணிக்குத்தான் நான் தென்காசிக்கு வந்தேன். காலையில் 4 மணிக்குக் குழந்தை பிறந்தது. பிறந்த பேரன் ஏதோ கடிதம் போட்டு என்னை வருவித்து வரவேற்கச் செய்த மாதிரியாக இருக்கிறது. ரொம்ப நல்ல மாதிரிதான்.

அவசர அவசரமாகத் திருநெல்வேலி வந்து, அவசர அவசர மாகப் படத்திறப்பு விழாவில் பேசிவிட்டு அந்த அவசரப் பாங்கிலேயே இங்கும் வந்துவிட்டேன். அதனால்த் தங்களைப் பார்க்கவேண்டும் என்று முயன்றும் இயலாமல் போயிற்று. தங்களுக்கு வயிற்றில் ஏதோ அசௌகரியம் ஏற்பட்டு உடல்நிலை ஒன்றிரண்டு நாள் சரியாய் இல்லாமல் இருந்தது என்று கேள்விப் பட்டேன். மனசுக்கு ரொம்பவும் சங்கடமாய் இருந்தது. நண்பர் சிவஞானம் பிள்ளை அவர்கள் மூலமாக, எல்லாம் குண மாய்ப் போய்விட்டது என்று கேட்டு ஆறுதல் அடைந்தேன். தென்காசிக்கு அவசரமாய் வரவேண்டியிருந்ததினால்த்தான் மேலநத்தத்துக்கு வரமுடியாமல்ப் போயிற்று.

தங்களுடைய அறிவின் கூர்மையையும், ரசிகத் தன்மை யையும், கட்டுரைகளையும் ரொம்பவும் அனுபவிக்கிறவன் நான். ஆனால்த் தங்கள் ஆகாரமுறை, ஆகாரக்குறை இவைகளைக்கண்டு வியக்கிறவன் அல்ல. எப்படியோ தற்காலத்து இளைஞர்கள் திடகாத்திரமாய் இல்லாமல் இருக்கிறதும், உண்டி சுருக்குதலும் ஏதோ அழகு என்று எண்ணி நடந்துகொள்ளுகிறதாகத் தெரி கிறது. மேல் நாட்டுப் பெண்கள் இருபது வருஷத்துக்கு முன் மெலிவே (மென்மை அல்ல) ஸ்திரீ லக்ஷணம் என்று கருதி

அதற்காக தேகத்தை பல சித்திரவதைக்கும் உள்ளாக்கி வந்தார்கள். அந்தக் காலத்து ஆங்கிலப் பத்திரிகை எதைப் பார்த்தாலும் விளம்பரப் பத்திகளில் பெண்களின் உருவங்களை கலிங்கத்துப் பரணி ஆசிரியர்

"பெருநெடும்பசி பெய்கலம் ஆவன
பிற்றை நாளில்முன் நாளில் மெலிவன"

என்றும்

"அட்டமிட்ட நெடுங்கழை காண்கில், என்
அன்னை அன்னைஎன் றலும் குழவிய"

என்றும் பேய்களைப் பாடிய செய்யுள்களுக்குப் படம் போட்டுக் காட்டின மாதிரியாகவுந்தான் இருக்கும். ஆனால், அதெல்லாம் இப்போது பழங்கணக்காய்ப் போய்விட்டது. அந்தப் பெண்களுக்குப் பதிலாக நம்முடைய இளைஞர்கள் அதாவது, ஆடவர்கள் மெலிவு முறையைக் கையாண்டு வருவதாகத் தெரிகிறது. இந்த முறை போகவேண்டும். உடலே முக்யம் என்ற கொள்கை எங்கும் பரவ வேண்டும். முக்யமாகப் பள்ளிக் கூடங்களில் பரவ வேண்டும். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்ற சொல்லுக்குப் பொருளும் பாவமும் எவ்வளவோ இருக்கிறது "ஆசிரியன்கள்" இதைக் கவனித்த பாடாகவே இல்லை. தாங்களோ "ஆசிரியன்களுக்கு"ச் சலாம் போட்டுவிட்டு வெளியே வந்தாய் விட்டது. ஆகார முறையை எல்லாம் ஒழுங்குபடுத்திக்கொண்டு தேகத்தை திடமாக்கிக் கொள்ளலாம். கஷ்டம் ஒன்றும் இல்லை. இனிமேல் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. மனசிலுள்ள ஆத்திரத்தினுல்த்தான் இவ்வளவெல்லாம் எழுத நேர்ந்தது.

இரண்டு மூன்று தினங்களில் வண்ணார்பேட்டைக்குத் திரும்பி வருவேன். தங்களைப் பார்த்துக் கொள்ளுகிறேன். அதற்குள் தங்களுக்கு உடல் நிலை திருப்திகரமாய் இருக்குமென்று நம்புகிறேன்.

தங்கள்,
டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

கோபால பிள்ளை அவர்களுக்கு,

நண்பர் ஸ்ரீ A. K. கோபால பிள்ளை ஒரு மலையாளி, திருவாங்கூர் ராஜ்யத்தைச்சேர்ந்தவர் என்றாலும் தமிழ் நாட்டோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொண்டவர், இரண்டு விதத்தில். நமது நாஞ்சில் நாட்டுத்தமிழர்— இசைத் தமிழ்ச்செல்வர் ஸ்ரீ T. லக்ஷ்மண பிள்ளையவர்களின் மகளை மணம்புரிந்து கொண்டது ஒன்று. பி. ஏ. பி. எல் பட்டம் பெற்றதும் வக்கீல் தொழில் செய்ய திருநெல்வேலியைத் தெரிந்து எடுத்துக் கொண்டது மற்றொன்று. ஆகவே தமிழர்களிடத்தும் தமிழ் மொழியினிடத்தும் அபார மோகம் உடையவர். 'கம்பனைப்போன்ற ஒரு கவியும், டி. கே. சியைப் போன்ற ஒரு ரஸிகரும் எங்கள் மலையாளத்தில் இல்லை' என்று அடிக்கடி சொல்லுவார் அவர். அப்படிச்சொல்ல வெட்கப் படவும் மாட்டார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தக்க துணையாக நிற்கும் திருநெல்வேலி இளைய அன்பர்களின் அருமை நண்பர் அவர். எந்த இலக்கியப் பிரசங்கக்கூட்டத்திலும் அவர் பிரசன்னமாயிருப்பார். அவர் ஆஜர் இல்லைஎன்றால் அன்று பிரசங்கம் 'அப்படி இப்படி'த் தான் இருக்கும். பிரசங்கம் முடிந்ததும் பிரசங்கியைப் பார்த்து இரண்டொரு பாராட்டுகள் சொல்லாமலும் போகமாட்டார். ரொம்பவும் நெருங்கிய நண்பராயிருந்தால் குணங்களைப் பாராட்டுவது போலவே குற்றங்களையுமே கூறித்தான் செல்வார். எல்லாம்

நண்பர்கள் நல்ல புகழ்பெற வேண்டுமே என்ற ஆசையினுலேயே

அவர் பல பாஷா பண்டிதர். ஆங்கில, மலையாள இலக்கியங்களின் கரைகண்டவர். நன்ருகப் படித்தவர்; நல்ல ரஸிகர். இலக்கியம்; கலை முதலிய விஷயங்களில் அவருடைய அபிப் பிராயங்கள் ஆணித்தரமாக இருக்கும். இருந்தா லும் பெரிய சங்கோஷி. மேடைமீதேறிப் பேசத் துணியமாட்டார். நேருக்கு நேர் சம்பாஷணை களிலோ வெளுத்துவாங்கிவிடுவார். சம்பா ஷணையில் அவர் அடிக்கடி உபயோகிக்கிற பதங்கள். 'Very Good'. அதை அவர் சொல்லு வதே ஒரு அழகாகத்தான் இருக்கும்.

டி.கே.சியைப் பல வருஷங்களாகக் கொஞ்ச தூரத்திலிருந்தே பார்த்துக் கேட்டு அனுபவித் தவர். சென்ற சில வருஷங்களாகத்தான் நெருங்கிவந்து அவருடன் பேசிப்பழக ஆரம்பித் திருக்கிருர். அவர் எப்படி டி. கே சியையும் அவருடைய பேச்சையும், கவிதையைப் பிறருக்கு உணர்த்தும் திறமையையும் மதிக்கிருர் என்ப தற்கு நான் பல சொல்லவேண்டாம். அவர் டி. கே. சிக்கு எழுதிய ஆங்கிலக் கடிதம் ஒன்றின் சில பகுதிகளைப் பார்த்தால் போதும். அப்பகுதி கள் தான் கீழே இருப்பவை.

"**Theophile Gautier** once said that to discuss poetry with **Victor Hugo** was like discussing Theology with God. That must always have been the experience of the fortunate ones who had been privileged to listen to you in the communion of poetry.

Anyway that has been my experience on the few occasions, when I had the happiness of being with and listening to you. Even though I have always been in amorous quest of literary beauty I have been all the same, by temperament shy and therefore with regrets, I now wish that my love of poetry had been stronger than my shyness so that I could have partaken of the communion in the days when you had not sought the peace that is in the hills (Courtallam.)

* * * *

A church of England Clergyman who stood surety for **Oscar Wilde** said that Wilde had shown him beauty on a high hill. You have shown many young minds beauty on a high hill and these young minds are burgeoning all over the land.

As a result of your labours, there is going to be a dawn over this ancient land, a flowering of the cactus, a diapson of song. The concert has already begun. Do you not hear the overture ? My prayer is: May you be long spared to witness the fulfilment of your labours, to witness in its flood-tide the Renaissance that has begun to sweep over the land bringing to it Life and Beauty."
(28--3—1945) கடிதம் எப்படி இருக்கிறது? பாஷையும் நடையுந்தான் !

டி. கே. சியுமே அவரிடம் அதிக மதிப்பு உடையவர். அவர் அபிப்பிராயங்களுக்கு முக்யத்வம் கொடுப்பவர். சில நாட்களுக்கு முன் நடந்த ஒரு விழாவில் சில பிரசங்கிகள் வெறும் வார்த்தைப் பந்தல் போட்டனர். அது நமது நண்பர் கோபால பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. "என்ன! எல்லாம் வெறும் வார்த்தைதானு? விஷயமே இல்லையே!" என்று ஏங்கினுர் ஏக்கத்தை டி. கே. சிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினுர். அதற்குப்பதில் பம்பாயிலிருந்தே வந்தது. பம்பாய்க் கடிதம் டி. கே. சியின் கொள்கைகளை அழுத்தமாகவே கூறுகிறது. "அத்தனையும் சரியே!" என்றுதான் தலையாட்டுகிருர் நமது ரஸிக நண்பர் கோபால பிள்ளை, இனி கடிதங்களைப் படியுங்கள்.

திருக்குற்றாலம்,
28—2—45.

அருமை நண்பர் கோபால் பிள்ளை அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இந்தத்தடவை இங்கிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்ட போது நல்ல நல்ல சகுனங்களாகத்தான் வந்திருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன். ஏனென்றால்த் தங்களோடு இரண்டு மணி நேரம் அளவளாவ முடிந்ததல்லவா? பொதுவாக, ரஸங்களையும், பாவங்களையும், நம்மவர் அனுபவிப்பதில்லை. ஏன்— மாட்டவே மாட்டேன் என்கிறார்கள். சிலர், கூடவே கூடாது, எதிர்ப்பிரசாரமே செய்யவேண்டும் என்று சொல்ல முன் வந்திருக்கிறார்கள். காரணம் என்ன? கவியைக் காணவில்லை— அவர்கள். அப்படியே கவியில் நம்பிக்கையில்லாமல்ப் போய் விட்டது அவர்களுக்கு. இந்த நிலையில் ரஸங்களிலேயே ஊறிக் கிடக்கிற தங்களுடன் அளவளாவ நேரம் வாய்த்ததென்றால் அதிர்ஷ்டந்தானே-?

'கவி-என்பது கருத்துக்களைக் கொண்டு எழுவது அல்ல. வார்த்தைகளைக் கொண்டாக்கும் எழுதுவது'— என்று தாங்கள் பிரெஞ்சு ஆசிரியர் சொன்னதை எடுத்துச் சொன்னீர்கள். இந்த உண்மையை ஒப்புக்கொள்ளவோ, அனுபவிக்கவோ, எளிதில் யாருக்கும் தைரியம் வராது. தங்களுக்கு அந்த உண்மையில் மோகமே ஏற்பட்டு விட்டது. அதில் எனக்கு எவ்வளவோ சந்தோஷம்.

மேலும் சொன்னீர்கள், 'நீதான் இந்த விஷயத்தை வற்புறுத்தி வருகிறாய்'—என்று. என்னைப் பாராட்டியும் பேசினீர்கள்.

தங்களுடன் ஏதோ அற்ப சொற்பந்தான் எனக்குப் பழக்கம். வேறு மற்றுப்பல நண்பர்களோடு வியாழ வட்டமாக நெருங்கிப் பழகி வந்ததில்க் குறைவில்லை. அவர்களுக்கு நான் சொல்வது விளங்கவில்லை, அதிகப் பிரசங்கித்தனந்தான்

என்று என் அபிப்பிராயங்களைத் தள்ளிவிட்டார்கள். 'Venus of Milo' வைப் பார்த்தால், சுண்ணும்பாக நீற்றினால் வெற்றிலை போட உதவும் என்று சொல்லி விடுவார்கள். ஆனால் தங்களுக்கு நான் பிரசாரம்பண்ணி வருவதெல்லாம் தளபாடமாய் இருக்கிறது.

பிரெஞ்சு ஆசிரியர் சொன்ன உண்மையை, கவி ஒன்று கொண்டு ரூபித்து விட்டீர்கள்.

"இரவானது ஒரு கருமேனி கொண்ட பெண்போல் இருக்கிறது. வானத்தைப் பார்த்தாலும் இருள்தான். அதாவது அந்த அம்மாளின் கூந்தலும் கருப்புத்தான். அவளிடத்தில் இப்போது சோபிதம் இல்லை. அதோ, சந்திரன் உதிக்கிறான். சந்திர கிரணங்கள் இரவோடு ஒன்றாய்க் கலந்துவிடும். அதாவது நாயகன் நாயகியைத் தழுவிக்கொள்வது போலிருக்கும். ஆகவே இந்த விஷயத்தை எப்படிச் சொல்லலாம்;—இரவாகிய பெண்ணுக்கு, சந்திரனாகிய கணவன் ஒருவன் வந்துவிட்டான்."

இது கருத்துக்களைக் கொண்டு எழுதியது. கவி அல்லவே அல்ல. வார்த்தைகளை உபயோகப்படுத்தித்தான் இருக்கிறது. எதற்காக? கருத்துக்கள் இருக்கின்றன என்று சொல்லித் தீர்த்துவிடத்தான்!

ஆனால், சந்திரன் உதித்ததைப் பார்த்ததும், ஒருவனுக்கு ஆனந்த வெறி உண்டாயிற்றே, அதை வெளியிடுகிறதா, மேலே சொன்ன வார்த்தைகள்? வெளியிடவே யில்லை. அதற்குப் பதிலாக அந்த ஆனந்த வெறியை வார்த்தைக் குழம்புக்குள்—தார் எண்ணெய் மாதிரி குழம்பு—முழுக்கடிக்கவே பார்க்கிறது. இப்படி வார்த்தைகள் வந்து உணர்ச்சிகளைத் 'தொம்ஸம்' செய்கிறதைப் பார்ப்பதிலேயே ரஸம் இருக்கிறது என்று சொன்னால், அவர்களோடு நாம் எப்படிக் கட்டி அழுகிறது? வார்த்தைகள் வேறு ஒரு ஜோலியும் வைத்துக் கொள்ளாமல் உணர்ச்சியை மாத்திரம் வெளியிடும் போது கவி பிறக்கிறது. தாங்கள் சொன்ன மலையாளக் கவி கவிதான். என்—; வார்த்தைகள் உணர்ச்சியை மாத்திரம் வெளியிடுகின்றன.

தான தன்ன தான தன்ன

"கருத்த பெண்ணே
கருங் குழலி
னைக் கொருத்தன்
கிழக் குதிச்சு."

வார்த்தைகள் தாளம் போட்டுக்கொண்டு கும்மாளி போடுகின்றன. உணர்ச்சி தத்ரூபமாக வெளியாகிறது. எதை மறந்தாலும் கும்மாளியை மறக்க முடியாதுதானே! உணர்ச்சியை மறக்க முடியாது. கவி—கவிதான். கவி விளங்கவில்லை. நமக்கு வரமாட்டேனென்கிறது என்ற காரணத்தால் அது வேண்டாம், வசனத்தைத்தான் கட்டி அழுதுகொண்டிருப்பேன் என்று சொல்லுகிறதா?

அன்று தங்களோடு சாவகாசமாகப் பேசிக்கொண்டிருந்ததில் ஒரு பிரத்தியேகமான திருப்தி எனக்கு. தமிழ்க் கவி—என்றால் எளிமைக்கு லக்ஷியம். என்று அடிக்கடி சொல்லுவேன். தமிழ் ஸ்காலர்களாகிய நண்பர்களோ, அப்படிச் சொல்வதெல்லாம் 'சௌடால்த்தனம்' என்று சொல்லி என்னை ஏளனம் பண்ணுவார்கள். அர்த்தம் என்ன? அந்தப் பிரகிருதிகளுக்குத் தமிழ் விளங்கவில்லை என்பதுதான்.

தாங்களோ, தமிழ் இலக்கியத்தோடு அதிகப் பயிற்சி இல்லாமலே, தமிழ்க்கவிகளிலுள்ள (கருத்தையல்ல) உணர்ச்சியையும், ரூபத்தையும் குறை வைக்காமல் அனுபவிக்கிறீர்கள். போதாதா அது, தமிழின் எளிமையை எடுத்துக் காட்டுவதற்கு?

ரொம்ப சந்தோஷம். கடிதம் நீண்டுவிட்டது. நிறுத்திக் கொள்கிறேன்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

பம்பாய்
1—11—46

அருமை நண்பர் கோபால் பிள்ளை அவர்களுக்கு,

நமஸ்காரம்

19—10—46 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. பம்பாயில் நான் இருப்பது அதிசயமாய் இருக்கலாம் தங்களுக்கு. உண்மையில் அதிசயந்தான். நானாக இங்கு வரவில்லை.

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரி திருச்சியில் 20—10—46 அன்று நடந்தது. அதற்காக என்னை அழைத்தார்கள். நானும் போனேன்: கச்சேரி முடிந்ததும் ரயிலில் தூக்கிப் போட்டார்கள் எம். எஸ். ஸும் சதாசிவமும். மறுநாள்க் காலை 7 மணிக்குச் சென்னை சென்றோம். அப்படியே 10 மணிக்கு ஆகாய விமானத்தில் தூக்கி போட்டார்கள். சாயங்காலம் 4 மணிக்குப் பம்பாயில் இறக்கினார்கள். இதுதான் பம்பாய்க்கு வந்த கதை.

பம்பாய் நகரம் பார்க்கவேண்டிய நகரந்தான். சென்னைக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. மேல் நாட்டு நகரங்களைப் போல் வகுத்திருக்கிறது. பெருந்தொகையான ஜனங்களை எவ்வளவு சௌகரியப்படுத்தக் கூடுமோ, அவ்வளவு செய்திருக்கிறது. மனுஷன் கெட்டிக்காரப் பயல்தான் என்று சொல்லும்படியாக இருக்கிறது. மூன்று மாடி வீடுகளும் ஐந்து மாடி வீடுகளுமாகத்தான் இருக்கின்றன. ஒரு மாடியிலேயே மூன்று குடித்தனங்கள் இருக்கின்றன. நாங்கள் இருக்கிற மாடியின் பகுதி சிறிய பகுதிதான். ஆனாலும் 16 நபர்கள் சௌகரியமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறோம். அறைகளை அப்படிச் சாதுர்யமாய் அமைத்திருக்கிறது. ஆடவர்நாலு பேர், பெண்டுகள் ஐந்து பேர், வேலையாட்கள் நாலு பேர்; குழந்தைகள் ஆறு—என்னோடும் சேர்த்து.

எல்லாக் குழந்தைகளையும்விட, எனக்குத்தான் அதிகப் பாராட்டு. சில வேலைகளில் எதிர் வீட்டுக் குழந்தை – ஒன்பது மாசக் குழந்தை, எனக்குப் போட்டியாக வந்து விடுகிறது. அப்போது ஒருவரும் என்னைக்கவனிக்கிறது இல்லை. தயானந்த சரஸ்வதி என்று அந்தப் பயலுக்குப் பெயர் வைத்துக்கொண் டார்கள், அவனைக் கேட்காமலேதான். அவனுக்கும் கண் என்னைப்போல் இரண்டுதான். கண் இரண்டுதானே ஆனாலும், கண் எங்கே? கண் எங்கே? என்று, இருபதினாயிரம் தடவை கேட்கிறார்கள். அவனும் கண்ணைக் கண்ணாலேயே காட்டு வான் சிக்கென்று மூடித்திறந்துதான். அப்படியே வாயைத் திறந்து வாயைக் காட்டுவான். மூக்கையும் ஒரு சுருக்கு சுருக்கிக் காட்டிவிடுவான். எல்லாருக்கும் ஒரு சந்தோஷம். ஒரே ஆனந்த வெறி. எல்லாரும் சேர்ந்து வெறிகொண்டு அடிக்கிற கும்மாளியைப் பார்த்தால் தான்:

"தாய்ப்பூ தாமரைப்பூ
தங்கத்து வீட்டு
செண்பகப் பூ"

என்ற அருமையான பாட்டில் எவ்வளவு உண்மையும், அழகும் இருக்கின்றன என்று தெரியவரும்.

Hero Worship என்றைக்கும் உலகத்தை விட்டுப் போய் விடாது என்று கார்லைல் ஆசிரியருக்குக் கையடித்துக் கொடுக் கலாம்.

எனக்கு எப்படி பொழுது போய்க்கொண்டிருக்கிறது மூன்றாவது மாடியில், என்று தெரிகிறதல்லவா?

இங்கே மாதுங்கா என்னும் பகுதி சென்ற பத்து வருஷத் தில் உண்டான நகரம். அனேகமாய் எல்லாரும் தென் நாட்டவரே. அவர்களுக்கெல்லாம் ஒரே தமிழ் மோகம். 1000 மைல் இப்பால் வந்துவிட்டால் எல்லாருக்கும் தமிழ், தமிழ் பண்பாடு இவைகளே பெருஞ் செல்வம் என்று தோன்றும்.

எனக்கு எங்குமில்லாத உபசாரங்கள், டீப்பார்ட்டிகளும் விருந்துகளும் நடக்கின்றன. விருந்து ஆனதும் தமிழ்ப் பாட்டுச் சொல்லவேண்டும். தமிழ்ப்பாட்டை நேரான முறையில் இப்போதுதானே கேட்கிறார்கள். ஒரே ஆவேசந்தான். பெண்டுகள் என்னுடைய 'கம்பர்தரும் காட்சி'களை ஒழுங்காய் வாசித்து அனுபவிப்பார்கள். அதனால் அவர்களுக்குத்தான் பாடல்களின் மேல் வெறி.

இங்குள்ள இளைஞர்களுக்கு என்னை இங்கேயே கட்டிப் போட்டுவிட்டால்—என்ன என்றே படுகிறது. அவ்வளவு ஆர்வம் தமிழில் அவர்களுக்கு.

மாதுங்காவுக்கு வந்ததில் அளவில்லாத திருப்தி எனக்கு. தமிழ் நாட்டில் தமிழ் எப்படிப் போனாலும் மாதுங்காவில் தங்கிவிடும்.

* * * *

தங்கள் கடிதம் அழகாய் அருமையாய் இருக்கிறது. மனசில் உண்டான ஆற்றாமையை அப்படியே கொட்டியிருக்கிறீர்கள். ரயில்ப் பிரயாணத்தில் ஒரு சிறு கம்பார்ட்மெண்டுக்குள் இருபது பேரை அடைக்கிற காரியத்தை நாம் பார்க்கிறோம். Black Hole of Calcutta கொடுமையை இங்கிலீஷ் ஹிஸ்டரியில் (அதாவது இங்கிலிஷ்காரர் எழுதிய இந்தியன் ஹிஸ்டரியில்) வாசித்திருக்கிறோம். ஆனாலும் தாங்கள் குறிப்பிடுகிற "Compressing the maximum of words into the minimum of thought" கொடுமையிலெல்லாம் கொடுமையே

திருவள்ளுவர் ஏதோ புரட்டிவிட்டாராம்.

"கடுகைத் துளைத்(து)எழ்
கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த
குறள்"

கொஞ்ச வார்த்தைக்குள் ஏழு கடல்களைப் புகுத்திவிட்டாராம். அதென்ன பெரிய காரியம்! ஒரு கடுகுக்குள் ஒரு அகராதியையே திணித்தாலல்லவோ பெரிய காரியம்.

எல்லாவற்றிற்கும் காரணம் பள்ளிக்கூடத்து படிப்பு தான்.

Paraphrase என்றும், பதவுரை பொழிப்புரை என்றும் மாணவர்களையும் ஆசிரியர்களையுமே—டிரில் வாங்கிக்கொண்டிருக்கிறவரை 'சொற்பொழிவு' நிற்கப்போவதில்லை. குலை சாடிவிட்டால் மரத்தில் காயேது?

பள்ளிக்கூடத்தில் நடக்கிற இன்னொரு காரியத்தையும் சொல்லித் தீர்க்கவேண்டியதுதான்.

அற்புதமான விஷயங்களை போதித்து போதித்து இது சாரம், இது சக்கை என்று தெளிக்கிற காரியமே இல்லாமல் போய்விட்டது.

ஏமாளிகள் பத்துப்பேர் கரும்பாலையை பேந்தப் பேந்தப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கரும்பஞ்சாறு குடிக்கிருயா? என்று ஒருவனைப் பார்த்துக்கேட்டான் ஆலை ஆசாமி. ஆகட்டும் என்ருன் அவன்.

'சாறு வடிகிற பக்கம் உட்காரு. வாயோடு கையை ஏந்து' என்ருன். அப்படியே ஏந்தினன். ஆலைக்குள் ஒரு கரும்புத்துண்டு போயிற்று. அடுத்தாற்போல் பேய்க்கரும்பு சோளத்தட்டை, வேப்பவிளாறு எல்லாமே போயிற்று. அப்படியே மற்ற ஒன்பது பேரும் கருப்பஞ்சாற்றை பருகினர்கள். நன்ருய் இருக்கிறதென்றும் சொன்னர்கள்.

ஆலைக்காரன் செய்த காரியம் அயோக்கியத்தனம்.

ஆனல் ஆசிரியர்கள் விஷயமாக அப்படிச் சொல்லுவதற்கில்லை. கரும்பென்று எண்ணியேதான் பேய்க்கரும்பு முதலியவைகளையும் ஆலைக்குள் திணிக்கிருர்கள் அப்பாவிகள்.

கல்வி எல்லாம் இந்த நிலையில் இருக்கும்போது கம்பன் என்றும், கலை என்றும் எதிர்பார்ப்பது அவ்வளவு சரியல்ல.

இந்த மண் உலகம் சூரியனைச்சுற்றி இன்னும் இருநூறு தடவை பிரதக்ஷணம் வரவேண்டும் அதற்கு.

*　　*　　*

நான் குறைவாகப் பேசிவிட்டதாகத் தாங்கள் புகார் சொல்லுகிறீர்கள். மக்கள் பொறுமையை சோதிப்பதற்கும் அளவு வேண்டாமா என்று நான் எண்ணுகிறேன்.

தமிழ் பாஷையின் நடன ஜதிகளைக் காட்டுவதற்காக முன் வந்தேன். காட்டுவது கஷ்டந்தான். ஆனாலும் தாங்கள் முன்னால் இருக்கும்போது எளிதாய்ப்போய் விடுகிறது. மற்றவர்களை மறக்க முடிகிறது. தாங்களோ ஒத்து உணர்ந்து விடுகிறீர்கள். அவ்வளவுதானே வேண்டும்.

பெரிய விஷயங்களைப் பேசப் புகுவோர் இந்த யுக்தியை (Technique) அனுசரிக்கலாம் அன்பான முகத்தைப் பார்த்தால் போதும், எல்லாம் தெளிந்துவிடும். இலக்கியமே வந்துவிடும்.

*　　*　　*

10—11—46 அன்று ஆனந்தி ராதா நடனம் இங்கே நடக்கப் போகிறது. அவர்கள் இருவரும் எம். எஸ். ஸூம் இங்கே இருக்க நேர்ந்தது மாத்திரம் காரணமல்ல. நானும் இருக்க நேர்ந்ததல்லவா அதுவும் காரணந்தான். இந்த விதமாக சொல்லியும், செய்தும், ஏமாற்றியும் என்னை இன்னும் பத்துநாள் இருக்கச் செய்துவிட்டார்கள். டிரங்கு போனில் சொல்லி, நட்டுவனுர் பக்க வாத்தியங்கள் எல்லாம் வருகின்றன. இந்த கலாட்டாவில் நான் எப்படி புறப்பட முடியும். சிறை வைத்து விட்டார்கள்.

எப்படி எல்லாம் அன்பர்கள் விளைகிறார்கள் பாருங்கள்! இந்த வயசிலுங்கூட சிநேகிதரைச் சம்பாதிக்க முடிகிறது. காலாவதி இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ஆயுள் நீடிக்கவேண்டும் என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

அருமைக் குமாரத்தி சௌக்கியமாய் சௌகரியமாய் இருக்கிறாள் அல்லவா?

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

பெண் குழந்தைகள்

நீலாவதி ராமசுப்பிரமணியம்

பாக்கியலக்ஷிமி

சுந்தரி

ராஜேஸ்வரி

மஞ்சம்மாள்

அருமைப் புதல்வி

நீலாவதி அம்மைக்கு

டி. கே. சிக்குப் பெண் குழந்தைகள் கிடையாது. இது டி. கே. சியின் மனைவியார் ஸ்ரீமதி பிச்சம்மாள் அண்ணிக்கு ஒரு குறையாகத் தானே தோன்றும்? இதற்காகவோ என்னவோ, அண்ணி தன் மாமன் மகள் ஜானகியைத் தம் வீட்டிலேயே வளர்த்து வந்தார்கள். இத்துடன் இலக்கிய உலகில் டி. கே. சிக்கு எத்தனை எத்தனையோ பெண் குழந்தைகள். எல்லோரும் 'அருமை அப்பா' என்றே அருமையாக அழைப்பார்கள் டி. கே. சியை. இத்தனை குழந்தைகளைப் பெற்றது காரணமாக டி. கே. சி. மாத்திரமென்ன, அண்ணியுமே பூரித்துப் போவார்கள்.

டி. கே. சியின் பெண் குழந்தைகளில் சீமந்த புத்திரி, ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்பிரமணியம். கொத்தமங்கலம், செட்டி நாட்டுப் பிரமுகர், 'குமரன்' பத்திரிகையின் பழைய உதவி ஆசிரியர் ஸ்ரீ ராமசுப்பிரமணியத்தின் மனைவி. நமது மாஜி இந்தியக் காரியதரிசி, பேதிக் லாரேன்ஸ் என்பவரைப்போல அய்யாவும் 'மிஸ்டர் நீலாவதி ராமசுப்பிரமணியம்'. அம்மாவும் 'மிஸஸ் நீலாவதி ராமசுப்பிரமணியம்'தான்.

இந்தத் தம்பதிகள் ஆரம்பத்தில், சுயமரியாதை இயக்கத்தில் பெரும் பங்கு எடுத்து உழைத்தவர்கள். ஈரோட்டுப் பெரியாரின் உற்ற துணைவர்களாக இருந்து, புரோஹித மறுப்புத் திருமணங்களை யெல்லாம் நூற்றுக் கணக்கில்

நடத்தி வைத்தவர்கள். பழந்தமிழனுடைய காதல் மணமே தமிழ் நாடெங்கும் மணம் வீச வேண்டும் என்ற பேரவாவுடன் வேலை செய்தவர்கள். சமூகச் சீர்திருத்தத்தில் பெரிதும் அக்கரை கொண்டவர்கள்.

காலச்சக்கரம் சுழன்றது. தேசத்துக்கோ, சமூகத்துக்கோ சேவை செய்ய வேண்டுமானல் காங்கிரஸ் மகா சபையில் சேரவேண்டும்—என்று அறிந்தார்கள். காரைக்குடி தேச பக்தர் ஸ்ரீ சா. கணேசனது நட்பைப் பெற்றார்கள். காங்கிரஸ் அங்கத்தினர் ஆனார்கள். அன்றுமுதல் தமிழ் நாட்டில் அதிலும் செட்டி நாட்டில், ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்பிரமணியத்தின் வீர முழக்கம் கேட்க ஆரம்பித்தது.

காரைக்குடி கம்பன் கழகத்தில் ஸ்ரீ சா. கணேசனுடன் பெரும்பங்கு எடுத்து உழைத்த போதுதான், அம்மா டி. கே. சியின் பார்வையில் விழுந்தார்கள். அவருடன் நெருங்கிய நட்பு கொண்டார்கள். அவரைத் தந்தையெனவே போற்றினார்கள். தேச சேவையுடன் இலக்கிய சேவையும் சேர்ந்து கொண்டது. டி. கே சி. சொன்ன ஒரு முத்தொள்ளாயிரப்பாட்டே அவர்களுடைய இல்லத்தில் இலக்கியப்பண்ணை ஒன்றை ஆரம்பிப்பதற்குக் காரணமாயிருந்தது. ‘பாட்டு வளர்த்த பண்ணை’ அது என்பது ஸ்ரீ நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் தீர்மானம். இப்படிப்பட்ட சீமந்த புத்திரிக்கு ஒரு கடிதம்—அது ஒப்பற்ற கடிதம்தான்.

திருக்குற்றலம்,
3—11—44.

அருமைப் புதல்வி நீலாவதி அம்மைக்கு.

22—10—44 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது

அருணசலம் பிள்ளையின் கட்டுரை தங்களையும் அழகான கட்டுரை எழுதத் தூண்டிவிட்டது. "அரவம் கரந்ததோ" என்ற கவியின் ரஸத்தில் தங்களை முக்கி முக்கி எடுத்துக்கொண்டிருக் கிறீர்கள். அப்படியல்லவா அனுபவிக்கவேண்டும் கவியை!

"தங்கள் பாட்டை ஒரு முறை கேட்டபின்
தமிழ்மட்டும்தானு தெரிகிறது ? வாழ்க்கையே
அன்றைக்குத்தான் தெரிந்தது"—

—என்று அழகாகச் சொல்லுகிறீர்கள். இதே உண்மையை இங்கிலீஷ் ஆசிரியர் (அண்ணமலைப் பல்கலைக் கழகம்) ஜெகதீசன் என்பவரும் முதல் முதலாக என்னிடம் தமிழ்ப் பாட்டு ஒன்றை கேட்டுவிட்டுச் சொன்னர்.

ஆனல், சென்னை யுனிவர்சிட்டிக்காரர் ஒருவர், குமரிமலரில் என்ன சொல்லுகிருர்! கவிக்கென்று கம்பராமாயணத்தைப் படிக்கிருர்கள்; அது பிசகு. அதற்கு எதிர்பிரசாரம் செய்ய வேண்டுவது தமிழரது கடமை என்று எழுதியிருக்கிருர். எதிர்ப் பிரசாரமே செய்யவேண்டுமாம். எப்படியிருக்கிறது யுனிவர் சிட்டிக் காரியம்!!!

இந்த அற்புதமான உண்மை தாங்கள் குறிப்பிட்ட குமரி மலரிலேதான் இருக்கிறது.

கம்பரைப் படிப்பது எதற்காக என்று அவர்கள் சொல்லு கிருர்கள். சரித்திர உண்மைகளைத் தெரிந்துவிடத்தான்.

அந்த உண்மைகளின் விபரம் :–

1. அயோத்தியில் ஆடவர் உண்டு.
2. அயோத்தியில் பெண்டுகளும் உண்டு.
3. புருஷன் மனைவிகளாகவும் இருப்பார்கள்.
4. அவர்களுக்குள் இணக்கம் இல்லாதிருத்தல் உண்டு.
5. ஒரு மனைவி அடுத்த மனைவியின் மேல் பொருமை கொள்ளுவாள்.
6. அவளுடைய பிள்ளைகளையும் வெறுப்பாள்.

ரொம்ப ரொம்ப ஆராச்சி செய்த இந்தவிதமான உண்மைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்படிக் கண்டு பிடிப்பதற்கே யுனிவர்சிட்டி ஏற்பட்டிருக்கிறது!

"கவியில் சுவை இருக்கிறது. உண்மையின் தோனியிருத்கிறது. கவியின் சிருஷ்டி உள்ளத்தில் கலந்து அந்த இன்பத்தில் நாமும் திளைக்க முடிகிறது. நம்முடைய வாழ்க்கை பித்தளையாக இருந்தது. இப்போது பத்தரை மாற்றுத் தங்கமாக அழகு செய்து பொலிகிறது." இப்படி யாராவது சொன்னார்களானல் எதிர்ப்பிரசாரம் செய்யவேண்டும். நண்பர் A. K. செட்டியார் அவர்களுக்கு பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. முதலில் மு. அருணாசலம் பிள்ளையைக் கண்டிக்க வேண்டியதுதான். பிறகு தங்களிடம் வரட்டும்.

அருமையான முறையில் இரண்டு பாடல்களையும், அனுபவித்திருக்கிறீர்கள். அனுபவித்ததை அப்படியே விளக்கிவிட்டீர்கள். அது ஒரு அருமையான விமர்சனம். ஆய்விட்டது. எவ்வளவோ திருப்தியாய் இருக்கிறது.

* * *

குழந்தை சௌக்கியமாய் இருப்பது பற்றி சந்தோஷம். குழந்தைக்கு பெயரிடவில்லை என்கிறீர்கள். ஆங்கிலேயருக்குப் பெயரிடுகிறது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆனல்

பார்சிகளுக்கு வெகு எளிது. கடைத் தெருவுக்குப் போக வேண்டியது - எதையாவது கையில் எடுக்கவேண்டியது - அவ்வளவுதான் - பிஸ்கட்வாலா, பென்வாலா, கத்திவாலா, கபடாவாலா, என்று நாமகரணம் சூட்டிவிட வேண்டியது. சொந்த ஊரில் அப்படிப்பேர் வைக்க ஓடுமா - ஓடாது. அயலூருக்குப் போய்விட்டால், பண்பாடு உடன் வராததால் உணர்ச்சியற்ற முறையிலே பேரிடத்தோன்றும்.

நமக்கும் பேர் வைக்கிறதில் கஷ்டம் இல்லை. கடவுள் ஒருவர்தான். அவருக்குப் பேரும் இல்லைதான். ஆனால் ஆயிரம் திருநாமம் இட்டு அழைக்கலாம். சாவகாசமாகப் பார்த்துக்கொள்ளலாம்.

டி. கே. சி.

அருமைப் புதல்வி

பாக்கியலக்ஷ்மி அம்மையாருக்கு

சிம்லாவுக்கும் திருநெல்வேலிக்கும் இடையே ஆயிரக்கணக்கான மைல்கள் அதைவிட இடைவெளி அதிகம், தென்னிந்திய பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதாருக்கும், இந்த இடைவெளியை யெல்லாம் கடந்து டி. கே. சி. யுடன் இலக்கியத் தொடர்பு வைத்துக் கொண்டவர் ஸ்ரீமதி பாக்கியலக்ஷிமி சங்கர், B. A., L. T. தென்னிந்தியப் பிராமணப் பெண்தான். புருஷன் லாஹூரிலும் சிம்லாவிலுமாக வேலையேற்றது காரணமாக அங்கே போய்த்தங்க வேண்டி வந்தது. தமிழ் நாட்டை விட்டு ரொம்ப தூரத்தில் இருந்தது காரணமாகத் தமிழில் ஆர்வம் அதிகமாயிற்று 1945-ல் உடல் நலம் கருதி குற்றாலம் வந்திருந்த போதுதான் டி. கே. சி யின் பழக்கம் ஏற்பட்டது. அதுவும் ஆங்கிலம் நன்றாகக் கற்ற அம்மாளல்லவா? கவிதையைப் பற்றிய விவாதத்திலேயே இவர்கள் நட்பு ஆரம்பித்தது. இன்று டி. கே. சி. யின் பெண் குழந்தைகள் கூட்டத்தில் இந்தக் குழந்தையும் ஒன்று. இதில் தந்தையும் பெருமைப் படுகிறார். மகளுமே பெருமை படத்தான் செய்கிறார்.

குற்றாலத்தில் அம்மையார் இருக்கும்போதெல்லாம் விவாதம் காரசாரமாகத்தான் நடைபெற்றது. தமிழ்ப் பாட்டு, கம்பன் கவிதை எல்லாவற்றையும் கேட்டுக் கேட்டு அப்படியே லயித்துவிட்டார். டி. கே. சி யைப் பிரிந்து

செல்வது என்பது எவ்வளவோ கஷ்டமான காரியமாகப்பட்டது. அப்படிப் பிரிந்தபின்தான் கடிதப் போக்குவரத்தெல்லாம் ஒரு கடிதமே இங்கு இடம் பெறுகின்றது.

திருக்குற்றலம்,
1—8—45

அருமைப் புதல்வி பாக்கியலக்ஷிமி அம்மாளுக்கு

சென்னையிலிருந்து மதுரைக்கு 28—7—45 அன்று காலை வந்துசேர்ந்தேன். மதுரையை விட்டு இரண்டு மைலுக்கு அப்பாலுள்ள டாக்டர் ராமசுப்பிரமணியம் அவர்கள் வீட்டில்த் தங்கியிருந்தேன். அங்கேயே வந்துவிட்டார்கள் நண்பர் குஞ்சு ஐயர்* அவர்கள். எனக்கு ஒரே அதிசயமாய் இருந்தது. திருவையாற்றில் இருப்பார்கள் என்று எண்ணியிருந்தேன் மதுரையில் எதிர்பார்க்கவே இல்லை. ஆனதால் அவர்களை பார்த்தது எவ்வளவோ சந்தோஷமாய் இருந்தது. யாரையும் எங்குவேண்டுமானாலும் கொண்டுவந்து தள்ளிவிடும் அன்பு.

குற்றலலிங்கத்துக்கு† ஒரு பெரிய காரும், மரக்கலமும் கொண்டுவந்தார்கள். 29ம் தேதிதான் இங்குவந்து அதை அவன் கையில் கொடுக்க முடிந்தது. அதன் அழகையும் விசித்திரத்தையும் இன்னும் பார்த்து முடியவில்லை அவனும் அவனுடைய சகோதர சகோதரிகளும். உலகத்தில் எங்குவேண்டுமானாலும் குற்றல லிங்கத்துக்குத் தங்குதடை இல்லாமல்ப் போகமுடிகிறது— கற்பனை உலகத்தில்த்தான். நீரில். போகக் கப்பல், நிலத்தில் போக மோட்டார்கார்.

குழந்தைகளின் உள்ளமாகிய உலகத்தில் தாங்கள் எவ்வளவோ சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறீர்கள். தாங்கள் அளித்த பரிசுகள் அதைத் தெளிவாய்க் காட்டுகின்றன. பொதுவாகப் பள்ளிக்கூடங்களில் வருஷவிழாவையொட்டிச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பரிசுகள்வழங்கப் பார்த்திருக்கிறேன், நானும் கொடுத்திருக்கிறேன். பெரிய பெரிய புஸ்தகமாகக் கொடுப்பார்கள். ஷேக்ஸ்பீயர், மீல்டன், பிரௌனிங் முதலிய படே படே கவிஞர்களுக்குக் கீழே இறங்கமாட்டார்கள்.

---

* அம்மாளின் உறவினர். † டி. கே. சி. யின் பேரன்

உபயோகம் நாடிக் கொடுக்கிறார்களாம். இந்த ஜென்மத்தில் அந்தப் பிள்ளைகளுக்கு உபயோகப்படப் போவதில்லை. அடுத்த ஜென்மத்தில் இங்கிலாந்திற் போய்ப் பிறந்தால் அல்லவா அந்தப் பிள்ளைகளுக்கு உபயோகப்படும். உபயோகத்தை என்ன அழகாய் நாடுகிறார்கள்! ரொம்ப பேஷ்!

குற்றாலலிங்கத்துக்கான பரிசுகள் என்னை எங்கெல்லாமோ கொண்டுபோகின்றன.

தமிழ்க்கவி சம்பந்தமாக புதிய விஷயம் கிடைத்து விட்டால் அதைப்பற்றிக் கண்ட கண்ட இடமெல்லாம் பேசுவது எனக் குண்டான சபலம்,

பல இடங்களிலும் தங்கள் பிள்ளைமொழி—தொட்டில் பாடல்களைப்பற்றிப் பேச நேர்ந்தது. பாடல் என்றால் விஷயத் தோடு இதயம் ஒட்டவேண்டும். இது பெரிய காரியமே. சாமா ன்ய காரியம் என்று சொல்லிவிட முடியாது. கம்பரது இதயம் எத்தனையோ விஷயங்களோடு ஒட்டியுள்ளதுதான். ராமனாகிய சக்கரவர்த்தி திருமகனோடு ஒட்டும்; வேடனாகிய குகனோடு ஒட்டும்; குழந்தைகளோடும் ஒட்டித்தான் இருக்கிறது. ஆனாலும் பெண்களுடைய இதயம் எப்படி உள்ளும் புறமும் ஒட்டுமோ அப்படி ஒட்டும் என்று சொல்லமுடியாது. கம்பர் எப்படியும் ஆடவர்தானே. தாய் அல்லவே.

தங்கள் பாடல்கள் குழந்தைகளைக் கட்டி அணைத்தவண்ண மாக பேசுகின்றன. அது காரணமாக உண்மைத் தத்துவம் வெளியாய்விடுகிறது. அதன் பயனும் அழகும் வாய்ந்து விடு கிறது, இப்படியெல்லாந்தானே கவியைப்பற்றிப் பேசவேண்டி யிருக்கிறது.

குற்றாலத்தில்த் தாங்கள் குஞ்சு ஐயர் அவர்கள், கிருஷ்ண மூர்த்தி அவர்கள், குழந்தைகள் எல்லாரும் இருந்தது குற்றாலத் துக்கு ஒரு அலங்காரம், என் மனசுக்கோ அரிய விருந்து. எத்

தனேயோ விஷயங்களை ஆராய நேர்ந்தது ஏதோ ஒரு முடிவுகட்ட வும் முடிந்தது.

பொதுவாக நம்மவர்கள் ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துப் பேசினுல் இவர் சொன்னுர் அவர் சொன்னுர் என்ற முறை யில்த்தான் பேசுவார்கள் குற்ருலத்திலிருந்துகொண்டு பேசும் போது 'நயாகரா' அருவிதான் விஷயம். குற்ருலத்தருவியைப் பற்றிப் பேசவேமுடியாது. அப்படிப் பேசினுலும் அங்குள்ள எண்ணெய் சோப்பு நெருக்கடிதான் விஷயம். வாஸ்தவந் தானே! அவர்கள் சௌகரியமாய் ஏகபோகமாய்க் குளித்த நயாகராவில் அதெல்லாம் கிடையாதல்லவா! எல்லாம் புஸ்தகத்தை கிழித்துக் காகிதத்தை நெருப்பில் போடுகிற காரியந்தான். காகி தம் எரியும்போது நல்ல வாசனையா வருகிறது. இல்லேயே!

அருவிகள்பாடு இப்படியென்ருல் அடிப்படையான மனுஷ தத்துவங்களைப்பற்றிப் பேசநேர்ந்தால்க் கேட்கவாவேண்டும்?

இதுபோக இயற்கையானது ஆண்பாலர் என்றும் பெண் பாலர் என்றும் இரண்டாகப்பிரித்து இடையிலே கனத்த திரை யையும் போட்டுவிட்டது. ஆகவே ஒருவருக்கொருவர் விஷயம் தெரியாமலே வீட்டை நடத்துகிருர்கள்; ஏன்—உலகத்தையே நடத்துகிருர்கள். இந்தப் பைத்தியக்காரத்தனங்களைப் பற்றிப் பேசுவதென்ருல் முடிகிறகாரியமா? ஒரு யுகமேவேண்டும். ஒருமாசத்தில் என்னத்தைப் பேசிவிடமுடியும். ஏதோ பேச நேர்ந்தது. அதுவே திருப்தியை அளித்தது. இதையெல்லாம் யோசனை பண்ணி அல்லவா பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் வகுக்கவேண்டும். அப்படி வகுப்பது எந்தயுகத்திலோ?

சிம்லாவில் குழந்தைகள் வெகுஜோராய் விஷமங்கள் செய்துகொண்டிருக்கின்றன. விஷமங்கள் எல்லாம் நாடகங்கள் தான். ஒவ்வொரு நிமிஷமும் கலையைக் கற்றுக்கொண்டே யிருக்கிருர்கள். பள்ளிக்கூடத்தில் 40 பிள்ளைகளுக்கிடையே உட்காரவைத்து உபாத்தியாயரையும் முன்னே நிறுத்திவிட்டால் என்னத்தைப் படிப்பார்கள் அவர்கள். செயல்செய்து உடலின்

ஒவ்வொரு அம்ஸமும் தொழில்ப்பட்டால்தான் குழந்தைகளுக்கு கல்விவரும். அறுபத்திமூவர்மாதிரி உட்கார்ந்திருந்து உபாத்தியாயரின் உபன்னியாசங்களைக்கேட்டால் கல்விவரவா செய்யும். குழந்தைகளின் இயல்பான அறிவு, பண்பு ஆக்கல் இவைகளைப் பார்க்கப்பார்க்க பள்ளிக்கூடங்கள் செய்துவரும் அநியாயங்களையும் கொடுமைகளையும் சகிக்கமுடியவில்லை மனசுக்கு.

இரண்டாவது பாரத்தில் முதல்நாள்ப்போய் பையன் உட்கார்ந்திருக்கிறான். உபாத்தியாயர் முதல் கணக்காக ஆரம்பிக்கிறார்.

"அறுபத்தேழு லக்ஷத்து ஐம்பத்தோராயிரத்து நானூற்று முப்பத்தொன்பதில் a ஆயிரங்களாகவும், b பத்துகளாகவும் c ஒன்றுகளாகவும் இருக்கின்றன, a, b, c யின் மதிப்பு என்ன"

எப்படி இருக்கிறது காரியம்!!!

குழந்தைகள் சதாக்கல்விக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ரொம்பப்பெரிய பள்ளிக்கூடத்தைப் போட்டிருக்கிறது இயற்கை. பாடல்களும் பாடப்புஸ்தகங்களும் எண்ணிறந்தன. தெவிட்டாவிருந்து குழந்தைகளுக்கு.

"இதெல்லாம் உங்களுக்கு உதவாது. பள்ளிக்கூடத்துக்குள் வாருங்கள், பள்ளிப்புஸ்தகங்களை விரித்து முகத்தில் வைத்துக் கட்டிவிடுகிறோம். சரியானகல்வி நன்றாய்வந்துவிடும்" என்று சொல்லிக் கொண்டிருக்கின்றனவே பள்ளிக்கூடங்கள், என்ன செய்ய அவைகளை?

'வண்டிகள்', 'அதுயார்' 'அன்னையின் முத்தம்' முதலிய தங்கள் பாடல்கள் தாயின் உள்ளப்பரவசங்களை அருமையாகச் சித்தரிக்கின்றன. சித்திரத்தைப்பார்த்து அனுபவிப்பதற்குப் பக்குவம் வேணும். கொடுத்தும் வைத்திருக்கவேண்டும். தங்கள் முறையில் பெரியாழ்வாரும் ஒரு மனுஷக் குழந்தையையே பற்றிப் பாட்டு எழுதியிருக்கிறார்.

தாங்கள் நேர்முகமாக அனுபவரீதியாக எழுதிய பாடல் களில் நயத்தையே காணமுடியவில்லையாம். வானத்தையெல்லாம் சுற்றிச் சுழன்றுவரும் தாயுள்ளம் அடங்கிய கவியையா காணப் போகிறார்கள். எவ்வளவு பெரிதாக நெற்றிமேல் நாமத்தைப் போட்டாலும் பிரயோஜனம் இல்லை.

"The Poets eye in a fine frenzy rolling
Doth glance from heaven to earth
And from earth to heaven"

என்று ஷேக்ஸ்பியரையும் வேறு 'கோட்'செய்து கொள்ளுவார் கள். "ரங்கநாதா! ரங்கநாதா! ரங்கநாதா! என்று ஸ்ரீரங்கத்துக் கிளிப் பிள்ளை சொல்லும் கணக்குத்தான். இவர்களையெல்லாம் கொஞ்சம் மறந்துவிட்டு, பெரியாழ்வார் சொல்லுவதற்கு காது கொடுப்போம்.

தொட்டிலுக்குப்பொன்னால் விளிம்பு கட்டி, இடை யிடையே மாணிக்கமும் வைரமும் வைத்து அழுத்தி இருக்கிற தாம்.

மாணிக்கம் கட்டி
  வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னால்ச் செய்த
  வண்ணச் சிறு தொட்டில்
பேணி உனக்குப்
  பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தோனே! தாலேலோ!

ஆடவர்களிலும் பிள்ளைப் பாடல்கள் பாடக்கூடியவர்கள் இருக்கிறார்கள். தெரிந்துகொள்ளுங்கள்.

அன்பன்,
டி. கே. சிதம்பரநாதன்.

"The Poet's eye in a fine frenzy rolling
Doth glance from heaven to earth
And from earth to heaven."

அருமைப் புதல்வி

சுந்தரிக்கு

"குற்ருலத் தமர்ந்துறையும் கூத்தா" என்பது பழைய பாட்டின் ஒரு அடி. "குற்றலத் தமர்ந்துறையும் தாத்தா" — என்று அதைத் திருத்தம் செய்து பாடியவர் ஸ்ரீமதி சுந்தரி. இவ்வளவு அருமையாக—டி. கே. சி. யை அவரது பேரன் பேத்திகளுடன் போட்டி போட்டு, தாத்தா என்று அழைத்த பெண்தான் சுந்தரி. வந்தவாசி வாசி. ஸ்ரீ A. ராமலிங்கம் என்பவரின் துணைவி.

1946-ல் குற்ருலம் வந்திருந்தபோதுதான் டி. கே. சி. யுடன் பழகும் பாக்கியம் இந்த இளம் தம்பதிகளுக்குக் கிடைத்தது. அன்றே 'அட்டாப்ட்' செய்துகொண்டார் டி. கே. சி. இவர்களையும் தம் அருமைக் குழந்தைகளாக. சுந்தரி சுந்தரமான உள்ளம் படைத்தவர் என்பது, இவர் டி. கே. சி. க்கு எழுதும் கடிதங்களிலிருந்தே தெரியவரும். டி. கே. சி. இவருக்கு எழுதும் கடிதங்களைவிட, டி. கே. சி. க்கு இந்த சுந்தரி எழுதும் கடிதங்கள் ரொம்ப ரொம்ப ரஸமானவை. கம்பன் விழாவிலே திருநெல்வேலி அன்பர்கள், கம்பன் படம், கம்பராமாயணச் சுவடி முதலியவைகளை யானைமீது ஏற்றி ஊர் வலம் விட்டதை அறிந்த சுந்தரி, "ஏன்! உங்கள் ஊரில் இரண்டு யானைகள் இல்லையா? கம்பன் படத்தையும், கம்ப ராமாயணச் சுவடியையும் ஒரு யானைமீது ஏற்றியதுபோல, டி. கே. சி. தாத்தாவையும் ஏன் இன்னொரு யானைமீது

ஏற்றி ஊர்வலம்; விடக்கூடாது?" — என்று கேள்விமேல் கேள்வியாய்க் கேட்டுத் திணற அடித்துவிட்டார். டி. கே. சிக்கு கடிதங்களுடன் சித்திர வேலைப்பாடமைந்த பாய்களையும் வந்த வாசியிலிருந்து அனுப்பினர். சுந்தரியின் கடிதங் களைக் கண்டாலே டி. கே. சி: யின் முகம் சுந்தர மாக மலரும். உள்ளமுமே மலரும் என்று சொல்லவா வேண்டும்?

திருக்குற்றலம்,
தென்காசி
12—8—47,

அம்மை சுந்தரிக்கு

அழகான கடிதம் கிடைத்தது. துணேவர் கண்ட பிரகாரம் கடிதம் வெகு அழகாய் இருக்கிறது. இங்குள்ளவர்கள் பலரும், நல்ல அறிஞர்களுமே வாசித்து ரொம்ப ரொம்ப அனுபவித்தார்கள்.

தமிழ் உலகத்தில் இத்தகைய கடித இலக்கியம் பிறந்து வருகிறது என்று சொல்லி ஆனந்தப்படுகிறுர்கள்.

பொதுவாக நம்மவர்கள் கடிதம் எழுதினல் "இவ்விடம் க்ஷேமம், அவ்விடம் க்ஷேமத்துக்கு எழுதியனுப்பவேண்டும்." என்பதுதான் விஷயமாயிருக்கும்.

பண்டிதர்கள் எழுதியனுப்பினல் அதுவும் இராது. 'பன்னுள் நோக்குற்றது இந்நாட் போந்தெய்தியது' என்று அவர்கள் படித்த பாடத்தையெல்லாம் ஒப்பிக்கப் பார்ப்பார்கள்.

உணர்ச்சியோ உண்மையோ சூன்யம். நமக்கு ஏமாற்றமும் தலைவலியும் மிச்சம் என்று ஏற்படும்.

இப்படி இருந்த கடித உலகில்க் கிடந்தவனுக்கு துணேவர் கடிதமும் தங்கள் கடிதமும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்திருக்கிறது என்பதைத் தாங்கள் அறியமுடியாது.

துணேவரும் வெகு அழகாகத் தாங்கள் எழுதியதுதான் முதன்முதலாக எழுதிய கடிதம் என்றும் குறிப்பிட்டிருக்கிறுர்கள்

"குற்றுலத் துறைகின்ற"
கூத்தா உன் குரைகழற்கே!

என்ற அடி எவ்வளவு லாவகமாகத் தங்கள் நாவில் மாறிக் கொண்டது என்பதை நினைக்கும்போது எனக்கு ஒரே ஆனந்த மாய் இருக்கிறது. அன்பு எப்பேர்ப்பட்ட விளையாட்டுகளை யெல்லாம் விளையாடி விடுகிறது என்று நினைக்கிறேன்.

இந்த ஒரு விஷயம் தங்கள் தமிழ் அனுபவத்தை அபாரமாக வெளியிடுகிறது. தமிழானது தாய்மாருக்குத்தான் என்று அடிக்கடி நான் சொல்லுவதுண்டு. தாங்கள் அந்த உண்மையை நன்ருய் வலியுறுத்திவிட்டீர்கள்.

தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பாடிய பாடலையும் வைத்து நன்ருய் விளையாடுகிறீர்கள்.

"கன்னித் தமிழேபோல்
கம்பன் கவியேபோல்"

என்ற தமிழ் வார்த்தைகளிலுள்ள இனிமையை அப்படியே பருகிவிட்டீர்கள். இதயத்தை விட்டுப்போகாது அது என்று தெரிகிறது.

தணிவரும் தாங்களும் வந்து பத்து நாள் உடனிருந்தது என் வாழ்க்கையில் கிடைத்த அரிய அனுபவங்களில் ஒன்று நல்ல உணர்ச்சியும் பண்பாடும் கொண்ட அழகிய இளந் தம்ப திகள் விட்டோடு வீடாய்க் குடும்பத்தோடு குடும்பமாய்ச் சேர்ந்து, உடன் இருந்தும் உண்டும் அளவளாவியும் பொழுது போக்குவதைவிட சிறந்த அனுபவம் வேருென்று இருந்து விடாது.

பழனியாண்டவன் அருள் என்றென்றும் உங்கள் இருவருக்கும் அமைவதாக,

வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கை வேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல்
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை

இப்படிக்கு,
டி. கே. சி. தாத்தா.

அருமைப் புதல்வி

ராஜேஸ்வரிக்கு

திருநெல்வேலியில் "கலை தேரி கழகம்" ஒரு பிரபலமான பெண்கள் சங்கம். இந்தச் சங்கத்துப் பெண்மணிகள் 'கலை விழா' நடத்துவார்கள் 'தமிழ் விழா' நடத்துவார்கள். விழா என்றால் வெறும் பிரசங்க விழா அல்ல. எல்லாம் கலையுணர்ச்சியோடு, காட்சிகளையும், இசை நிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்டுவார்கள். இப்படி இவர்கள் நடத்தும் விழாக்களில் எல்லாம் அக்கிரஸ்தானம் டி. கே. சிக்கு. "தன் சீமந்த மகளின் திருமணத்தில், மகளும் மருமகனும் மணவறை சுற்றி வரும்போதும், மங்கல வாத்தியங்கள் முழங்குகின்ற போதும், ஒரு தந்தை எப்படிப் பெருமிதத்துடன் மகிழ்ச்சியடைவாரோ அத்தகையப் பெருமகிழ்ச்சியைக் கண்டேன் டி. கே. சி. முகத்தில்—இந்த விழா நடக்கும் போது" — என்று நண்பர் 'துறைவன்' எழுதினர், இப்படி நடந்த ஒரு விழாவையும், இந்த விழாவில் பிரசன்னமாயிருந்த டி. கே. சி. யையும் பார்த்து விட்டு.

இந்த விழாவை யெல்லாம் நடத்தியவர்தான் திருமதி ராஜேஸ்வரி பாஸ்கர். திருநெல்வேலி தோ. மு. பாஸ்கரத் தொண்டைமானின் மகள். இந்து கல்லூரியின் மாணவி. தமிழ் பக்தி, கம்பன் மோஹம், டி. கே. சி. பேரில் அபிமானம் எல்லாம் இவருக்குப் பிதுரார்ஜிதமாகக் கிடைத்தவை.

டி. கே. சி. யிடம் இவருக்கு அன்பு நிறைய இருப்பது போலவே, டி. கே. சி. க்கும் இவரிடம் நிறைய அபிமானம் உண்டு. அவகாசம் கிடைக்கும் போதெல்லாம், குற்றாலம் சென்று டி. கே. சி யுடனேயே தங்குவார். அவர் பேரன் பேத்திகளோடு ஒட்டிக் கொள்வார். அப்படிப் போக இயலாத காலத்திலெல்லாம், கடிதம் எழுதுவார். இவரது கடிதங்களை யெல்லாம் சிறந்த இலக்கிய மாகவே பாராட்டுவார் டி.கே.சி. குற்றாலத்தில் கூடும் சத் சங்கத்திலும் சென்னையில் கூடும் அறிஞர்களிடத்திலும், பம்பாய்—மாதுங்கா தமிழர் சங்கத்திலும் இந்த அபிமான புத்திரியின் கடிதங்கள் அலங்காரமாய் அரங்கேற்றுபடியாகும். டி.கே. சியின் ஆச்சர்ய மெல்லாம் " இந்த யுனிவர்ஸிடியில் பி. ஏ. வகுப் பையும் படித்துக் கொண்டு, இவ்வளவு அழகாக வும், உண்மை உணர்ச்சியுடனும் இந்தப் பெண் ணால் எப்படி எழுத முடிகிறது—என்பதுதான் " இத்தனை ஆசிரியர்கள் சேர்ந்தும் இந்தக் குழந்தையின் அன்பையும் உணர்ச்சியையும், கெடுக்க முடியவில்லை அல்லவா! அதுவே பெரிய பாக்கியந்தான் "—என்று ஒரு தடவைக் குப் பல தடவை சொல்லுவார்.

திருக்குற்றலம்
18—7—45

அருமைப் புதல்வி ராஜேஸ்வரிக்கு,

உன்னுடைய 14வ கடிதம் கிடைத்தது. ரொம்ப சந்தோஷம். கடிதம் பார்வைக்கே முதலில் அழகாய் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில்ப் படித்துக்கொண்டும், நோட்டீஸ்கள் எழுதிக்கொண்டும் இருக்கும் பெண் எப்படி அழகாய் அச்சுப்போல் எழுதலாம் என்றுதான் கேட்கிறேன். பள்ளிக்கூடம் ஒன்றுந்தான் சொல்லிக்கொடுக்கவில்லை—உன்னைப்போல் அழகாக எழுதவாவது சொல்லிக்கொடுக்கலாமே—சம்பளத்தையும் இஷ்டம்போல் வாங்கிக்கொண்டிருக்கலாமே என்றுதான் சொல்லுகிறேன்.

விஷயம், அதைவிட நடை வெகு அழகாய் இருக்கிறது. ஏதோ நான் மிகைபடச் சொல்லிக் கொண்டிருக்கிறேனும்—தமிழ் வசனம் ஆங்கில வசனத்தைவிட மேல் என்பதாக. பாடப் புத்தகங்களிலுள்ள தமிழ் வசனங்கள் அப்படி அப்படித்தான் இருக்கும். தமிழ் இன்னதென்று தெரியாத பண்டிதர்கள் எழுதியது வேறு எப்படியிருக்கும். அவைகளை வைத்துத் தமிழ் வசனத்தைக் கணிக்கக்கூடாது.

உள்ளம் அப்படி அப்படியே புரண்டும், சருகியும், சுழித்தும், தெளிந்தும் ஓடும். உன் வசனத்தைப் பார்த்தால் அல்லவா தமிழ் வசனத்தின் அழகும் பெருமையும் தெரியவரும்.

நீ எழுதியதெல்லாம் உண்மை என்று உணருகிறேன். அதைச் சொல்லுவதில் எனக்குக் கஷ்டந்தான். அதற்காக உண்மையைப் பொய்யென்று சொல்லுகிறதா?

"ஜுலை 6, 7, 8ம் தேதிகள் என் வாழ்க்கையில் நான் என்றென்றும் மறக்கமுடியாத ஒரு அனுபவத்தை எனக்குக் கொடுத்துவிட்டன." என்று சொல்லுகிருய். என்னைக்

குறித்த அன்பும் உபசாரமும் எவ்வளவோ அந்த வாக்கியத்தில் அடங்கிக் கிடக்கின்றன. வாஸ்தவந்தான். என்னைக் குறித்த காரணத்தால், எப்படி உண்மையில்லை, அழகில்லை, தமிழில்லை என்று சொல்லலாம்.

இந்த வயசில், இந்தக் காலத்தில் எனக்குக் கொஞ்சம் ஊக்கம் கொடுத்தால் நல்லதுதான். உண்மையான ஊக்கத்தை உன் கடிதம் ஏராளமாய்க் கொடுக்கிறது எனக்கு.

இன்று சாயங்காலம் இங்கே வீட்டுக்கு, டாக்டர் திருமூர்த்தியும் பிரபல வக்கீல் சுப்பராயலுவும் வந்தார்கள். அவர் களுக்கு என் கடிதங்களிலும், எனக்கு வரும் கடிதங்களிலும் நாட்டம் உண்டு.

எழுது பலகையின்மேல் உன் கடிதம் கிடந்தது—பதில் எழுதுவதற்காகத்தான். டாக்டர் திருமூர்த்தி, 'அழகான எழுத் தாய் இருக்கிறதே' என்று சொல்லிக்கொண்டு கடிதத்தைக் கையில் எடுத்தார். பக்கத்தில் இருந்த சுப்பராயலு கைநீட்டி வாங்கினர் அதை; பிறகு வாசித்தார். கேட்டுக்கொண்டிருந்தவர் களுக்கெல்லாம்—வாக்கியம், வாக்கியமாகக் கேட்டுத்தான்—ஒரே அதிசயம். ஒரே ஆனந்தம்! சிறிது நேரம் கழித்து பாக்கியலக்ஷ்மி அம்மாள் வந்தார். அவரிடத்தில் சுப்பராயலு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார். அம்மாளும் வாசித்தார். அப்போதும் எல்லாருமாகச்சேர்ந்து வியந்தோம். அனுபவித் தோம்.

உணர்ச்சிகளை எவ்வளவு அழகாய் எழுதியிருக்கிருள் என்று எல்லாருமே ஏகோபித்துச் சொன்னார்கள். பள்ளிக் கூடத்தில்ப் படிக்கிற பெண்ணு இப்படி எழுதுகிறது? என்றும் சொன்னார்கள்.

பாஸ்கரத் தோண்டைமானுடைய பெண் என்று சொன் னேன். 'தமிழ் ஸ்காலர் ஆச்சே, அவருடைய மகளா?' என்று டாக்டர் திருமூர்த்தி சொன்னர். வியப்பும் கொஞ்சம் இறங்கி விட்டது என்று வைத்துக்கொள்!

தமிழும் கம்பரும் பெண்டுகளுக்குத்தான் என்று நான் சொன்னேன். எப்பொழுதுந்தான் சொல்லுகிறுயே என்று டாக்டரும், சுப்பராயலும் ஆமோதித்தார்கள். பாக்கியலக்ஷ்மி அம்மாளும் ஆமோதித்திருப்பார் ஆனல் நாணம் வந்து தடுத்து விட்டது.

பாக்கியலக்ஷ்மி அம்மாள் நேற்றிரவு விடைபெற்றுக் கொண்டு போன முறையில், "எனக்கு வார்த்தை சொல்ல முடியவில்லை. ராஜேஸ்வரியின் கடிதத்தை என்னுடைய கடிதம் என்று வைத்துக்கொள்ளுங்கள்"—என்று என்னிடமும் உன் அண்ணியிடமும் சொல்லிவிட்டுப்போனர்.

* * *

பிச்சம்மாளுக்காக* அனுப்பிய அழகான சட்டைகளையும் அவைகளைவிட அழகான கடிதத்தையும் இங்கு வந்தபிறகுதான் பார்த்கேன். பார்த்த மாத்திரத்திலேயே தீபாவளிப் பண்டிகை வந்துவிட்டது எல்லோருக்குமே. நேற்றுத்தான் பிச்சம்மாள் தென்காசியிலிருந்து இங்கு வந்தாள். சட்டைகளைப் பார்த்தாள் கடிதத்தை நடராஜன் வாசிக்கக் கேட்டாள். ஒரே சந்தோஷம்.

சட்டைகளை பிச்சம்மாளுக்கென்று அளவெடுத்து தைத் திருக்கிறுய். அவளுக்கு வெகு பொருத்தமாய் இருக்கின்றன. கடிதம், எனக்கு எழுதுவதைவிட மேலாய் இருக்கிறது.

பிச்சம்மாளுக்கு நீ எழுதிய கடிதத்திலிருந்து நல்ல முறை யில்க் கடிதம் எழுதுவதற்கு யுக்தி இன்னதென்று தெரிந்து கொண்டேன். யாருக்கு எழுதுகிறேமோ, அந்த ஆசாமியை கண்முன் நன்றய் இருத்திக்கோள்ளவேண்டும். பிச்சம்மாளை அப்படி நீ இருத்திக்கொண்டாய். கடிதம் அற்புதமாய் வந்து விடுகிறது.

ஆனல் இது வெண்ணெய் வைத்துக் கொக்குப் பிடிக்கிற காரியந்தான். மனக்கண்ணுக்குள் "இரு" என்றுல் யாராவது இருந்து விடுவார்களா, மாட்டார்கள். அதற்குரிய சாதனம்,

* டி. கே. சி அவர்களின் பேத்திப்பெண்.

பக்குவம், அன்பு, அருமை எல்லாம் நம்மிடத்தில் இருந்தால் தானே, அவர்கள் இருப்பார்கள். உன்னுடைய உள்ளத்தில் அதெல்லாம் வேண்டியமட்டும் இருக்கிறது. பிச்சம்மாள், நான், எல்லாரும் "இரு" என்ருல் அப்படியே இருந்து விடு கிரேம். இப்படித்தான் மாணிக்கவாசகர், சுந்தரர் பொய்கை யாழ்வார் முதலிய பக்தர்கள் "இரு" என்ருல் இருந்துவிடு கிருன் இறைவன். அவனது அருள்பாலிப்பதாக உனக்கு.

மிக்க அன்புடன்,

டி. கே. சி. அப்பா

அருமைப் புதல்வி

மஞ்சம்மாளுக்கு

ராஜபாளையத்தில் ராஜாக்கள் எண்ணிறந்தவர்கள். இவர்கள் வீட்டில் எல்லாம் பேசும் பாஷை தெலுங்கு. (ஆந்திர சகோதரர்கள் ஒப்புக்கொள்ளாத தெலுங்குதான்.) என்ருலும் இந்த ராஜாக்களில் அநேகருக்குத் தமிழ் அபிமானம் அதிகம். சிறந்த புலமை வாய்ந்த ராஜாக்களும் உண்டு அவர்களிடையே. கலை ஆர்வமும் சமய ஞானமும் நிறைந்தவர்கள் அநேகர். இது காரணமாக 'கலைஞான வளர்ச்சிக் கழகம்' எல்லாம் மாஜி மந்திரி ஸ்ரீ P. S. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் நடைபெறும். அங்கே எவ்வளவுதான் இந்த ராஜாக்கள் பொதுஜன சேவையில் ஈடுபட்டாலும் இவர்களின் ராணிகள் இருக்கிருர்களே அவர்களுக்கெல்லாம் அந்தப்புர வாசம்தான். கோஷா முறைகூட உண்டு. இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்த பெண்தான் மஞ்சம்மாள். டி. கே. சி. யின் அருமைப் புதல்விகளில் ஒருவர்.

1945-ல் இந்தப் பெண்ணுக்கு மணம் ஆகவில்லை. அந்தப் புரத்தில் அடைபட்டுக்கிடந்த இந்த அம்மாள், கல்கியில்வரும் கம்பர்தரும் காட்சிகளை ஒழுங்காகப் படித்தார். அனுபவித்தார். தன்னுடைய அனுபவத்தையெல்லாம் வெளியிடத் துடித்தார். கடைசியாகத் துணிந்து ஒரு கடிதம் எழுதினுர் டி. கே. சி. க்கு. கடிதத்தைப் படித்தார் டி. கே. சி. உடல்நலமில்லாது சோர்ந்து கிடந்த அவர் உடனே ஆரம்பித்தார்,

கம்பராமாயணம் கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் வேலையை. மஞ்சம்மாள் கொடுத்த ஊக்கம் அவர் தளர்ந்த உடலுக்கு உரம் கொடுப்ப தாயிற்று. மஞ்சம்மாளைப் பெற்ற பாக்கியம் ஸ்ரீ சின்ன வெங்கிட்ட ராஜா அவர்களதுதான். என்றாலும், அவளை அருமை மகளாகத் 'தத்' தெடுத்துக்கொள்ளும் உரிமை கிடைத்துவிட்டது டி. கே. சிக்கு. கடிதம் வந்த சில மாதங்களில் திருமணம் நடந்தது. டி. கே. சி.யே நேரில் சென்று பெண்ணை ஆசீர்வதித்துக் கல்யா ணத்தை சிறப்பாய் நடத்தி வைத்தார்.

இந்த அருமைப் புதல்விக்கு, அவள் அருமைக் கடிதம் வந்தவுடன் எழுதிய அருமை யான கடிதம் ஒன்றே இந்தத் தொகுதியில் இடம் பெறுகின்றது.

திருக்குற்றலம்,
20—5—45

அருமைப் புதல்வி மஞ்சம்மாளுக்கு,

உன்னுடைய அழகான, அருமையான கடிதம் ஒரு மாசத்துக்கு முன்னேயே வந்ததில் குறைவில்லை. பதில் எழுதத் தாமசம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் இருக்கிறது.

உன் அருமைச் சகோதரர்களுக்கும், மற்றும் பல நண்பர்களுக்கும் கடிதத்தை வாசித்துக் காட்டிக் குழாமாக அனுபவிக்கிற ஜோலி அதிகமாகப் போய் விட்டது. அருமை அப்பாவுக்குக் கடிதத்தைப் பற்றி எழுதவேண்டியிருந்தது. அதோடு நிற்கவில்லை. சென்னையில் ஒரு பிரமுகரான ராவ்பஹதூர் டி. எஸ். திருமூர்த்தி அவர்களுக்கும் எழுதவேண்டியிருந்தது.

அப்பா எழுதுகிறதைப் பார்!

"என் அருமைப் புதல்வியும், தங்கள் குமாரத்தியே. எங்கள் மறுமலர்ச்சிக்கு ஊக்கக் களஞ்சியம் எங்கள் மஞ்சம்மாளே. அறிவும், ஊக்கமும், அன்பும், தொண்டும் அமையப் பெற்ற புதல்வி. எங்கள் குடும்ப ஜோதியாக அருமை மஞ்சம்மாளை நாங்கள் பாராட்டுவதைத் தங்களுக்கு விநயமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்."

எவ்வளவு அன்போடும் அருமையோடும் எழுதுகிறார்கள்! திருவள்ளுவரோடு சேர்ந்து, அவர்களும் நானும் என்ன தவம் செய்தோமோ என்று சொல்ல உரிமை இருக்கிறது எங்களுக்கு.

டாக்டர் திருமூர்த்தி அவர்களுக்கு உன் கடிதத்தின் சில பாகங்களை எடுத்து எழுதியிருந்தேன். அவர்களுக் குண்டான ஆனந்தம் அப்படி இப்படி அல்ல.

"வயது முதிர்ந்த என்னைப் போன்றவர்களை. (Cataract—உண்டாகும் வயதிலிருப்பவர்களை—) கண்ணைத் திறந்து கம்ப

ராமாயணம் படிக்கச் செய்தது பெரிதல்ல! சிறுவர் சிறுமியர் களை, அவர்கள் ஆடும் விளையாட்டை அனுபவிப்பதுபோல் கம்பராமாயணத்தையும் படித்து ஆடிப்பாடி ஆனந்திக்கச் செய்ததுதான் பெரிது. இது உண்மைதான் என்பதை ராஜ பாளையத்துச் சிறுமி நிரூபித்துவிட்டாள். அவள் வாக்கியங் களைக் கேட்டு எனக்கு உண்டான சந்தோஷம் கொஞ்சநஞ்ச மல்ல.

"சுந்தரகாண்டத்தில் உங்களை ஊக்கத்துடன் ஈடுபடச் செய்த அந்த சுந்தரியை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவள் ரூபம் எப்படியோ! சுந்தர மனதுடையவள் என்பதை அவள் கடிதம் காட்டுகிறது. கடிதமும் சுந்தரமாக (அழகாக) எழுதி யிருக்கிறாள்.

"சிறுமியின் மனத்தில் எழுந்த எண்ணங்களை உங்களுக்குச் சமர்ப்பித்துவிட்டாள் அவள். கிழவன் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளை நானும் கொட்டிவிட்டேன்.

"மீதம் உள்ள காண்டங்களைச் சீக்கிரம் முடித்துக் கொடுத்துவிடவேண்டும் எவ்வளவு ஆசை! ஆத்திரம்! அவசரம்! எனக்கும் அல்லவா அப்படியிருக்கிறது!

"அவள் சிறுமி. தீர்க்காயுளுடன் சந்தோஷமாக இருக்க வேண்டும்! இருக்கவும் செய்வாள் கடவுள் கிருபையால். அவள் அவசரப்படவேண்டிய காரணம் இல்லே. அவசரப்பட வேண்டியவன் நான் அல்லவா? வயது ஆகிவிட்டபடியால்."

இந்த விதமாக டாக்டர் திருமூர்த்தி அவர்கள் உத்சாகமாக எழுதுகிறார்கள் - உன் கடிதத்திலுள்ள கருத்துக்களைப் பார்த்து விட்டு.

உன் கடிதத்திலுள்ள கருத்து, நடை, ஆர்வம் எல்லாம் சேர்ந்து எனக்குத் தனியான உத்ஸாகத்தைக் கொடுத்தது. கடிதத்தை வாசித்ததும், குமாஸ்தாவைக் கூப்பிட்டு, சுந்தர காண்டத்தை எடுத்துவரச்சொல்லி, தொடரவேண்டிய இடத்தி

லிருந்து உரைசொல்லி உடனடியிலேயே ஐந்து பாட்டை முடித்தேன். உடம்பு ஏதோ பலஹீனமாக இருந்தது அதைக் கவனிக்கவில்லை.

நான் அடிக்கடி பிரசங்க மேடைகளிலிருந்து சொல்வதுண்டு. கம்பர் பெண்டுகளுக்கே முக்கியமாக உரியவர் என்பதாக. நீ அதை வெகு அழகாக ரூபித்து விட்டாய். எவ்வளவோ சந்தோஷம்.

சீக்கிரத்தில் கம்பராமாயணத்தை முடித்து விடுகிறேன். உன்னுடைய ஆத்திரத்தை அப்பா கண்டு கொண்டு ஒரே கோபாவேசத்துடனே என்னைக் கண்டித்து எழுதுகிறார்கள். உன்னிடத்தில் அவர்களுக்குள்ள பேரன்பு எப்படி எப்படியெல்லாமோ வெளியாகிறது. ரொம்ப திருப்தி.

வெகு நுண்ணிய அறிவு படைத்த உனக்கு கலைகள் எல்லாம் தாமாகக் கைவரும் என்பதில் சந்தேகம் இல்லை. எல்லா விதத்திலும் மேம்பாடும் புகழும் உனக்கு உண்டாகும். எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

அன்பன்,
டி. கே. சிதம்பரநாதன்.

புதிய பக்தர்கள்

வெங்கட்டராமய்யர்

வெங்கடாச்சாரி

பொன்னையா பிள்ளை

சண்முகசுந்தரம்

பலராம்

அருமை நண்பர்

வெங்கட்டராமய்யர் அவர்களுக்கு

ஏகலைவன் கதை வடநாட்டுக் கதையானு லும் தமிழர்களுக்கு நன்கு தெரிந்த கதைதான். துரோணுச்சாரியாரை அடுத்து சிஷ்யனுக ஏற்றுக் கொள்ள அவன் எவ்வளவோ மன்ருடியும் அவர் இணங்காத காரணத்தால், அவர் சிலை ஒன்றை நிருமாணித்து அதன் முன் குரு சிஷ்ய முறையில் நின்று பயிற்சி பெற்று, அஸ்திரக்கலை அத்தனை யையும் — அர்ச்சுனனுக்கு நேரில் அவர் உப தேசித்த அத்தனை அருமையான நுட்பங்களை யுமே — கற்றுக்கொண்டான் என்பர்.

அத்தகைய ஏகலைவர்கள் இன்றும் தமிழ் நாட்டில் எத்தனையோபேர் உண்டு என்பதற்கு கீழச்சூரியமூலை கர்ணம் ஸ்ரீ N. வெங்கட்டராம அய்யர் அவர்களே தக்க சான்று. டி. கே. சிக்கும் அவருக்கும் கடிதப் 'போக்குவரவு சென்ற நான்கு வருஷங்களாக நடக்கிறது. டி. கே. சி. யையும் கம்பரையும் பக்தி பூர்வமாகவே அவர் வழிபடுகிருர். அமுதமயமான கம்பர் கவிகளை யும், அந்த அமுதகீத வாரியில் திளைக்கவைக்கும் டி. கே. சியின் கம்பர்தரும் காட்சிகளையும் ஒழுங் காய்ப் படிக்கிருர். படித்துப் பரவசமானதை உடனே கடிதங்களில் எழுதி வெளியிடுகிருர். எல்லாம் டி. கே. சியை இதுவரை நேரில் பார்த்து அறியாமலேதான். ஒருவரது உரு வத்தை ஒருவர் அறியார்கள் என்ருலும் இரு வரையும் பிணைத்திருக்கும் அன்போ, அளவிட முடியாதது. இந்த பக்தியை ஏகலைவன் பக்தி

என்று சொல்லாமல் வேறு என்ன என்று சொல்வது.

கீழச்சூரியமூலே, தஞ்சை ஜில்லாவில் ஆடுதுறை ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய ஊர். என்றாலும் தமிழ்த் தாத்தா டாக்டர் சாமிநாத அய்யர் அவர்களின் ஜன்மபூமி என்பது காரணமாக, தமிழ் இலக்கிய உலகில் பிரபலமடைந்த ஒரு ஊர். அந்த ஊரில் ஒரு ஸத் ஸங்கம். அந்த சத் சங்கத்தார் டி. கே. சி. தரும் கம்பரை, அந்தக் கம்பர் தரும் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து, அனுபவிக்கிறார்கள். கம்ப ராமாயண வளர்ச்சிக்கு தங்கள் ஊரை நல்ல நாற்றங்கால் பண்ணையாக அல்லவா ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் !

இந்த நண்பருக்கு டி. கே. சியிடம் தான் பக்தி என்பதில்லை. 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்றபடி டி. கே. சி. பக்தர்களிடமுமே பக்தி செலுத்துகிறவர் அவர். தொ. மு. பாஸ்க்ரத் தொண்டமான் 'ரஸிகமணி டி. கே. சி' என்ற புஸ்தகம் எழுதி வெளியிட்ட உடனே அதன் முதல் காப்பியை விலைகொடுத்து வாங்கியவர் அவர். புஸ்தகத்தின் பிரதி ஆசிரியரைச் சேருமுன்னே அதைப்பற்றி அருமையான விமரிசனம் ஒன்று எழுதி அனுப்பி ஆசிரியரை அமோகமாகப் பாராட்டியவர். அத்துடன் விட்டாரா என்றால் இல்லை. டி. கே. சிக்கே "அடடா ! எப்படி இருக்கிறது புஸ்தகம் என்ன அருமையாக இருக்கிறது ; இப்படி ஒரு சிஷ்யர் உங்களுக்கு உண்டு ஏன் எனக்கு இது வரைதெரிவிக்கவில்லை' என்றெல்லாம் புகாருக்கு மேல் புகாராக எழுதியவர். எல்லாம் அவரையும்

நேரில் பார்க்காமலேயேதான். இதையெல்லாம் பார்க்கும்போது தான் "அடடா!

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்

என்ற குறளுக்கு இலக்கியமாக அல்லவா இவர் விளங்குகிறார்" என்று சொல்லத்தோன்றுகிறது. குறளின் பொருளும் லேசாக விளக்கமுறுகின்றது.

சென்னை
16—1—'46

அருமை நண்பர் வேங்கட்டராமய்யர் அவர்களுக்கு

நமஸ்காரம்

தாங்கள் 11—1—46 அன்று அனுப்பிய கடிதம் குற்றாலம் போய்விட்டு, இன்றுதான் என் கைக்கு வந்தது. முந்திய கடிதங்களும் அப்போதைக்கப்போது வந்து சேர்ந்தன. தங்கள் கடிதம் வந்துவிட்டால் எனக்கு அது நல்ல நாள். ஆனந்தம், உல்லாசம், ஊக்கம் எல்லாம் பிறந்துவிடும். அன்பினிடம் அவ்வளவு சக்தியும் இருக்கிறது.

தாங்களும் அப்பு அவர்களும் கம்பரை அனுபவிக்கிறதைப் பார்த்தால் உண்மையான இலக்கிய அனுபவம் இப்படிப்பட்டதென்று எடுத்துக்காட்டலாம். 'கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இதயத்தில் உறைகிறார், அமுத தாரையாகக் கூத்தாடுகிறார்' என்றெல்லாம் தங்கள் அனுபவத்தை வர்ணிக்கிறீர்கள்—என்றுதான் சொல்லவேண்டும்.

எனவே நல்ல பாடல்களைப் பார்த்து அனுபவித்து விளக்கம் எழுதும்போது தங்களையும் அன்பர் அப்புவையும் நினையாமல் எப்படி இருக்க முடியும்? கம்பராமாயணம் மற்றும் தமிழ்ப் பாடல்கள் — இவைகளை நன்றாய் அனுபவித்து விட்டால், அப்பு அவர்கள் சொல்லுகிறபடி மன அமைதி எல்லாம் ஏற்படவேகூடும்.

ஒரு தடவை ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது, ஒரு ரிடையர்டு போஸ்டல் டிபார்ட்மெண்ட் ஆபீஸர், உடன் வந்துகொண்டிருந்தார். அவர் என்னை இனங் கண்டு கொண்டார். பார்த்த படங்களிலிருந்துதான். அவர் சொன்னார், "வடமொழியிலேயே வான்மீகி ராமாயணத்தை மூன்று தடவைக்குமேலாகப் படித்தேன். கடமை என்று எண்ணிப்

படித்தேன். அது என்னை ஒரு விதத்திலும் மாற்றிவிடவில்லை ஆனால் கல்கியில் வந்த கம்பராமாயணத்தை வாசிக்க ஆரம்பித்த பிறகு வேறு மனுஷனாய் ஆய்விட்டேன். பக்தனாகவே ஆய்விட்டேன். உங்களுக்கு என் நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன். என்று சொல்லி முடித்தார். கம்பார்ட்மெண்டில் இருந்தவர்கள் (எட்டுப்பேர்) எல்லாரும் அவர் அவ்வாறு கண்ணீர் வடித்துச் சொன்னதை அப்படியே ஆமோதித்தார்கள், மௌன மாகவே இருந்துதானே.

கம்பார்ட்மெண்டில் புத்துணர்ச்சி உண்டாய் நிலவியது. வயசான ஒருவர் (60 வயசு) தன் அனுபவத்தை நேருக்கு நேராகச் சொல்லும்போது யாருடைய இதயமும் உருகிவிடத் தானே செய்யும். ஆகவே கம்பர் காரணமாகப் புது அமைதி அனுபவங்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்றன என்று அப்பு அவர்கள் சொல்லும்போது விஷயத்தை நானும் அறிந்து கொள்ளத்தான் செய்கிறேன். அளவற்ற மகிழ்ச்சியும் ஊக்கமும் உள்ளத்தில் உண்டாகின்றன. ரொம்ப சந்தோஷம்.

ஸ்ரீ சங்கராச்சாரி ஸ்வாமிகள் கம்பர் விஷயமாகச் சொல்லிய பாராட்டுகளை முன்னமேயே குறித்திருந்தீர்கள். இப்போதும் விவரித்திருக்கிறீர்கள். அவர்களுக்குள்ள ஆன்ம ஆராய்ச்சிகளுக்குள் கம்பர் தரும் காட்சிகளையும் படிக்க நேரம் கிடைத்தது என்றால் நாம் செய்த புண்ணியத்தின் பலன் அல்ல. கம்பர் செய்த புண்ணியந்தான் அது. அதற்காக ஸ்வாமிகளுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * *

குழந்தையைப்பற்றித் தாயானவள் அன்பின் மேலீட்டால் என்ன எல்லாமோ சொல்லுவாள். அவ்வளவுக்கும் தாயைக் கடிந்துகொள்ளக்கூடாது. ஆனால் மன்னித்து விடவேண்டும்.

டிப்டி கலெக்டர் டி. எம். பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் எனக்கு ஆப்த நண்பர். சிறு பையனாக இருந்த

காலத்திலிருந்தே என்னிடம் மிக்க அன்பு கொண்டவர். இரண்டு வருஷத்துக்கு முன்பே ஒரு வாழ்க்கைச் சரித்திரம் என்னைப்பற்றி எழுதிவிடுவதாக பயமுறுத்தினர். அவரை ரொம்பவும் நாடியைத் தாங்கி அப்படி எழுதுவதை நிறுத்தி விட்டேன். விமோசனந்தான் என்று அமைதியாய் இருந்தேன்.

இப்போது என்னடா என்று பார்த்தால் புஸ்தகம் திடீரென்று விளம்பர உலகத்தில் வந்து 'தொப்பு' என்று விழுந்து விட்டது. என் கைக்குமே நேற்று வந்துவிட்டது. திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், V. R. M. செட்டியார் அவர்கள், தொண்டைமான் அவர்கள், மற்றும் சில நண்பர்கள் எல்லாருமாகச் சேர்ந்து செய்த சதிஆலோசனையின் விளைவு அது. அவ்வளவு பேரையும் மன்னித்துவிட வேண்டியதுதான்—தாயைப்போல.

பாஸ்கரத் தொண்டைமானை பாலப் பருவம் முதல் நன்ருய் அறிவேன். என் குடும்பத்துக்கே அவர்கள் ரொம்ப வும் வேண்டியவர்கள். அவர்கள் இயல்பு அன்பு செலுத்திக் கொண்டேயிருக்கும் இயல்பு. இத்தகைய ஆசாமி, மனசுக்கு உவந்த ஒரு ஆசாமியைப்பற்றி எழுத ஆரம்பித்துவிட்டால் உத்சாகத்துக்கு கேட்கவாவேண்டும்? அன்பைக் கொட்டி விட்டார்கள். என்ன செய்கிறது! என்னுடைய ஜாதகத்தில் இப்படி ஒரு தத்து ஏற்படும் என்று கண்டிருக்கிறதோ என்னமோ — கண்டதார்?

அன்பு என்பது ஒரு பிரவாகம் போன்றது. அணை கட்டுகிற காரியம் எல்லாம் அதனிடம் பலிக்காது. 'சூயெஸ்' வாய்க்கால் வெட்டினர்களாம். மத்தியதரைக்கடலும் செங்கடலும் ஒன்ருேடொன்று பாய்ந்து கலக்க ஏங்கிக்கொண்டிருந்தன. கடைசியாக வாய்க்கால் வெட்டி முடிந்ததும் கும்மாளி போட்டுக்கொண்டு கலந்துவிட்டனவாம். பாஸ்கரதொண்டைமான் அவர்களது அன்பும், தங்கள் அன்பும் அந்த விதமாகவே கலக்கின்றன. அழகான காட்சியாய் இருக்கிறது.

எனக்குத் தகவலே யில்லாமல் புஸ்தகத்தை எழுதி வெளி யிட்டிருக்கிறார்கள். தகவல் கேட்டால் இணங்கமாட்டேன் என்று தெரிந்துகொண்டே வெளியிட்டிருக்கிறார்கள். வெளி யிட்டதால் குடிமோசம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. வேண் டாதவர்களுக்குக் கைவரிசையைக் காட்டிக் கண்டனம் எழுத சந்தர்ப்பம் கிடைத்த மாதிரி இருக்கும். அதுவும் ஒருவகை யில் தமிழ்த் தொண்டுதான். இருக்கட்டும். கவலை இல்லை. கண்டனங்களைப்பற்றி முன்னும் கவலைப்பட்டது கிடையாது.

புஸ்தகத்தின் முக்கியமான பயன் தங்களுக்கு, அப்பு அவர் களைப்போன்ற அன்பர்களுக்கு நல்ல பொழுது போக்காக இருக்கும் என்பதுதான். உண்மையில் வாழ்க்கைக் குறிப் புக்கள் எல்லாம் உற்றார் உறவினருக்கே உரியது என்று சொல்லலாம்.

அப்பு அவர்கள் அனுப்பிய பிரசாதம் கிடைத்தது. பக்தி யும் அன்பும் அதில் கமழ்கின்றன. மிக்க நன்றி அவர்களுக்கு. எனக்கு உடம்பு ரொம்பவும் தேறியிருக்கிறது. மருந்து கொஞ்ச மாகவும் தங்களைப் போன்றவர்களது அன்பு மிகுதியாகவும் சேர்ந்து தேற்றியிருக்கிறது.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

வெங்கடாச்சாரி அவர்களுக்கு

சமீபத்தில், கல்கி பத்திரிகைமூலம் பிரபலம் அடைந்த ஒரு பெயர், ஒருமுகம் விட்டலபுரம் ஸ்ரீ வேங்கடாச்சாரி யுடையது. விட்டலபுரம் திருநெல்வேலி ஜில்லாவில், செய்துங்க நல்லூருக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறு கிராமம். பண்டரிபுரத்து விட்டலர் இங்குமே குடியேறி இருக்கிறார். அங்குள்ள பிரபல மிராஸ்தார்தான் ஸ்ரீ வெங்கடாச்சாரி. சிறைசென்ற தேசபக்தர். டிப்டி கலெக்டர் ஸ்ரீ G. S. சுந்தரராஜ அய்யங்கார் மகள் ஸ்ரீமதி ஆண்டாளை மணம் முடித்தவர். பாரதி மண்டப நிதியை இரண்டாம் முறையாக ஆரம்பித்து வைத்தவர். பாரதி விழாவிலே பெரும் பங்கெடுத்து உழைத்தவர்.

டி. கே. சியின் புதிய பக்தர்களில் இவரும் ஒருவர். 1945 முதல்தான் டி. கே. சி.யைப் பற்றிக் கேள்விப்பட்டார். கடிதங்கள் மூலம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். கடைசியில் 1946-ல் தாமும், தம்மனைவியுமாக, குற்றாலத்திற்கே சென்று ஒரு மாதத்துக்கு மேலாகவே அவருடன் தங்கினார். தினசரி ஒரு பாட்டாவது கேட்டால்த்தான் தங்கள் ஜாகைக்குத் திரும்புவார்கள், மனைவியும் கணவரும். ஊர் திரும்பும் போதும், 'கடிதத்துக்கு ஒரு பாட்டு தவறாது வேண்டும்' என்ற கட்டளையையும் பிறப்பித்து விட்டார்கள், இந்தத் தம்பதிகள், டி. கே. சிக்கு. இந்த அருமையான பக்தருக்கு எழுதிய கடிதம் ஒன்றுதான் இங்கே இடம் பெறுகிறது.

திருக்குற்றலம்
14—7—45

அருமை நண்பர் வெங்கடாச்சாரி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் 19—8—45 அன்று எழுதிய கடிதம் சென்னையில் வைத்துக் கிடைத்தது. அதற்குப் பதிலும் அங்கிருந்தே எழுதினேன்.

இந்த மாசம் முதல்த்தேதி குற்றலம் திரும்பி விடுவேன். தாங்கள் அப்போது குற்றலம் வந்தால் நன்றாய் உறவாடலாம் என்று எழுதியிருந்தேன். கடிதம் கைக்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன். முதல் தேதியே இங்கு வந்துவிட்டேன். இந்த மாசம், செப்டம்பர் 30உ இங்கிருந்து சென்னை போகவேண்டும். அதுவரை குற்றல வாசந்தான். தாங்கள் வந்து உடன் தங்கினல் எவ்வளவோ சந்தோஷமாய் இருக்கும்.

தங்கள் கடிதத்தைச் சென்னையில் வைத்துப் படித்துப் பார்த்தேன். இப்போதும் படித்துப் பார்க்கிறேன். அனுபவங்கள் அப்படி அப்படியே சுழித்து ஒடுகின்றன. பார்ப்பதற்கு எவ்வளவோ அழகாய் இருக்கிறது. உள்ளத்தில் நினைத்துப் பார்த்தால் அதைவிட அழகாய் இருக்கிறது.

தாங்கள் அனுபவிப்பதைக் குடும்பமாய் அனுபவிக்கிறீர்கள். அப்படியானல்த்தானே, பண்பாடு என்பது உண்டாகும். உண்மை அனுபவத்தோடு ஒரு விஷயம் குடும்பத்துக்குள் வந்து தங்கி விடுமானல் அது வீட்டை விட்டு அகலாது. வீட்டுக்கு ஒரு விளக்காய் நின்று பிரகாசிக்கும். அத்தகைய வீடு ஒன்றுக்காக, ஒரு நாடு தவம் செய்யலாம்.

வீட்டுக்கும் உதவாது, ஊருக்கும் உதவாதுபோன விஷயங்கள் தனக்கும் உதவாத காரியந்தான். பள்ளிப்படிப்பு, யுனிவர்சிட்டிப் படிப்பெல்லாம் யாருக்கும் பிரயோசனம் இல்லாமல் போன காரியந்தானே !

இரண்டு மாசத்துக்கு முன் திருநெல்வேலி ஹிந்து காலேஜில் "டோனர்ஸ்டே" என்ற விழா நடந்தது. இரண்டு லக்ஷரூபாய் நன்கொடை கொடுத்த ஸ்ரீமதி பொன்னம்மாள் மதுரையில் இருந்து வந்திருந்தார். அந்த விழாவில் பேசுவதற்காக என்னைச் சொல்லியிருந்தார்கள். நானும் பேசினேன். பேசும்போது மாணவர்களைப் பார்த்துச் சொன்னேன். "எத்தனையோ விஷயங்களை வருஷம் வருஷமாய்க் கற்கிறீர்கள். அவைகளை இந்த அம்மாள் அனுபவிக்கும்படிச் சொல்ல முடியுமானல் நீங்கள் படித்த படிப்பு ஜீரணித்ததாகும்" என்று சொல்லி, கணக்கு சயன்ஸ் முதலிய பாடங்களிலிருந்து உதாரணமாகச் சில விஷயங்களை எடுத்துச் சொன்னேன். ஷேக்ஸ்பீயரிலிருந்தும் பக்தி ரஸமான விஷயம் ஒன்றையும் எடுத்துச் சொன்னேன். எல்லாரும் என்னை அங்கீகரித்தார்கள். பொன்னம்மாள் ரொம்பவும் அனுபவித்தார். எப்படி? என்னை மதுரைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னர். அவர் இரண்டு லக்ஷ ரூபாய் செலவழித்துக் கட்டுகிற கோயிலைப் போய் பார்ப்பதற்காக.

எல்லாவற்றையும் சொல்லிவிட்டு ஷேக்ஸ்பீயரையும் சொல்லிவிட்டு இந்தப் பாடலையும் விளக்கம் கொடுத்துப் பாடினேன்.

சொக்கர் உண்டு
　　துணை என்றிராய்!—அவர்
பக்கல் அன்பு
　　பழுத்த தென்றோர்கிலாய்!
மக்கள் என்றும்
　　மனை என்றும் வாழ்வென்றும்
ஒக்கல் என்றும்
　　உருகும் என் நெஞ்சமே.

[அவர் பக்கல் அன்பு பழுத்தது—நம்மை எல்லாம் உணவளித்துக் காக்கும் தாய்த்தத்துவமாகிய பார்வதிதேவி இடது பக்கத்தில்த்தான் இருக்கிருளே என்று எண்ணிக் கவலை அற்றுத் தான் இரேன்; ஒக்கல்—சுற்றத்தார்.]

இரண்டாவது அடியிலுள்ள அற்புதமான உண்மையை எடுத்து விளக்குவதற்கான கல்வியோ, கருவியோ சென்னைப் பல்கலைக் கழகத்தில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொண்டேன்.

ஹிந்து காலேஜில் நடந்த 'லெக்சர்' தங்களிடமும் வந்து பாய்கிறது. போதும்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

பொன்னையாப்பிள்ளை அவர்களுக்கு

திருநெல்வேலி சிந்துபூந்துறை, திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற ஒரு இடம். "மதுத் திவலை சிந்துபூந்துறை கமழ் திருநெல்வேலியுறை செல்வர்" என்றல்லவா ஸ்ரீ நெல்லையப்பரை அழைத்திருக்கிறார். அந்தச் சிந்துபூந்துறை வாசிதான், நண்பர் ஸ்ரீ பொன்னையா பிள்ளை எனும் இளைஞர். இந்து கலாசாலை மாணவர்.

பொன்னையா பிள்ளை டி. கே. சியிடம் பெரு மதிப்பு உடையவர். டி. கே. சி. திருநெல்வேலியைக் கடந்து செல்லும்போதெல்லாம் பிரசன்னமாயிருப்பார், ரயிலடியில். டி. கே. சி. எழுதுவதையெல்லாம் படித்துவிட்டு, டி. கே. சிக்கே நேரே பாராட்டுக் கடிதம் எழுதுவார். டி.கே.சி. பேரில் புகார் சொல்லும் அன்பர்களையெல்லாம் மடக்குவார். டி. கே. சியைக் குற்றுலத்திற்கே சென்று காணவேண்டியிருந்தால், அவருக்குப் பிரியமான 'காய்கறிகள்' ஒரு கூடையையே கொண்டு இறக்கிவிடுவார்.

எப்போது பார்த்தாலும் சிரித்த முகமும் ஸ்ரீதேவியுமாக காட்சியளிப்பார். டி. கே. சி.யின் புதிய பக்தர் கோஷ்டியில், இளைஞர்களுக்குள்ளே, தலைமை வகிக்கும் யோக்யதை உடையவர். இந்த இளைய பக்தரின் அபிப்பிராயங்களைக்கூட டி. கே. சி. எப்படிப் பாராட்டுகிறார் என்பதை, இங்கு வெளியாகும் ஒரு கடிதத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

திருக்குற்றலம்,
16—11—43.

அருமை நண்பர் பொன்னையா பிள்ளை அவர்களுக்கு,

தங்களது நேற்றையக் கடிதம் கிடைத்துவிட்டது. Late fee கொடுத்தது வீண்போகவில்லை. ரொம்ப திருப்தி.

என்னைப் பற்றியும் என் கட்டுரைகளைப் பற்றியும் கட்டுரைகளில்க்காணும் கவிகளைப் பற்றியும் ரொம்ப அழகாய் எழுதியிருக்கிறீர்கள். இருபது, முப்பது வருஷத்துக்கு முன் காயல்ப் பட்டணத்துக் காக்காய்கள் (சாய்புகள்) ரத்ன வியாபாரம் செய்தார்கள். முக்கியமாக சிவப்பு வியாபாரந்தான்; வைரம் அந்தக் காலத்தில் அவ்வளவாக மதிப்புக்கு வரவில்லை. மேலே சொன்ன காக்காய்கள் மாணிக்கங்களைப் பரிசோதிப்பார்கள், விலையிடுவார்கள். எங்கள் வீட்டில் அவர்களை அடிக்கடி பார்க்கலாம். ஒரு நல்ல சிவப்பை அவர்கள் கண்டுவிட்டார்களானல் அவர்களுக்கு உண்டாகிற ஆவேசம் அப்படி இப்படியல்ல. இடது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். பிறகு வலது கண்ணிட்டுப் பார்ப்பார்கள். திண்ணைக்கு ஓடிப்போய் பார்ப்பார்கள். முற்றத்துக்குக் கொண்டுபோய்ப் பார்ப்பார்கள். எப்படி எல்லாமோ குனிந்தும், நிமிர்ந்தும், சாய்ந்தும் பார்ப்பார்கள். என்ன பூரிப்பு! என்ன பழுப்பு! இதல்லவா மாணிக்கம். தின்றுவிடுவோமா அல்லது கண்ணுக்குள்ளேயே திணித்து விடுவோமா என்றெல்லாம் சொல்லுவார்கள். (கம்பரும் மாணிக்கத்தை இப்படி எல்லாம் அனுபவித்தவர்.)

தாங்களும் தமிழ்க்கவிகளை 'மேலேசொன்ன காக்காய்கள்' மாதிரி அனுபவிக்கிறீர்கள். கவிகளில் எத்தனையோ பட்டங்கள். அந்தப் பட்டங்களை ஒவ்வொன்ருகப் பார்த்து அனுபவிக்கிறீர்கள். அதெல்லாம் உயர்ந்த ரஸிகாசிரியர்கள் செய்கிற காரியம். ஆர்த்த; வார்த்தை; பூத்தமலர் இவைகளின் அழுத்தங்களை நன்ருய் அனுபவித்திருக்கிறீர்கள். நூறு, ஆயிரம், பதினுயிரம், கோடி இவைகள் சம்பந்தமாக நமக்கு யாதொரு

உணர்ச்சியும் ஏற்படுவதில்லை. பொருளே நமக்குப் புலப்படுவதில்லை என்று சொல்லலாம். ஆனால் பாட்டிலோ தாங்கள் குறிப்பிடுகிறபடி உணர்ச்சி வேகத்தை அளந்து காட்டுகின்றன. ரொம்ப சரி. பேஷ்.

ராமானுஜரது இதயப் பண்பாட்டைத் தாங்கள் நன்றாய் உணர்ந்து அனுபவிக்கிறீர்கள். அவரது அந்தப் பாட்டுக்காகவே ஒருவன் ஸ்ரீ வைஷ்ணவனாகப் பிறக்கலாம் என்று ராஜாஜி எழுதியிருக்கிறார்கள். கட்டுரை வீண்போகவில்லை அல்லவா!

"ஊர்" என்று முடியும்போது அதிசய பாவம் ஒரு தனியான வேகத்தை அடையத்தான் செய்கிறது. தமிழில்த்தான் இதெல்லாம் சாத்தியமாகிறது. நம்மாலும் கண்டுகொள்ள முடிகிறது. நாம் புண்ணியம் செய்த ஆத்மாக்கள்.

தங்களைப்போல் ரசிக இளைஞர்கள் உண்டாய் விடுவதால்த்தான் எனக்குத் தமிழ் வளர்ச்சிபற்றி நம்பிக்கை.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

சண்முகசுந்தரம் அவர்களுக்கு

நண்பர் L. சண்முகசுந்தரம் கோவில்பட்டித் தாலூகாவைச் சேர்ந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் தமிழ் படித்து வருகிறார், 'வித்வான்' ஆவதற்காக. நமது தமிழ்ப் பண்டிதர்கள் சொல்லிக் கொடுக்கும் தமிழ்தான் தெரியுமே. யமகம், திரிபு என்னும் கற்பாறைகளில் முட்டிக்கொண்டு மண்டையை உடைத்துக் கொள்வதைத்தானே, தமிழ் கற்பது, கற்பிப்பது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் முட்டி மோதி, மண்டை உடைந்து, ரத்தக் களறியாகி, அந்தக் காயங்களுடனேயே டி. கே. சியை அணுகினார். டி. கே. சி.யும் பக்குவமாக இந்தக் காயங்களுக்கெல்லாம் மருந்து போட்டார். எது கல்வி, எது தமிழ், எது உண்மைக் கவிதை என்றெல்லாம் விளக்கினார். காயங்கள் குணமாக ஆரம்பித்ததுடன், குழப்பப்பட்டிருந்த மூளையுமே தெளிவடைய ஆரம்பித்தது. அன்று முதல் டி. கே. சியின் தாஸானு தாஸர்களில் ஒருவரானார். பக்தியே செலுத்தத் தொடங்கி விட்டார்.

எங்கு சென்றாலும், தான் பெற்ற புதிய அனுபவத்தைப் பற்றியேதான் பேச்சு. திருவையாற்றுத் தமிழ் மாணவர்களிடையே கூடப் பிரசாரம்செய்ய முனைந்துவிட்டார். இப்படிப் பட்ட பக்தருக்குத்தான் ஒரு கடிதம்.

திருக்குற்றாலம்,
17—8—46.

அருமை நண்பர் சண்முகசுந்தரம் அவர்களுக்கு,

தாங்கள் 4—8—46 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோஷம்.

திருவையாற்றில் தங்களுக்குப் பொழுது உல்லாசமாய்ப் போகிறது. வாழ்க்கையிலோ, கல்வியிலோ உல்லாசம்தான் வேண்டும். அது வேண்டியமட்டும் இருக்கிறது.

மாணவர் குழாம் தமிழைத் தங்களோடு ஒத்து அனுபவிக்கிறார்கள். அதையே சொர்க்க அனுபவம் என்று சொல்லலாம். மாணவர்களோடு அந்தக்காலத்தில் நானும் மாணவனாய் இருந்து உறவாடி கழித்திருக்கிறேன். கலைகளை ஏதோ எங்களுக்குத் தெரிந்த அளவுக்கு விருந்துண்டமாதிரி அனுபவித்திருக்கிறோம்.

மாணவர்கள் கலையை அனுபவிக்கும்போது ரஸானுபவம் ஒன்றுதான் லக்ஷியம். மற்றவர்களுடைய லக்ஷயத்தை அப்படிக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. மனது காட்டிலும், முள்ளிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். அவர்களது கண்ணை விட்டு ரஸானுபவம் தப்பிப்போய்விட்டால் வியக்க வேண்டியதில்லை.

எனக்கு என்ன படுகிறதென்றால் :- அரசர் கல்லூரியில் அல்ல, மாணவர்கள் இல்லத்தில் வசிக்க இடம் கொடுத்து விட்டால் அதை ஒரு பெரும் பாக்கியமாய் எண்ணுவேன். தங்கள் இளம் சகாக்களோடு படித்து உறவாடித் தமிழின் ஒப்பற்ற சுவையைக் கூட்டுறவாய் அனுபவித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா! திருவையாற்றுக்குப் போனதுபற்றி திருப்திதான். தமிழில் மேடு பள்ளங்கள், குறிஞ்சிமுல்லை, மருதம், நெய்தல், பாலை முதலிய புலன்கள், எல்லாம்தான் இருக்கின்றன. அவைகளை ஒருவாறு மேற்பார்வையாக பார்த்து மதிப்பிட்டு வைப்பது

அவசியந்தானே. இலக்கிய மோசடிக்ளிலிருந்து பிழைக்க முடியும். பத்து ஏக்கர் நஞ்சை என்று சொல்லி வறண்ட பாலையை ரிஜிஸ்தர் செய்துகொடுக்க வந்தால் நாம் விழித்துக் கொள்ள வேண்டுமல்லவா. ஆகவே திருவையாற்றுக்குப் போனது பிரயோஜனமான காரியந்தான்.

தங்களிடமோ நல்ல உரைகல் இருக்கிறது. எதையும் உரைத்துப் பார்த்துவிடலாம். பித்தளையைத் தங்கம் என்று எண்ணிவிட மாட்டீர்கள். உறுதி. சகாக்கள் தங்கள் வாயிலாக அனுபவிக்கிறார்கள். ரொம்ப ரொம்ப திருப்தி. "வஞ்சியேன்..........." என்ற பாட்டை (திருத்திய பாட்டைத்தான்) 'மாஸ்டர் பீஸ்' என்று சொன்னார்களே அது போதும். அவர்களிடம் தமிழுரையும் தமிழையும் கூசாமல் ஒப்பிவித்து விடலாம்.

என்னுடைய அபிப்பிராயமோ, தமிழ்ப் பாஷையிலுள்ள கவிகள் போல் வேறு எந்த பாஷையிலும் இருக்க முடியாது என்பதுதான். இந்தத் துணிபை தாங்கள் ஒத்துக்கொள்ளுவீர்கள். சந்தோஷம்.

ஆனல் மற்றவர்கள் (ஆசிரிய உலகம்) ஒத்துக்கொள்ள மாட்டார்கள். காரணம் என்ன! தமிழ்ப் பாடலை அவர்கள் அனுபவித்த பாடாக இல்லை.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

அருமை நண்பர்

பலராமன் அவர்களுக்கு

1945-ல் நண்பர் பதவியில் இருந்த இந்த P. C. பலராமன், இன்று டி. கே. சியின் அந்தரங்கக் காரியதரிசி பதவிக்கே உயர்த்தப்பட்டிருக்கிறார். டி. கே. சி. வீட்டிற்குச் செல்பவர்கள் எல்லாம் "ராஜா! ராஜா!" என்று அழைக்கப் படுவதைக் கேட்பார்கள். 'இவர் என்ன டி. கே. சியின் அருமைப் பேரனா? ராஜா என்பது அவருடைய செல்லப்பெயரா? என்று மயங்குவோம். பின்னுல்த்தான் தெரியும், P. C. பலராம் ராஜபாளையம் ராஜா வகுப்பைச் சேர்ந்தவர். P. C. சின்ன வெங்கட்டராஜா அவர்களின் கடைக்குட்டி பிள்ளை என்று.

ஸ்ரீ சின்ன வெங்கிட்டராஜா குடும்பத்தினர் எல்லோருக்குமே டி. கே. சியிடம் ஈடுபாடு. ஸ்ரீ P. C. சுப்பராஜா, P. C. பாலகிருஷ்ண ராஜா இவர்கள் எல்லாம் டி. கே. சியிடம் செலுத்தும் பக்தி அபாரம். இவர்களது சகோதரர்தான் இந்த பலராம்ராஜா. டி. கே. சியை அண்டி அதனுல் எல்லா நலங்களையும் பெற்று, டி. கே. சி. பேரன் நடராஜனுடன் போட்டி போட்டு டி.கே.சியின் அன்பை எல்லாம் அனுபவிக்கிறார்.

இந்தப் பழைய நண்பர் — புதிய காரியதரிசிக்கு — ஒரேயொரு கடிதம். காரியதரிசி ஆன பின்தான் கடிதம் பெற வழியில்லையே என்பது தான் அவர் அங்கலாய்ப்பு, எப்போதும் அய்யா

வுடனேயே இருந்து அவர்களுக்குத் தொண்டு ஊழியம் செய்துகொண்டு அவர்கள் சொல்லும் பாட்டுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தாலே போதும் என்பதுதான் அவர் தீர்மானம்.

சென்னை,
7—4—45.

அருமை நண்பர் பலராமன் அவர்களுக்கு,

தென்காசியிலிருந்து புறப்படும்போது, ரயில் பிரயாணத்தை எப்படியடா சமாளிக்கப்போகிறோம் என்ற பயம் இருந்தது. குளிர்ந்த காற்றும் மந்தாரமும் சேர்ந்து உடம்புக்குச் சௌகரியம் செய்தன. ராஜபாளையம் ஸ்டேஷனில்த் தங்களையும், டிபனையும் பார்த்த மாத்திரத்தில் பறந்தே போய் விட்டது இருந்த பயமெல்லாம்.

பாத்திரத்தில் இருந்த காப்பியைச் சாப்பிட்டு விட்டோம். பாத்திரத்தைக் கடப்பா நண்பரிடம் கொடுத்து விட்டோம். பாத்திரம் வந்திருக்குமே க்ஷேமமாக!

திருச்சினுப்பள்ளியில் எல்லாம் சௌகரியமாய்ப் போய் விட்டது. இங்கு வந்து சேருவதிலும் யாதொரு கஷ்டமில்லை. எல்லாம் காரணமாக உடம்பு தேறவிட்டது. வந்த மறுநாள் என்னைப் பார்த்துவிட்டு, வெங்கட்ட சுப்பிரமணியமே சொன்னார் — இவ்வளவு தேறியிருக்கிறது உடம்பு என்றால் குற்றாலத்திலுள்ளவர்கள் நம்பமாட்டார்கள் என்பதாக.

தினம் காலைதோறும், குழந்தைகளிடம் பரத நாட்டியத்தைக் கற்று வருகிறேன். ஆடுவதற்காக அல்ல! அதன் அற்புதமான தத்துவங்களையும், சக்திகளையும் அறிந்து கொள்ளுவதற்காகத்தான் பார்த்துவருகிறேன்.

நம்முடைய நடனம்போல் உண்மைக்கு விளக்கம் கொடுக்கக்கூடிய நடனம் உலகத்திலேயே இல்லை. வேறு கலையே இல்லையோ—என்றுகூடச் சொல்லத்தோன்றும். அநேகமாக உண்மையும் அதுதான்.

ஒரு இனத்தாருக்கு என்று வைத்து, கலேயை ஒதுக்கி ஒழித்துவிட்டார்கள். ஒரு காலத்தில் கவியைக்கூட அப்படி எண்ணினர்கள். ஏன்—அவ்வளவு தூரம் போகவேண்டும். கவியை அனுபவித்து வருகிற என்னைக்கூடக் கேவலமாகப் பேசுகிருர்கள். புளியங்குடிப் புலவர் ஸ்தானத்தைக் கொடுக்கிருர்கள் எனக்கு. கவியை வைத்து கால ஆராச்சி செய்து வருகிருர்கள் தமிழ் நிபுணர்கள். அப்படிச் செய்யும்போது, அண்ணன் — தம்பியாகிவிடுவான், மகன் அப்பன் ஆய் விடுவான். ' கம்பர் 12வது நூற்றுண்டு, 9வது நூற்றுண்டு அல்ல — 'என்று நாக்கைப் பிடுங்கிச் சாவார்கள். இதெல்லாம் ஆராய்ச்சி. அதற்கு மதிப்பே வேறே.

தமிழ்க்கவி — மக்களே கஷ்டப்படுத்த வந்த கருவி அல்ல. ஆனல் மக்களே ஆனந்தமயத்தில் ஊறவைக்க வந்த தேவாமிர்தம் என்று சொல்ல வேண்டும்.

தங்களேப்போன்ற இளைஞர்கள், கம்பருக்கும், தமிழுக்கும் கை கொடுக்கிறீர்கள். இனிமேல் தமிழுக்கு யாதொரு பயமும் இல்லை!

அப்பாவை இனிமேல்த்தான் பார்க்கவேண்டும்.

தங்கள்,

டி. கே. சிதம்பரநாதன்.

Printed at the Chandravilas Pinjrapole Press, Trichinopoly—1200.